# வரலாறு

2378



பட்டூர்ப் பரமன்

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி
கடை : 709362
வீடு : 490461

மைசூர், பெங்களூர், பாண்டிச்சேரி
முதலிய நகரங்களில் தயாராகும்
மணம் மிக்க ஊதுபத்திகளை
வாங்கச் சிறந்த இடம்



# ப. மூக்கப்பிள்ளை

பல்பொருள் அங்காடி
285, பெரிய கடைவீதி,
திருச்சிராப்பள்ளி - 620 008.

கீழோர்க்கு அஞ்சேல்

# வரலாறு 7

## ஆய்விதழ்

பிப்ருவரி - ஆகஸ்டு 1997

நூலகத்திற்கு அன்பளிப்பு

இரா. கலைக்கோவன்
*பொறுப்பாசிரியர்*

மு. நளினி
அர. அகிலா
*உதவி ஆசிரியர்கள்*

இரா. கண்ணையன்
*மேலாளர்*

*வெளியிடுவோர்*

**டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்**

48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

# எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, பல்வேறு தடைகளைத் தாண்டி இவ்விதழை வெளியிடுவதில் உள்ளம் களிகொள்கிறது. இதன் மலர்வுக்குக் காரணமானவர்கள் பேராசிரியர்கள் கோ. வேணிதேவி, சீ.கீதா, திரு. தே. ரஃபேல், திருமதி வாணி செங்குட்டுவன். வரலாறு இதழின் பின்புலமாக விளங்கும் இப்பெருமக்கட்கு வரலாறு கைகூப்பிக் கண்ணீரோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது. இனி இடையீடின்றி வரலாறு தொடர்ந்து வெளிவரும்.

இவ்விதழில் கலித்தொகையில் மூழ்கியெடுத்த முத்துக்கள் சில பெட்டிச் செய்திகளாக இடம்பெற்றுள்ளன. சென்ற இதழ் வினாக்களுக்கு எஃகுச் சிதறல்கள் விடைகளாக விளைந்துள்ளன. தொடர்களைத் தொடரவும் தொடங்கவும் இயலாச் சூழல். பொறுத்துக்கொள்ளுங்கள். அடுத்த இதழில் அவை உறுதியாக உள்ளடக்கமாகும்.

மதிப்புரைகள் முதுகைத் தட்டும் பொய்யுரைகளாக இருக்கக்கூடாது; உண்மையான திறனாய்வுரைகளாக அவை அமைந்தால்தான் எழுதியோர் வளர வாய்ப்புண்டு என்ற கருத்திலேயே வரலாறு தனக்கு வரும் நூல்களுக்கு மதிப்புரை வழங்குகிறது. மருந்து கசக்குமென்றாலும் உடல் நலத்திற்குத் தேவைதானே. நூலனுப்புவோர் இதைக் கருத்தில் கொண்டால் வருந்த வாய்ப்பில்லை.

வரலாறு இதழின் உதவி ஆசிரியர் அர. அகிலா முனைவர் பட்டம் பெற்றுள்ளார். கல்வெட்டாய்விலும் கோயிற்கலைகளிலும் சிறந்து விளங்கும் அவரது ஒளிமயமான எதிர்காலத்திற்கு வரலாறு இதழின் வாழ்த்துக்கள்.

அன்புடன்

*இரா. கலைக்கோவன்*

"அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்".

# இந்த இதழில் . . .

பக்கம்

## 1. புதிய கல்வெட்டுகள்

| | | |
|---|---|---|
| 1. | மணக்கரைக் கல்வெட்டுகள் | 1 |
| 2. | பசுவந்தனைக் கல்வெட்டுகள் | 4 |
| 3. | கீழமங்கலம் கல்வெட்டு | 7 |
| 4. | அம்மாபேட்டைக் கல்வெட்டுகள் | 8 |
| 5. | வெள்ளாரம் கல்வெட்டு | 12 |
| 6. | வல்லவன் கோட்டைக் கல்வெட்டு | 13 |
| 7. | மேலமீரான்குளம் கல்வெட்டு | 15 |
| 8. | பேய்க்குளம் கல்வெட்டு | 16 |
| 9. | ஆடவல்லான் தளக் கல்வெட்டு | 18 |
| 10. | திருவானைக்கா கல்வெட்டுகள் | 19 |
| 11. | உய்யக்கொண்டான்திருமலைக் கல்வெட்டுகள் | 23 |

## 2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் - 2 — 29

## 3. செப்பேடுகள்

ஆயர் செப்பேடு — 49

## 4. ஆய்வுக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| 1. | மலையடிக்குறிச்சிக் குடைவரையும் கல்வெட்டுகளும் | 54 |
| 2. | திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை வட்டெழுத்துக் கல்வெட்டுகள் | 70 |

3. வீரசிகாமணிக் குடைவரையும் கல்வெட்டுகளும் 76

4. கேள்விக்குறியாக நிற்கும் நம் கடந்த காலத்தின் எதிர்காலம் 86

5. ஆனையூர்க் குடைவரை 102

6. இராணிமங்கம்மாள் காசுகள் 110

7. திருநெல்வேலி குலசேகர பாண்டியர் காசு 112

8. படைவீட்டில் இரண்டு கற்சிலைகள் 113

9. புதுக்கோட்டை மன்னரும் கட்டபொம்மனும் 116

10. திருமலைப்புரம் குடைவரை 118

11. ஞான உக்ர தட்சிணாமூர்த்தி வடிவம் 135

12. முதலாம் இராசராசர் காலக் கட்டடக்கலை ஓர் ஆய்வு 139

## 5. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள் 148

2. நூல் மதிப்புரை 154

3. யாவரும் கேளிர் 165

4. அன்புள்ள உங்களுக்கு 169

5. அங்கும் இங்கும் - 1997 177

6. உண்டாலம்ம இவ்வுலகம் 184

7. கட்டுரையாளர்கள் 191

# 1. புதிய கல்வெட்டுகள்

## 1. மணக்கரைக் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன்

### முதற் கல்வெட்டு

**இடம்** : தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், மணக்கரைக் கிருஷ்ணன் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

**செய்தி** : *அரசர் (திருவிதாங்கூர் அரசராகலாம்), சீவலவன் மங்கலத்தி லுள்ள பராந்தீசுவரம் என்ற கோயிலில் இருந்துகொண்டு இவ்வாணையைப் பிறப்பித்துள்ளார். சீவலவன்மங்கலத்தின் மேற்பிடாகையான மணக்கரையில் கிருஷ்ணன் கோயிலுக்குரிய நிலங்களைச் சார்ந்து வாழும் முதற் குடிகளாகச் சிலரை அரசர் நியமித்தார். கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.*

**காலம்** : கி.பி. *1495.*

1 கொல்லம் 670 காத்
2 திகை மாதம்[1] 22 உ சீவலவன்
3 மங்கலத்தில் பராந்தீசுவரத்தி
4 ல் எழுந்தருளி இருந்தருள
5 மேல்பிடாகை மணக்கரை
6 நயினார் சீகிட்டிணன் கோ
7 யிலுக்கு முதல் குடி ஆக
8 செந்திப் பெருமாளும் இவன்
9 மகன் ஆறுமுகப் பெருமாளும் உ
10 ள்ளிட்டாரை துரம்[2] செய்யக் கற்பித்

### இரண்டாம் கல்வெட்டு

**இடம்** : மணக்கரைச் சொக்கநாதர் கோயில் முன்மண்டப நுழைவாயில் தளம்.

**காலம்** : கி.பி. பதினாறாம் நூற்றாண்டாகலாம்.

1 முத்தாலங்குறிச்சி
2 உடையாங்குட்டி சத
3 ா சேவை

## மூன்றாம் கல்வெட்டு

இடம் : சொக்கநாதர் கோயில் மகாமண்டபத் தூணிலுள்ள சிற்பத்தின் மேற்பகுதி.

காலம் : கி.பி. பதினாறாம் நூற்றாண்டாகலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | புங்கத் | 3 | ஙர் சதா |
| 2 | துடைய | 4 | சேவை |

## நான்காம் கல்வெட்டு

இடம் : மேற்குறித்த மண்டபத்தின் மற்றொரு தூணிலுள்ள சிற்பத்தின் மேற்பகுதி.

காலம் : கி.பி. பதினாறாம் நூற்றாண்டாகலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | இளைய | 5 | பரும |
| 2 | பெருமாள் | 6 | ஙள் ச |
| 3 | வேலா | 7 | தா சேவை |
| 4 | யுதப் செ | | |

## ஐந்தாம் கல்வெட்டு

இடம் : மேற்குறித்த மண்டபத்தின் மற்றொரு தூணிலுள்ள சிற்பத்தின் மேற்பகுதி.

காலம் : கி.பி. பதினாறாம் நூற்றாண்டாகலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | பருவு | 4 | சதா சே |
| 2 | டப்பி | 5 | வை |
| 3 | ள்ளை | | |

## ஆறாம் கல்வெட்டு

இடம் : மகாமண்டபத்தின் தென்கிழக்கே, கிணற்றருகே உள்ள தளம்.

காலம் : கி.பி. பதினேழாம் நூற்றாண்டாகலாம்.

1 அசை

2 ந்தாடும்

3 பெருமா

4 பிள்ளை

| | | | |
|---|---|---|---|
| 5 | அய்யன் | 9 | ரியமாணி |
| 6 | புண்ணி | 10 | க்கப் பெரு |
| 7 | ய ம[ர*]க சு | 11 | மாளுக்கு |
| 8 | வாமி க | 12 | தோப்பு |

## குறிப்பு

1. குறியீட்டில் தரப்பட்டுள்ளது.
2. பொறுப்பாக்குதல் அல்லது நியமனம் செய்தல்.

---

## தேனஞ்சு

திருக்கோயில்களில் உள்ள இறைத்திருமேனிகளைப் பல்வேறு பொருட்களால் திருமுழுக்காட்டுவது மரபு. இம்முழுக்காட்டல் தொடக்கத்திலிருந்தே இருந்துவந்தபோதும் பல்லவர், பாண்டியர் காலத்தில் பல்கிப் பெருகியது. நீரில் முழுக்காட்டிய நிலைகளுடன் ஆனைந்து முழுக்காட்டல் பெருவழக்குப் பெற்றது. பசு பயக்கும் ஐந்து பொருட்களே (பால், தயிர், நெய், சிறுநீர், சாணம்) ஆனைந்தாகும். திருமுறை ஆசிரியர்கள் இவ்வானைந்து முழுக்கைப் பெரிதும் சிறப்புக்குரியதாய் விதந்தோதுகிறார்கள்.

அப்பர் பெருமான் இவ்வானைந்துடன், இறைவன் முழுக்காட்டலுக்குப் பயன்பட்டதாக ஐந்து வகைத் தேன்களைச் சுட்டுகிறார் (5:44:10). உரையாசிரியர்கள் இதைப் பஞ்சாமிர்தமாகக் குறிக்கிறார்கள். சிவபெருமானைப் பஞ்சாமிர்தத்தால் திருமுழுக் காட்டி வழிபடும் பழக்கம் அப்பரடிகள் காலத்தில் வழக்கிலிருந்தது போலும். பிற திருமுறையாசிரியர்களோ, கல்வெட்டுகளோ இத்தேனைந்து முழுக்காட்டலைக் குறிப்பதாகத் தெரியவில்லை. (சான்றுகள் இருப்பின் அருள்கூர்ந்து எழுதிடுக. வரலாறு அவற்றை வெளியிட்டு மகிழும்.)

காலப்போக்கில் தேனைந்து முழுக்காட்டல் முருகனுக்குரியதாக மாற்றம் பெற்றாலும், அப்பர் பெருமானால், அம்முழுக்காட்டின் முதல் நிலையும், பஞ்சாமிர்தத்திற்கு நல்லதொரு தமிழாக்கமும் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# 2. பசுவந்தனைக் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன்

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டத்திலமைந்துள்ள பசுவந்தனைக் கைலாசநாதர் கோயில் பாலமுருகன் திருமுன். திருப்பணியால் சிதறியிருக்கும் கல்வெட்டுத் துண்டுகளை இணைத்துப் படித்தால் தொடர்ச்சி கிடைக்கிறது.

## முதற் கல்வெட்டு

**இடம்** : கருவறை மேற்குக் குமுதம்.

**செய்தி** : முதுகுடிநாட்டுப் பசுந்தலையான பவித்திரமாணிக்கபுரத்தில், வலங்கை மீகாமீசுவரம் என்ற பெயரில் தனியன் சோறுடையானான ஆலாலசுந்தரப்பெருமாள் என்பவர் சிவனுக்குக் கோயில் எடுப்பித்து நிலமளித்துள்ளார். இக்கொடைப் பராமரிப்புக்கு ஊர் வணிகர் பொறுப்பேற்றனர்.

**காலம்** : இரண்டாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் ஏழாம் ஆட்சியாண்டு; கி.பி. 1245.

1-5 பூமலர் திருவும் பொருசெய மடந்தையும் என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி

6 திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவற்கு யாண்டு நாலாவதின் எதிர் மூவாமாண்டு – –

7 முதுகுடி நாட்டுப் பசுந்தலையான பவித்திரமாணிக்கபுரத்து வலங்கை மீகாமீசுவரமுடைய நாயனார் – – சண்டீசுரப்பிள் – –

8 இவ்வூற் கீழ்கானத்துக் கருஞ்செய் முன்பு தேவதான – – யிட்ட நிலத்துக்கு தெற்கு – – கோவரையர் குடுப் – – எட்டு மாவும் – –

9 க்குடி குலைசேகரச் சிலைச்செட்டி கரை நிலத்தில் கீழ் – – லையத்தரையர் பற்று நிலம் நா . . மாவும் தென்கானத்தில் காரி . . . . . . க்கு தெற்கு கழனி நாட்டு – –

10 எழுந்தருள்வித்து இக்கோயிலில் திருக்கற்றளியுஞ் செ[ய்*]வி . . . . . க்கு மேற்கு தெற்கு நோக்கி – – சூலக் கல்லுட்பட்ட நில – – ஆறு மாவரை ஆக – –

11 லு நாட்டிக் குடுத்து மற்றும் இநிலத்தால் வந்த கடமை – – வூர் தனியன் சோறுடையானான ஆ(ல்)லாலசுந்தரப் – – இறைத் திரவியமும் – –

12 டினபடியேய் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் குடுத்தோ – – [சில்]வரி பெருவரியும் மற்றும் இன்னிலத்தால் வந்த வரி எப்பே[பர்ப்பட்டனவும்] நாங்களே இறுப்போ – –

13 [ஊ]ராய் இசைந்த நகரத்தோம் ஆ[திச]ண்டேசுர நாயனாற்கும் தனிய[ன் சோறுடை]யானான ஆலாலசுந்தரப் – –

14 யன் எழுத்து நாகன் அ[ரை*]ரயனான பல்லவதரையன் எழுத்து சிரீளங்கோனான கழனிநாட்டு மூவேந்தவேளான் எழுத்து சோதி பெருமாளான குலத் . . . . . . தராயன் எழுத்து ரசிகன் குழைஞ்சானான செம்பிநாட்டு வேளான் எழுத்து திருவா – –

15 மாணிக்கன் பொன்[ன*]னான இளங்கோவரையன் எழுத்து அடையான் செட்டியான சோழபாண்டிய மூவேந்தவேளான் எழுத்து தனியன் கொற்றனான தமிழவேளான் – – நம்பி மிறங்கனான விராடராயன் எழுத்து பெற்றான் செட்டியான தமிழதரையன் எழு – –

16 றயனான முதுகுடிநாட்டு வேளான் எழுத்து வேளான் விளக்கனான பசுந்தலை மூவேந்தவேளான் எழுத்து நகரம் பணிக்க பிடிபாடெழுதினேன் நக[ர*]க் கணக்கு . . . . . ருமன் மதியனெ[ன்*] எழுத்து

## இரண்டாம் கல்வெட்டு

**இடம்** : பாலமுருகன் திருமுன் உள்மண்டபக் குமுதம்.

**செய்தி** : ஆலாலசுந்தரப்பெருமாள் பற்றிய கட்டளைக் கலித்துறைப் பாடல் (பழிப்பது போலப் புகழ்தல்).

**காலம்** : கி.பி. *1245*.

1 ஸ்வஸ்திஶ்ரீ சோறுடையானென்றுஞ் சுந்தரனென்றுந் துங்க வெ[ள்ளை]

2 நீறுடையானென்றுஞ் சொல்லுவதுன்னை இந்நீள் புவியில்ப் பேறுடை

3 யாரும் பிறருள்ளாரப் பெரிய கங்கை யாறுடையானைப் பசுந்தையிலே தந்த ஆண்

4 டகையே

## மூன்றாம் கல்வெட்டு

**இடம் :** மேலது.

**செய்தி :** ஆலாலசுந்தரப்பெருமாள் பற்றிய ஆசிரிய விருத்தம். இவர் வணிகர் குலத்தவர், மாரியம்மன் அருள்பெற்றவர் என்று பாடல் தெரிவிக்கிறது.

**காலம் :** கி.பி. *1245.*

1 நிலையாதிவ் வா[ழ்*]க்கையென நினைந்தி[ன்]று நிலையான சிவலிங்கஞ் சமைத்து நெல்[லின் வி]

2 லையாலே திருக்கோயில் திருமண்டபந் [தி]ருமேனி திருநடை மாளிகை திருநாள் திரு[வு]

3 ற்[றெ]சவ்வஞ் சமைத்தான் அலையாரும் புனல் பகந்தை அபகாலமாரி அருளிருந்த திரு[வு]ளத்தா னளகை வணிகேசன் துலையி[ர]

4 த பெருஞ்செல்வந் தனியன் சேய் செ[ஞ்]சொற்பதங்கள் தெரிந்தருள் சுந்தர

5 ப்பெருமாள் தானே

## நான்காம் கல்வெட்டு

**இடம் :** கைலாசநாதர் கோயில் முதல் திருச்சுற்றில் உள்ள தூண் சிற்பத்தின் மேற்பகுதி.

**காலம் :** கி.பி. *1861.*

| | | | |
|---|---|---|---|
| 1 | 1036 வருடம்[1] கு | 6 | ட்டியார் |
| 2 | ரோதி வருடம்[1] தைய் | 7 | மகன் சுப் |
| 3 | 17 உ மீனாட் | 8 | பிரமணிய |
| 4 | சிபுரத்திலிருக் | 9 | ப்பிள்ளை |
| 5 | கும் னாராயண செ | | |

### குறிப்பு

1. குறியீட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

## 3. கீழமங்கலம் கல்வெட்டு

*எஸ். இராமச்சந்திரன்*

**இடம்** : தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டத்தில் ஓசனூத்திலிருந்து பசுவந்தனை செல்லும் சாலையிலுள்ள கீழமங்கலத்தின் வடபுறத்தில், தொடக்கப்பள்ளிக்கு அருகிலுள்ள கிணற்றங்கரையில் உள்ள கல்வெட்டுத் தூண்.

**செய்தி** : முதுகுடிநாட்டு மங்கலமான உத்தமபாண்டியநல்லூரில் முதுகுடி நாட்டீச்சுவரமுடைய நாயனார் பூசைக்குரிய தர்ப்பைப்புல் பறித்துக் கொள்வதற்காகக் காசு (அச்சு) வழங்கப்பட்டது. கல்வெட்டின் பிற்பகுதி சிதைந்துள்ளது.

**காலம்** : கி.பி. 1162 முதல் கி.பி. 1177 வரை திருநெல்வேலி, கன்னியாகுமரிப் பகுதிகளை ஆண்ட சடையவர்மர் குலசேகர பாண்டியராகலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடை | 10 | நாயனார் முதுகுடி ந |
| 2 | யபந்மரான | 11 | ாட்டீச்சரமுடைய |
| 3 | திரிபுவனச் சக்கர | 12 | நாயன[ா]ற்கு இவ் |
| 4 | வ[ர்*]த்திகள் [ஸ்ரீ*]குலை | 13 | வூரில் புல்லுப் ப |
| 5 | சேகரதேவற்[கு*] யா | 14 | றித்து கொள்ள வீ |
| 6 | ண்டு 2 வது முது | 15 | . . தேசித் திருவ |
| 7 | குடிநாட்டு மங்க | 16 | . . நல்லூர் அச்சு ஓ |
| 8 | லமான [உ]த்தமப | 17 | [ன்று]க்கு மூன்று . . |
| 9 | [ா]ண்டிய[ந]ல்லூர் | | |

# 4. அம்மாபேட்டைக் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன், அளக்குடி கோ. தில்லைராஜன்

## முதற் கல்வெட்டு

**இடம் :** தஞ்சாவூரிலிருந்து நாகபட்டினம் செல்லும் வழியில் உள்ள அம்மாபேட்டை பூலோகநாதர் கோயில். உதவியவர்கள் திரு. அரியராஜ பூபதி, திரு. காடவராயர்.

**செய்தி :** மாறாவாடியில் குருநாத செட்டியார் கட்டிய சத்திரத்திற்கு நிலம் கொடையளிக்கப்பட்டது.

**காலம் :** கி.பி. 1717.

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலி[வாஹ]

2 ன சகாத்தம் 16

3 39 கலியாப்$_{3}$தம்

4 4818 இத[ன்] மே

5 ல் செல்லா நின்

6 ற பராபவ வருடம்[1] சித்தி

7 ரை மாதம்[1] 6 உ புதன் கி

8 ழமை அக்ஷய திறி

9 திகை[2] இந்த சுபதினத்தி

10 ல் மாறாவாடியில் குருனாத

11 செட்டியார் பண்ணி வச்ச ச

12 த்திரத்துக்கு வெம்பன் திறைகொ

13 ண்டார் காட்டையன் திறைகொ

14 ண்டார் நல்லவன் திறை

15 கொண்டார் உள்ளிட்டார் வி

16 ட்ட நிலம் சிலாசாசனம் பண்

17 ணி குடுத்து தாண்டவ செட்டி

18 யார் தோட்டத்துக்கு வடக்கு வீ
19 ரசோழகன் எல்லைக்கு மேற்கு
20 வீரசோழகன் வாய்க்காலுக்கு
21 தெற்கு தாண்டவ செட்டியார் தோ
22 ட்டத்து மேல வேலிக்கு கிழக்கு நிலம் 1
23 [வே*]லி இந்த வேலி நிலமும் திறைகொ
24 ண்டான்கள் சகலரும் கூடி த
25 ற்மத்துக்கு கு
26 டுத்தது இந்த
27 தற்மம் சந்திர சூ[ரி*]யாள்
28 உள்ள மட்டுக்கும் தற்ம ப
29 ரிபால[ன]ம் [ப]ண்ண பண்ணி
30 னது இந்த தற்ம[த்]துக்கு யார
31 ாமொருவர் அனுகூல
32 ம் பண்ணின பேர்கள்
33 புத்திர பவுத்திரர் அபிவி
34 றுத்தி உண்டாய் சுகசீவி
35 யாய் இருப்பார்கள் கெங்
36 கை கரையிலே க[ா]ராம் பசு த
37 ானம் பண்ணின பலன் உ
38 ண்ட[ா]ய் இருப்பார்கள் இந்த
39 தற்மத்துக்கு யா(ெ)தாமொருவ
40 ன் விகாதம் [ப]ண்ணின பே
41 ர்கள் கெங்கை கரையில்
42 காராம்
43 [பசு]வை
44 [கொ]ன்ன
45 [தோஷ]த்திலே
46 ல போவா

47 ர்கள் தெ
48 [ய்வ] துபே
49 ராகம் பிர
50 ம துரோ
51 கம் கர்ப
52 குத்தம் பண்
53 ணின தோ
54 ஷத்திலே
55 போவா
56 ர்கள்

## இரண்டாம் கல்வெட்டு

**இடம் :** அம்மாபேட்டை சீனிவாசப்பெருமாள் கோயில் முகமண்டபத் தெற்கு முகப்பு.

**காலம் :** கி.பி. *1819* ஆக இருக்கலாம்.

1 ஸ்ரீராமஜெயம் வெகு
2 தான்ய வருடம்[1] தைய் மாதம்[1]
3 16 உ சின்ன குழந்தை
4 செட்டியார் குமார . . . . செட்டி
5 யார் முத்த செட்டியார் உபய[ம்]
6 நித்தம் ஸதாசேருவை உ
7 ணாகப்ப செட்டியார் குமார[ர்]
8 முத்துக்கனி செட்டியார்
9 நித்தம் ஸதாசேருவை

## மூன்றாம் கல்வெட்டு

**இடம் :** மேலது. மேற்கு முகப்பு.

**காலம் :** கி.பி. *1838* ஆக இருக்கலாம்.

1 சிராம செயம்
2 விளம்பி வருடம்[1]
3 வைய்யாசி மாதம்
4 சேனைக்குடை[3]
5 திருவிணாதன் த
6 மம் செட்டியப்ப
7 ன் குமாரன் வீ
8 ரப்பன் நித்தம் ச
9 தாசேருவை

## நான்காம் கல்வெட்டு

**இடம் : மேற்படி.**

**காலம் : கி.பி. 1912.**

1 ஸ்ரீ
2 அம்மாப்பேட்டை
3 அ.க. கோபாலசாமி
4 மோஹித்தேரோவ்[4]
5 அவர்களால் சபா ம
6 ண்டப கைங்கிரியம்
7 1912

### குறிப்புகள்

1. குறியீட்டில் உள்ளது.
2. வைகாசி மாத ஆதிரை நட்சத்திரத்தில் அட்சயத் திரிதியை கொண்டாடுவது மரபு. இக்கல்வெட்டில் சித்திரை மாதத்தில் அட்சயத் திரிதியை குறிப்பிடப்படுகிறது.
3. சேனைக்குடி என்பது இலை வாணியரின் குலப்பெயர்.
4. மோத்ரப்பா சாவடி என்ற பகுதி அம்மாபேட்டைக்கு அருகிலுள்ளது. 'மோஹி தேராவ் அப்பா சாவடி' என்பதே இதன் சரியான வடிவமாகும்.

---


### நன்றி

இந்த இதழ் உருவாகப் புதிய கல்வெட்டுகள், கட்டுரைகள் தந்துதவிய ஆய்வர்கட்கும் விளம்பரங்கள் தந்துதவிய அருளாளர்கட்கும் அவற்றை வாங்கித் தந்த அன்புள்ளங்களுக்கும் வரலாற்றின் கனிந்த கைகூப்பு.

# 5. வெள்ளாரம் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

**இடம் :** தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம், பாஞ்சாலங்குறிச்சியையடுத்த வெள்ளாரம், எட்டையபுரம் ஜமீன்தார் மாளிகையருகே உள்ள பலகைக் கல்.

**செய்தி :** கல்வெட்டில், 'சாலிக்குளம் சிரைக்காடு' குறிப்பிடப்படுகிறது. வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாற்றில் சாலிக்குளம் காடு பற்றிய குறிப்புகள் உள்ளன. 'சிறை' என்ற சொல், காவற்காடு என்ற பொருளில் புறநானூற்றில் (பா. 17) குறிப்பிடப்பட்டுள்ளது. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குச் சாலிக்குளம் காடு காவற்காடாகப் பயன்பட்டிருக்கவேண்டும்.

**காலம் :** கி.பி. 1882 எனக் கொள்ளலாம்.

1 57[1] வருடம்[2] அர்ப்பசி மாதம்[2]
2 3 உ சாலிகுளம் சிரை
3 க்காடுக் காவலுக்
4 காகப் போயிருந்த
5 செகவீரட்டு ம
6 ணியாரன்[3] மகன்
7 உமையண்ண ம
8 ணியாரன் வெடிக்
9 குண்டுனா லிரந்து
10 சிவலோகப் பதவி
11 அடைந்தான்

**குறிப்புகள்**

1. கொல்லம் 1057 ஆக இருக்கவேண்டும்.
2. குறியீட்டில் தரப்பட்டுள்ளது.
3. செகவீர எட்டப்ப நாயக்கரின் பெயரைக் கொண்ட மணியக்காரன்.

# 6. வல்லவன் கோட்டைக் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

**இடம் :** திருநெல்வேலி வட்டம் மானூருக்கு அருகிலுள்ள வல்லவன் கோட்டை சாஸ்தா கோயில் கல்தூணிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு. இக்கல்தூணில் அடுத்தடுத்து இரு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. தகவல் தந்தவர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி.

**செய்தி :** களக்குடி நாட்டுக் கீழ்மங்கலத்தின் ஒரு பகுதியாகிய நீதியர்மங்கலத்திலிருந்து அருட்டுணைப் பெரும்பள்ளிக்குப் புகழங்குடியன் என்பவர் ஆடுகள் அளித்தார். புகழங்குடியனின் மனைவி, வெண்புநாட்டு நால்கூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். அருட்டுணைப் பெரும்பள்ளி என்பது சமணப் பள்ளியாக இருக்கலாம். மானூரில் சில ஆண்டுகட்கு முன்னர் சமணச் சிற்பம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. அச்சிற்பம், அருட்டுணைப் பெரும்பள்ளியைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும்.

நீதியர்மங்கலம் என்ற பெயர் கவனத்தை ஈர்க்கிறது. மானூரிலுள்ள கோமாறஞ்சடையரின் முப்பத்தாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், பிரமதேயத்து மகாசபையார், வைதிக தர்ம சூத்திரங்களின் அடிப்படையில் மன்றாடுதல் (வழக்குத் தீர்த்தல்) புரிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னர் முதல் வரகுணன் (கி.பி. 765-815) என அறிஞர்களால் கருதப்படுகிறார்.[1] வல்லவன் கோட்டைக் கல்வெட்டும் சமகாலக் கல்வெட்டே எனக் கொள்வதற்கு, நீதியர்மங்கலம் என்ற பெயரும் ஒரு சான்றாகத் திகழ்கிறது. சமண சமய சாத்திரங்களின் அடிப்படையில் நீதி நிர்வாகம் இவ்வூரில் நடந்ததெனக் கொள்ளலாம்.

**காலம் :** முதற் கல்வெட்டு கி.பி. 790 ஆகலாம்; இரண்டாம் கல்வெட்டு கி.பி. 820 ஆகலாம்.

1 ஸ்ரீ கோமாறஞ்சடையர்க்கு யாண்டு இருபத்தைஞ்சு இவ்வாண்டு களக்கு

2 டி நாட்டுக் கீழ்மங்கலத்து . . . . . . புகழங்குடியன்

3 என் மணவாட்டி வெண்புணாட்டு நால்கூர் களியன் மொழி

4 யைச் சாத்தி நீதியர்மங்கலத்து அருட்டுணைப் பெரு[ம்*]

5 பள்ளிக்கு அடுத்த ஆடு ஐஞ்பது || கோச்சடைய மாற

6 ற்கு யாண்டு 2 இதனெதிர் 3 இவ்வாண்டு களக்குடி நாட்டு கீழ்மங்கலத்து

7 ப்ப[ர*]ல் பள்ளிசன்தந் நீதியர்மங்கலத்து அருட்டுணைப் பெரு[ம்*]பள்ளிக்கு

8 புகழுங்குடியன் தன்னைச் சாத்தி அடுத்த ஆடு இருபத்தைஞ்சு

குறிப்பு

1. SII 14: 37; K.A. Nilakanta Sastri, The Pandyan Kingdom, p. 60.

---

## பிரண்டைப் பழக்கம் அன்றும் இன்றும்

வழிப்போக்கர்கள் ஓர் ஊரிலிருந்து வேற்றூர் செல்லும் வழியில் பிரண்டைக் கொடியை அறுத்துப்போட்டுச் செல்வர். அதனால் புறப்பட்ட ஊரிலிருந்த வெப்பும் குருவுமாகிய தொற்று நோய்கள் தம்மைத் தொடர்ந்து வந்து பற்றிக்கொள்ளா என நம்பினர். இவ்வாறு துணித்துப்போட்ட பிரண்டைக் கொடிகள் வற்றி உலர்ந்து இடியேறு தாக்குண்ட பாம்புகள் துண்டுதுண்டாகிக் கிடப்பன போலிருந்தன என அகம் சுட்டும்.

"ஆறுசெல் மாக்கள் அறுத்த பிரண்டை
ஏறுபெறு பாம்பின் பைந்துணி கடுப்ப" (அகம். 119)

குழித்தலை வட்டம் பஞ்சப்பட்டியில் இவ்வழக்கம் இன்றும் உள்ளது. நான்கு வழிகள் கூடுமிடம், 'எக்குத்தப்பான' இடமென்று அவ்விடத்தின் வழி கைக்குழந்தையைத் தூக்கிச்செல்வார், பிரண்டைக் கொடியை அறுத்துப்போட்டுச் சிறு கல்லை அதன் மீது வைத்துச் செல்கின்றனர்.

- பி. தமிழகன்

# 7. மேலமீரான்குளம் கல்வெட்டு

**எஸ். இராமச்சந்திரன்**

*இடம்* : தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், மேல மீரான்குளம். இவ்வூர்க் குளக்கரைப் பிள்ளையார் கோயிலருகில் உள்ள தூண். இத்தூணின் ஒருபுறம் வாமன அவதார சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. தகவல் தந்தவர் பேய்க்குளம் வே. அருள்மணி.

*செய்தி* : விசயரங்க சொக்கநாத நாயக்கரின் ஆணைப்படி, தளவாய் சாமியய்யன் என்பவர், சித்தூர் லட்சுமி அம்மா சத்திரத்துக்கு, மீரான்குளம் கிராமத்தைக் கொடையாக வழங்கினார். சித்தூர் என்பது திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்திலுள்ள ஊராகும். வைணவ அந்தணர்களுக்குக் கொடையாக வழங்கியதற்கு அடையாளமாகவே, நாயக்க மன்னரின் இக்கல்வெட்டில் வாமன சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது எனலாம்.

*காலம்* : கி.பி. 1721.

| | | | |
|---|---|---|---|
| 1 | 897 | 12 | னவர்கள் சி |
| 2 | வருடம்[1] பிலவ | 13 | த்தூர் லட்சி |
| 3 | வருடம்[1] வைகா | 14 | மி அம்மா ச |
| 4 | சி மாதம்[1] 6 உ | 15 | த்திரத்துக்கு |
| 5 | விசையர | 16 | உட்கிறாமம |
| 6 | ங்க சொக் | 17 | ாக விட்டு கு |
| 7 | க[னாத] னாயக்கரவர் | 18 | டுத்த மீறாங் |
| 8 | கள் உத்தார | 19 | குளம் ஆ |
| 9 | ப்படிக்கு ராச | 20 | சந்திராற்கம் |
| 10 | ஸ்ரீ தளவா | 21 | தருமம் |
| 11 | ய் சாமியய்ய | | |

**குறிப்பு**

1. குறியீட்டில் உள்ளது.

# 8. பேய்க்குளம் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

**இடம் :** தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், பேய்க்குளம். இவ்வூரின் வெங்கடேசுவரபுரம் பகுதியில் உள்ள சங்கரலிங்கேசுவர சுவாமி கோயிலில் உள்ள கல்தூண்.

**செய்தி :** ஆவுடையம்மை தம் கணவர் மார்த்தாண்ட முதலியாருக்கும், மகள்களுக்கும் புண்ணியமாகப் பாதை மடம் ஒன்று நிறுவி, அம்மடத்துக்கு உபயமாக அங்கயற்கண்ணி, இராமனான், புதியவள் ஆகிய அடிமைகளையும், மாடுகளையும், செங்குழி, குருகாப்பேரி, நெடுங்குளம் ஆகிய ஊர்களில் நன்செய் நிலங்களையும் தந்தார்.

**காலம் :** கி.பி. 1668.

## முதற் பகுதி

1 844 வருடம்[1] ஆடி மாதம்[1] 2
2 9 உ பூவேநி தலமான
3 பேய்க்குளத்தில் யிரு
4 க்கும் சிவனடியான்
5 முதலியார் மகள் ஆவுடை
6 டயம்மையேன் பத்தா
7 ம[ர*]த்தாண்ட முதலியாருக்கு
8 ம் மகள்கழுக்கும் புண்ணிய
9 மாக வச்ச பாதை மடத்துக்கு
10 நான் உபை[ய*]மாக விட்டுக் குடுத்[து]
11 சிறை அங்கயல்கண்ணியும்
12 அவள் மகன் இராமனானும் பு
13 தியவழும் நாலு மாடு பறை
14 காணியும் . . . . .
15 மரவகை தச்சி பணம்
16 மனஞ்சியும் ஒரு பத்
17 தைண்ணும் மடத்து
18 க்கு வட நிலம்[1] கெல்லை

19 . . வயல்[1] . . . . கரிசல் வ

20 ரை வயல்[1] நிலம்[1] நஞ்சை

21 [நிலம்][1] . . . . . நெல் க

22 செங்குள [வயல்][1] . .[2] கு

23 ருகாப்பேரி [வயல்][1] . .[2]

24 நெடுங்குளம் [வயல்][1] .[2]

25 . . . . . .

## இரண்டாம் பகுதி

1 இது முதல

2 ானது எ

3 ல்லாம் ப

4 ரதேசி

5 முத்திரிய

6 ாக சங்கர

7 மூர்த்தி சு

8 வாமி புண்

9 ணிய[ம*]ாக விட்

10 டுக்குடுத்தப்

11 படியினாலே

12 இதுக்கு இ[யா*]

13 தாம் ஒ

14 ருத்தர் வி

15 க்கின

16 ம் பண்

## மூன்றாம் பகுதி

1 ணினவன்

2 கெங்கை க

3 ரையிலே க

4 ாராம் பசுவை

5 வ கொண்ண

6 தோசத்திலே

7 ல அடைஞ்சு

8 போவாராகவும்

9 இந்த த[ம்*]மத்

10 தை நன்றா[க*] நட

11 த்தி வந்தவ

12 ர்கள் சிவ

13 பதம் பெறு

14 வார் சிவ

### குறிப்புகள்

1. குறியீட்டில் குறிக்கப்பட்டுள்ளது.
2. நில அளவுகள் குறியீட்டில் உள்ளன.

# 9. ஆடவல்லான் தளக் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

**இடம்** : தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் கைலாசநாதர் கோயிலிலுள்ள பிற்காலப் பாண்டியர் கலைமுறையைச் சேர்ந்த ஆடவல்லான் செப்புத்திருமேனியின் தளம்.

**செய்தி** : திருவைகுண்டம் கோட்டையைச் சேர்ந்த சிவசங்கரம்பிள்ளை இக்கோயில் கருவறை மண்டபப் படியில் பித்தளைத் தகடு போர்த்தி, ஈசுவரத் தளம் செய்தளித்தார்.

**காலம்** : கி.பி. 1860.

1 1036 வருடம்[1] துற்மதி வருடம்[1] சித்திரை மாதம்[1] 20 உ குருவாரமும் திருவோண நட்செத்திரத்தில் கயிலாசநாயகர் கெற்பகிரக மண்டபம்

2 பித்தளை படி 30 இஸ்வரப் பீடம் படிகளும் [2] கூட்டி 32க்கு ரு . . வேலையடக்கம் ரு . . குட்டம் யீயம் உள்பட ரு 187க்கு

3 கோட்டை சண்முகம்பிள்ளை புத்திரன் சிவசங்கரம்பிள்ளை சொந்தமும்

4 வியாசகமுமாக நடந்த பணிவிடைக்கி சிதம்பரேசு[வ*]ரர் பாதார விந்தமே துணை

## குறிப்பு

1. . குறியீட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

---

இவ்விதழில் வெளியாகியுள்ள கல்வெட்டுகள், கட்டுரைகள், கருத்துரைகள் ஆகியவற்றிலுள்ள செய்திகளுக்கு அவற்றின் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# 10. திருவானைக்கா கல்வெட்டுகள்

மு. நளினி, அர. அகிலா

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட திருவானைக்காவில் இருக்கும் சம்புகேசுவரர் திருக்கோயிலில் ஆய்வு மேற்கொண்டபோது இதுகாறும் படியெடுக்கப்படாதிருந்த சில புதிய கல்வெட்டுகளைக் கண்டறியமுடிந்தது. அவற்றுள் மூன்று இங்குத் தரப்பட்டுள்ளன.

## முதற் கல்வெட்டு

**இடம்** : முதல் திருச்சுற்று; வடசுவர்.

**செய்தி** : கோயில் நிர்வாகிகளுக்கு அனுப்பப்பட்ட அரச ஆணை. திருக்கோயிலுக்கு நிலம் இறையிலியாக்கித் தரப்பட்டது.

**காலம்** : மூன்றாம் குலோத்துங்கர்; கி.பி. 1209.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான்

2 பாண்டிகுலாசனி வளநாட்டு உடையார் திருவானைக்கா உடையார் கோ

3 யில் தேவர் கன்மிக்கும் ஸ்ரீ[மாஹே]ஹச்$_0$வரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீ

4 காரியஞ் செய்வானுக்கும் இத்தேவர்க்குத் தேவதான இறையிலி இடச்சொ

5 ன்ன நிலத்துக்கு உடலாக இராசகெம்பீர வளநாட்டுப் புலிவலம் பெ

6 குடி நிலம் எண்பத்தஞ்சரையே அரைக்காணி முந்திரிகைக் கீழரை

7 யே இரு மாவரையும் இராசநாராயணநல்லூர் நிலம் ஆறரையே மூன்று

8 மாவின் கீழரையும் கூடலூர் சருப்பேதிமங்கலத்து நில

9 ம் ஒன்பதரையேக் காணி முந்திரிகைக் கீழ் முக்கா

10 லே இரு மாவரையும் முப்பத்தொன்றாவது பசான முதல் இறையிலியா

11 க இடக்கடவதாக - - இட்டுக் கைக்கொள்ளக் கட

12 வர்களாக வரிக்கூறு செய்வார்களுக்குச் சொன்னோம் இந்நில[ம்*] முப்பத்தொ

13 ன்றாவது பசான முதல் இத்தேவர் . . . . . இறையிலியாகக் கைக்கொள்ள

14 ப் பண்ணுக எழுதினான் திருமந்திர ஓலை திருவரங்க மூவேந்த வேளான்

15 இவை வில்லவராயனெழுத்து இவை விழிஞத்தரயன் எழுத்து இவை தொ

16 ண்டைமான் எழுத்து — — ராஜனெழுத்து

## இரண்டாம் கல்வெட்டு

**இடம்** : மேலது.

**செய்தி** : அரச ஆணை. இறைக்கோயில் பணிகளுக்குத் தரப்பட்ட நிலம் இறையிலியாக்கப்பட்டது.

**காலம்** : மூன்றாம் குலோத்துங்கர்; கி.பி. 1199.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொ

2 ண்டான் பாண்டிகுலாசனி வளநாட்டு உடையார் திருவா

3 னைக்கா உடையார் கோயில் தேவர் கன்மிக்கும் ஸ்ரீமாஹே

4 ச்$_{0}$ வரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியஞ் செய்வானு

5 க்கும் இத்தேவற்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதா

6 க் பதினாறாவது கும்பிட்டு இராசகெம்பீர வளநாட்டு உறை

7 யூர் கூற்றத்து அந்தவநல்லூரிலே ஐம்பத்து மூன்றே

8 [முக்*]காலே நாலு மா நிலமும் முன்னிறை கட்டினபடி தவி

9 ர்ந்து இருபத்தொன்றாவது பசான முதல் தேவதான இறை

10 யிலியாக இடக் கடவதாக வேலி நூற்றுக் கலத்திநால்

11 பத்தாறாக்கி இறை கட்டியும் வரியிலாரும் வரிக்கூ

12 று செய்வார்களும் எழுத்திட்ட உள்வரி தரச்சொன்னோ

13 ம் இன்னிலம் இருபத்தொன்றாவது பசான முதல் தேவதா

14 ன இறையிலியாகக் கைக்கொ[ள்]க எழுதிநாந் திருமந்

15 திர ஓலை நெறிஉடை[யா*]ர் சோழ மூவேந்தவேளான் இவை வில்

16 லவராயனெழுத்து இவை மூவேந்தர[ா*]யனெழுத்து இவை

17 எதிரிலிசோழப் பல்லவரையனெழுத்து இவை தொண்

18 டைமானெழுத்து இவை விழிஞத்த[ரை*]யனெழுத்து இவை வா

19 ணா[த]ராயனெழுத்து யாண்டு 27 [நாள் 200]

## மூன்றாம் கல்வெட்டு

**இடம் :** மேலது.

**செய்தி :** முன்னிரு கல்வெட்டுகளோடு தொடர்புடையது. நிலங்கள் இறையிலியாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட தகவல் கிடைக்கிறது.

**காலம்:** மூன்றாம் குலோத்துங்கர்; கி.பி. 1199.

1 – –

2 ண்டிகுலாசனி வளநாட்டு உடையார் திருவானைக்கா உடையார்க் – – –[1]

3 டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக 16வது கும்பிட்டு இடத் திருவ[ாய் மொழி]

4 ந்தருளின நிலம் நூற்று வேலிக்குடலாக இராசகெம்பீர வளநாட்டு – – –

5 ர் கூற்றத்து அந்தவநல்லூரில் முன்னிறை கட்டினபடி தவிர்ந்து யா – – –

6 பசான முதல் இறையிலி இட்ட நிலம் 53 . . . நில ஒபாதி இறை நெல்லு

7 . . . . . . நிச்சயித்த ஒபாதி நெல்லு – – இப்படி தவிர யா – – –

8 பத்தாறாக்கி நெல்லு - - யாண்டு 21 வது பசான – – –

9 க்கு நூற்றுக் கலமா[க*] இறைகட்டின காணிக்கடன் – – –

10 இறையிலியாக இட்டமைக்கு இவை புரவுவரி கண்கா – – –

11 னெழுத்து இவை புரவுவரி சீகரண நாயகம் பாலையூர் கிழ – – –

12 ரவுவரிச் சீகரண நாயகப் பந்தணைநல்லூருடையா னெழுத்து – – –

13 து முகவெட்டி பந்தணைநல்லூருடையானெழுத்து இவை புரவுவரிச் சீகரண நாயக பந்தணைநல்லூ[ரு]

14 டையானெழுத்து இவை புரவுவரி சீகரணத்து முக[வெ*]வட்டி பெருமங்கலமுடையானெழுத்து

15 இவை புர[வு*]வரி சீகரண[த்து] முக[வெ*]வட்டி உழந்தை உடையானெழுத்து இவை புரவுவரி சீகரணத்து முக[வெ]வட்

16 டி நெற்குன்ற[மு]டையானெழுத்து இவை வேணாட்டரைய னெழுத்து இவை சீப்பேற்ற

17 ரையனெழுத்து இவை வ[ர*]ணவர்கோனெழுத்து இவை கனகராயனெழுத்து இவை வளவத

18 ரையனெழுத்து இவை பழந்தீபரா[ய*]னெழுத்து இவை கோசலத்தரையனெழுத்து இவை

19 – – இவை விலாடராயனெழுத்து இவை – – இவை வாண

20 – – இவை கச்சியராயனெழுத்து

## குறிப்பு

1. மூன்று கோடிட்ட இடங்கள், தொடர்புடைய கல்வெட்டு வரிகளுடன் கூடிய கற்கள் காணப்படாமையைச் சுட்டுகின்றன.

---

### நீர் தெளியக் காழ்

கலங்கிய நீரைத் தெளியவைக்க நுண்துளை வடிகட்டிகள் பயன்படுத்தும் காலமிது. காலங்கள் மாறியும் கலங்கல் மாறவில்லை. என் செய்வது! யாருக்காவது அதில் அக்கறையிருந்தால்தானே. அதுசரி, அந்தக்காலத்தில் இந்தக் கலங்கலை நீக்க என்ன செய்தார்கள்? நெய்தல்கலி (142) விடைதருகிறது. தேற்றாவின் விதையைக் கொண்டு நீர் நிறைந்த கலத்தே மெல்லத் தேற்ற, நீரின் கலங்கல் தெளிவுற்றதாம். நீர் தெளியப் பயன்பட்ட அந்த விதையை இன்றெங்கே காணோம்?

# 11. உய்யக்கொண்டான்திருமலைக் கல்வெட்டுகள்

இரா. நந்தினி, மு. நளினி

உய்யக்கொண்டான்திருமலை உஜ்ஜீவநாதர் திருக்கோயிலிலிருந்து கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டுகளுள் சில வரலாறு முதலிரண்டு இதழ்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஏழு கல்வெட்டுகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. இவற்றைப் படியெடுக்கத் துணைநின்றவர் கோயில் சிவாச்சாரியார் திரு. எஸ். தியாகராசன்.

## முதற் கல்வெட்டு

**இடம் :** இரண்டாம் திருச்சுற்று; தெற்குச் சுவர்.

**செய்தி :** இறைவன் அமுது செய்தருளும்போது, மலையின் கீழுள்ள சாலையில் வேதம் வல்ல அந்தணர்கள் பதின்மரும் வேளாளத் தவசியர் நாற்பதின்மரும் உண்ண வாய்ப்பாகப் பனையூர் நாட்டுப் பெரும்புலியூர் வெள்ளாட்டியால் பொற்கொடையளிக்கப்பட்டது. கல்வெட்டு வரிகளின் தொடக்க எழுத்துக்கள் கட்டடப்பகுதிக்குள் சிக்கியுள்ளன.

**காலம் :** முதல் இராசேந்திர சோழர்; கி.பி. 1019.

1 - 7 திருமன்னி வளர என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி

8 — — — — இராசேந்திர சோழ தே₃வற்கு யாண்டு 7

9 — — — — னால் தென்கரை கேரளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்து ஸ்ரீகற்குடி மலை விழுமி

10 — — — — யார்க்கும் ஸ்ரீராஜேந்த்ரசிங்க வளநாட்டுப் பனையூர் நாட்டு பெரும்புலியூர் இருக்கும் வெள்ளாட்டி

11 — — — — உடையான் பண்டாரக் குடுளைக் கல்லால் வைத்த துளை நிறை செம்மை [பொன்] 7½ இப்

12 — — — — சனைக்கும் கழஞ்சு பொன்னுக்கு நெல்லு கலமாக வந்த நெல் 7 கலம் . . இன்னெல்லு

13 — — — — ணிப்பதக்கும் கொண்டு உடையார் புதியிது அமுது செய்தருளுமன்று [வே]வதம் வல்ல

14 — — — — ாற் பதின்மரும் வெள்ளாள தபஸ்யர் நாற்பதின்மரும் ஆக உண்ணக் கடவிய கலம்

15 — — — — அரிசி கலனே இரு தூணிக்கு அஞ்சிரண்டு வண்ணம் நெல்லு நாற்கலனே பதக்கு க

16 — — — — ஒன்றுக்கும் புணிசடன் ஒன்றுக்கும் புழுக்குக் கறி ஒன்றுக்கும் நெல்லுத் தூணியும் [பயற்]

17 — — — — ல பதக்கிரு நாழியும் நெய் இரு நாழிக்கு நெல்லுத் தூணிப்பதக்கும் மிளகு

18 க்கும் உப்புக் குறுணி ஒரு நாழிக்கு நெல்லுக் குறுணி ஒரு நாழியும் மோருக்கு நெல்

19 — — — — யும் விறகுக்கு நெல்லு தூணிப்பதக்கும் அடுவார் மூவர்க்கு நெல்லு முக்குறுணி

20 — — — — நெல்லு தூணியும் பாக்கு நூற்றறுபதுக்கு நெல்லு ஐங்குறுணியு

21 — — — — பற்று ஆறுக்கு நெல்லு குறுணி நானாழியும் சுண்ணாம்புக்கு நெல்லு

22 — — — — நெல்லு எழு கலனே தூணிப்பதக்கும் கொண்டு உடையார் திருமலையின் கீழே ஆட்டாண்டு

23 — — — — தித்தவல் ஊட்டுவதாக [ை]வய்த்த பொன் 7½ இப்பொன் எழு கழஞ்சரையும் இத்தே$_3$

24 — — — — வைப்பித்துக் கொண்டு இப்படி செலுத்த கடவோமானோம் இத்தே$_3$வர் கந்மிகளோம்

25 — — — — ச்$_0$வர ரக்ஷை

## இரண்டாம் கல்வெட்டு

**இடம் :** மேலது.

**செய்தி :** திருநாவுக்கரையன் திருநந்தவனத்திற்கு நீரிறைப்பார்க்கு நெல்லூதியம் தர வாய்ப்பாக மாதேவன் காசு கொடையளித்தார். கல்வெட்டு வரிகளின் தொடக்க எழுத்துக்கள் கட்டடப்பகுதிக்குள் சிக்கியுள்ளன.

**காலம் :** முதல் இராசேந்திரர்; கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு (1019).

1 — — — — ருக்கற்குடி விழுமிய தேவர் திருநந்தவானம் இராஜாச்$_0$ரைய சதுர்வ்வேதி$_3$மங்கலத்து மு

2 – – – – நாவுக்கரைய தேவன் திருநந்தவானம் இறைப்பார்க்கு காசு ஒன்றுக்குப் பலிசை நெல்

3 – – – –· தக்காக ஆண்டுவரை பலிசை நெல்லு இருபதின் கலத்துக்கு இவ்வூர் நாலாஞ்சேரி

4 – – – – மாதேவன் பலிசைக்கிட்டு பலிசையால் செல்வதாக பண்டாரத்து வைத்த காசு

5 – – – – மாஹேச்ஂவர ரக்ஷை

## மூன்றாம் கல்வெட்டு

**இடம் :** மேலது.

**செய்தி :** வைகாசி விசாகத்தன்று இறைவனுக்கு நூற்றெட்டுக் கலச நீரால் திருமுழுக்காட்ட வாய்ப்பாக இராசேந்திர சோழர் பணிமகன் சோழன் இருபது காசுகள் கொடையளித்தார்.

**காலம் :** மேலது.

1 இவ்வாண்டே உடையார் திருக்கற்குடி விழுமிய தேவர் வைகா

2 – – – – தீர்த்தமாடின விசாகத்தினான்று பதின் கல நெல்லு நூற்றெட்டு கலசம் திருமஞ்சனமா

3 – – – – து செய்தருள காசு ஒன்றுக்கு பலிசை நெல்லு தூணிப்பதக்காக ஆண்டு வரை பலிசை

4 கலத்துக்கு உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவர் பணிமகன் கேரளாந்தகநல்லூர் உடையான்

5 சோழன் பண்டாரத்து வைத்த முதற் காசு இருபது இது பன்மாஹேச்ஂவர ரக்ஷை

## நான்காம் கல்வெட்டு

**இடம் :** மேலது.

**செய்தி :** கோயில் தேவதானமான சுத்தமலிநல்லூர்க் குளம் தூர்ந்து, குமிழி சிதைவுற்றதால், அவ்வூரிலிருந்து வரும் நெல்லளவு குறைந்தது. வணிகர் அம்பலவன்தேவன் அவற்றைச் சரிசெய்துதந்து, நூற்றிருபது கலம் நெல்லும் கொடையளித்தார். இந்நெல்லின் வட்டி கொண்டு கோயில்

அடிவாரத்திலிருந்த குலோத்துங்க சோழன் மடத்தில், கோயில் திருநாளின் போது, பத்து நாட்களும் மாகேசுவரரை உண்பிக்க ஏற்பாடாயிற்று.

**காலம் :** முதல் குலோத்துங்க சோழர்; கி.பி. 1077.

*1 - 3* புகழ்மாது என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி

*4* கோராஜகேசரிபந்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 7 ஆவது கேரளாந்தக வளநாட்டு உ[றை]யூர்க் கூற்றத்து திருக்கற்குடி விழுமியதே$_3$வர் தே$_3$வர் கந்மிகளுக்கு

*5* உய்யக்கொண்டான் வளநாட்டு திரைமூர் நா[ட்டு] ஜநநாதபுரத்து வியாபாரி சாத்தம்பாடி உடையான் அம்பல[வ*]

*6* ன்தேவன் இக்கோயிலின் அடிவாரத்து ஸ்ரீகுலோத்துங்க சோழந் மடத்தில் செய்த தந்மத்துக்கு இத்தே

*7* வர் தேவதாநம் இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு உறத்தூர் கூற்றத்து ப்$_3$ரஹ்மதே$_3$யம் விக்கிரமகேசரிச் சருப்பே

*8* திமங்கலத்து ஸபை$_4$யார் பொந் கொண்டு இறையிலியாக விட்ட புதுக்குறிச்சியாந சுத்தமலிநல்லூர் — —

*9* தூர்ந்து குமிழியும் ஓட்டையாய் கிடந்தமையில் முந்பு சென்று வருகிற நெல்லு அடைப்படி நெல்லுச் சுருங்கி கிடந்தமை

*10* யிலும் இக்குளங் கல்லிக் குமிழியும் [எ]டுக்க இது அம்பலவன் தேவ[னி]டை கொண்ட நெல்லு நூற்றிருபதிந் கலமும் இநெல்

*11* லு நூற்றிருபதிந் கலமுங் கொண்டு கல நெல்லுக்கு முக்குறுணி நெல்லாக ஆட்டாண்டு தோறும் பலிசை பொலிவதாகவும் இமு

*12* தல் நெல் நூற்றிருபதிந் கலமும் அட்டிக் குளமுங் கல்லி குமி ழியும் . . . மையில் இந்தப் பலிசையால் வந்த . . . முப்ப

*13* திந் கல நெல்லும் இத்தேவர் திருநாளில் இம்மடத்திலே ஸ்ரீமாயேச்$_0$வரர் . . . . . . . . திருநாள் பத்து நாளும் ஸ்ரீமாயேச்$_0$வரரை

*14* அமுது செய்விக்க கடவோமாகவும் இந்நெல்லு முப்பதிந் கல — — தித்தவற் செலுத்தக் கடவோமா

15 க கல்வெட்டி[க் குடுத்]தோம் இத்தேவர் கந்மிகளோம் [இது] பந்மாஹேச்$_{0}$வரர் ரக்ஷை

## ஐந்தாம் கல்வெட்டு

**இடம் :** மேலது.

**செய்தி :** *சுந்தரபாண்டியர் பெயரால் கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பட்டது. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.*

**காலம் :** கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 *ஸ்வஸ்திஶ்ரீ த்ரிபு$_{4}$வநச் சக்கரவத்தி கோநேரிந்மை கொண்டான் உடையார் திருக்கற்குடி விழுமியார் கோயில் ஸ்தாநபதிகளுக்கும் ஶ்ரீ*

2 *மாஹேச்$_{0}$வரக் கண்காணி செய்வாற்கும் இத்தேவற்ச் சுந்தர பாண்டியன் சந்திக்கு*

## ஆறாம் கல்வெட்டு

**இடம் :** மேலது.

**செய்தி :** தஞ்சாவூர்ப் புறம்படி இருமுடி சோழப் பெருந்தெருவில் வாழ்ந்த வணிகர் விச்சாதிரன், கோயில் உண்ணாழிகையில் இரவும் பகலும் நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காகத் தொண்ணூறு ஆடுகளைக் கொடையளித்தார்.

**காலம் :** *முதல் இராசேந்திர சோழர்; கி.பி. 1019.*

1 - 8 திருமன்னி என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி

9 *கோப்பரகேசரிபன்மரான ஶ்ரீராஜேந்த்ர சோ – – – –*

10 டு 7 ஆவது [நாள்] 65 நால் கேரளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்து ஶ்ரீகற்குடி – – – –

11 க்கு தஞ்சாவூர்ப் புறம்படி இருமுடி சோழ பெருந்தெருவில் இருக்கும் வியாபாரி விச்சாதிரன் முள்ளி – – – –

12 திருநொந்தாவிளக்கு ஒன்று இத்திருநொந்தாவிளக்கு ஒன்றிநுக்கு சூல உழக்கால் நிசதம் – – – –

13 திருவுண்ணாழிகையிலேய் இரவும் பகலும் சந்திராதித்தவல் எரிய வைத்த திருநொ – – – –

14 ல் வைத்த சாவா மூவாப் பேராடு தொண்ணூறு இது பந்மாஹேச்ᵥவர ரக்ஷை

## ஏழாம் கல்வெட்டு

**இடம் :** அம்மன் கோயில் உள்மண்டபத் தென்புறச் சுவர்.

**செய்தி :** பூவத்தன் திருச்சிற்றம்பலமுடையான் மனைவி திருவேகம்பன் பார்வதி சந்தி ஒன்றுக்கு விளக்கு இரண்டாக, மூன்று சந்திகளில் ஆறு விளக்குகள் எரிக்கக் கோயிலாரிடம் நாற்பத்தைந்து ஆடுகள் கொடையளித்தார்.

**காலம் :** கி.பி. பதினோராம் நூற்றாண்டு.

1 – – – – ஞ்சாவது ராஜமஹேந்த்ர வளநாட்டு உறை

2 – – – – ஹ்மதே₃யம் [ராஜா]ஸ்ரீய ச₀துர்வ்வேதி மங்கலத்து . . . . .

3 – – – – கொண்ட . . . . சேரி வார்க்கியன் பூவத்தன் தி[ருச்சிற்ற]ம்ப

4 – – – – ஹ்மணி திரு[வேகம்]பந் பார்வதி இன்நாட்டு [திருக்க]ற்குடி

5 – – – – என் . . . . . . . . வார்க்கியன் பூவத்தன் திருசிற்ற[ம்பல]முடை

6 – – – – ச்சந்தி ஒன்றுக்கு விளக்கு இரண்டாக சந்தி மூன்றுக்கு வைத்த சந்தி விள

7 – – – – ரை கொண்டு நெய் நாற்பத்தைஞ் ஞாழாக்கு தேவர் கந்மிகள் வசம்

8 – – – – தைஞ்சு இவ்வாடு 45சுங் கொண்டு சந்திராதித்த[வல் செ]லுத்த கடவரா

9 – – – – வித்தேன் திருவேகம்பன் பார்வதியேன் இது பன்மாஹேச்ᵥவர

10 ரக்ஷை

# 2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

## திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் - 2

*அர. அகிலா, மு. நளினி*

திருக்கோளக்குடிக் கோயில்களிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ள எண்பத்துமூன்று கல்வெட்டுகளில், பதினெட்டுக் கல்வெட்டுகளின் பாடங்கள் சென்ற இதழில் இடம்பெற்றன. பதின்மூன்று கல்வெட்டுகளின் பாடங்கள் இந்த இதழில் வெளியிடப்படுகின்றன. பிற கல்வெட்டுகள் தொடர்ந்து வரும் இதழ்களில் பதிப்பிக்கப்பெறும். இப்பணியை வாழ்த்தித் துணைநிற்கும் வணக்கத்திற்குரிய தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கட்கும், கோயில் அலுவலர்கட்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

**19. க.எண் : 53 - 1916.**

**இடம்** : *மகாமண்டபக் கிழக்குச் சுவர்; வெளிப்புறம்.*

செய்தி : திருமுண்டமழகியார் இக்கோயிலில் சந்திரசேகரர் திருமேனியை எழுந்தருளுவித்தார். இத்திருமேனிக்கான பூசை, திருநாள் முதலியவற்றிற்கான செலவுகளுக்காக நில விற்பனை. கொடையளித்தவருக்குச் செய்யப்பட்ட கோயில் மரியாதைகள் பற்றிய தகவல்கள் உள்ளன.

காலம் : கி.பி. *1455.*

*1* *ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் 1377ல் மேல் செல்லா நின்ற ஈச்$_{o}$[வ*]ர வருடம்[1]ல் அற்பசி மாதம்[1] 6 உ*

2 நயினார் திருக்கோளக்குடி உடைய நயினார் திருக்கோயில் ஸ்ரீபண்டா[ர*]

*3* த்தாரோம் கல்வாசல் நாட்டுக் குலசேகரபுரத்து திருவேட் பூருடையான்

*4* இன்பனைப் பெருமாள் திருமுண்டமழகியார் இந்த திருக் கோயிலுக்கு

*5* சந்திரசேகரரை எழுந்தருளப் பண்ணுகையில் இவற்கு திருநாளுக்கு

*6* அற்றைக் குறை அறுப்பாக திரு[மெ*]மய்ப்பூச்சும் திருப்பரிவட்டமும் கு

7 றைவற நடத்தி சந்நதியிலே ஒடுக்கும் திருமாலையும் பெற்று அக்ஷய வருடம்[1] ஆவ

8 ணி 22 உ திருமுண்டமழகியரான [மேற்படி] ஏகைக்கோனார் அழகிய சொக்கனா

9 ர் மேற்படி மெய்யந் அழகப் பரிபாலரு இக்கோயிலுக்கு முந்நாள் எங்கள் தகப்பநாருக்

10 கோயிலுக்கு சந்திரசேகரரை ஏறியருளப் பண்ணி

11 திருக்கோளக்குடி ஆண்ட நயினார் பழம் தேவதானம் ஆன இரா

12 சிங்கமங்கலத்தில் புரவில் நாலதூர் குளமும் வயலும் கிணறும் மே[ல்*]நோக்கிய மரமும் வய

13 ல் முற்றுக்கும் சிறிபண்டாரத்திலே முதல் பற்றிக்கொண்டு இவர்களுக்கு அறவிலையாக விற்ற நாவணி வயல் இவர்களே முந் கிருபை பண்ணின

14 சந்திரசேகரற்கு – – ம் பூசை முதலுக்குந் திருநாள் சிலவுக்கும் திருப்பரிவட்டந் திருமெய்ப்பூச்சுக்கும் நாங்களே யிந்த வயலில் முதல் கொண்டு

15 நடத்த கடவோமாகவும் இந்த தற்ம[த்து*]க்கு தரவுக்கு திங்கள் திவதம் திருநாளுக்கு சந்நதியிலே அருளிப்பெற்று திருகாத்திகைக்கு பிரசாதமும் கட்ட கடவோம் ஆகவும் வைகாசி

16 மாதம் எட்டாந் திருநாளுக்கு இந்த தந்மத்துக்கு பரிவட்டமும் கட்டக் கடவோமாகவும் இப்படிக்கு நரசிங்க பிரமாதராயர் எழுத்து சைவச்சிகாமணி

17 எழுத்து சுந்தரபாண்டிய பிரமாதராயர் எழுத்து மாஹேச்௱வர ரக்ஷை

## 20. க. எண்: 54 - 1916.

**இடம்** : மேலது.

**காலம்** : பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கீழ்வெம்ப னாட்டுத் தச்ச

2 னூர் உடையான் செய்[து]வித்த பெ

3 ருமாளான மழவராயன் திருமண்டபம் உ

**21. க. எண்: 55 - 1916.**

**இடம் :** மேலது.

**செய்தி :** பதின்தேசி மற்றும் எண் விஷயத்து வணிகப் பெருமக்கள் மஞ்சள், சுக்கு, உப்பு, வெங்காயம் போன்ற பொருட்களின் தீர்வைப் பங்கினைத் திருக்கோளக்குடிக் கோயிலுக்கு அளித்தனர். கல்வெட்டுப் பாடத்தில் இடப்பெற்றுள்ள இரு சிறுகோடுகள் ( – – ) அப்பகுதியில் இருந்து அழிந்துபோன பத்திற்கும் மேற்பட்ட எழுத்துக்களைச் சுட்டுகின்றன.

**காலம் :** பதினான்காம் நூற்றாண்டாகலாம்.

1 *ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான ஸ்ரீதிரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசிவல்ல தே*

2 *வர்க்கு யாண்டு 26 ஆவது – – ற்று திங்க[ட்*] கிழ*

3 *மையும் துவாத$_3$சி$_0$யும் பெற்ற – – மத்தசாகர மண்*

4 *டலத்துச் சமைவினொடு[ங்கி] – –*

5 *நடாத்தி நிகழா நின்ற – – லாகரமும் பதி*

6 *ந் தேசியும் எண் விஷயமும் – –*

7 *டுத்த பரிசாவது – –*

8 *பள்ளி இராசி பொதி – –*

9 *வத்தி பொதிக்கு பணம்$^2$ – –*

10 *வேற் கொடிப் பொதிக்கு – –*

11 *உ பணம்$^2$ உப்புப் பொதிக்கு . . . ஆக வந்த மஞ்சள் நால் சுக்கு இ*

12 *வையிற்றுக்கு மாராப்புக்கு ஒன்றுக்கு . . . ஆக வந்த பணம்$^2$மும் மஞ்சள் சுக்கு வெ*

13 *ண்காயம் உப்பு மாராப்புக்கு அரை மாவாக வந்த பணம்$^2$மும் ஆக இவகை*

14 *ப்படி பாலையன் பள்ளி இராசியாக பெற்றருளுவராகப் பட்டண[ம்*] புகுத*

15 *கட்டிக் குடுத்தோம் உடையார் திருக்கோளகுடியுடைய னாயனாற்கு*

16 – –

**22. க. எண்: 56 - 1916.**

**இடம்** : மேலது.

**செய்தி** : கோயில் திருவீதி உலாவரும் நாச்சியார் செப்புத்திருமேனி சிதைவுற்றதால் (இறந்து போகையில்) வேறு திருமேனி செய்தளிக்கப்பெற்றது. செய்தளித்தவர்க்குப் பெருந்திருநாளின் போது கோயில் மரியாதைகள் அளிக்கப்பட்டன.

**காலம்** : கி.பி. 1515.

1 சுபமஸ்[து*] சகாத்தம் 1437 இதன் மேல் செல்லா நின்ற பற்வத[3] வருஷம் வைகாசிய் 22 உ புறமலை

2 நாட்டுத் திருக்கோளக்குடி ஆண்ட நாயநார் கோயிற் சிறிபண்டாரக் காரியத்துக்கு

3 கடவார்ரோம் தெந்கோநாட்டு சுந்திரசோழபுரத்து பரம்பை யூருடையான் கு – –

4 திருக்கோளக்குடி சுந்தரபாண்டிய பெருந்தெருவில் நகரத்தாரில் உடப்பாண்டார்

5 முதலியாரான செழியதரையர் தந்மமாக இச்செட்டியார்க்கு பிடிபாடு பண்ணிக் குடுத்த

6 படி இக்கோயிலில் திருவீதி நாச்சியார் இறந்து போகையில் இநாச்சி யாரை இவர் தந்மமாக

7 எழுந்தருளப் பண்ணுகையில் இவற்கு பெருந்திருநாளுக்கு ஒரு பரிவட்டம் கட்டி

8 [தங்கள்] நிவந்தங்களுக்கு ஒடுக்கும் தீத்தம் திருநீறும் பெற்று போதக் கடவராகவும்

9 நரசிங்க பிரமாதராயர் எழுத்து ஆலாலசுந்தர பட்டர் எழுத்து

10 சுந்தரபாண்டிய பிறமாதராயர் எழுத்து உ

**23. க. எண்: 57 - 1916**

**இடம்** : மேலது.

**செய்தி** : கோயில் இறைத்திருமேனிகளுக்கான திருவாசிகைகளை வழங்கிய சுந்தரசோழபுர நகரத்தாருக்குப் பெருந்திருநாளின் போது கோயில் மரியாதைகள் அளிக்கப்பட்டன.

**காலம் :** பதினேழாம் நூற்றாண்டாகலாம்.

1 ஸ்வஸ்திஶ்ரீ மன்மத வருடம்[1] புரட்டாதி மாதம்[1] 8[4] உ திருக்கோளக்குடி யாண்ட தம்பிரானார்

2 கோயில் பண்டாரக் காரியத்துக்கு கடவாரோம் தென்கோனாட்டு சுந்திர

3 சோழபுரத்து சுந்திரமநாலூர்ரிலும் இருக்கிற நகரத்தாற்கு கல்வெட்டி கு

4 டுத்தபடி இன்நயினார் கோயிலுக்கு முதலியாற்குத் திருவாசி[கை*]யும் முதலியார்

5 நாச்சியார்க்குத் திருவாசிகையும் தெருவீதி நாச்சியாற்கு திருவாசிகையும்

6 முன்னாள் கோயிற் பண்டாரத்தில்ப் பூண்டான் நாயகற்குத் திருவாசிகையும்

7 ஆக இந்த நாலு திருவாசிகையும் இவர்கள் கனமாக நின்று பெறு

8 கையில் இவர்களுக்குப் பெருந்திருனாளுக்கும் கண்களத்தி பதங்களுக்கும்

9 சன்னதி[யி*]லே தீத்தம் திருனீறும் பெத்துத் திருப்பரிவட்டமும் கட்டிக் கொள்ளக்

10 கடவராகவும் இப்படிக்கு கணநாத பிரமாதர[ா*]

11 யர் எழுத்து ஆலாலசுந்தர பட்டன் எழுத்து சுந்தரபாண்டிய

12 பிறமாதராயர் எளுத்து – –

13 கோயிற் கணக்கு ஆதனரங்காறயன் எழுத்து . . . .

14 பாரபத்திய எல்லப்ப மு[தலி]யார் எழுத்து

## 24. க. எண்: 58 - 1916.

**இடம் :** மேலது.

**செய்தி :** அரச ஆணை. பராக்கிரம பாண்டிய மாவலி வாணாதராயர் கட்டிய பாளைங்காரர் சந்திக்குரிய வழிபாடு, படையல் முதலிய செலவினங் களுக்காகக் குமரத்தக்குடி நகரத்தை இறையிலித் தேவதானமாக மன்னர் அளித்தார்.

**காலம்** : கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஶ்ரீ த்ரிபு$_4$வனச் சக்கரவத்திகள் கோனேரின்மை கொண்டான் புறமலை நாட்டு திருக்கோளக்குடி

2 உடையார் சி$_0$வத$_4$ம்மீச்$_0$வரம்முடைய நாயனார் கோயில் தானத்தாற்கு தங்கள் நாயனாற்கு மக்கனாய

3 னான பராக்ரம பாண்டிய மாவிலி வாணாதராயன் கட்டின பாளைங்காறன் சந்திக்கு அமுதுபடி சாத்

4 துப்படி உள்ளுட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு உடலாக பொன்னமாா்பதி நாட்டு நகர

5 ங் குமரத்தக்குடி நான்கெல்லைக்குட்பட்ட நஞ்செய் புன்செயும் நத்தமும் நத்தப்பாழும்

6 குளமும் குளப்பரிப்பும் ஆறுங் காலும் துரவும் மரமும் மற்றும் உட்பட்ட நிலத்தில் பழந்தேவதா

7 னம் திருவுடையாட்டம் பள்ளிச்சந்தம் மனித்தர் யிறையிலி நீக்கி நின்ற நிலம் காரும் மறுவும் ஒருபூ

8 வும் வம்பும் கரும்பும் செங்கழுநீர் வாழை கொழுந்து மஞ்சளிஞ்சி வரகு சாமை புல்லு தினை பரித்தி ஆ

9 மணக்கு எள்ளுக் கொள்ளு உட்பட்ட பயிரும் பயிற்ச் செ[ய்*] வித்துக் கொள்ளவும் சொல்லியிவ

10 யிற்றால் வரும் காசு கடமை மாவடை ஆயவற்கம் தறியிறை செக்கிறை தட்டொலி தட்டாரப் பா

11 ட்ட மா[ள்]வரி யினவரி குளமீன்பாட்டம் பொன்வரி அந்தராயம் காணிக்கை காத்திகைப்பச்சை உகவை

12 கைய்யேற்பு ஆண்டெழுத்து தேவை ஓலையெழுத்து வினியோகம் வாசல்ப்பேறு யிலாஞ்சி

13 னைப்பேறு ஆட்தேவை தச்சுத்தேவை ஆனைச்சாலை குதுரைப் பந்தி குற்றதெண்டம் கொ

14 ற்றிலக்கை கடைக்கூட்டு இலக்கை உள்ளுட்ட பலயிறைகளும் தேவைகளு[ம்*] ஏழாவது ஆவணி

15 மாதம் முதல் கழித்து தேவதானம் முதலடங்க யிறையிலியாகத் தந்து வரியிலார் கணக்கி

16 லும் கழிக்கச் சொன்னோம் இவ்வூர்களில் நான்கெல்லைகளிலும் திருச்சூல ஸ்த₄ாபனம் ப

17 ண்ணிக் கொண்டு சந்த்₃ராதி₃த்யவற் செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க இவை செ

18 வூரு உடையான் எழுத்து யாண்டு 7வது நாள் . . . அரும்பூற் கூற்றத்து செவூருடையான் வென்று மு

19 டி சூடினான் எனக்கு நல்ல பெருமாளான சுந்தரபாண்டிய பல்லவராயன் எழுத்து உ

## 25. க. எண்: 59 - 1916.

**இடம்** : மேலது.

**செய்தி** : கோயிலுக்குப் பல்லக்குச் சொக்கரைத் தந்தருளிய கனகராயருக்குக் கோயில் மரியாதைகள் அளிக்கப்பட்டன.

**காலம்** : பதினேழாம் நூற்றாண்டாகலாம்.

1 ஸ்வஸ்திஶ்ரீ சறுபதி வருடம்[1] புரட்டாதி மாதம்[1] 10 உ புறமலை நாட்டுத் திருக்கோழக்

2 குடி ஆண்ட நாயினார் கோயில் ஸ்ரீபண்டாரக் காரியத்துக்கு க

3 டவாரோம் ஒல்[லை*]லயூர் கூற்ற[த்*]து தென்கோனாட்டு சுந்தர சோழ

4 புரமான தேசியுகந்த பட்டணத்து கண்ணனூருடையான்

5 பூவ்வனூர் இளவர் பொன்னாண்ட்டார் திருக்கொட்டியாரான கன

6 கராயர்க்கு பிடிபாடு பண்ணி குடுத்தபடி இந்நயினார் திருக்

7 கோயிலுக்கு இவர் தன்[ம*]மாக பல்லக்கு சொக்கர் எளுந்தருள ப

8 [ண்*]ணுகையில் பெருந்திருநாள் நடந்த இவர்க்கு ஒரு பரிவட்டமு[ம்*] க

9 ட்டி திங்கள் தீபங்க[ளு]க்கு தீத்த திருநீறு திருமாலையும் பெற்று போ[க]

10 கடவராகவும் இப்படிக்கு நரசிங்க பிரியாதராயர் எழுத்து இப்படிக்கு

11 ஆலாலசுந்தர பட்ட[ர்*] எழுத்து இப்படிக்கு சுந்தரபாண்

12 டிய பிரியாதார் எழுத்து

## 26. க. எண்: 60 - 1916

**இடம் :** மேலது.

**செய்தி :** விரையாச்சிலை, கொட்டியூர் ஊரவர்க்கு பொன்னமராவதி நாட்டார் செய்து தந்த கடமை குறித்த ஆவணம். சூரைக்குடியின் அழிவு குறிக்கப்பட்டுள்ளது.

**காலம் :** கி.பி. *1586.*

1 ஸ்வஸ்தி[ஸ்ரீ*]

2 இராசராச இராசாதிராச சகல [நிசவஞல] கோன் தாலம் இராச

3 ராக்கள் தம்பிரானார்கு 761 வருடம்[1] பங்குனி மாதம்[1] 5 உ பொன்னமர

4 ாபதி நாட்டு நாட்டவரோம் விரையாச்சிலை உள்இட்

5 ட ஊரவற்கும் கொட்டியூர் உள்இட்ட ஊரவற்கும்

6 பிடிபாடு பண்ணிக் குடுத்த பரிசாவது இராசாக்கள் தம்

7 பிரானார் சூரைக்குடி அழியச் செய்வதாக மஞ்சிலிசி எலிசு

8 கானே வரசம்காத்தானே முவரசம் கானுகானே இராசாத்திகா

9 னுடனே பரிகாம ஏவப்பட்டு சூரைக்குடியும் அழியச் செ

10 யிது மாத்தூர் குளத்திலே விடுதியா விரையாச்சிலை கெ

11 ாட்டியூர் ஊரவர்களை காணச் சொல்வி அருளிச் செயித

12 படியாலே இப்படி தன் கண்டளவுக்கு இராசாக்கள் தம்பிர

13 ானார் கொன்துகானுக்கும் எங்களுக்கு பிரமாணம்

14 வரக்காட்டி அருளினபடி முன்னாள் நம்முடயாறாய் நமக்கு இறுத்த

15 பொந் விரையாச்சிலை உள்ளிட்டாரும் கொ[ட்டி*]யூர் உள்ளிட்ட

16 ஊரும் தங்கள் நாட்டுடனே கூட்டி தங்கள் மரியாதி கடமை இ

17 றுக்க கடவர்கள் என்றும் ஒன்றுபட நடத்திப் போதக் கடவர்கள்

18 ளென்றும் இச்சேதிக்கு திருக்கோளக்குடி நாயனார் கோ

19 யிலில் திருமலையிலே கல்வெட்டிக் குடுப்பதென்று பிரமான

20 ம் வந்தபடியாலே தாங்களும் நாட்டுடனே கூட்டி எங்கள்

21 மரியாதி கடமை இறுப்பதாக சந்திரா[தித்*]தவரை செல்வதா

22 க கல்வெட்டிக் குடுத்தோம் பொன்னமராபதி னாட்டு நாட்ட

23 வரோம் விரையாச்சிலையுள்ளிட்டவற்கும் கொட்டியூர்

24 – – பொன்னமராபதி . . . .

25 . . . எழுத்து இப்படிக்கு நல்லமையழகி வேளான் எழுத்து இப்படிக்கு ஏறக்

26 குடையான் எழுத்து இப்படிக்கு [ஏ]கடகண்ட வேளான் எழுத்து

27 இப்படிக்குப் பெரியவேளான் எழுத்து அறிவுடை மூவேந்தவேளான் எழுத்து

## 27. க. எண்: 61 - 1916

**இடம்** : மேலது.

**செய்தி** : மூன்று ஊர்ப் பாதுகாவலர்க்கு எழுதித் தரப்பட்ட காவல் சுதந்திரம் தொடர்பான ஆவணம். இப்பணிக்கு வழங்கப்பட்ட ஊதிய விவரங்களும் இவ்ஆவணத்தில் இடம்பெற்றுள்ளன.

**காலம்** : கி.பி. 1508.

1 சகாத்தம் 1430 இதன் மேல் செல்லா நின்ற விபவ வருஷம் சித்திரை மாதம்[1] 2 கல்வாசல் நாட்டு இளையாத்தக்குடி

2 யான குலசேகரபுரத்து கழனிவாசலுடையார் சிவந்தெழுந்தாரான சுந்தரபாண்டிய வணியமானாரும் மேற்படி

3 ஆவுடையாரான கனகராயரும் மேற்படி குடியுடையான் சிவந்தகாலழகியாரான சேதிராயரும்

4 எழுதுப் பெருந்தெருவான வீரபாண்டியபுரத்து தமனிவாசலுடையான் பாண்டியபெருமாள்

5 பிள்ளையாரும் இத்தென்பற்று ஆன குன்ற நாட்டு வேலங்குடி சுண்டைக்காட்டு பொது காப்

6 பாற்கும் திருக்குரம்பூர் ஆ – – பாதுகாப்பாற்கும் வடபற்று செவ்வலூர் பாதுகாப்பாற்கும் நாங்கள்

7 காவல் சுவந்திரம் கல்வெட்டிக் குடுத்தபடி[5] நாங்கள் புறமலை நாட்டுத் துவாருரில் அவர் அவரே கொண்

8 டுடைய காணியாட்சி யெப்பேற்பட்டனவுக்கும் பன்னிரண்டான் கூற்றிலே ஒரு மா நிலத்துக்கு ஊற்கொரு கட்டாக மூன்று

9 கட்டும் இட்டு ஊற்கு குறுணியாக [பற்]றுக் குறுணியும்ப் போதக் கடவோமாகவும் எங்களுக்கு துவாருரவரால் வந்த காரியம்

10 எற்பேர்பட்டனவுக்கும் வந்த பாடும் இந்த மூன்றூரில் பாதுகாப்பாற்கும் ஆக சுமந்திறக்[கித் தீரக்] கேட்டு இந்தக் காவல் சுவந்

11 திரமும் பெற்று போதுவார்களாகவும் இப்படிக்கு சுந்தரபாண்டிய வணிகமானார் சொற்படிக்கும் ஆவுடையாரா

12 ன கனகராயன் எழுத்து இப்படிக்கு சிவந்தகாலழகியாரான சேதிராயன் எழுத்து இப்படிக்கு

13 பாண்டிப்பெருமாள் பிள்ளையார் எழுத்து

28. க. எண்: 62 - 1916

இடம் : மேலது.

செய்தி : திருக்கோளக்குடியிலுள்ள அழகிய நாச்சியார் பிடாரி கோயிலுக்குக் கல்வாயில் நாட்டுக் குலசேகரபுரத்து அரும்பாற்கிழான் திருவனசயந்தனான பாண்டியதரையர் உற்சவத் திருமேனியாக நாச்சியார் உதையாண்டாரை எழுந்தருளுவித்துத் திருநாள்புறமாக ஊற்றுக்குழி வயலைப் புதுக்குளிகை ஐம்பது பணத்திற்கு விலைக்கு வாங்கிக் கொடையளித்தார். விற்கப்பட்ட நிலம் திருக்கோளக்குடி இறைவனின் திருநாமத்துக்காணியாக விளங்கியதாகும். மரங்களைக் காப்பாற்றுமாறு உள்ள கல்வெட்டுக் குறிப்பு அக்காலத்தாரின் சூழலியல் நோக்கை உணர்த்துமாறு உள்ளது.

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியர்; கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ மற்க்கீத்திக்கு மேல் ஸ்ரீகோற்சடைபன்மரான திரிபு$_4$வனச் சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்

2 டு 7வது துலா நாயற்று அபர பக்ஷத்து ஏகாத$_3$சி$_0$யு[ம்*] திங்கட்க் கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் புறமலை நாட்டு திருக்கோளக்குடி

3 உடையார் திருக்கோளக்குடி உடைய நாயனார் திருக்கோயி[ல்*] ஸ்ரீருத்$_3$ர ஸ்ரீமாஹேச்$_4$வரரும் தான[த்*] தோழும் கல்வாயில் நாட்டு குலசேகரபுரத்து அரு

4 ம்பாற்க் கிழான் திருவனசயந்தநான பாண்டியதரையர் இத் திருக்கோளக்குடியில் பிடாரியார் அழகிய னாச்சியார் திருக்கோயிலுக்கு உத்ஸவம் நா

5 ச்சியார் எழுந்தருளப் பண்ணின நாச்சியார் உதையாண்டாற்க்கு தேவதானமாக விற்க்கின்றக் குடி[க்]காட்டுக்கு சண்டேச்$_{0}$வர விலை ப்ரமாணம் பண்ணிக்

6 குடுத்த பரிசாவது இன்நாயனார் திருநாமத்துக்காணி உள்ளூற் குடிக்காட்டுப் புரவில் ஊற்றுக்குழி பெருநான்கெல்லைக்குட்ப்பட்ட நீர் நிலமும் நன்செ

7 ய் புன்செயும் நத்தமும்த் தோட்டமுக் குளமும் குளப்பரிப்பும் கீனோக்கியக் கிணறும் மேல் நோக்கிய மரமும் மற்றும் எப்பேற்ப்பட்ட ஸமஸ்த ப்ராப்தி$_{3}$க

8 ளும் உட்பட இப்பிடாரியாற்கு திருநாள்ப்புறமாக இப்பாண்டியதரையர் கொண்டு குடு[க்*]கையில் இந்த ஊற்றுக்குழி வயலுக்கு சண்டேச்$_{0}$வர விலை முதலா

9 க விலை நிற்செயித்து சாத்துப்படி விஞ்சென செலவுக்கு பாண்டியதரையர் பக்கல் பற்றின புதுக்குளிகை பணம் 50 இப்பணம் அய்ம்பதும் பற்றி இந்த ஊ

10 ற்றுக்குழி வயல் சண்டேசர் விலையாக விற்று விலை ப்ரமாணம்ப் பண்ணிக் குடுத்தோம் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேச்$_{0}$ வரரும் தானத்தோமும் இப்படி விற்ற குடிக்காடு ஊற்று

11 க்குழிக்கு பெருநான்கெல்லை ஆவது கீழ்பாற்கெல்லை விருதராசகாலன் பாறைக்[கு*] மேற்கும் தென்பாற்க்கெல்லை . . . வடக்கும் மேற்பாற்கெல்லை இந்

12 த ஊற்றுக்குழி எல்லைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை ஆண்டா வய[ல்*] எல்லைக்குத் தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்லைக்குள்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் இப்பிடாரியாற்கு தேவதா

13 னமாக விற்கையில் இந்த ஊற்றுக்குழி வயல் பாண்டியதரையர் குடிநீங்காத் திருநாமத்துக்காணி ஆகப் பற்றி பயிர் தாழ்வற பயி[ர்*] ஏற்றிக் கொள்வாராயும் இப்பயிர் ஏற்றி வருமி[ட*]த்து இகுளமும்

14 கிணறும் வெட்டி நில[மளந்தும்] பல தடி ஒரு தடி ஆக மேடும் பள்ளமும் ஒக்க இட்டுத் திருத்திச் சந்திராதித்தவர் குடிநீங்கா திருநாமத்துக்காணி ஆக உழுது நிலையடை ஆக மேல் வாரம்

15 மூன்றில் வொன்றும் தினை வரகெள்ளு மேல்வாரம் காலிலொன்றும் கரும்பு கொடிக்கால் கருணை மஞ்ச[ள்] இஞ்சி வாழை வழுதலை பூசணி உள்ளிட்ட புன்பயிர் செயும்ப் பயிற்கு மேல் வாரம் 8 ல்

16 லொன்று இட்டு போதுவார[ர*]கவும் இப்படி மேல் வாரம் இட்டு போதுமிடத்துள் இவயல் குளம் கிணறு வெட்ட வேண்டுமதும் எத்தியன் முப்பட்ட அழிவும் தாமே இட்டு செயல்ப்பாடு பண்ணி

17 கொள்வராகவும் மரமுள்ளது காத்து நோக்கி வரம்பிட்டு போதுவராகவும் இப்படி குடிநீங்கா திருநாமத்துக்காணி ஆக உழ இவ்வகுப்பின்படி மேல் வாரம் இட்டுப் போத இப்பிடாரியாற்

18 கு தேவதானம் சண்டேச்$_{0}$வர விலையாக விற்று விலை பிரமாணம் பண்ணி குடுத்தோம் உடையார் திருக்கோளக்குடி உடையனாயநார் திருக்கோயில் ஸ்ரீருத்$_{3}$ர ஸ்ரீமாஹேச்$_{0}$ வரரும் தான[த்*]தோமும்

19 இப்படி[க்*]கு எல்லாந் தலையான பாண்டிய ப்ரஹ்மாராயன் எழுத்து இப்படி இவை ஸ்ரீகாரியம் களபாளன் எழுத்து இப்படிக்கு இவை தேவர் கன்மி சொக்கபட்டன் எழுத்தும்மிட்டு தக்காழிப் பானை

20 யுடையான் எழுத்து வீரபாண்டிய ப்$_{3}$ரஹ்மாராயன் எழுத்து இப்படி இவை பரமேச்$_{0}$வரப் பட்டன் எழுத்து இவை அழகிய தேவன் எழுத்து இவை மேன்நின்றான் எழுத்து இவை நல்லமங்கை பாகன் எழுத்து

21 உய்யநெறி காட்டினா[ர்*] எழுத்து இவை சுந்தரபாண்டிய பிச்சன் எழுத்து ஸ்ரீமாஹேச்$_{0}$வர கணக்கு திருக்கைவேலழகியான் எழுத்து இப்படிக்கு இந்த விலை ப்ரமாணம் எழுதினேந் இக்கோயில் கண

22 க்கு பங்கலூர் உடையான் ஆண்டான் திருவேத்தசாம அழகியான் எழுத்து உ

## 29. க. எண்: 63 - 1916

**இடம் :** மேலது.

**செய்தி :** இறைவனின் திருநாமத்துக்காணி நிலங்களான முடிவழங்கும்பெருமாள்நல்லூரையும் நடுவிற் குடிக்காட்டையும் பூமதேவன் அழகிய மணவாளப் பெருமாளான வீரபாண்டிய காலிங்கராயருக்குத் திருக்கோளக்குடிக் கோயிலார் காராண்கிழமைக் காணியாக, இராசி பணம்

இருநூற்றிற்கு விற்றுத் தந்தனர். பயிர்கள், வரியினங்கள், வாடாக் கடமை ஏற்பாடு ஆகியன விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

**காலம்** : சடையவர்மர் சுந்தரபாண்டியர். கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைபன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவற்கு யாண்டு 4வதுக்கு எதிராவது கற்கடக நாயற்று அபர பக்ஷத்து நவமி வெள்ளிக்கிழமையும் பெற்ற அச்வதி நா

2 ள் புறம[லை*] நாட்டுத் திருக்கோளக்குடி உடையார் திருக்கோயில் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேச்வரக் கண்காணி ஸ்ரீகாரியஞ் செய்வார் கோயிற்க் கணக்கர் இவ்வனைவோமும் அண்டநா

3 ட்டு திருப்பூவணமுடைய நா[ய*]னார் தேவதானமான கல்லியாண சுந்தரநல்லூருடையான் பூமதேவன் அழகிய மணவாளப் பெருமாளான வீரபாண்டிய காலிங்கராயற்கு காராண்கிழமை

4 மக் காணி ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது இன்னாயனார் திருநாமத்துக்காணியான கானநாட்டு முள்ளிகுடியான முடிவழங்கும்பெருமாள்நல்லூர் பெருநான்கெல்லையா

5 வது கீழ்பார்க்கெல்லை வாரவாய் எல்லைக்கும் செம்பியதரையன் குடிக்காட்டு எல்லைக்கும் மேற்கு எல்லை வாயில் நாட்டின திருச்சூல ஸ்தாபனத்துக்கு மேற்கும் தென்பாற்க்கெல்லை

6 ஊற்றியூர்க் கெல்லைக்கும் துறுமாப்பற்று கண்மாளர் குடிக்காட்டுக்கு எல்லைக்கு வடக்கு எல்லையில் திருச்சூலத் தாபனத்துக்கு வடக்கும் மேல்பார்க்கெல்லை மேற்ப – –

7 த்தேவன் குடிக்காட்டுக்கும் இம்மையே திருவிளங்குடிக் காட்டுக்கும் கிழக்கும் வடபார்க்கெல்லை இம்மையே திருவாளன் குடிக்காட்டுக்கும் நடுவிற்குடிக் – –

8 ன எல்லைக்கும் வாரவா[ய்*] எல்லைக்கும் தெற்கும் ஆக இசைந்த பெருனான்கெல்லைக்குட்பட்ட நஞ்செ[ய்*] புஞ்செயும் நத்தமும் நத்தப்பாழும் குளமும் குள – –

9 ம் மரமும் மற்றும் எப்பேற்ப்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் உட்பட அனைத்துக்கும் தென் வடக்கு நடுவிற் குடிக்காடு நான் கெல்லைக்கும் கா – –

10 ட்பட்ட நஞ்செய் புன்செயும் நத்தமும் நத்தப்பாழும் குள[மும்] வாத்தலைகளும் கிணறும் மரமும் மற்றும் எப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் – –

11 குடிக்காடு இரண்டுக்கும் பேசப்பட்ட எல்லைகளும் எப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகள் அனைத்தும் சந்த்ராதித்தவற் செல்ல குடிநீங்காக் காராண்கிழமைக் காணியாக ப்ரமா

12 ணம் பண்ணிக் குடுத்தோம் வீரபாண்டிய காலிங்கராயற்கு முன் சொல்லப்பட்ட அனைவோமும் இப்படி குடிநீங்காக் காராண்கிழமைக் காணியாக ப்ரமாணம் பண்ணிக் குடுத்

13 த முள்ளிக்குடியான முடிவழங்கும்பெருமாநல்லூற்கும் நடுவிற்க் குடிகாட்டுக்கும் இவர் பக்கல் காராண்மை முதலாக முன்னாள் இவ்வயல் பற்றானவ[ர்*]கள் பக்கல் வாங்கின தவணை

14 முதல் குடுக்கவும் உடையார் திருவாபரண முதலுக்கும் பற்றின இராசி [பணம்] 200 இப்பண[ம்*] இருநூறும் காட்டி ஏற்றிக் [கை*]கச் சிலவறக் கைக்கொண்டு சந்த்ராதித்தவற் செல்ல ப்ரமாணம் பண்ணி

15 க் குடுத்த இக்குடிக்கா டிரண்டுக்கும் பசானம் குறுவை தினை வரகு எள்ளுப் பயிறு கரும்பு வெற்றிலைக்கொடிக் கருணை மஞ்சள் இஞ்சி சாமை வழுதலைப் பூசணி செங்கழுநீர் மற்றும் எப்பேற்ப்

16 பட்ட செயலு பயிற்ச் செய்துகொண்டு வேண்டும் மரங்களும் வைத்து புன்செ[ய்*]களும் பயிற் செய்துகொண்டு நத்தமும் குடி ஏற்றிக்கொண்டு மாவடை புறவுடல் சிற்றாயம் மற்றும் எப்

17 பேற்பட்ட அனைத்துக்கும் சிபண்டாரத்துக்கு வாடாக் கடமையாக ஒட்டு நிச்செயித்த அன்றாடு வழங்கும் பணம் பத்தும் திருக்கொட்டகாரக் காலால் அளக்கும் [நெல்] 120 கலம் இப்ப

18 ணம் பத்தும் நெல்லு னூற்றிருபதின் கலமும் செலவறுக்குமிடத்து பசானத்துக்கு தைம் மாதம் முதல் ஆனி மாதவரையிற்ப் பத்தாறும் ஆடி மாத முதல் மார்கழி மாதவரை ப

19 த்தில் னாலும் சிலவறுப்பாராகவும் இப்படி சம்மதித்துக் காராண்கிழமைக் காணி ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம் அழகிய மணவாள பெருமாளான வீரபாண்டிய காலிங்க

20 ராயற்கு முன் சொல்லப்பட்ட அனைவோமும் இப்படிக் காராண்கிழமைக் காணியாக ப்ரமாணம் பண்ணிக் குடுத்த முள்ளிக்குடியான முடிவழங்கும்பெருமாநல்லூற்கும் நடு

21 விற்க் குடிக்காட்டுக்கும் இதுவே ப்ரமாணம் பொருள் சிலவோலையுமாவதாகவும் இதுவல்லது ப்ரமாணம் பெ[ா*]ருள் சிலவோலையுமாகவும் காணியும் காட்டவும் கடவ

22 தல்லவாகவும் இப்படி சந்திராதித்தவற் செல்ல காராண்கிழமைக் காணியாக ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம் அண்டனாட்டு உடையார் திருப்பூவணம்முடைய நாயனார் தேவர்

23 தானம் கலியாணசுந்தரநல்லூர் பூமதேவன் அழகிய மணவாளப் பெருமாளான வீரபாண்டியர் காலிங்கராயற்கு புறமலை நாட்டுத் திருக்கோளக்குடி உடைய நாயனார் திரு

24 க்கோயில் ஸ்ரீருத்திரர் ஸ்ரீமாஹேச்$_{0}$வரக் கண்காணி ஸ்ரீகாரியஞ் செய்வார் கோயிற் கணக்கர் இவ்வனைவோமும் இவை ஸ்ரீகாரியம் இரவிநாராயண தேவன் எழுத்து இப்படிக்கு

25 தேவர்த[ா*ன]ம் எல்லாந்தலையான பாண்டிய ப்$_{3}$ரஹ்மாதாயன் எழுத்து இப்படிக்கு வீ[ர*]பாண்டிய ப்$_{3}$ரஹ்மாதாயன் எழுத்து இப்படிக்கு சொக்கபட்டர் தற்குறி இப்படிக்கு தேவப்பிள்ளை

26 எழுத்து இப்படிக்கு ஆல[ா*]லசுந்தர பட்டன் எழுத்து குலசேகர பட்டன் எழுத்து பரமாறும் சிவர் எழுத்து இப்படிக்கு மஹாதே$_{3}$வர் பட்டன் எழுத்து இப்படிக்கு பரமேச்$_{0}$வர பட்டர் எழுத்து திருநிலை அழகி

27 யான் எழுத்து இப்படிக்கு திருக்கொடுங்குன்றமுடையான் எழுத்து இப்படிக்கு பெரிய பட்டன் எழுத்து இப்படிக்கு மாடாபத்தியம் உய்ய நெறிகாட்டினான் எழுத்து இப்ரமாணம் எழுதிநேன் இக்கோயிற்க்

28 கணக்குப் பரநாகலூருடையான் திருஞானசம்பந்த வேளாண் எழுத்து

## 30. க. எண்: 64 - 1916

**இடம்** : மகாமண்டபக் கிழக்கு, தெற்குச் சுவர்கள் - உட்புறம்.

**செய்தி** : திருக்கோளக்குடித் திருக்கோயிலுக்கு நேர்ந்த துன்பங்கள் கல்வெட்டாகியுள்ளன. முகமதிய படையெடுப்பும் கம்பணரால் அது முறியடிக்கப்பட்ட வரலாறும் இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன. நிலவருவாயின்றி கோயில் நடைமுறைகள் சீர்குலைந்தன. தேவரடியார்கள் ஊர் பெயர்ந்தனர். இந்நிலையில் கோயிலார் மருத்தராயர் மருமகள் ஆரும்ஒவ்வாதபெருமாளிடம் கோயில் நடைமுறைகளைச் செம்மைப்

படுத்தியுதவுமாறு வேண்டினர். பத்துத் தேவரடியார்களைக் கோயிலுக்கு வழங்கிய அவ்வம்மை, அவர்களுக்குரிய படித்தரத்திற்கு வாய்ப்பாக ஓமறாய வயலைக் கோயிலாரிடம் இராசி பணம் நூற்றறுபதிற்குக் காணியாட்சியாக விலைக்குப் பெற்றளித்தார். கோயிலார் தேவரடியார்க்குத் தங்க மனையும், கோயில் மரியாதைகளும் அளித்தனர்.

**காலம்** : மாறவர்மன் வீரபாண்டியர்; கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு நாலாவது[7]

2 கந்நி நாயற்று பூர்வ பக்ஷத்து த்ரதியையும் சுக்ர வாரமும் பெற்ற சோதி நாள் அழகர் திருவிடையாட்ட

3 மான மேலை இரண்யமுட்ட நாட்டுக் குளமங்கலத்துக் குளமங்கலமுடையாந் உடைய நாயினார் மருத்தராயர் மரு

4 மகள் ஆரும்ஒவ்வாதபெருமாளுக்குப் புறமலை நாட்டுத் திருக்கோளக்குடி உடையார் திருக்கோளக்குடியுடைய

5 நாயினார் திருக்கோயிற் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேச்வரர் கோயிற் கணக்கரோம் காணியாட்சி விலை ப்ரமாணம் ப

6 ண்ணிக் குடுத்த பரிசாவது இன்னாயினார் திருநாமத்துக் காணியான ஓமறாய வயல் முன்பே முடியன் நரசிங்

7 க தேவர்க்கு கல்லு வெட்டி விற்ற காணியாட்சியா இறுக்கு இவர் வழியில் ஒருத்தருமில்லாதபடியாலும்

8 காலந் துலுக்கன் காலமாய் நாயினார் தேவதானப் பற்றுக்களுக்கு கடமை பூண்டு இறுக்கையாலு இன்னாயினாற்கு அமு

9 துபடி சாத்துப்படி குறைவற நடத்தவேண்டுமென்றபடியாலும் இந்த வயலைப் பலற்கும் உழவு தவணை வைத்து

10 நடத்திப் போதுகைச்சிதே கம்பண உடையார் வந்து துலுக்கனையு அழியச் செய்து தேசங்களு[ம்*] நெறிபாடுண்டா

11 க நடத்தி தேவாலையங்களு முற்காலங்கள் போலே பூசையு நடந்து கோயிற் பரிகா[ர*]ங்களும் ஆளவேணுமென்று செ

12 சால்லிப் பல ஊர்களுக்கும் நாயக்கப் பரம்பரை ஆராட்சியாக விட்டு ஆராய்ந்து நடத்திப் போதுகை

13 யாலே இன்னாயினார் திருக்கோயிலில் தேவரடியார் சே[வி]த்து கேட்டும் போன்தும் நின்ற பேர் தூ

14 ர தேசங்களிலே போய் இருக்கையாலேயும் இந்தக் கோயில் இறங்கல் படாமல் உம்முடைய தன்ம

15 மாக ஏறட்டுக்கொண்டு நடத்தவேணுமென்று ஆருமொவ்வாத பெருமாளைக் கண்டு வேண்டி

16 க் கொண்டபடியாலே இவர் இந்த நாயினாற்க்குப் பரிக[ர*]ரமாகப் பத்து பெண்களையுந் திருச்சூலத் தாபமும் பண்ணி

17 த் திருக்கை மலரில் உதகம் பண்ணிக் குடுத்த பிள்ளையாரும் சாத்தாவுடையாளும் வளத்து வாழ்விச்சாளும் பாண்டி

18 ப் பெருமாளும் கோளாண்டியும் அமரியாரும் உடைய நாச்சியாரும் உதையமழகியாரும் சிறுப்பிள்ளியாரு

19 ம் திருவகத்தியாரும் ஆகப் பேர் பத்துக்கும் படிக்கும் பாக்கு வெற்றிலைக்கும் புடவை முதலுக்குமாகக் குடிநீங்

20 காக் காணியாட்சியாகச் சந்திராதித்தவற் செல்ல இந்த ஓமறாய வயல் விற்கையில் இதுக்கு விலை நிற்செயித்துப் பற்றி

21 க் கொண்ட இராசி பணம் 160 இப்பணம் நூற்று அறுபதுக்கும் விற்று விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்த ஓமராய வயல்

22 நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புஞ்செய்யும் குளமும் குளப்பரிப்பும் நீரும் பாசியும் நத்தமும் மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கி

23 ணறு மற்றும் எப்பேற்பட்ட சமுத்தப் பிறாத்திகளும் விலைக்குற விற்றுப் பொருளறக் கைக்கொண்டு விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த

24 ஓமறாய வயல் நான்கெல்லையும் அனுபவிக்கும் இடத்து நன்செய்க்குப் பசான போகத்துக்குக் கள நிலம் பரிமாறு முறைமையா்

25 மாறி மேல் வார மூன்றிலொன்றாக வந்த முதலும் குறுவை தினை வரகு எள்ளு கொடிப்பயிர் மற்றும் கரும்பு தலை [கொம்மடிக]

26 க் கடையான் புன்பயிருக்கும் மாவடை மரவடை ஆக இவையிற்றுக்கு மேல்வாரம் அஞ்சிலொன்றாக வந்த முதலும் புஞ்சைப் பற்றுக்கு ஏழிலொன்

27 றாக வந்த முதலும் இவ்வகைப்படியாலுள்ள முதல் தேவரடியார்க்கு விட்ட பேர் பத்துக்கும் படிக்கும் புடவை முதலுக்குமாகக் குடுத்து அநுபவி

28 ப்பாராகவும் இவர் சேவிக்க விட்ட பேர் பத்துக்கும் முதலடைவு முதலாகப் பத்துப் பங்கு மனையும் பாளைங்கக்காறன் திருவீதியிலே பற்றிக்கொ

29 ண்டு கோயில்த் தாநமாகச் சிறப்புத் திருநாட் சிறப்புத் திரு வாடிப்பூரம் திருக்காத்திகை திருப்புதியிது விஷு அயன சங்கிறமம் ஆக யிவையி

30 ற்றுக்குப் பேறுஞ் சுகந்தரமும் பற்றிக்கொண்டு நாள் ஒன்றுக்குக் கொள்ளுலே இருநாழி அரிசி பிரசாதமும் பற்றிக்கொண்டு இவ்வ

31 கைப்படி சுகந்திரங்களாலுள்ள முதல் ஆருமொவ்வாத பெருமாள் பற்றிக்கொண்டு இவர்களுக்கு இட்டுச் சேவிப்பித்து போதுவாராகவும்

32 இவர்களில் ஆருமொவ்வாதபெருமாள் சொற்படி நடத்தாத பேரைத் தானமாக கூட நின்று கேட்டுக் குடுப்போமாகவும்

33 ஒரு காலங்களிலே முடியன் நரசிங்கதேவர் மக்களிலே சிலர் வந்தாருண்டான காலத்துக்கு அவர்களுக்கு வேறே பரிவத்தனமாக குடிகாடு குடுத்தும் இ

34 ந்தக் குடிக்கா[டும்] பங்கு மனையும் சுகந்தரங்களும் சந்திராதித்தவற் செல்ல நிலைநிறுத்திக் குடுப்போமாகவும் இப்படிக்கு சந்திராதித்தவற் செல்லக் கல்லிலும்

35 செம்பிலும் வெட்டிக் குடுத்தோம் ஆருமொவ்வாத பெருமாளுக்கு ஸ்ரீருத்தர ஸ்ரீமாஹேச்$_{0}$வரக் கோயிற் கணக்கரோம் இ

36 ப்படிக்குத் திருமலைக்கொழுந்தன் எழுத்து இப்படிக்கு சுந்தர பாண்டிய பிரமாதராயன் எழுத்து இப்படிக்கு காலிங்கராயப் பிரமாதராயன் எழுத்து இப்படி

37 க்கு முதலிபட்டன் எழுத்து இப்படிக்கு பரமேச்$_{0}$வர ப$_{4}$ட்டஸ்ய பத்ரேஸமித லிகிதா லிபி இப்படிக்கு சதாசிவபட்டன் எழுத்து மாதேவ

38 பட்டன் எழுத்து இப்படிக்கு [பெரு]மாள் நம்பி எழுத்து இப்படிக்கு தன்மானபரன் எழுத்து இவை சூரியதேவன் எழுத்து இவை திரிவேர்த்தசாமமழகியார் எழுத்து

39 இவை மாடாபத்தியம் பாகர் எழுத்து இவை ஸ்ரீம[ா*]ஹேச்$_{0}$வர கணக்கு திருவேத்தசாமமழகியார் எழுத்து இப்படிக்கு இவ்வி[லை] ப்ரமாணம் எழுதினேன் திருமுண்டமழகியார் எழுத்து

## 31. க. எண்: 65 - 1916

**இடம்** : மகாமண்டபத் தெற்குச் சுவர் - வெளிப்புறம்.

**செய்தி** : இராமப்ப நாயக்கர் அய்யனுக்குப் புண்ணியம் வேண்டி, அவர் காரியகர்த்தரான வங்காரமுடையார் பல்லவராயர், கோயிலுக்கு வேலங்குடியில் இறையிலித் தேவதானமாக நிலம் கொடையளித்தார்.

**காலம்** : கி.பி. 1542.

1 ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் 1464 மேல் செல்லா நின்ற பிலவ [வருடம்][1] புரட்டாதி 20[8] உ பொன்னமார்பதி – –

2 பூங்குன்ற நாட்டு வேலங்குடி பாவில குடிக்காட்டு வயல் கறொண . . வயல்லூர் – –

3 [குடி]க்காட்டு பாவுக்கு உள்பட்ட நஞ்சை புஞ்சை நத்தமும் செ[ய்*]தலைத் திடரும் மாவடை மரவடை குள – –

4 ங்களும் [சுற்]றும் முற்றும் இந்ந[ா*]யனார் திருக்கோளக்குடி ஆண்ட நயினார் ஆதிசண்டேசுர தேவற்க்கு தேவதா – –

5 பெ[ரி]ய்ய இராமப்ப நாயக்கர்க்கு தன்மமாக இந்நயினார்க்கு இறையிலி திருநாமத்துக்காணி ஆக இக்குடிகா – –

6 காரியத்துக்கு கற்[த்த*]றான வங்காரமுடையார் பல்லவராயற் இர[ா*]மப்ப நாயக்கர் அய்யனுக்கு புண்ணி[ய*]மாக இந் – –

7 . . . . முதலும் இறங்கட்டு குடுத்து இறையிலி தேவதானமாக கடமை இட்டபடியாலே இந்தபடிக்கு நத்தத்திலும் – –

8 . . லும் திருச்சூலகல்லு நாட்டி கொண்டு சந்திர ஆதித்தவரையும் செல்ல கல்[லி*]லும் செம்பிலும் வெட்டி கொண்டு – –

9 னுபவித்து கொள்ளவும் இந்தபடிக்கு விட்ட தன்மத்துக்கு . . . . . . ஒருத்தர் அகித . . சொன்னவந் உண்டானால் கெங்கை கரை

10 ர காராம் பசுவை கொன்ற பாவத்திலும் தன் மாதா பிதாவை தன் கைய்யாலே கொன்ற பாவத்திலும் – –

11 இர[ா*]மப்ப நா[ய*]க்கரய்யந் காரிய்யத்துக்கு கற்[த்*]தன் பல்லவராயர் எழுத்து இந்த வயலுக்கு உண்டான செ – –

12 முறைமை வெட்டி வேகாரி மற்று எப்பைய்யபட்டனவும் ஆண்டு அனுபவித்து கொள்ளவும் பள்ளிசந் – –

**குறிப்புகள்**

1. குறியீட்டில் தரப்பட்டுள்ளது.
2. பணம் குறியீட்டில் தரப்பட்டுள்ளது.
3. கல்வெட்டறிக்கையில் பகவா என்றுள்ளது.
4. கல்வெட்டறிக்கையில் பதினெட்டு என்றுள்ளது.
5. கல்வெட்டறிக்கையில் காவல் உரிமை மூவர்க்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.
6. ஆட்சியாண்டு பதினொன்று என்று கல்வெட்டறிக்கையில் உள்ளது.
7. கல்வெட்டறிக்கையில் ஆட்சியாண்டு முப்பத்தொன்று என்று தரப்பட்டுள்ளது.
8. கல்வெட்டறிக்கையில் பத்து என்றுள்ளது.

---

## கற்பிற்கு இயைவதோ தோழி?

பொருள் தேடலுக்காகக் காதலியைப் பிரிந்து காதலன் வேற்றிடஞ் செல்ல, பிரிவு தாளாது தவித்தாள் அந்தக் காதலி. அவன் சென்ற வழியோ, தீங்குகள் நிறைந்த, துன்பங்கள் படர்ந்த காட்டுவழி. தலைவனுக்கு அவ்வழியில் தொல்லைகள் ஏதும் நேர்ந்து விடக்கூடாதே என்ற துடிப்புடன் தோழியை நோக்கியவள், அவர் செல்லும் வழியில் துன்பம் தவிர்க்க இறைவனை வேண்டலாம். ஆனால் அப்படிச் செய்வது நம் கற்பிற்கு ஏற்புடையதல்லவே என் செய்வேன் என்று கலங்கினாள். கற்புடை மகளிர்க்குக் கணவனே தெய்வமென்ற கருத்தின் மலர்வை இப்பாடல் (16) எடுத்துரைக்கிறதோ?

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்' குறளுக்கு இக்கலிப்பாடல் முன்னோடியா? தேவந்தியின் குளமாடி இறை தொழுது கணவனைப் பெறும் வழிகாட்டலை, 'நன்றன்று' என்று கண்ணகி மறுத்தமைக்கும் இப்பாடலே விதையிட்டதோ?

# 3. செப்பேடுகள்

## ஆயர் செப்பேடு

*ச. கிருஷ்ணமூர்த்தி*

**இடம் :** திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. ஆதொண்டைமான் மரபில் வந்த ரெகுநாத தொண்டைமானுடைய செப்பேடு.

**அமைப்பு :** நீள, அகலம் 23 x 17 செ.மீ. முன் பக்கத்தில் குருந்த மரத்தின் அடியில் சிவனை வழிபடும் மாணிக்கவாசகர் உருவம் உள்ளது. இரு அடியார் அடுத்து உள்ளனர். பின் பக்கத்தில் பசுக்களுடன் வேணுகோபாலர் உருவம் உள்ளது. ஸ்வஸ்திஸ்ரீயுடன் தொடங்கும் பாடத்தின் 33 வரிகள் முன் பக்கத்திலும், எஞ்சிய வரிகள் 71 வரை பின் பக்கத்திலும் உள்ளன.

**செய்தி :** முதலில் விசயநகர மன்னர்களின் மெய்க்கீர்த்தி எழுதப்பட்டுள்ளது. இராமதேவ மகாராயர் காலத்தில், ஆதொண்டைமானார் வம்சத்தில் வந்த ரகுநாத தொண்டைமான் ஆட்சியின் போது, வேதமங்கலம் சிவபுரமான திருப்பெருந்துறையில் இருக்கும் நயினார் அடியாரில் ஏகாம்பரம் பிறைசூடும் பண்டாரத்துக்கு ஆயர்கள் செய்து தந்த தரும சாசனம் இது. செப்பேட்டில் குறிக்கப்படும் அச்சுதப்ப நாயக்கர் தஞ்சாவூர் நாயக்க மரபினராகலாம்.

ஆவுடைய பரமசுவாமி அபிஷேகம், நெய்வேத்தியம், திருமாலை, திருவிளக்கு, திருக்கட்டளை, திருமண்டபம், திருநந்தவனம், திருமடம் ஆகியவற்றின் செலவுகளுக்காக, குடிக்கு ஒரு பணமும் எழுத்தாணிக்கொரு பணமும் கயிறு கலசம் பிடித்தவன் அரைப் பணமும் பெரிய வாசல் பல்லக்கு சனத்துக்கு ஒரு பணமும் சில்லறை வாசல் அஞ்சு பணமும் பாளையக்காரர் வாசல் பத்துப் பணமும் மாப்பிள்ளை ஒரு பணமும் பெண் வீட்டார் ஒரு பணமும் சோபனத்துக்கு ஒரு பணமும் சீமந்தத்திற்கு ஒரு பணமும் வழங்க ஆயர்கள் சம்மதித்துள்ளனர்.

அறுபத்து மூவரும் மாணிக்கவாசகரும் சண்டேசுரப் பிள்ளையாரும் பன்னிரு ஆழ்வாரும் பெற்ற பேற்றினை இத்தானம் நிறைவேற்றுபவர் எய்துவர். இதற்குத் தீங்கிழைத்தவர் கங்கை, பிரயாகை, திரிவேணி

சங்கமத்தில், சேது தனுஷ்கோடியில் காராம் பசுவையும், பிராமணரையும், மாதா, பிதாவையும், குருவையும் கொன்ற தோஷத்தில் போவார்கள் என்று காண்கிறோம். செப்பேட்டில் ஒப்பமிட்டவர் திருப்பெருந்துறை மாணிக்கக்கூத்த முதலியார். ஆயர் வகுப்பில் யாராவது பணம் தராமல் இருப்பினும் அவர்களுக்குத் தீங்கு வராமல் காக்குமாறு செப்பேடு கூறுகிறது.

இச்செப்பேட்டினை ஆய்வு செய்ய ஆணையிட்ட தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கட்கும், அனுமதியளித்த திருவாவடுதுறை ஆதீன குருமகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகர் அவர்கட்கும் இக்கட்டுரை ஆசிரியரின் நன்றி உரியது.

**காலம் :** இராமதேவராயர் ஆட்சிக் காலம்; கி.பி. 1583; காலம் பொருந்திவரவில்லை.

## முன் பக்கம்

1 ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரந் அரியராய தளவி
2 பாடந் [பாஷைக்குத்] தப்புவராயிர கண்டன் மூவாராயர்
3 கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதா
4 ன் பூர்வ தட்சண பச்சிம உத்தர சப்த சமுத்திராதிபதி எம்
5 மண்டலமுங் கொண்டு [ஈ]ழுத்தி[றை] கொண்டருளிய ரா
6 ஜாதிராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜமார்த்தாண்டந் ரா
7 ஜகெம்பீரந் ராஜாக்கள் தம்பிரான் சகல குண சம்
8 பந்தந் சப்த பாஸராயந் சகல கலாப்ரவீணன் சங்கீத
9 சாயுஜ்ய வித்யாவினோதன் கெடிகோட்டுமல்லன் கெடிகோ
10 ட்டுராயந் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்தவிழ்
11 த்தான் வடவரசர் மணவாளர் இளைவரசர் குலைகாறன் ராஜ
12 ாதிராசன் ராஜபரமேஸ்வரன் மேதினியீறுவர கண்டந்
13 கட்டாரி சாளுவன் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மே
14 ாகந் தவிழ்த்தான் வீரப்பிரதாபன் அதல விதல சுதல
15 நிதல ரசாதல மகாதல பாதாள வேழுலோக பிரக
16 ண்டன் பாண்டி மண்டல பத்மாசனத்தோன் சோழ மண்
17 டல ஸ்தாபனாசாரியன் தொண்டை மண்டலக பிரதிஷ்டாபனாச
18 ாரியன் மத்த கெஜ பரிசுத்த நகுலன் கிரிதுர்க்க வனதுர்க்க

19 ஜலதுர்க்க பராசகேசரி அஸ்வபதி கெசபதி தனபதி
20 நரபதியான குமார மல்லிகாற்சுனராயர் விருபா
21 ட்சிராயர் குமார மகாராயர் அதிபலராயர் ஸ்ரீவி
22 ஷ்ணராயர் தேவராயர் அச்சுததேவ மகாராயர் தம்ம
23 ராயர் சதாசிவராயர் கிருஷ்ணதேவ மகாராயர் ராமதே
24 வ மகாராயர் பிருத்வி ராச்சியம் பண்ணி அருளா நின்ற
25 சகாப்தம் 1505 இதன் மேல்ச் செல்லா நின்ற பிர
26 மோதூத வருடம்[1] தை மாதம் 17 உ குருவாரமும் அனுஷ ந
27 ட்சத்திரமும் பஞ்சமியும் சுபநாம யோகமும் பெற்ற
28 சுப தினத்திலே ராயர் காரியத்துக்கு கறித்தரான அச்
29 சுதப்ப நாயக்கர் அய்யனார்கள் ஆதொண்டைமா
30 னார் வங்கிஷத்தில் ரெகுனாதத் தொண்டைமானாரவர்க
31 ள் ராஜ்யம் பண்ணி வருகிற னாளையில் அ(ப்)ன்பத்தாறு
32 தேசத்தில் இருக்கப்பட்ட பாவமில்லாத குலத்தார் மா
33 யனை வளத்தவர் ஆய குலத்தோர் யகதிகவிகொ

**பின் பக்கம்**

34 ஸ்டோர் ஆயற்பாடித் தலைவர் பொங்கிய மதுரையில்ச் சங்
35 கத்தை வென்றவர் முல்லைக் கதிபர் முல்லையந்தார் மா
36 ர்பர் (கெருடக்) கெருடக் கொடியாதிபர் அவ்வை பாடல் கெ
37 காண்டோர் துற்கை பாதசேகரர் முருகனுக்கு குலவைய
38 ளித்தவர் அரசர் மூவருக் கன்னங் கொடுத்தவர் சோழனு
39 க்கு முடி சூட்டினவர் தக்கனுக்குக் கிறிவிடை கொடுத்தவர்
40 கோகுலம் காவலாகிய அன்பத்தாறு ராஜ்யத்தில் இருக்கு
41 ற நந்தகோபாலர் அனைவரும் பேர்விண்ட மாருமத்து வேதமங்
42 கலம் சிவபுரமான திருப்பெருந்துறையிலிருக்கும் நயினாரடியாரில்
43 ஏகாம்பரம் பிறைசூடும் பண்டாரத்துக்கு தறும சாதன பட்டை
44 யம் குடுத்த பரிசாவது சகல உறவின்முறையார் புண்ணியமா
45 க செழுமலற் குருந்தில் எழுந்தருளி இருக்கப்பட்டாறை ஆவுடைய
பர

46 மசுவாமியார்க்கு அபிஷேகம் நெய்வேத்தியம் திருமாலை திருவிளக்கு திருக்க

47 ட்டளை திருமண்டபம் திருநந்தவனம் திருமடமும் கள்ளிடையிட்ட படியினாலே

48 ல நடக்கும் சுவத்தியத்துக்கு குடிக்கு ஒரு பணமும் எழுத்தாணிக்கு ஒரு ப

49 ணமும் கவுறு கலசம் பிடித்தவன் அரைப் பணமும் பெரிய

50 வாசல் பல்லக்குக்கு சனத்துக்கு ஒரு பணமும் சில்லறை வாசல்

51 அஞ்சு பணமும் பாளையக்காறர் வாசல் பத்து பணமும் திருக்கலியா

52 ணத்துக்கு மாப்பிள்ளை ஒரு பணமும் பெண் வீடு ஒரு பணமும் சோ

53 பனத்துக்கு ஒரு பணமும் சீமந்தக் கலியாணத்துக் கொரு பணமும் இ

54 ந்தப்படிக்கு சகலரும் குடுக்கக் கடவராகவும் இந்தப்படிக்கு தி

55 ருமாலை திருவிளக்கு திருநந்தவனம் திருமண்

56 டபம் திருமடமும் சந்திராதித்தவரைக்கும் புத்திற பவுத்திற பா

57 ரம்பரையும் நடப்பிச்சுக் கொள்ளக் கடவராகவும் இந்த தற்

58 மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர்கள்

59 அறுபத்து மூவரும் மாணிக்கவாசகரும் சண்டேசுரப் பிள்

60 ளையாரும் பன்னி(த்தி)ரு ஆழ்வாரும் பெற்ற பேறு பெறக் கடவர

61 ாகவும் இந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர்கள் காசி

62 கெங்கை பிரயாகை திருவேணிசங்கமத்தில் சேது தனுஷ்க்

63 கோடியில் காராம் பசுவையும் பிராமணரையும் மாதா பித

64 ாவையும் குருக்களையும் கொன்ற தோஷத்திலே போக கட

65 வோராகவும் இந்தபடிக்கு நந்தகோபாலரும் பேர்விண்

66 டமாரனைவருந் சொல்ல இந்த தற்ம சாதன பட்டையம்

67 எழுதினேன் திருப்பெருந்துறை மாணிக்கக்கூத்தமுதலி

68 யார் எழுத்து உ சுபமஸ்து இந்த பட்டையப்படிக்கு யெ

69 ங்கள்ச் சாதி புத்திரரான கண்டிய திருக்கோடிதேவர் பண

70 ம் குடாத பேரையும் தற்ம்மத்திலே யிதைபாதை

71 வராமல் நடப்பிக்கவும் உ

**குறிப்பு**

1. குறியீட்டில் தரப்பட்டுள்ளது.

---

## எஃகுச் சிதறல்கள் – 1

சங்க காலத்தில் எஃகு என்ற சொல் இரும்புக் கருவிகளைக் குறிக்கும் பொதுச்சொல்லாக இருந்தது. வாள், வேல், கத்தி முதலிய படைக்கருவிகளைக் குறித்தது. ஆயினும்,

'எஃகிடை தொட்டகார்க் கவின்பெற்ற ஐம்பால்' (கலி. 32:1)
'வாளிடைப் படுத்த வயங்கி ரோதி' (கலி. 36:23)

என்னும் வரிகளால் கத்திரிகை போன்ற கருவி பயன்பாட்டில் இருந்தது தெளிவு. இவ்விரண்டிடங்களிலும் எஃகிடை, வாளிடை என வருவதால், அக்கருவி (இன்றைய கத்திரிகை போல) பிளவுபட்டதாய் இருக்க, அவற்றிடை பட்ட மயிர் நறுக்கப்பட்டது என்னும் கருத்துத் தோன்றுகிறது.

மேலும், பெருங்கதையில் 'உடன்மயிர் களைந்தது' என ஒரு காதையே (2:4) உள்ளது. இக்காதை 164ஆம் வரியுள்,

'இலக்கணம் பிழையா எஃகமை இருப்பின்
நீரளந் தூட்டிய நிறையமை வாளினை'

என வாள் சுட்டப்படுகிறது. எஃகும் இரும்பும் கலந்து உருவாக்கப்பட்ட வாள் அது.

சீவகசிந்தாமணியுள்,
'ஒண்மூறற் கத்தரி கைத்தொழில்' (2500) சீவகனுக்கு மஞ்சிகர் (நாவிதர்) செய்தார் என வருகிறது.

இதனால் கத்திரிகையைக் குறிக்கத் தமிழ் இலக்கியங்களில் எஃகு, வாள், கத்தரிகை ஆகிய சொற்கள் இடம்பெற்றுள்ளமையை அறியலாம்.

- பி. தமிழகன்

# 4. ஆய்வுக் கட்டுரைகள்

## 1. மலையடிக்குறிச்சிக் குடைவரையும் கல்வெட்டுகளும்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

திருநெல்வேலி மாவட்டத்தில் தாருகாபுரத்தை அடுத்து அமைந்திருக்கும் சிற்றூர் மலையடிக்குறிச்சி. புளியங்குடி சங்கரன்கோயில் சாலையில், புளியங்குடியிலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் பிரியும் தார்ச்சாலை, தலைவன்கோட்டை வழியாக மலையடிக்குறிச்சி சென்றடைகிறது. ஊரின் வடபுறத்தே உள்ள குன்றின் அடிவாரத்துப் பெரும் பாறையொன்றில் கிழக்கு முகமாக முற்பாண்டியர் காலக் குடைவரையொன்று வெட்டப்பட்டுள்ளது.[1]

படம்



குடைவரை முன்னுள்ள மண்டபம்

## முன் மண்டபம்

குடைவரையின் முன்னால், பின்னாளில், கிழக்கு மேற்காக 5.70மீ. நீளமும் தென்வடலாக 5.17மீ. அகலமும் கொண்டமைக்கப்பட்ட பெரிய அளவிலான மண்டபமொன்றை எடுத்திருக்கிறார்கள். உபானம், பாதங்களோடு கூடிய கண்டம், மகா வாஜனம் என்றமைந்துள்ள இதன் துணைத்தளத்தின் மீது, கிழக்கிலும் தெற்கிலும் வாயில்கள் கொண்டு எழும் சுவரில், வெட்டுப் போதிகைகளோடு கூடிய நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. இவை தாங்கும் உத்திரத்தின் மீது வாஜனமும் வலபியும் அமர, அடுத்துக் கூடுகளோடு கூடிய கபோதம், கூரையின் வெளியிழுப்பாய் நீட்டப்பட்டுள்ளது. கூரையின் மீதமர்ந்துள்ள வேதிகையின் வடகிழக்குப் பகுதியில் கல்வெட்டுத் துணுக்கொன்று தலைகீழாகப் பொருத்தப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

1.72மீ. உயரமும் 82செ.மீ. அகலமும் உள்ள கிழக்குச் சுவரின் வாயிலையொட்டி, அதன் இருபுறத்தும் பக்கத்திற்கொன்றாக 20.5செ.மீ. அகலத்தில், 1.33மீ. உயரத்தில் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை வெறுமையாக உள்ளன. தென்கோட்டத்தின் வலப்புறம், மகாவாஜனத்தின் மேற்பரப்பையே தளமாகக் கொண்டு 54.5செ.மீ. அகலத்தில், 59செ.மீ. உயரத்தில் மேலுமொரு கோட்டம் காட்டப்பட்டுள்ளது. இதுவும் வெறுமையாக உள்ளது. இக்கோட்டத்தின் மேற்பரப்பில் கூடுகளோடு கூடிய சிறு கபோதம், பூமிதேசம், வேதிகை, கிரீவம், சிகரம், தூபி ஆகியவற்றைக் காட்டியுள்ளனர். கிரீவமும் சிகரமும் திராவிடமாக அமைந்துள்ளன.

கிழக்கு வாயிலின் நிலைக்கால்களில் கீழ்ப்புறத்தே சிறிய அளவிலான நாகபந்தங்களும் மேற்பகுதியில் தாமரையிதழ் வடிப்பும், பக்கவாட்டில் அதையடுத்துக் குழிவு செய்து உருளைத்தோரணமும் காட்டியுள்ளனர். தாமரையிதழ் வடிப்பு மேல்நிலையின் முகப்பிலும் தொடர்கிறது. மேலே சிறு பட்டி காட்டப்பட்டுள்ளது. கீழ்நிலையிலிருந்து முன் மண்டபத்தையடைய உட்புறத்தே இரண்டு படிகள் அமைத்துள்ளனர்.

1.56மீ. உயரமும் 78செ.மீ. அகலமும் உள்ள தெற்கு வாயிலும் நிலையமைப்புடன் உள்ளது. கிழக்கிலிருப்பது போலவே இங்கும் நாகபந்தங்கள். அவற்றின் மேல் தொடங்கும் தாமரைவரி மேல்நிலையின் முகப்பிலும் தொடர்கிறது. மலைத்தளத்திலிருந்து இரண்டு படிகள் ஏறி இதன் கீழ்நிலையை அடையலாம். உள்ளிறங்க இரண்டு படிகள்.

உட்புறத்தே ஏறத்தாழ சதுர வடிவில் அமைந்துள்ள இம்மண்டபத்தின் கூரையை ஆறு தூண்கள் தாங்குகின்றன.[2] மூன்று சதுரங்களும் அவற்றின் இடையே இரண்டு கட்டுகளுமென அமைந்துள்ள இத்தூண்களின் வெட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்க, அதன்மேல் வாஜனமும் வலபியும் காட்டப் பட்டுள்ளன. வலபி வளைமுகத்துடன் சிற்பச் செதுக்கல்கள் ஏதுமின்றி

வெறுமையாகக் காட்டப்பட்டுள்ளது. தூண்களால் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ள மண்டபக் கூரையின் நடுப்பகுதி, ஏனைய இரு பகுதிகளைவிட உயரமாக உள்ளது. இங்கு வலபியின் மேல் ஓரடுக்கிற்குக் கற்களை ஏற்றிக் கூரையை உயர்த்தியுள்ளனர். மண்டபத்தின் வெளியே பாறைத்தளத்தில் கிழக்கு வாயிலை நோக்கியபடி இரண்டு நந்திகள் இருத்தப்பட்டுள்ளன. இவற்றுள் வாயிலை யொட்டி அமைந்திருக்கும் நந்தி சிறியதாகவும், அடுத்து அமர்ந்திருக்கும் நந்தி பெரியதாகவும் உள்ளன. இப்பெரிய நந்தி காலத்தால் பழமையானதாகும். தென்வாயிலருகே சிறிய அளவிலான மற்றொரு நந்தி காணப்படுகிறது. இது மண்டபத்தின் வடபுறத்தே தென்பார்வையாய் அமைந்திருக்கும் அம்மன் திருமுன்னை நோக்கியபடி அமைந்துள்ளது.

## அம்மன் திருமுன்

அம்மன் திருமுன், மண்டபத்தின் வடபுறத்தில் கருவறை, முகமண்டபம் என்ற அமைப்பில் தென்பார்வையாக அமைந்துள்ளது. துணைத்தளம், கால்களற்ற சுவர், உத்திரம், வாஜனம், வலபி, கபோத இழுப்புப் பெற்ற கூரையென அமைந்திருக்கும் கட்டடத்தின் மீது பூமிதேச அமைப்பைக் காணமுடியவில்லை. வேதிகை மட்டுமே காட்டப்பட்டுள்ளது. இது பிற்காலத் திருப்பணிகளின் விளைவாகலாம். மரகதவல்லியம்மன் என்ற பெயருடன் இங்கு எழுந்தருளியிருக்கும் அம்மை சடைமகுடராய் வலக் கையில் மலர் கொண்டு, இடக் கையை நெகிழ் கையாக்கிக் காட்சிதருகிறார். இவ்வம்மன் திருமுன்னின் கருவறை, முகமண்டபச் சுவர்களில் உள்ளும், புறமுமாய்ப் பல கற்களில் கல்வெட்டுச் சிதறல்கள் காணப்படுகின்றன. மண்டபத் தூண்களின் சதுரங்களிலும் வடசுவரிலும் கல்வெட்டுகள் உள்ளன. சில கல்வெட்டுக் கற்கள் தலைகீழாகவும் பொருத்தப்பட்டுள்ளன. இவை, இம்மண்டபமும் அம்மன் திருமுன்னும் கட்டப்பட்ட காலத்திற்குப் பிறகு, சிதைவுற்ற நிலையில், திருப்பணிகளை எதிர்கொண்டமையை உணர்த்துகின்றன.

## தரையமைப்புகள்

முன்மண்டபத்தின் தரை, குடைவரையின் முகப்புக்கு முன்னுள்ள தரையமைப்போடு பொருந்துமாறு நடுவிலொரு குழிவோடு இணைக்கப்பட்டுள்ளது. இக்குழிவு கருவறையிலிருந்து வரும் முழுக்கு நீர் ஓடுவதற்காகப் பின்னாளில் அமைக்கப்பட்ட வடிகாலாகும். முகப்புக்கு முன்னுள்ள தரை கிழக்கு மேற்காக 63செ.மீ. அகலமும் தென்வடலாக 5.12மீ. நீளமும் கொண்டு நன்றாகச் சமன் செய்யப்பட்ட நிலையில் அமைந்துள்ளது. இதில் சிறிய அளவிலான நந்தியொன்று பிற்காலத் தளத்தின் மீது இருத்தப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காக 63செ.மீ. அகலமும் தென்வடலாக 5.05மீ. நீளமும் கொண்டமைந்துள்ள முகப்புத் தரை, முன்

தரையிலிருந்து 4செ.மீ. உயரத்தில் வெட்டப்பட்டுள்ளது. நன்கு சமன் செய்யப் பட்டுள்ள இதன் விளிம்பிலிருந்து 9செ.மீ. உள்தள்ளி முகப்புத் தூண்கள் எழுகின்றன.

## முகப்பு

சதுரம், கட்டு, சதுரம் என்றமைந்துள்ள முகப்புத் தூண்களுள் நடுவிலிருப்பன இரண்டும் முழுத்தூண்களாக அமையப் பக்கங்களில் உள்ளவை அரைத்தூண்களாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் கீழ்ச்சதுரங்கள் மேற்சதுரங்களைவிட அளவில் பெரியனவாக உள்ளன. கட்டுகளின் தொடக்கத்தில் அவற்றைச் சுற்றிலும் அணைத்தவாறு தாமரையிதழ்கள் வெட்டப் பட்டுள்ளன. இது பிற பாண்டியர் குடைவரைகளில் காணமுடியாத புதுமையான அமைப்பாகும். முழுத்தூண்களின் மேற்சதுரங்களில் மேற்கு முகம் தவிர ஏனைய முகங்களில் சிலவற்றில் தாமரைப் பதக்கங்களும் சிலவற்றில் கொடிக்கருக்குப் பதக்கங்களும் வெட்டப்பட்டுள்ளன.[3] அரைத்தூண்களின் மேற்சதுர கிழக்கு முகங்கள் அரைப்பதக்கங்களைப் பெற்றுள்ளன. மேற்கு முகங்கள் முழுத்தூண்களைப் போலவே வெறுமையாக உள்ளன. தெற்கு அரைத்தூண் மேற்சதுரத்தின் வடக்கு முகத்தில் கொடிக்கருக்குப் பதக்கம் காட்டப்பட்டுள்ளது. இப்பதக்கத்தின் நடுவே கொடிக்கருக்குகள் சூழ மகரம் காட்சிதருகிறது. வடக்கு அரைத்தூணின் மேற்சதுரத் தெற்கு முகத்தில் காணப்படும் கொடிக்கருக்குப் பதக்கம், நடுவில் அழகிய மயிலைக் கொண்டுள்ளது.



முழுத்தூண் பதக்கமும் போதிகையும்

முகப்புத் தெற்கு முழுத்தூணின் மேற்சதுரப் பதக்கங்களுள் தெற்கு மற்றும் வடக்கு முகக் கொடிக்கருக்குப் பதக்கங்கள் பூரிம அணிகளைக் கொண்டுள்ளன. இவ்வணிகளின் மேற்பகுதியில் சிறிய அளவிலான பூச்சரங்கள் நாலவிடப்பட்டுள்ளன. கிழக்கு முகத் தாமரைப் பதக்கத்தின் நடுவே, உச்சிக்கொண்டையும் பனையோலைக் குண்டலங்களும் அணிந்தநிலையில், இரு கைகளுடன் கூடிய தேவ வடிவமொன்று வலப்புறமுள்ள சாயணையில் சாய்ந்தபடி இடக் கையை மார்பருகே வைத்து, வலக் கையைச் சாயணையருகே ஊன்றிக் காட்சிதருகிறது. இதன் மேற்புறத்தே இரு பக்கத்திலும் கவரிகள். வல்லம் குடைவரைப் பிள்ளையாரின் சாய் தோற்றத்திற்கு நிகரானதொரு அமர்வுநிலையில் செதுக்கப்பட்டிருக்கும் இத்தேவ வடிவத்தை இன்னாரென இனம்காணக்கூடவில்லை.

முகப்பின் வடக்கு முழுத்தூணின் மேற்சதுரப் பதக்கங்களுள் வடமுகக் கொடிக்கருக்குப் பதக்கத்தின் நடுவே மகரம் இடம்பெற்றிருக்கத் தென்முகக் கொடிக்கருக்குப் பதக்கம் பூரிம அணியால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. கிழக்கு முகத் தாமரைப் பதக்கத்தின் நடுவே புதுமையானதொரு அமர்வுநிலையில் தெய்வ வடிவமொன்று காட்டப் பட்டுள்ளது. இதன் இருபக்கமும் மேற்புறத்தே கவரிகள். மேற்கைகளில் கங்கணங்களும், கழுத்தில் அட்டிகையும், செவிகளில் பனையோலைக் குண்டலங்களும் அணிந்து நான்கு கைகளுடன் காட்சியளிக்கும் இத்தெய்வ வடிவத்தையும் இன்னாரென அடையாளம் காணக் கூடவில்லை. இதன் முன் கைகள் முழங்கையளவில் சிதைக்கப்பட்டுள்ளன. இடப்புறக் கவரியின் காம்பும் சிதைவுக்காளாகியுள்ளது.

தூண்களின் மேற்சதுரங்களின் மேல் காட்டப்பட்டிருக்கும் போதி கைகளின் கைகள் மேல்நோக்கி வளைந்து உத்திரம் தாங்குகின்றன. இக்கைகள் நன்கு வடிவமைக்கப்பட்ட தரங்க எழுச்சிகளுடன் காணப்படுகின்றன. இத்தரங்கங்களின் நடுவே அகலமான பட்டையொன்று வெட்டப்பட்டுள்ளது. முழுத்தூண்களின் போதிகைக் கைகளின் கிழக்கு முகங்களில் இருமுனைச் சுருள்வளைவுகள் வெட்டப்பட்டுள்ளன. இவை, அடுத்தடுத்த தரங்க எழுச்சிகள், எதிரெதிராகத் தொடங்குவது போலக் காட்டுகின்றன. திருச்சிராப்பள்ளி மேல் குடைவரையிலும், திருமலைப்புரம் குடைவரையிலும் காணப்படும் ஒரு பக்கத் தரங்க வளைவுகளிலிருந்து இவை முற்றிலும் வேறுபட்டு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த இருமுனைச் சுருள் வளைவுகளை ஒருமுனைச் சுருள் வளைவுகளின் வளர்ச்சிநிலையாகக் கொள்ளலாம். அவற்றைவிட ஆழமாகவும் திருத்தமாகவும் இவை வெட்டப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

போதிகைக் கைகளின் மேற்கு முகங்களில், வடக்கு முழுத்தூணின் வடபுறக் கையில் மட்டுமே இதுபோன்ற அழுத்தமான இருமுனைச் சுருள்

வளைவுகள் காணப்படுகின்றன. இதன் தென்புறக் கையிலும், தெற்கு முழுத்தூணின் இருபுறக் கைகளிலும் இவ்வளைவுகள் காணப்பட்டாலும், மேற்கு முகம் போல, ஆழமாகவோ திருத்தமாகவோ வெட்டப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு முழுத்தூண் போதிகையின் கிழக்கு முகத்தில் இக்குடைவரையைத் தோற்றுவித்தவரின் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

அரைத்தூண்களில் வடதூண் போதிகைக் கையின் கிழக்கு முகத்தில் நான்கு தரங்கங்கள் ஒரு சுருள் பெற்றும், ஐந்தாம் தரங்கம் அதே சுருளை ஆழமான நிலையில் பெற்றும் அமைந்துள்ளன. தெற்கு அரைத்தூண் போதிகைக் கைகளின் கிழக்கு முகம் மட்டும் முழுத்தூண்களை ஒத்தமைந்துள்ளது.

போதிகைக் கைகள் தாங்கும் உத்திரத்திற்கு மேல் உள்ள வ..ஜனம், அரைத்தூண்களையொட்டி குடைவரைப் பக்கச் சுவர்களின் இருபுறத்தும் இறங்கி முகப்புத் தரையில் முடிகின்றது. அடுத்துள்ள வலபிக்கு மேல் நன்கு வளைந்து இறங்குமாறு அமைக்கப்பட்டுள்ள கபோதத்தோடு, முன் மண்டபக் கூரை பொருந்துமாறு இணைக்கப்பட்டுள்ளது. அடிப்பரப்பு நன்கு சமன் செய்யப்பட்ட கபோதத்தின் கிழக்கு முகக் கீழ்ப்பகுதி பட்டையாகச் செதுக்கப்பட்டுள்ளது. முகப்பையொட்டிப் பக்கங்களில் அமைந்துள்ள பாறைச் சுவர்களின் முன்பகுதி 46 செ.மீ. அகலத்திற்கு, 5 செ.மீ. கனத்திற்கு அரைத் தூண் போலக் காட்சியளிக்கிறது. வடபுறத்தே இதன் கீழ்ப்பகுதி அகலம் குறுகிச் சிறுத்துள்ளது.

## முகமண்டபம்

முகப்பை அடுத்துக் கிழக்கு மேற்காக 1.91மீ. அகலத்திலும் தென் வடலாக 5.32மீ. நீளத்திலும் அமைந்துள்ள செவ்வகமான முகமண்டபத்தின்[4] தரை, முகப்புத் தரையின் தொடர்ச்சியாகவே காணப்படுகிறது. இம்முகமண்டபத்தின் தென், வடசுவர்களில், தெற்குச் சுவர் வெறுமையாக நன்கு சமன் செய்யப்பட்ட நிலையில் உள்ளது. வடசுவரை ஏறத்தாழ முழுவதுமாய் நிரப்பிக் கொண்டிருக்கும் ஸ்ரீவல்லபப் பாண்டியரின் கல்வெட்டு இன்றும் நல்லநிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. மேற்குச் சுவரின் நடுப்பகுதியில் முகமண்டபத்திற்குள் பிதுக்கமாய் இருக்குமாறு போலக் கருவறை குடையப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் வட, தென்சுவர்களிலும் கருவறைப் பிதுக்கத்தையடுத்தமைந்துள்ள மேற்குச் சுவரிலும் தரையிலிருந்து 39செ.மீ. உயரத்திற்கு உபானம் போன்றதொரு அமைப்பு காட்டப்பட்டுள்ளது.

மேற்குச் சுவரில் இவ்வுபான அமைப்பிற்கு மேலாகக் கருவறைப் பிதுக்கத்தையொட்டி இருபுறத்தும் ஆழமற்ற கோட்டங்கள் அகழப்பட்டுள்ளன.

வடபுறத்தே மட்டும் கோட்டத்தை அணைவு செய்ய இரு மெல்லிய உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் 3செ.மீ. கனத்திற்கு வெட்டப்பட்டுள்ளன. ஒரு தூண் கருவறைப் பிதுக்கமொட்டியும் (அகலம் 42செ.மீ.) மற்றொரு தூண் மேற்குச் சுவர், வடசுவரைத் தொடுமிடத்தும் (அகலம் 34செ.மீ.) அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் போதிகைகளின்றி உத்திரம் தாங்குகின்றன. இவற்றுக்கு இடைப்பட்ட கோட்டத்தில் அகழப்பட்டிருந்த சிற்பம் முற்றிலுமாய்ச் சிதைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் தலைக்கு மேல் காட்டப்பட்டிருக்கும் குடையும் இருபுறமும் காட்டப்பட்டிருக்கும் கவரிகளும் மட்டுமே தற்போது எஞ்சியுள்ளன.

தென்புறத்தே அணைவுத் தூண்களற்ற நிலையில் கோட்டம் அமைக்கப்பட்டுச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. சுவர் முழுவதும் பரவிய நிலையில் அமைந்திருந்த இச்சிற்பமும் சிதைத்து அழிக்கப்பட்டுள்ளது. கருவறை வாயிலையொட்டி இச்சிற்பத்தின் தொடர்ச்சியாகப் பறவை அமர்ந்துள்ள கொடித்தண்டு ஒன்று மட்டும் தெரிகிறது.

## கருவறை

முகமண்டபத்திற்குள் பிதுக்கமாய் அமைந்துள்ள கருவறைத் தாங்குதளம் 41செ.மீ. உயரம் கொண்டுள்ளது. ஜகதி, உருள் குமுதம், கம்பு, சிறிய அளவிலான பாதமற்ற கண்டம், கம்பு, பட்டிகை, துணைக்கம்பு எனப் பாதபந்தமாய் அமைந்துள்ள இத்தாங்குதளத்தின் மீது[5] பாதங்களும் கம்பும் கொண்ட வேதிக்கண்டம், வேதிகை, கம்பு ஆகியன சுவரின் தொடக்கப் பகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. பட்டிகை வடபுறத்தே பெரிதும் சிதைந்துள்ளது. பட்டிகையளவில், 2.43மீ. அகலமுள்ள கருவறை முன்சுவர்த் திருப்பங்களில், இரண்டு நான்முக அரைத்தூண்கள் வேதிக்கண்டத்திலிருந்து எழுமாறு வெட்டப்பட்டுள்ளன. உறுப்பு மாறுபாடற்ற இவ்வரைத்தூண்களின் போதிகைக் கைகள் முப்புறமும் விரிகோணத்தில் கிளைத்து உத்திரம் தாங்குகின்றன. இவ்வுத்திரம் கருவறையின் முன்சுவரிலும் அதன் திருப்பங்களிலும் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டிருப்பதுடன், முகமண்டபச் சுவர்களிலும் தொடர்ந்து, குடைவரையின் முகப்பு உத்திரத்தில் அய்க்கியமாகின்றது. கருவறை முன்சுவரில் உத்திரத்திற்கு மேல் வாஜனமும் அதையடுத்து வலபியும் உள்ளன. முன்சுவரின் திருப்பங்களில் தொடரும் இவ்விரண்டும், பிறகு ஒன்றாகி முகமண்டபப் பின்சுவரில் தென் வடலாகவும் பின், தென் மற்றும் வடசுவர்களில் கூரையை ஒட்டியும் பெருவாஜனமாகப் படர்ந்துள்ளன. வலபிக்கு மேலே கபோதம் இடம்பெறாமையால் முகமண்டபக் கூரை மட்டுமே காணப்படுகிறது.



கருவறை - முன்சுவர்க் கோட்டம் - மகரதோரணம்

1.37மீ. உயரமும் 73செ.மீ. அகலமும் கொண்டமைந்துள்ள கருவறை வாயிலின் இருபுறத்தும் உள்ள சுவர்ப்பகுதிகளில் பக்கத்திற்கொன்றாக இரண்டு

கோட்டங்கள்[6] அகழப்பட்டுள்ளன. இக்கோட்டங்கள் வேதிகையை அடுத்தமைந்துள்ள கம்பின் மீதிருந்தெழும் உறுப்பு வேறுபாடற்ற இரு மெலிதான நான்முக அரைத்தூண்களால் அணைவுசெய்யப்பட்டுள்ளன. போதிகையற்ற இவ்வரைத்தூண்களின் மீது உத்திரமும் வாஜனமும் வலபியும் அமர, மேலே அழகிய கபோதம் காட்டப்பட்டுள்ளது. கபோதத்தின் மீது வடிவம் செதுக்கப்படாத பூமிதேசமும் அதன் மீதொரு வேதிகையும் வடிக்கப்பட்டுள்ளன. அரைத்தூண்களுக்கு இடைப்பட்ட கோட்டங்கள் அதிக ஆழமற்ற நிலையில் அகழப்பட்டுள்ளன. இவற்றில் செதுக்கப்பட்டிருந்த சிற்பங்கள் சிதைத்து அழிக்கப்பட்ட நிலையில், சிற்பமிருந்த சுவடுகளை மட்டுமே காணமுடிகிறது. இது போல் அழிவுக்குள்ளாகிச் சிற்பச் சுவடுகளுடன் மட்டும் காட்சியளிக்கும் கோட்டங்களைப் பல்லவர் குடைவரைகள் சிலவற்றிலும் காணமுடிகிறது.

கருவறை வாயிலின் நிலைக்கால்கள், மேல், கீழ் நிலைகள் ஆகியன சுவரமைப்பிற்குச் சற்று உள்ளடங்கிய நிலையில் வெட்டப்பட்டுள்ளன. சுவரொழுங்கை ஒட்டிக் கருவறையின் பக்கப் பகுதிகளிலும், மேலும், கீழும் சட்டம் போன்றதொரு அமைப்பைச் செதுக்கியிருக்கிறார்கள். சிதைவுக்குள்ளாகியிருக்கும் இச்சட்டத்தின் கீழ்ப்பகுதி பிற பகுதிகளை விட மும்மடங்கு அகலமாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் கீழேயிருந்த படிக்கட்டுகளும் சிதைக்கப்பட்டிருப்பதால் கருவறைக்குள் செல்ல வாய்ப்பாகப் பின்னாளில் படியொன்று அமைத்திருக்கிறார்கள்.

## மகரதோரணம்

கருவறை வாயிலுக்கு மேலே அழகிய மகரதோரணமொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. தளவானூர் சத்ருமல்லேசுவரத்தில் காணப்படும் போதிகைத் தோரணம் போலவும், மாமல்லபுரக் கொற்றவைத்தளியின் பக்கச் சுவர்களில் வடிவமைக்கப்பட்டுள்ள மகரதோரணங்களையொத்தும் அமைந்துள்ள இத்தோரணத்திலும் நான்கு மகரங்கள் இடம்பெற்றுள்ளன. கருவறை வாயிலின் மேல்நிலையை அடுத்து அமைந்திருக்கும் சட்டத்திற்கு மேலே, அதன் நடுப்பகுதியில் இரண்டு மகர தலைகள் காட்டப்பட்டுள்ளன. தெற்கும், வடக்கும் நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் இம்மகர தலைகளின் அங்காத்த வாய்களிலிருந்து கத்தியும் கேடயமுமாய் வீரர்கள் வெளிப் படுகின்றனர். இம்மகரங்கள் இணையுமிடத்திற்கு மேலேயுள்ள நெற்றிப் பகுதியில், இவற்றின் வாயிலிருந்து வெளிப்படும் மலர்ச்செண்டுகளின் வளைவுக்குள் தாமரை மலரில் அமர்ந்தநிலையில் ஆண் வடிவமொன்று காட்டப்பட்டுள்ளது. இதைச் சுற்றியொரு அழகிய மணிவளையம். சேட்டைத் தேவியைப் போன்றதொரு அமர்வுநிலையில் காணப்படும் இவ்வடிவத்தின்

இருபுறமும் கவரிகள். தலையில் சென்னி அணிந்துள்ள இவ்வடிவத்தின் வலக் கை காப்பு முத்திரையிலும் இடக் கை கடக முத்திரையிலும் உள்ளன. சென்னி கொண்டு இவ்வடிவத்தை முருகனாக ஊகிக்கலாம். பொதுவாக இதுபோன்ற மகர நெற்றிப்பகுதிகளில் கந்தர்வர்கள், பூதகணங்கள், இறைத் தோற்றங்கள் ஆகியவற்றைப் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் பார்க்கமுடிவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இரண்டாம் இணை மகரங்கள், கருவறை வாயில் சட்டத்தின் மேற்பகுதியில் தென்புற மூலையிலொன்றும், வடபுற மூலையிலொன்றுமாய் அமர்ந்துள்ளன. இவை முழு மகரங்களாய் நன்கு அடர்ந்து, விரிந்த தோகைகளுடன் காட்டப்பட்டுள்ளன. சுருள் சுருளாக, அழகுபட விரியும் இத்தோகைகள் இருபுறத்துமுள்ள கோட்ட வேதிகைகள் மீது படர்ந்துள்ளன. இவற்றின் அகலத் திறந்த வாய்களிலிருந்து, உயர்த்திய கத்தி கேடயங்களுடன் வீரர்கள் வெளிப்பட்டு வருகின்றனர். இம்மகரங்களின் மேல் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ள ஆண் வடிவங்களின் நீட்டிய கைகளில் பரிவட்டம் போன்றதொரு துணி உள்ளது. சடையை மகுடமாக்கிக் குண்டலங்களுடன் காட்சியளிக்கும் இவ்வடிவங்கள் கந்தர்வர்களாகலாம்.

நடு மகரங்களையும், பக்க மகரங்களையும் அவற்றின் வாய்களிலிருந்து வெளிப்படும் வீரர்களும் தோரணத் தொங்கல்களும் இணைப்பதுடன், மேற்பகுதியில் அவற்றின் துதிக்கைகளை ஒட்டிக் காட்டப்பட்டுள்ள இரு அரைவட்ட நிலையிலான பூப்பின்னல்களும் இணைக்கின்றன. பல்லவர் பகுதியில் காணமுடியாத இப்பூப்பின்னல், இம்மகரதோரண அமைப்பின் தனிச் சிறப்பெனலாம். மேலும் மகரவாய்களின் கீழ்ப்பகுதிகளிலும் பூவேலை காட்டப்பட்டுள்ளது. ஆனால் இது சிதைக்கப்பட்டுள்ளது. விருதுநகர், சிவகங்கை, திருநெல்வேலி மாவட்டப் பாண்டியர் குடைவரைகளில் மலையடிக் குறிச்சியில் மட்டுமே மகரதோரணம் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

1.71மீ. உயரமும் கிழக்கு மேற்காக 1.47மீ. அகலமும் தென்வடலாக 1.63மீ. நீளமும் கொண்டமைந்துள்ள கருவறையின் நடுவே, செய்தமைத்த திருமேனியாய்ச் சதுரமான ஆவுடையாரின் மீது உருளையான லிங்கபாணம் காட்சிதருகிறது. உபானம், அதபத்மவரி, கம்புகளோடு கூடிய கண்டம், ஊர்த்வ பத்மவரி, பட்டிகை, மேற்கம்பு என அமைந்துள்ள ஆவுடையாரின் வடபுறம், கோமுகம் காட்டப்பட்டுள்ளது. கருவறையின் சுவர்கள், கூரை ஆகியன நன்கு சீரமைக்கப்பட்ட நிலையில் வெறுமையாக உள்ளன. வாயிலருகே உள்ள தரையில் பக்கத்திற்கொன்றாக இரு அரைவட்டங்கள் மேடு போலச் செதுக்கப் பட்டுள்ளன. முழுக்கு நீர் வெளிவர வாய்ப்பாகக் கருவறை முன்சுவர் வேதிக்

கண்டப் பகுதியருகே துளையிடப்பட்டுள்ளது. இந்நீர் ஓடிட முகமண்டபத்தில் காலொன்றும் வெட்டப்பட்டுள்ளது.

முகமண்டபத்தில், விளக்குத் தண்டொன்றின் மீது நிறுத்திய 250கிராம் எண்ணெய் கொள்ளும் கல்லாலான பேரகல் விளக்கொன்றும், பிள்ளையார் திருமேனியொன்றும் காணப்படுகின்றன. தென்மேற்கில் காணப்படும் இப்பிற்காலப் பிள்ளையாரின் திருமேனியின் முன் மூஞ்சுறு வடிவமொன்று இருத்தப்பட்டுள்ளது. கரண்ட மகுடத்துடனிருக்கும் இப்பிள்ளையாரின் பின் கைகளில் அங்குசமும் பாசமும் இருக்க, முன் கைகளில் இடப்புறம் மோதகம். வல முன் கை சிதைந்துள்ளது.

## கல்வெட்டுகள்

குடைவரை முகப்பின் வடமுழுத்தூண் போதிகையின் கிழக்கு முகத்தில் காணப்படும் கல்வெட்டே இங்குள்ள கல்வெட்டுகளுள் காலத்தால் பழமையானதாகும். கோமாறன் சேந்தனின் பதினேழாம் ஆட்சியாண்டில் மன்னர் பணிக்கப் பாண்டிமங்கலவதி அரசர் சேவூர்க்கிழார் சாத்தனேறன் இக்கல்திருக்கோயிலைச் செய்வித்ததாக இக்கல்வெட்டு கூறுகிறது.[7]

குடைவரை முகமண்டபத்தின் வடசுவரில் இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. வல்லபதேவரின் மூன்றாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள முதற் கல்வெட்டு, பிணக்கறுக்கும் மகாதேவர் கோயிலின்[8] தேவகன்மிகளுக்கும் ஸ்ரீமாகேசுவரக் கண்காணி செய்வார்க்கும் அரசரிட்ட ஆணையாக அமைந்துள்ளது. கீழ்வேம்ப நாட்டுத் திருநெல்வேலியில் அமைந்திருந்த மாளிகையின் உள்ளாலைப் பள்ளியறையில் முனையதரையன் என்னும் இருக்கையில் மன்னர் அமர்ந்திருந்தபோது வெளியிடப்பட்ட இவ்வாணையில், மலையடிக்குறிச்சி, ஆரி நாட்டுப் பிரமதேயமான ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலத்து தென்பிடாகையாகக் குறிக்கப்படுகிறது. இவ்வாணையின்படி ஏற்கனவே இக்கோயில் இறைவனின் திருப்படி மாற்றுள்ளிட்ட நித்த நிவந்தங்களுக்காக வல்லபதேவரின் தந்தை தந்திருந்த நிலம் அரையே இருமாவும், வல்லபதேவர் தந்த நிலம் அரையே ஒரு மாவும் ஆக நிலம் ஒன்றே மூன்று மா, தேவதான இறையிலியாக்கப்பட்டது. கல்வெட்டில் சீதேவி வாய்க்கால், மானாபரணப் பேரேரி, வீரபாண்டியன் ஆறு ஆகியன நில எல்லைகளைச் சுட்டுமிடத்துக் குறிக்கப்பெறுகின்றன. இவ்வாணையில் கையெழுத்திட்ட அரசு உயர் அலுவலர்களாக இந்திரசமானப் பல்லவரையரும் வெழியாற்றூர் உடையாரும் இடம்பெறுகிறார்கள்.

இக்கல்வெட்டின் கீழ், இதன் தொடர்ச்சியாகக் காணப்படும் மற்றொரு கல்வெட்டு வல்லபதேவரின் பதினோராம் ஆட்சியாண்டின்

நூற்றுநாற்பத்துமூன்றாம் நாளில், மலையடிக்குறிச்சியில் உள்ள அம்மைக்குளம் கொடையளிக்கப்பட்டதைப் பதிவுசெய்துள்ளது. கல்வெட்டு முற்றுப்பெறாமல் நிற்பதால் பிற தகவல்களை அறியக்கூடவில்லை.

குடைவரைக்கு முன்னாலுள்ள மண்டபத்தின் முதல் மற்றும் மூன்றாம் வட, தென் தூண்களின் மேற்சதுரங்களில் காணப்படும் கல்வெட்டுகள்[9] கோணமலை ராமநாராயணபிள்ளை, பற்பனாதபிள்ளை, பாலைமுற்றம் சிட்டன் ஆகிய பெயர்களைத் தருகின்றன. இப்பெருமக்கள் அவ்வத் தூண்களைத் தந்த கொடையாளிகளாகலாம்.

முன்மண்டபத்தின் வடசுவரிலும், மண்டபத்தின் மீதுள்ள வேதிகைப் பகுதியிலும், அம்மன் திருமுன்னின் முகமண்டபம் மற்றும் கருவறைச் சுவர்களின் உட்புற, வெளிப்புறப் பகுதிகளிலும் ஏறத்தாழ இருபத்து நான்கு கல்வெட்டுத் துணுக்குகள் காணப்படுகின்றன. இவை அனைத்தையும் படியெடுத்துப் படித்தபோது இவை இரண்டு கல்வெட்டுகளின் சிதறிய பகுதிகளாகலாம் என்பதை ஊகிக்க முடிந்தது.[9] இரண்டாம் பாண்டியப் பேரரசைச் சேர்ந்த மன்னர் ஒருவரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் இக்கோயில் தேவகன்மிகளுக்கும் சிவஅந்தணர்களுக்கும் இடப்பெற்ற அரசாணையாக ஒரு கல்வெட்டு அமைந்துள்ளது. மலையடிக்குறிச்சி திருக்கற்றளி ஈசுவரத்தில், வாணாதராயர், தம் பெயரால் அமைத்திருந்த சொக்கனார் சாமந்தன் சந்திக்குரிய திருப்படி மாற்றுள்ளிட்ட நித்த நிவந்தங்களுக்காக ஊரொன்றை அளித்திருந்தார். அவ்வூரைச் சாமந்தநல்லூரென்று பெயரிட்டு, அதைத் தேவதான இறையிலியாக அறிவிப்பதாய் அமைந்துள்ள இவ்வாணையில் கையெழுத்திட்டவர்களாக அண்ட நாட்டுப் பெருமணலூர் அரையன் முடிவழங்கும் பெருமாளும், சக்கரபாணிநல்லூர் அரையன் விரதம் முடித்தானான பல்லவரையனும், அரும்பேர் கூற்றத்துப் புதுப்பேர்க் குளத்தாழ்வாள் ஆண்டபிள்ளையும் குறிக்கப்பெறுகின்றனர்.

மற்றொரு கல்வெட்டும் இதனோடு தொடர்புடையதாகவே அமைந்துள்ளது. இதில் அனந்தன் உலகுவந்த பெருமானுக்குத் தரப்பட்ட காணி பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

இத்துணுக்குக் கல்வெட்டுகளிலிருந்து வீரபாண்டியன் கோல், பன்னீரடிக் கோல் என்னும் இரண்டு நிலமளந்த கோல்களின் பெயர்களும் ஏனாதிக் கால், கலகனேரி, குறிச்சிக் குளம் போன்ற நீர் வழி மற்றும் நீர்நிலைகளின் பெயர்களும் கிடைத்துள்ளன. கீழ்க்கூற்றத்து நக்கினூருடையான், தடங்கண்ணிச் சிற்றூருடையான் வீரசோழதேவன் என்னும் பாண்டி நாட்டு அலுவலர் பெயர்களையும் இத்துணுக்குக் கல்வெட்டுகளிலிருந்து அறிய

முடிகிறது. இத்துணுக்குக் கல்வெட்டுகளின் அடிப்படையிலும், கட்டட அமைதி கொண்டும் முன்மண்டபமும், அம்மன் திருமுன்னும் பதினான்காம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம். பின்னாளில் இவை திருப்பணிகளுக்கு ஆளானமையை இவ்விரு கல்வெட்டுகளும் சிதறியிருக்கும் பாங்கிலிருந்து தெளியலாம்.

## குடைவரையின் காலம்

குடைவரையைச் செய்வித்தவரின் கல்வெட்டே இங்கிருப்பதால் மிக எளிதாக இதன் காலத்தை அறியமுடிகிறது. இக்குடைவரையைச் செய்யப்பணித்த கோமாறன் சேந்தனின் ஆட்சிக் காலத்தைக் கி.பி. 720-750 என வரலாற்றறிஞர்கள் நிர்ணயித்துள்ளனர். இக்குடைவரை மன்னரின் பதினேழாம் ஆட்சியாண்டில் செய்யப்பட்டதாகக் கல்வெட்டு கூறுவதால் இதன் காலத்தைக் கி.பி. 737ஆம் ஆண்டாகக்கொள்ளலாம்.

## ஏற்புக்கோடல்

மலையடிக்குறிச்சிக் குடைவரையை ஆய்வு செய்யச் சென்ற போதெல்லாம் அன்புடன் வரவேற்று உடனிருந்து ஒத்துழைத்த கோயில் சிவாச்சாரியர்கள் திரு. கே. குப்புசாமி, திரு. கு. சுப்பிரமணியன் ஆகியோர்க்கும், உணவளித்து உதவிய அவர்தம் இல்லத்தார்க்கும், கள ஆய்வுகளில் பெருமளவு துணைநின்ற சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி (தன்னாட்சி) வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கோ. வேணிதேவி, தேர்வுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் சி. கீதா ஆகியோர்க்கும் இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

## குறிப்புகள்

1. "மலையடிக்குறிச்சியில் உள்ள குடைவரைக் கோயில்தான் சமணர்களின் முதல் குடைவரைக் கோயிலாகும். ஆனால் அக்கோயில் பிற்காலத்தே சைவக் கோயிலாக மாற்றப்பட்டது. காரணம் சமணத்தைப் பெரிதும் ஆதரித்துப் போற்றிய அரிகேசரி மாறவர்மன் (கி.பி. 670-700) சம்பந்தரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டான். இதன் எதிரொலியாக இக்கோயில் சைவக் கோயிலாக மாற்றப்பட்டது" ஆர். வசந்தகல்யாணி, *'தமிழ்நாட்டில் சமணக் கோயில்கள்'*, The contribution of the Tamils to Indian Culture, Volume 4, Religion & Philosophy, International Institute of Tamil studies, Madras, 1994, p. 250.

   *மலையடிக்குறிச்சிக் குடைவரையைச் சமணர்களின் முதற்குடைவரையென்று கூறும் கட்டுரையாளர், அதற்கான ஆதாரமாகப் பிறருடைய ஆய்வு முடிவுகளையோ அல்லது தம்முடைய ஆய்வு முடிவுகளையோ யாண்டும்*

கூறக் காணோம். தம்முடைய கட்டுரையின் பிறிதோரிடத்தில் (பக். 255), 'தமிழ்நாட்டில் சமணக் கோயில்கள் பள்ளி என்ற பெயராலேயே பெரிதும் குறிப்பிடப்பட்டன' என்று குறிக்கும் கட்டுரையாளர், சமணக் கோயில்களின் பிற பெயர்களாக ஜினாலயம், அருகத்தானம் என்பவற்றைக் குறிப்பிடுகிறார். மலையடிக்குறிச்சிக் குடைவரையிலுள்ள மாறன் சேந்தனின் கல்வெட்டோ இப்பெயர்கள் எதனையும் சுட்டாது, 'கல்திருக்கோயில்' என்றே இக்குடைவரையைக் குறிப்பிடுகிறது.

மலையடிக்குறிச்சிக் குடைவரையின் முகமண்டபப் பின்சுவர்ச் சிற்பங்கள் அழிக்கப்பட்டிருப்பதும், கருவறையில் செய்லிங்கம் இருப்பதுமே இதுபோன்ற கருத்துகளுக்கான பின்புலமாக விளங்குகின்றன. மலையடிக்குறிச்சி மலைப்பகுதியில் சமணர்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் எதுவும் இதுநாள்வரையிலும் கண்டுபிடிக்கப்பெறவில்லை. குடைவரையின் எந்தப் பகுதியிலும் அது சமணர்களுடைய திருக்கோயிலாக விளங்கியமைக்கான சான்றுகள் ஏதும் காணப்பெறவில்லை. குடைவரையின் தோற்றம் சுட்டும் கல்வெட்டும் குடைவரையைச் 'சமணக் கோயில்' என்று கருதுமாறு சொல்லாட்சி ஏதும் கொள்ளவில்லை. இக்குடைவரையை அமைக்கப் பணித்த செழியன் சேந்தனோ அல்லது அமைத்த சாத்தன் ஏறனோ சமணச் சார்புடையவர்களாக அறியப்படவில்லை. இந்நிலையில் இக்குடைவரை சமணர்கள் குடைவரைதானா என்பதே அய்யமாக இருக்கையில், கட்டுரையாளர் இதைச் சமணர்களின் முதற்குடைவரைக் கோயில் என்று உறுதிபடக் கூறுவது பொருந்துமா என்பது கருதத்தக்கது.

'அரிகேசரி மாறவர்மன் சம்பந்தரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டதன் எதிரொலியாக இக்கோயில் சைவக் கோயிலாக மாற்றப்பட்டது', என உறுதிபடக் கூறும் கட்டுரையாசிரியரின் கூற்றும் ஆதாரங்களின்றிக் காணப்படுகிறது. அரிகேசரியின் சமய மாற்றமே இக்குடைவரையின் சமய மாற்றத்தை நிர்ணயித்ததெனின், சிற்றண்ணல் வாயில் குடைவரை ஏன் மாற்றப்படவில்லை. இளங்கௌதமன் திருப்பணி செய்யுமளவும், ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இக்குடைவரை சமணக் குடைவரையாகவே நீடித்தது எவ்வாறு?

மலையடிக்குறிச்சிக் குடைவரை சமணச் சார்புடையதாகத் தோன்றிச் சைவக் குடைவரையாக மாற்றம் பெற்றதா அல்லது சைவக் குடைவரையாகவே தோன்றி பிற சமயத்தாரின் அழிவுக்காளாகித் தன்னிலை திரிந்ததா எனும் வினாக்களுக்கு இன்றிருக்கும் சான்றுகள் கொண்டு விடை காணல் இயலாது. இரண்டுமே நிகழ்ந்திருக்க வாய்ப்புகளமைந்த வரலாற்றுச் சூழல் அக்கால கட்டத்தில் நிலவியதை ஆனையூரும், மாமல்லபுரமும் உணர்த்த வல்லன. தகுதியான சான்றுகள் இல்லாத நிலையில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் ஊகங்களாக அமையலாமே தவிர உறுதியான முடிவுகளாகத் தொனிக்கலாகாது என்பதே இக்கட்டுரையாசிரியர்களின் பணிவான கருத்து.

வசந்தகல்யாணி தம்முடைய கட்டுரையின் ஒரு பகுதியில் (பக். 250-251) பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருச்சிராப்பள்ளி, மாமண்டூர் ஆகிய

இடங்களிலும் சமணக் குடைவரைக் கோயில்கள் எடுக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகிறார். இவற்றுள் பிள்ளையார்பட்டி, குன்றக்குடி ஆகிய இரண்டு இடங்களிலுமே சைவக் குடைவரைகள்தான் உள்ளன. குன்றக்குடியிலுள்ள மூன்று குடைவரைகளின் கருவறைகளிலுமே மலைப்பாறையிலேயே செதுக்கி உருவாக்கப்பெற்ற குடைவரைக் கால லிங்கத்திருமேனிகளே காட்சியளிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளையார்பட்டியிலும் அதே நிலைதான்.

சிராப்பள்ளி மலையிலுள்ள இரண்டு குடைவரைகளுள் லலிதாங்குர பல்லவேசுவர கிருகம் முதலாம் மகேந்திரவர்மரின் கல்வெட்டுடன் கூடிய சைவக் குடைவரை. மலையின் கீழுள்ள குடைவரை பிள்ளையார், திருமால், கொற்றவை என இந்து சமயத் தெய்வத் திருமேனிகளுடன் விளங்குகிறது. இந்நிலையில் இவற்றையெல்லாம் எந்தச் சான்றுகளின் அடிப்படையில் சமணக் குடைவரைகளாகக் கட்டுரையாசிரியர் கருதுகிறார் என்பதை அறியக்கூடவில்லை.

மாமண்டூர்க் குடைவரைகளில் முதற்குடைவரையும் இரண்டாம் குடைவரையும் கல்வெட்டுகளோடு கூடியவை. மூன்றாம், நான்காம் குடைவரைகள் முற்றுப் பெறாதவை. இவை நான்கிலுமே சமணம் தொடர்பான சுவடுகள் ஏதுமில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருந்தபோதும் இவையும் கட்டுரையாளரால் சமணக் குடைவரைக் கோயில்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

2. இத்தூண்கள் முற்காலச் சோழர்களின் பாணியில் இருப்பதாகத் தி. இராசமாணிக்கம் எழுதியிருப்பது சரியன்று. தி. இராசமாணிக்கம், நெல்லைக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, 1980, ப. 14.

3. தி. இராசமாணிக்கம் இவையனைத்தையும் 'தாமரையிதழ்கள்' என்று குறிப்பிடுவது சரியன்று. மு.கு.நூல், ப. 13.

4. தி. இராசமாணிக்கம் இப்பகுதியை அந்தராளம் என்கிறார். மு.கு. நூல், ப.13.

5. வரிமானம், காந்தம், குமுதம் போன்றவற்றுடன் அதிஷ்டானம் பொலிவுடன் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 14.

6. தி. இராசமாணிக்கம் இவற்றை விமானம் போன்ற அமைப்புகள் என்கிறார் மு. கு. நூல், ப. 14.

7. ARE 358 of 1959-60.

8. பிணக்கறுக்கும் மகாதேவர் திருக்கோயில் மலையடிக்குறிச்சியிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் தாருகாபுரத்தின் ஒரு பகுதியில், ஊருக்குத் தள்ளிய நிலையில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. திருப்பணியாளர்களின் கோரப்பசிக்கு ஆளாகியிருக்கும் இக்கல்வெட்டுகளுள் பல, முன்பே படியெடுக்கப்

பட்டுள்ளமையால் இப்பகுதியின் வரலாறு ஓரளவிற்கேனும் பிழைத்ததெனலாம்.

9. இக்கல்வெட்டுகள், புதிய கண்டுபிடிப்புகளாகும். இவற்றைப் படிக்கவும், பொருள் காணவும் உதவியாக இருந்த முனைவர் அர. அகிலா இக்கட்டுரையாசிரியர்களின் நன்றிக்குரியவர். இக்கல்வெட்டுத் துணுக்குகளைப் படிப்பதற்கு அரும்பாடுபடவேண்டியிருந்தது. தூசும், குப்பைக் கூளங்களும், முட்புதர்களும் மண்டியிருக்கும் சூழலில்தான் இன்றைய தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் இருக்கின்றன என்பதுதான் எத்தனை வேதனையான உண்மை!

---

## நல்ல தமிழர்களய்யா நாம்!

பறவைகளின் பழக்கவழக்கங்கள், இயல்புகள், உருவ அமைதி, வாழ்முறை எனப் பல்நோக்கில் அமைந்து பெரிதும் வளர்ந்துவரும் அறிவியல்துறை பறவையியல். இயற்கை தழுவி வாழ்ந்த தமிழர்கள் இந்தத் துறையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெரிதும் நாட்டம் கொண்டிருந்தமை, சங்கப் பாடல்களில் காணப்படும் பறவைகள் பற்றிய பல அரிய செய்திகள் வாயிலாய்த் தெரியவருகிறது.

மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார் புலவர்தான் என்றாலும் குருகு என்றழைக்கப்படும் நாரையின் இயல்பு பற்றி அவர் சொல்லியிருக்கும் சில செய்திகள் அவரை ஒரு பறவையியல் நோக்கராகப் படம்பிடிக்கின்றன.

கழிப்பரப்பில் இரை தேடி அலைந்து மீன் கிடைத்ததும் அதை உண்டு, வீட்டருகே மன்றத்திலுள்ள பனைமரத்தின் மடலில் பறந்து வந்தமர்கிறது ஒரு நாரை. அந்த மரத்தில்தான் அது கூடு கட்டியிருக்கிறது. உணவு முடிந்ததால் கூடி மகிழத் துணையைத் தேடுகிறது அதன் உள்ளம். அந்தத் துணையோ வெளியில் எங்கோ சென்றிருக்கிறது. அதை அழைப்பது போல பனைமரத்து நாரை ஓயாமல் கூவுகிறது. அந்தக் கூவல், வளைந்த வாயையுடைய பெண் பறவை கூடு வந்துசேர்ந்து தழுவிக் கொள்ளும் வரை நிற்கவில்லை என்கிறார் சாத்தனார்.

இதே படப்பிடிப்பு தொலைக்காட்சியின் Discovery Channel இல் வந்தால் 'பறவை வல்லுநர்' என்று கொண்டாடுவோம். சாத்தனார் சொல்லியிருப்பதால் கற்பனை என்று கைகொட்டிச் சிரிப்போம். நல்ல தமிழர்களய்யா நாம்!

# 2. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை வட்டெழுத்துக் கல்வெட்டுகள்

*ஐராவதம் மகாதேவன்*

## முன்னுரை

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டைக் குன்றின் வடபுறத்தில் உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குக் கீழே ஒரு நீண்ட பிளவு உள்ளது. அதன் வழியே போனால் மலையின் மேற்குப்புறம் அமைந்துள்ள இயற்கைக் குகைத் தளத்தைச் சென்றடையலாம். ஆனால் போகும் வழி மிகவும் குறுகலானது. பல இடங்களில் தவழ்ந்துதான் செல்லமுடியும்; சறுக்கினால் செங்குத்தான பாறைச் சரிவிலிருந்து உருண்டு கீழே விழுந்துவிடும் அபாயம் உள்ளது. மழைக்காலத்திலோ, பலத்த காற்று வீசும்போதோ அங்குப்போவதைத் தவிர்க்கவேண்டும். மற்ற நேரங்களில் போகவிரும்பினாலும் கோயில் அலுவலர்களின் அனுமதி பெற்றுத் தகுந்த பாதுகாப்புடன்தான் செல்ல வேண்டும்.

*1961-66* ஆண்டுகளில் நான் முதன்முறையாகக் குகைக் கல்வெட்டுகளை ஆய்வுசெய்தபோது அங்குச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை. *1937*இல் அங்கிருந்து படியெடுக்கப்பட்ட தமிழ்-பிராமிக் கல்வெட்டை[1] நேரில் ஆய்வு செய்யமுடியாமல் அதன் மசிப்படியின் அடிப்படையில் ஒருவாறு முயன்று படித்து என் நூலில் சேர்த்திருந்தேன்.[2] ஆயினும் என் வாசிப்பில் எனக்கே திருப்தி ஏற்படாததால் இக்கல்வெட்டை நேரில் கண்டு ஆய்வுசெய்யவேண்டும் என்று *1991-95* ஆண்டுகளில் பலமுறை மற்ற ஆய்வாளர்களுடன் அங்குச் சென்று தேடிய பின்பும் அது கிடைக்கவில்லை. ஏற்கனவே மிகவும் தேய்ந்திருந்த அக்கல்வெட்டு கடந்த அறுபது ஆண்டுகளில் முற்றிலுமாக அழிந்துவிட்டது போலும். இத்தகைய அனுபவம் மேலும் பல இடங்களில் எனக்கு ஏற்பட்டிருப்பினும் என் சொந்த ஊராகிய திருச்சிராப்பள்ளியில் இருந்த ஒரே தமிழ்-பிராமிக் கல்வெட்டைக் காணக் கொடுத்துவைக்கவில்லை என்பது தீராக் குறையாகவே இருக்கும்.

காணாமற்போன கல்வெட்டைத் தேடிப்போன இடத்தில் புதிதாக ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டு கிடைத்ததும், ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு, சரியாக வாசிக்கப்படாமலிருந்த இரு வட்டெழுத்துக் கல்வெட்டுகளை ஆய்வு

செய்யும் வாய்ப்பு கிட்டியதும் ஓரளவு மன ஆறுதலையளித்தன. இவ்வட்டெழுத்துக் கல்வெட்டுகளைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## புதிய கல்வெட்டு

1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டைக்கு ஒரு வல்லுநர்க் குழுவுடன் சென்றிருந்தேன். அக்குழுவில் என்னைத் தவிர மையத் தொல்லெழுத்தில்துறைத் தலைவர் எம்.டி. சம்பத், தமிழ்நாடு தொல்லியல்துறை ஆய்வாளர் என். ஸ்ரீனிவாசன், மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் கல்வெட்டாய்வாளர் மு. நளினி, பொறியாளர் மதகடி தங்கவேலு, நாணயவியல் ஆய்வாளர் அளக்குடி ஆறுமுக சீதாராமன் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

காணாமற்போன கல்வெட்டைத் தேடிக் களைத்துப்போன எங்கள் குழுவினர் சற்று ஓய்வெடுத்துக்கொண்டிருந்த நேரத்தில், நெடிய பாறைச் சுவரின் மீது சாய்ந்தவண்ணம் காவிரியாற்றைப் பார்த்துக்கொண்டிருந்த நளினி சற்றே திரும்பிப் பார்த்து, 'இதோ இங்கு ஒரு கல்வெட்டு இருக்கிறதே' என்று கூவினார். காணாமற்போன கல்வெட்டாக இருக்குமோ என்று ஆவலுடன் அனைவரும் அங்குச் சென்று உற்றுநோக்கினோம். ஆனால் அது இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஒரு புதிய வட்டெழுத்துக் கல்வெட்டாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தோம். கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.[3]

அகரம் குசலன்



எழுத்தமைதியின் அடிப்படையில் இக்கல்வெட்டின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம் என்று

கொள்ளலாம். இரு சொற்களின் இறுதி மெய்களிலும் புள்ளிகள் இடப்பட்டுள்ளன. இப்புள்ளிகள் மெய்களுக்கு இடதுபுறத்தில் இடப் பட்டுள்ளமை கவனித்தற்குரியது.

அகரம்: அந்தணர் குடியிருப்பு. இச்சொல் 'அக்ரஹாரம்' என்ற வடமொழிச் சொல்லின் மரூஉ என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆயினும் இது தமிழ்ச் சொல்லான நகர் > நகரம் என்பதன் திரிபாகவும் இருக்கலாம்.

குசலன்: ஒருவனின் பெயர். வடமொழியில் இச்சொல்லுக்கு வல்லுநர் என்று பொருள். திவாகர நிகண்டுவில் இதற்கு 'மிக வல்லோர்' என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது.

## இரு கல்வெட்டுகளின் மீளாய்வு


குன்றின் வடபுறமாக உள்ள நீண்ட பிளவின் நடைபாதையில் இரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு கல்வெட்டு அடுத்தடுத்து இருமுறையும், மற்றொரு கல்வெட்டு இடைவெளி விட்டுவிட்டு நான்குமுறையும் பொறிக்கப்பட்டுள்ளன. இப்போதும்கூட மலைக்கோயில்களின் படிக்கட்டுகளில் கொடையாளிகள் தம் பெயர்களைப் பல இடங்களில் வெட்டுவித்துள்ளதைக் காண்கிறோம். இங்கும் சமணர் குகைக்குச் செல்லும் நடைபாதையில், அம்மதத்தினர் தம் பெயர்களைப் பல இடங்களில் மீண்டும் மீண்டும் பொறித்தனர் என்று கொள்ளலாம். இதிலிருந்து தமிழ்-பிராமி காலத்திலிருந்து பல்லவர் ஆட்சித் தொடக்கம் (கி.மு. 300 - கி.பி. 700) வரை இங்குச் சமணப்பள்ளி நிலைபெற்றிருந்தது என்று தெரிந்துகொள்ளமுடிகிறது.

### கல்வெட்டு எண் — 1

இக்கல்வெட்டு ஒருமுறை ஒரே வரியிலும், மற்றொரு முறை இரு வரிகளிலுமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இதை மையத் தொல்லெழுத்தியல் துறையினர் சேனதண்டன் என்று வாசித்துள்ளனர்.[4] பேராசிரியர் டி.வி. மகாலிங்கம் இக்கல்வெட்டை செனாதண்டன், சேனதண்டன், சென்தண்டன் என்று பலவிதமாக வாசித்துள்ளார்.[5] கல்வெட்டின் சரியான வாசகம் வருமாறு.

இரண்டாவது எழுத்தை 'ந்'கரமாகவும் கடைசி எழுத்தை 'ன்' கரமாகவும் வாசிக்கவேண்டும். மூன்று மெய்யெழுத்துக்களின் மீதும் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேலும் 'செ' என்ற உயிர்மெய் மீதும் குறிலைக் குறிக்கும் வகையில் புள்ளியிடப்பட்டுள்ளது. மெய் எழுத்துக்களுக்கும் எகர, ஒகரக் குறில்களுக்கும் புள்ளியிடவேண்டும் என்ற தொல்காப்பிய சூத்திரத்திற்கு இக்கல்வெட்டு விளக்கமளிக்கிறது. செந்தண்டன் என்பது ஒரு பெயராகும்.

எழுத்தமைதியிலிருந்து இக்கல்வெட்டின் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்று கணிக்கலாம்.



செந்தண்டன்

கல்வெட்டு எண் – 2

நான்கு இடங்களில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டை, மையத் தொல்லெழுத்தியல் துறையினர் வடமொழியில், பல்லவ கிரந்த எழுத்துக்களில் உள்ளது என்றும், இது பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் விருதாக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.[6] ஆயினும் அவர்கள் இக்கல்வெட்டை கம்ட்டுஹ" என்று வாசித்திருப்பது வடமொழியில் இல்லாத சொல்லாக உள்ளது. இக்கல்வெட்டை மீளாய்வு செய்த டி.வி. மகாலிங்கம் இது தமிழில், தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது என்று கருத்துத்

தெரிவித்து, இதைக் கட்டுணா என்று வாசித்துள்ளார்.[7] அவரும் இது மகேந்திரவர்மனின் விருதுகளில் ஒன்றாக இருக்கலாம் என்று கூறுகிறார். ஆனால் இந்த வாசிப்பும் பொருள் சிறக்க அமையவில்லை. மேலும் மகேந்திரவர்மனுக்கு இதுபோன்ற விருது இருந்ததாக வேறு கல்வெட்டுகளிலும் சான்றுகள் இல்லை. அண்மைக்காலத்தில் பல பண்டைய வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு அவற்றை வாசிக்கும் முறையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதுவும் தமிழில் ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டாகும். இதன் திருந்திய வாசகம் வருமாறு:

**கட்டாணை**



முதல் எழுத்தில் பல்லவ கிரந்தத்தின் தாக்கம் தென்படுகிறது. இரண்டாவது எழுத்தின் வலப்புறம் புள்ளியிடப்பட்டுள்ளது. மூன்றாம் எழுத்தில் ‘ஆ’காரக் குறியீடு கீழே சேர்க்கப்பட்டுள்ளது. இறுதி எழுத்து வட்டெழுத்து ‘ணை’ ஆகும். எழுத்தமைதியின் அடிப்படையில் இக்கல்வெட்டு கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தது என்று கணிக்கலாம். ‘கட்டாணை’ என்பது ஒரு பெயராகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் தருமபுரி

மாவட்டத்தில் கட்டாணை பருமன் என்ற அரசனைக் குறிப்பிடும் பல நடுகல் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.[8] அக்கல்வெட்டுகளின் எழுத்தமைதி யிலிருந்து அவை கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டைக் கல்வெட்டுகளில் காணப்படும் கட்டாணை என்ற பெயர் பழந்தமிழகத்தில் வழக்கிலிருந்தது என்ற உண்மையை தருமபுரி நடுகல் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.

**நன்றி:** ஒளிப்படங்கள் மையத் தொல்லெழுத்தியல் துறையினரால் எடுக்கப்பட்டவை. படம் - *1* நேரடியாகவும், படங்கள் 2-3 மசிப்படிகளிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.


## குறிப்புகள்

1. ARE 139: 1937-38.
2. Iravatham Mahadevan, 'Corpus of the Tamil Brahmi Inscriptions', Seminar on Inscriptions, Madras, 1966, No. 68.
3. இக்கல்வெட்டு மிகவும் தேய்ந்தநிலையில் உள்ளது. இதன் மசிப்படத்தை முயன்றும் எடுக்க இயலவில்லை. கல்வெட்டின் மீது சாக் (Chalk) தூளைத் தூவி நேரடியாக எடுத்த ஒளிப்படம் இங்குத் தரப்பட்டுள்ளது.
4. ARE 136: 1937-38.
5. T.V. Mahalingam, Early South Indian Palaeography, Madras, 1967, pp. 306-307.
6. ARE 134, 137 & 140: 1937-38.
7. T.V. Mahalingam, Op.Cit., pp. 301-05.
8. Natana Kasinathan, 'Kattanai Parumar', South Indian Studies I, Madras, 1978. pp. 82-85.

# 3. வீரசிகாமணிக் குடைவரையும் கல்வெட்டுகளும்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

கல்லிடைக்குறிச்சியிலிருந்து சேந்தமரத்திற்குத் திருமலைப்புரம் வழியாக நல்ல தார்ச்சாலை உள்ளது. சங்கரன்கோயிலிலிருந்தும் சேந்தமரம் வரலாம். இங்கிருந்து பாம்புக்கோயில் செல்லும் சாலையில் வீரசிகாமணி மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஊரின் வெளிப்புறத்தேயுள்ள குன்றின் அடிவாரத்தில் கிழக்கு நோக்கிய குடைவரையாகக் கயிலாசநாதர் கோயில் அமைந்துள்ளது. பின்னாளில் குடைவரையின் முன்னால் குன்றையொட்டி முப்புறத்தும் மதிலெழுப்பிக் கிழக்கில் வாயிலமைத்தவர்கள், இந்த மதில் சூழ்ந்த பகுதிக்குள், குடைவரையின் நடு அங்கணத்திற்கு நேராக உயரமான மேடையொன்று அமைத்து அதன் மீது நந்தியொன்றையும் குடைவரைப் பார்வையில் இருத்தியுள்ளனர். இந்த மேடைக்குப் படிகளும் உள்ளன.



குடைவரையின் முன்தோற்றம்

## குடைவரை

குடைவரை வெட்டப்பட்டுள்ள இடத்தில் குன்றின் சரிவு தென்புறத்தே நன்கு வெளிவாங்கியும், வடபுறத்தே மேற்பாதியில் வெளிவாங்கியும், கீழ்ப்பாதியில் சற்று உள்ளடங்கியும் அமைந்துள்ளது.

நிலமட்டத்திலிருந்து குடைவரை முகப்பின் நடுப்பகுதியை அடையுமாறு நான்கு படிகள் வெட்டப்பட்டுள்ளன. இருபுறத்தும் துதிக்கை போல் அமைந்துள்ள பிடிச்சுவர்களைக் கொண்டிருக்கும் இப்படிகளுள் கீழ்ப்படி கனமான சந்திரக்கல்லாக வடிக்கப்பட்டுள்ளது. பிடிச்சுவர்களை அடுத்து இருபுறத்தும் உள்ள பாறைப்பகுதி உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், பாதங்கள் மற்றும் கம்புகளுடன் கூடிய கண்டம், பட்டிகை[1] எனப் பாதபந்தத் தாங்குதளமாய் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 90செ.மீ. பட்டிகையின் மேற்பரப்பே குடைவரை முகப்பிற்கு முன்னுள்ள தரைப் பரப்பாகியுள்ளது. தென்வடலாக 4.94மீ. நீளமும் கிழக்கு மேற்காக 60-64செ.மீ. அகலமும் கொண்டுள்ள இத்தரையின் பரப்பு சீராக உள்ளது. இத்தரையிலிருந்து 13செ.மீ. உயரத்தில் குடைவரையின் முகப்புத் தரை தொடங்குகிறது.

## முகப்பு

கிழக்கு மேற்காக 64செ.மீ. அகலமும் தென்வடலாக 4.94மீ. நீளமும் கொண்டுள்ள முகப்பில் இரண்டு அரைத்தூண்களும் இரண்டு முழுத்தூண்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ளன. இத்தூண்களின் மேல், கீழ்ச் சதுர முகங்களின் அனைத்துப் பக்கங்களிலும் தாமரைப் பதக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் அரைத்தூண்களின் கிழக்கு, மேற்குப் பதக்கங்கள் அரைப் பதக்கங்களாக உள்ளன. முழுத்தூண்களின் பதக்கங்கள் பெரும்பான்மையன சிதைந்துள்ளன. வடக்கு அரைத்தூண் கட்டுப்பகுதியின் தென்முகத்தில் பாண்டியர் கல்வெட்டொன்று சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

இத்தூண்களின் மேற்சதுரங்களின் மேலமர்ந்துள்ள போதிகைகள் தரங்கக் கைகளால் உத்திரம் தாங்குகின்றன. தரங்கத்தின் நடுவே பட்டை வெட்டப்பட்டுள்ளது. உத்திரத்தின் மேல் பிதுக்கமாய் ஓடும் வாஜனத்தை அடுத்துக் கூரையமைந்துள்ளது. இதன் முன்நீட்டல் வடிவமைக்கப்படாத கபோதமாகக் காட்டப்பட்டுள்ளது.

அரைத்தூண்களையொட்டிக் குன்றின் சரிவிற்கேற்ப அமைந்துள்ள பக்கச்சுவர்கள் இரண்டுமே மேலிருந்து கீழே அகலப்படுகின்றன. வடசுவரின் கீழ்ப்பகுதியில் சரிவு உள்ளடங்கியிருப்பதால், மேற்பகுதியை விட இச்சுவரின் கீழ்ப்பகுதி அகலக் குறைவாக உள்ளது.

## முகமண்டபம்

முகப்பை அடுத்துள்ள முகமண்டபம் தென்வடலாக 5.52மீ. நீளமும் கிழக்கு மேற்காக 3.68மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. முகப்புத் தரையின் தொடர்ச்சியாக அமைந்துள்ள இம்மண்டபத்தின் தரை நன்கு சீரமைக்கப் பட்டுள்ளது. முகமண்பத்தின் கூரையையொட்டி நாற்புறமும் காட்டப்பட்டுள்ள வாஜனம் பல இடங்களில் சிதைக்கப்பட்டுள்ளது. தரையைப் போலவே நன்கு சீரமைக்கப்பட்டிருக்கும் கூரையின் சில பகுதிகளும் சிதைவுக்கு ஆளாகியுள்ளன.



கருவறை

முகமண்டபத் தென்சுவரிலும், வடசுவரிலும் நடுப்பகுதியில் கோட்டங்கள் அகழப்பட்டுள்ளன. 91செ.மீ. அகலமும் 1.81மீ. உயரமும் கொண்டமைந்துள்ள தென்சுவர்க் கோட்டத்தில் பேரழிவிற்கு ஆளாகியிருக்கும் முனிவர் ஒருவரின் சிற்பம் காணப்படுகிறது. இவருக்குக் கோயிலார் தருமர் என்று பெயர் சூட்டியுள்ளனர். தென்சுவரின் இரு மூலைகளிலும் நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. உறுப்பு வேறுபாடும் போதிகைகளும் அற்ற இவற்றின் மீது உத்திரமும், அதன் பிதுக்கமாக மேலே வாஜனமும் தென்சுவர் முழுவதற்குமாய் நீளுகின்றன.

79செ.மீ. அகலமும், 1.78மீ. உயரமும் கொண்டமைந்துள்ள வடசுவர்க் கோட்டத்தில் சிதைந்தநிலையில் மற்றொரு சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்ப வடிவத்தைக் கோயிலார் சகாதேவர் என்கிறார்கள். வடசுவரின் மூலைகளிலும் தென்சுவர் போலவே இரண்டு நான்முக அரைத்தூண்களும் அவற்றின் மீது சுவர் முழுவதற்கும் ஓடுமாறு வெட்டப்பட்டுள்ள உத்திரமும் வாஜனமும் காணப்படுகின்றன.

முகமண்டபத்திற்குள் பிதுக்கமாக இருக்குமாறு போலக் கருவறை குடையப்பட்டிருப்பதால், முகமண்டபத்தின் பின்சுவர், கருவறையின் இருபுறத்தும் 84செ.மீ. அகலத்திற்குச் சிறுத்துக் காணப்படுகிறது. வடபுறத்தே 71செ.மீ. அகலத்தில் 1.41மீ. உயரத்தில் அகழப்பட்டுள்ள கோட்டமொன்று காணப்படுகிறது. இதில் செதுக்கப்பட்டுள்ள சிற்பமும் சிதைவுக்காளாகியுள்ளது. இவ்வடிவத்தைக் கோயிலார் நகுலர் என்கின்றனர்.

## கருவறை

4.10மீ. அகலமுள்ள கருவறை முன்சுவரின் நடுவில், 1.5மீ. உயரமும் 68செ.மீ. அகலமும் கொண்டுள்ள வாயில் குடையப்பட்டுள்ளது. இதன் நிலைக்கால்களாக இரண்டு அரைத்தூண்களும், கருவறை முன்சுவர், பக்கச் சுவர்களாய்த் திரும்புமிடத்துப் பக்கத்திற்கொன்றாக இரு அரைத்தூண்களும் செதுக்கப்பட்டுள்ளன. இப்பக்கச்சுவர் தூண்களோடு நின்றுவிடுவது குறிப்பிடத் தக்கது. இவ்வரைத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் பொளியப்பட்டுள்ளன. மேற்சதுரங்களின் மீதமர்ந்துள்ள போதிகைகளின் கீழ்க்கைகள் விரிகோணத்தில் திரும்பி மேற்கைகளாகி உத்திரம் தாங்குகின்றன. இவற்றின் கீழ்க்கைகள் மேற்கைகளைவிட அளவில் பாதிக்கும் குறைவாகவே உள்ளன. நிலைத் தூண்களின் போதிகைகள் ஒரு கை மட்டும் கொண்டிருக்கத் திருப்பத் தூண்கள் முப்புறமும் கைகள் நீட்டி உத்திரம் தாங்குகின்றன. உத்திரம் திருப்பச் சுவருடன் நின்றுவிட, இதன்மேல் பிதுக்கமாக அமைந்துள்ள வாஜனம் கருவறை வெளிச்சுவர்களின் மீது ஓடி முகமண்டபப் பின்சுவர்களிலும் தொடர்கிறது. இவ்வாஜனம் கருவறை வாயிலுக்கு மேல் முழுவதுமாய்ச் சிதைந்துள்ளது.

வாயிலின் இருபுறத்தும் உள்ள அரைத்தூண்களை அடுத்துள்ள சுவர்ப்பகுதி அதிக ஆழமற்ற கோட்டங்களாக ஒருமீட்டர் அகலத்திற்கு அகழப்பட்டுள்ளது. இக்கோட்டங்களுள், தென்கோட்டம் 1.70மீ. உயரமும், வடகோட்டம் 1.74மீ. உயரமும் கொண்டுள்ளன. இவற்றில் வாயிற்காவலர்

சிற்பங்கள் பீமர், அருச்சுனர் எனும் பெயர்களோடு சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

கருவறை முன்சுவருக்குக் கீழுள்ள பகுதியில் தாங்குதளம் முயற்சிக்கப் பட்டுள்ளது. இதில் ஜகதி, குமுதம், கண்டம் போன்றதொரு உறுப்பு ஆகியவற்றை மட்டுமே இனங்காணமுடிகிறது. இவையும் வடபுறத்தே உருவாக்கப்பெறவில்லை. கருவறை வாயிலுக்கு முன் ஒரே ஒரு படி அமைக்கப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் நடுவே அமர்த்தப்பட்டுள்ள பிற்கால நந்தி இவ்வாயிலை நோக்கியவாறு உள்ளது. கருவறையின் உள்ளே பாறையில் வெட்டப்பட்ட லிங்கத்திருமேனி, 1.22மீ. பக்கமுள்ள சதுரமான ஆவுடையாரும் உருளையான பாணமுமாய்க் காட்சிதருகிறது. ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளின் தழுவலில் பாதங்கள் கொண்டமைந்த கண்டம், பட்டிகை என்றமைந்த பாதபந்தக் கட்டுடைய ஆவுடையாரின் பட்டிகையை அடுத்து, மேற்பரப்பு சிமெண்ட் பூச்சால் நிரப்பப்பட்டுள்ளது. வடபுறத்தே சிறு கோமுகம். இதன் கீழ் முழுக்கு நீரை வாங்கப் பள்ளமொன்று வெட்டப்பட்டுள்ளது. இம்முழுக்கு நீர் வெளியேறப் பள்ளத்திலிருந்து காலொன்று வெட்டியுள்ளனர். இது கருவறை வாயிலின் வடபுறம் ஓடி, முகமண்டபத்தில் இறங்கி, வடபுற அரைத்தூணருகே முகப்பைக் கடந்து வெளியேறுகிறது. ஆவுடையார் மீது லிங்கபாணத்திற்கு வடபுறத்தே சிறிய அளவிலான பிற்காலத்துக் காளிங்கநர்த்தனச் சிற்பமொன்று சிமெண்ட் வைத்துப் பூசப்பட்டுள்ளது. அத்துடன் விளக்கொன்றும் காணப்படுகிறது. 2மீ. உயரமும், கிழக்கு மேற்காக 2.81மீ. அகலமும், தென்வடலாக 2.86மீ. நீளமும் கொண்டு அமைந்துள்ள கருவறையின் சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன.

## வெளிக்கோட்டங்கள்

குன்றின் சரிவில், குடைவரைக்கு வடக்கிலும் தெற்கிலும் கோட்டங்கள் அகழப்பட்டுள்ளன. 98செ.மீ. அகலமும் 1.21மீ. உயரமும் உள்ள தென்கோட்டத்தில் பிள்ளையாரும், ஏறத்தாழ 90செ.மீ. அகலமும் 1.83மீ. உயரமும் உள்ள வடகோட்டத்தில் முருகனும் செதுக்கப்பட்டுள்ளனர்.

முகப்பு முழுத்தூண்களின் கட்டுப்பகுதிகளின் கிழக்கு முகங்களில் சிறு முக்கோண மாடங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை விளக்குகள் வைப்பதற்காகப் பிற்காலத்தே வெட்டப்பட்டவையாகலாம். வடக்கு முழுத்தூண் போதிகையின் கிழக்கு முகத்தில் ஒரு செவ்வகப் பள்ளம் வெட்டப்பட்டுள்ளது. முகப்பையடுத்த

பக்கச் சுவர்களின் மேற்பகுதிகளிலும் செவ்வகப் பள்ளங்கள் உள்ளன. கருவறை நிலையின் மேற்பகுதியில் முப்புறமும் பள்ளம் வெட்டப்பட்டுள்ளது.

கருவறை உட்புறத்தேயுள்ள கிழக்கு, மேற்குச் சுவர்களிலும் சிறுசிறு பள்ளங்கள் அகழப்பட்டுள்ளன. கருவறை வாயில் ஒட்டிய அரைத்தூண்களிலும் சிறுசிறு மாடங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை விளக்குகள் வைப்பதற்காக உருவாக்கப்பட்டவையாகலாம்.

## சிற்பங்கள்

### பிள்ளையார்

குடைவரைக்கு வெளியே, குன்றின் சரிவிலுள்ள வடபுறக் கோட்டத்தில் பிள்ளையார் காட்சிதருகிறார். இடக் கைகளுள், பின் கையில் இருக்கும் பொருளை உடைந்த தந்தமாக ஊகிக்கலாம். முன் கை தொடை மீது இருத்தப் பட்டுள்ளது. வலக் கைகளும் வலக் காலின் பெரும்பகுதியும் சிதைந்துள்ளன. முப்புரிநூலும், இன்னதென அடையாளம் காணமுடியாத மகுடமும் அணிந்துள்ள இவரது துதிக்கை இடம்புரியாகவோ, வலம்புரியாகவோ அமையாது நேராகக் கீழ் நோக்கித் தொங்குகிறது. வலத் தந்தமற்ற இவரின் உதரபந்தம் பட்டையாகவும், கனமாகவும் உள்ளது. இட மேற்கையில் கங்கணமும் பட்டை வளைகளும் உள்ளன. இவரது கால்களுக்கு முன்னால் சிறு தளம் போன்ற அமைப்புக் காட்டப்பட்டுள்ளது.

### முருகர்

சரிவின் இடப்புறக் கோட்டத்தில் இடம்பெற்றுள்ள முருகன் நின்றகோலத்தில் காட்சிதருகிறார். முன் கைகள் இரண்டும் இடுப்பில் ஊன்றியிருக்க இடப் பின் கையில் சிதைந்தநிலையில் அடையாளம் காணமுடியாத பொருளொன்று தெரிகிறது. வலப் பின் கை சிதைந்துள்ளது. இவரது அரையிலிருக்கும் ஆடை கணுக்கால் வரை காட்டப்பட்டுள்ளது. பக்கப்பகுதிகளில் தொங்கும் ஆடை முடிச்சுகள் கால்களையொட்டிக் காட்டப்பட்டுள்ளன. பாதங்களை இருத்தத் தள அமைப்பொன்றும் வெட்டப்பட்டுள்ளது.

## முகமண்டபச் சிற்பங்கள்

### தென்கோட்டச் சிற்பம்

பெருமளவு சிதைந்து காணப்படும் இச்சிற்பத்தின் முகப்பகுதி மட்டுமே காணுமாறு உள்ளது. சடைகளை நன்கு முடிந்து மகுடமாக்கித் தாடியும், தொங்கு மீசையும், நீள் செவிகளுமாய்க் காணப்படும் இவரது மகுட முகப்புப்

பட்டையும் அதில் காணப்படும் பூப்பதக்கங்களும் இவரை பெருமைக்குரியவராகக் காட்டுகின்றன. கணுக்கால் வரை தொங்கும் ஆடையணிந்துள்ள இவரது பாதங்களும் கைகளும் சிதைந்துள்ளன.

### வடகோட்டச் சிற்பம்

இடக் கையை இடுப்பில் ஊன்றிச் சடைமகுடமும் தாடியுமாய்க் காணப்படும் இச்சிற்ப வடிவமும் பெரிதும் சிதைந்துள்ளது. இதன் கணுக்கால் வரை இடுப்பாடை தழைந்துள்ளது.

### மேற்குக் கோட்டச் சிற்பம்

கருவறை நோக்கி நடப்பது போல் உடலைச் சற்றுச் சாய்த்து முன்னோக்கிய நிலையில் நிற்கும் இச்சிற்பம் முனிவர் ஒருவரைப் படம் பிடிக்குமாறு போல வடிவமைக்கப்பட்டுள்ளது. இவரது முகமும் மார்புப் பகுதியும் எதையோ ஏந்தியிருப்பது போல அமைக்கப்பட்டுள்ள வலக்கையும் சிதைந்துள்ளன. இடக் கை ஊருஅஸ்தமாகத் தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. கீளாடை அணிந்துள்ள இவரது தொடைப் பகுதிகளைப் பாம்பொன்று சுற்றியுள்ளது.

### கருவறை முன்சுவர்க் கோட்டச் சிற்பங்கள்

தென்கோட்டத்திலிருப்பவர் வாயிற்காவலர். உருள்பெருந்தடியைத் தம் வலக் கையால் பிடித்தபடி, கருவறைக்காய் உடலைச் சற்றே திருப்பியுள்ள இவரது பாதங்களுக்கும் தடிக்குமாய்த் தனித் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இவரது இடக் கை, தடி பிடித்திருக்கும் வலப் புறங்கை மீதமர்ந்த நிலையில் கீழே தாழவிடப்பட்டுள்ளது. கங்கணங்களும், ருத்திராக்க வளைகளும், பனையோலைக் குண்டலங்களும்[2], கழுத்தணிகளும் கொண்டுள்ள இவரது மீசை நன்கு முறுக்கிவிடப்பட்டுள்ளது. இவரது முப்புரிநூல் வழக்கமான முறையில் அமைந்துள்ளது. சடைமகுடத்தை மீறிய முடிக்கற்றைகள் இருபுறத்தும் பெரும் பாரமாய்த் தொங்குகின்றன. தடியின் மீது பாம்பொன்று சுற்றியுள்ளது. அரையில் சுற்றியுள்ள சிற்றாடை மீது முன்புறத்தே வளையத் தொங்கலாய்த் துணிச் சுருளொன்று மடித்துக்கட்டப்பட்டுள்ளது. முகம் திருத்தமாகவும் அழகுறவும் அமைக்கப்பட்டுள்ளது. கழுத்தின் இருபுறமும் சூல இலைகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் தென்புற இலை சிதைக்கப்பட்டுள்ளது.

வடகோட்டத்தில் இருப்பவரின்[3] வலக் கை கருவறை நோக்கிய போற்றிக் கையாக அமைந்துள்ளது. இடக் கை ஊருஅஸ்தமாய் ஆடை முடிச்சுகளின் மேல் அமர்ந்துள்ளது. மேற்கைகளில் கங்கணங்களும்,

கீழ்க்கைகளில் பெருவளைகளும் அணிந்துள்ள இவரது இடச்செவியில் பேரளவிலான பனையோலைக் குண்டலமிருக்க, நீள் செவியாய்த் தொங்கும் வலச் செவியின் மடலில் மேற்புறத்தே பூட்டுக் குண்டலம் போன்றதொரு செவியணி உள்ளது. கழுத்தில் அட்டிகை; தடிமனான முப்புரிநூல் இடத்தோளிலிருந்து கீழிறங்கி, மார்பின் குறுக்காகப் பரவி, வல மேற்கை மீதேறித் தோளுக்குப் பின் மறைகிறது. கணுக்கால் வரையிலான கனத்த கீழ்ப்பாய்ச்சாடை இடை முடிச்சுகளோடு உடலின் கீழ்ப்பகுதியை மறைத்துள்ளது. இவ்வாடையமைப்பு பாண்டியர் குடைவரைகளில் காணப்படும் திருமால் சிற்பங்களின் ஆடையமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இடுப்பின் வலப்பகுதியை இலேசாக உயர்த்தி, இடத் தோளை நிமிர்த்தி, முகத்தை வலச் சாய்வில் காட்டி நிற்கும் இவரது கோலம் மிகுந்த அழகுடன் திகழ்கிறது. தலையின் சடைபார உச்சியில் நன்குயர்ந்த முடிச்சு, மகுடம் போலக் காட்டப்பட்டுள்ளது. அதற்கொரு அழகான முகப்பும் அணிவிக்கப்பட்டுள்ளது. ஆடையின் முன்வளையத் தொங்கலும், இடப்புறத்தே தொங்கும் பக்க முடிச்சுகளும் அழகுறக் காட்டப்பட்டுள்ளன.

## கல்வெட்டு

குடைவரை முகப்பிலுள்ள வடக்கு அரைத்தூண் கட்டுப்பகுதியின் தென்முகத்தில் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளது. சுந்தரசோழபாண்டியதேவரின் எட்டாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டால் இக்கோயிலுக்களிக்கப்பட்ட விளக்குக் கொடை பற்றி அறியமுடிகிறது.[4]

## குடைவரையின் காலம்

குடைவரையின் தோற்றம் பற்றிய கல்வெட்டெதுவும் இல்லாத நிலையில் அதன் அமைப்புமுறை, சிற்பங்களின் தோற்ற அமைவு கொண்டே காலத்தை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. அவ்வகையில் இக்குடைவரையின் காலத்தை ஒப்பீட்டு முறையில் எட்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

## குகைத்தளங்கள்

இக்குடைவரை அமைந்திருக்கும் குன்றுத்தொடரின் மேலேறிச் சென்றால் மேற்குப் பார்த்த நிலையில் பல இயற்கையான குகைத்தளங்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. குடைவரையை அடுத்த தென் சரிவிலிருந்து மேலேறும்போது பார்வையில் படும் முதல் குகைத்தளத்தில் ஒன்பது படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஐந்து படுக்கைகள்

தெற்கு வடக்காகவும், நான்கு படுக்கைகள் கிழக்கு மேற்காகவும் வெட்டப்பட்டுள்ளன. இவ்விரு படுக்கைப் பகுதிகளையும் 45செ.மீ. அகலமுள்ள தளப்பகுதி பிரிக்கிறது.

அனைத்துப் படுக்கைகளின் தலைப்பகுதியிலும் தலையணை போன்றதொரு மேடு 20செ.மீ. அகலத்திற்கு வெட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு படுக்கையும் விளிம்புகளில் பட்டை தட்டப்பட்டு, அடுத்த படுக்கையிலிருந்து வேறுபடுத்தப்பட்டுள்ளது. படுக்கைகளின் அகலம் 42செ.மீ.இல் இருந்து 47செ.மீ. வரை அமைந்துள்ளது. இவற்றின் நீளம் 1.74மீ. இப்படுக்கைகளின் மீது பின்னாள் பயணிகள் தங்கள் திருப்பெயர்களைப் பொறித்துள்ளனர். உள்ளூர்வாசிகள் தங்கள் பங்கிற்குத் தாயப் பலகை செதுக்கி மகிழ்ந்துள்ளனர். இந்தப் படுக்கைகளுக்கு முன்னுள்ள தளப்பகுதியில் வெட்டப்பட்டிருக்கும் கிரந்தக் கல்வெட்டு, இதுபோன்ற செதுக்கல்களால் பெரிதும் சிதைக்கப்பட்ட நிலையில், பொருள்கொள்ளமுடியாதபடி சில எழுத்துக்களை மட்டுமே இனங்காட்டுவதாய் அமைந்துள்ளது. இக்குகைத்தளத்தின் மேற்பாறை முகப்பில் ஜோதிமலை என்று எழுதியுள்ளனர்.



குகைத்தளப் படுக்கைகள்

இரண்டாம், மூன்றாம் குகைத்தளங்கள் பேரளவினவாக இருந்தபோதும் இங்குப் படுக்கைகள் இல்லை. நான்காம் குகைத்தளம் மிகப் பெரியது. பாறைப் பிளவொன்றால் இது இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. வலப்புறத் தளத்தில், அகழ்ந்து சமன் செய்த சதுரப் பகுதியில் வட்டம் செதுக்கி, அதில் தாமரை மலரை வடித்துள்ளனர். இம்மலரின் நடுவில் வடக்கு நோக்கிய நிலையில் இரண்டு பாதங்கள் காட்டப்பட்டுள்ளன. இப்பாதத் தாமரையை அடுத்துள்ள தள மேற்கூரையின் முகப்பில் பாறையைச் சமன் செய்து தமிழ்க் கல்வெட்டொன்று பொறிக்கப்பட்டுள்ளது. நான்கு வரிகளில் அமைந்துள்ள இக்கல்வெட்டு, இப்பாதங்கள் ஸ்ரீசகசானந்தருடையவை என்பதையும், இவற்றை இங்குச் செதுக்குவித்தவர் அவையம்புக்கான் என்பதையும் உணர்த்துகிறது. கல்வெட்டின் இறுதியில் 'ஓம் பாபஹர' என்ற ஓம்படைக் கிளவி உள்ளது.[5]

ஐந்தாம் குகைத்தளம் ஐந்து படுக்கைகளுடன் உள்ளது. கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டுள்ள இப்படுக்கைகளும் ஒன்றிலிருந்து மற்றொன்று விளிம்புப் பட்டைகளால் வேறுபடுத்தப்பட்டிருப்பதுடன் தலையணை அமைப்பும் கொண்டுள்ளன.

## ஏற்புக்கோடல்

வீரசிகாமணிக் குடைவரை ஆய்வுக்குச் சென்றிருந்தபோது களைப்பாறவும் பசியாறவும் பேரன்போடு உதவிய சேந்தமரம் திரு. அகஸ்டின் குடும்பத்தார்க்கும் மலை மேலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுக்க உதவிய மகிழ்வுந்து ஓட்டுநர் திரு. சண்முகத்திற்கும் இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.


## குறிப்புகள்

1. பட்டிகைக்கு மேல் வரும் கம்பு இங்கு இடம்பெறவில்லை.
2. வலக் குண்டலம் சிதைந்துள்ளது.
3. இதே தோற்றத்தில் அமைந்த வாயிற்காவலர் சிற்பங்களைப் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குன்றாண்டார் கோயில் குடைவரையிலும், திருமெய்யம் சிவன் குடைவரையிலும் காணலாம்.
4. ARE 40: 1908. இக்கல்வெட்டு களஆய்வின்போது படிக்கப்பட்டது.
5. ARE 42: 1908. இக்கல்வெட்டு களஆய்வின்போது படிக்கப்பட்டது.

# 4. கேள்விக்குறியாக நிற்கும் நம் கடந்த காலத்தின் எதிர்காலம்


தேவமணி ரஃபேல்

ஒரு காலத்தில், உலக அரங்கில் கூட ஒரு தாக்கம் ஏற்படுத்தும் அளவுக்குக் கொடிகட்டிப் பறந்த தமிழ்ப் பேரரசுகளின் தலைநகரங்கள் எல்லாம் இப்போது இல்லை. அவையெல்லாமே அழிந்துபோய்விட்டன. பேராற்றலும் பெருஞ்செல்வமும் கொண்டு செருக்குடன் வாழ்ந்த சமுதாயங்கள் இருந்த இடம் கூட இன்று தெரியவில்லை. ஆயினும் மொகஞ்சொதாரோவில் தொடங்கி, கங்கை கொண்ட சோழபுரத்தின் மாளிகை மேடு வரை செய்யப்பட்ட அகழ்வாய்வுகளின் வழியே, நம் முன்னோரின் சிறப்பு மிக்க நாகரிகச் சுவடுகள் சற்றுத் தெரியவருகின்றன. கோவிலையே சுற்றியிருந்த அவர்களுடைய வாழ்வு



சிமெண்ட் பூச்சால் பாதிக்கப்பெற்ற கல்வெட்டு

மகத்தானது. வானுயர்ந்த கட்டடங்கள் எழுப்பும் கலை, உள்ளம் கவரும் சிற்பம், உயிர் ஓவியம், வயப்படுத்தும் கூத்து, உயிர் காக்கும் மருத்துவம், உணவளிக்கும் வேளாண்மை, திரை கடலிலும் தவழ்ந்த வணிகம், வினை முடிக்கும் போர்த்தொழில், நடுக்கடலிலும் நாவாய் செலுத்தும் ஆற்றல், சிலந்தி வலையினும் மெல்லியதாய்த் துணி நெய்யும் திறமை முதலிய வற்றிலெல்லாம் வல்லுநர்களாக வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தின் அறிவாற்றலும், அறிவியல் சிந்தனையும், இறையுணர்வும் பெருமைக்குரியவை. இக்கலைகளைப் போற்றி வளர்த்தவை கோவில்கள்தான் என்பதை ஆய்வுகளும், கோவில்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் எஞ்சியிருக்கும் கல்வெட்டுகளும் காட்டுகின்றன.




கல்வெட்டை மறைக்கும் கையெழுத்து வெறி

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஒரு முதுமொழியெனின் கோவில்கள் இல்லாத ஊர்களே அப்போது இருந்திருக்க முடியாது. ஆனால் இன்றோ அவையெல்லாம் பழங்கதைகளாகிவிட்டன. இருப்பவை சில கோவில்களே. இந்தச் சில கோவில்கள் கலையின் கருவூலங்களாக, பழந்தமிழரின் வரலாற்றை வெளிக்கொணரும் ஆற்றல்

பெற்றவையாக இருக்கின்றன. மிகவும் மெல்லிய இழையாக இருக்கும் இந்த வரலாற்றுத் தொடர்புகள் அறுந்துவிடும் நிலைக்கு, இப்போது தள்ளப்பட்டுள்ளன.

இந்நிலைக்கான காரணங்கள் பல. அவற்றுள் முதன்மையானது நம்மைப் பீடித்திருக்கும் சிமெந்து (சிமெண்ட்) கலாச்சாரம் ஆகும். இற்றை நாள் இறையுணர்வு கொண்டோரின் அதீத இறையுணர்வுகளால் திருப்பணி செய்யப்படும் கோவில்கள், இந்த சிமெந்து கலாச்சாரத்திற்கு உள்ளாகின்றன. அரிய வரலாற்றுப் பதிவேடுகளான கல்வெட்டுகள் இடம்பெயர்கின்றன; காணாமல் போகின்றன; அழிக்கப்படுகின்றன. நம் கடந்த காலத்தோடு இருக்கும் இந்த நூலிழைத் தொடர்புகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.



ஓவியத்தில் கிறுக்கல்கள்

திருப்பராய்த்துறை, திருவிசலூர், திருச்சேறை போன்ற கோவில்கள் பலவற்றில் இப்படிப் பலநூறு கல்வெட்டுகள் அழிந்துபோய்விட்டன. திருச்சேறையில் மூன்றே கல்வெட்டுகள் எஞ்சியுள்ளன. அவையும் இப்போது கால்மிதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு வரலாற்று நூல்நிலையத்தை, அதில் உள்ள நூல்களை, உலகம் வாசித்துச் செய்திகளை அறியுமுன், தீவைத்துக் கொளுத்துவதற்கு நிகரானது இச்செயல்.

பணம் ஒன்றே முக்கியமானதாகிவிட்ட வாழ்க்கைமுறை. வேறு எதைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்கள். இதனால் அழியும் கோவில்கள் பல. எடுத்துக்காட்டாகச் சில இங்கே காணலாம்.

## மதுரை

மீனாட்சி ஆட்சி செய்யும் நான்மாடக் கூடல்! விண்ணைக் கிழிக்கும் கோபுரங்களும், பரந்த வளாகமும் முழுமை பெற நூற்றிருபது ஆண்டுகள் பிடித்தன. ஆயினும் கடந்த சில ஆண்டுகளில் இக்கோவில் அடைந்திருக்கும் மாற்றங்கள் கலை ஆர்வலர்களையும், உண்மையான இறையுணர்வு கொண்டோரையும் வேதனைப்படவே செய்யும். திறந்திருக்கும் எந்த வாயில் வழியாக நுழைந்தாலும் நம்மை வரவேற்பவை கடைகள்தான். வெளியில், சில அடிகள் தொலைவில், கோவிலைச் சுற்றியிருக்கும் தெருக்களில் அத்தனை கடைகள் இருக்கும் போது, கோவிலின் உள்ளே, அதன் கலை அழகை மறைத்துக்கொண்டு, சோப்பும், சீப்பும், முகப்பொடியும் விற்கும் கடைகள் தேவைதானா?

சரி, தூண்களையும் அதன் கலைப்பொருட்களையும் தடுத்துக்கொண்டு கடைகளைத்தான் கட்டினார்கள்; அந்தப் பழங்காலச் சிற்பங்களைச் சிதைப்பதற்கு யார் அதிகாரம் கொடுத்தது? கிழக் கோபுரம் வழியே சென்றால் இந்தக் கொடுமைக்குச் சான்றுகளைக் காணலாம். ஒரு கடையின் பின்னால் சென்று பார்த்தால் அந்தக் கடையின் மறைப்புக்கு இடையூறாக இருக்கும் சிற்பத்தின் கை உடைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அந்தக் கடையின் உரிமையாளரால் அந்தச் சிற்பத்தின் ஒரு விரல் நகத்தைக் கூட செதுக்க இயலாது. அத்தனை ஏன்? அவர் வீட்டிலிருக்கும் அம்மியைக் கூட அவரால் சரிவரக் கொத்த இயலுமோ என்னவோ! இப்படிப்பட்டவர்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு, அண்மைக்காலம் வரை வாழ்ந்து கொண்டிருக்கும் கலைப்பொருட்களை அழிப்பது எந்த வகையில் நியாயம்?

இக்கோவிலில் ஆயிரங்கால் மண்டபம் என்ற ஒன்று இருக்கிறது. இங்குள்ள 985 தூண்கள் ஒரே மாதிரியான யாளியின் உருவத்தை நகல் எடுத்தாற் போன்று செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. ஒரு காலத்தில், இந்தத் தூண்களை எந்தக் கோணத்திலிருந்து நோக்கினாலும் ஒரு வரிசை தெரிவதைக் கண்டு மகிழமுடிந்தது. இப்போது இந்தத் தூண்களிடையே தடுப்புகள் அமைத்து ஓர் அருங்காட்சிச்சாலையை உருவாக்கியிருக்கிறது அரசு. ஆயிரங்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபமாக இல்லை. இப்படி அதன் அழகைக் கெடுத்து, அது உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையே சிதைத்தது எந்தக் கலை ஆர்வலரின் அறிவுச் சிதறலோ தெரியவில்லை.

கடைகள் போதாதென்று வளாகத்திலேயே பட்டறைகள் அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இயற்கையாலும், இந்த நாட்டின் மீது ஏவப்பட்ட படையெடுப்புகளாலும் ஏற்பட்ட பாதிப்புகளையும் வென்று, இன்றும் இருக்கும் இக்கோவிலை இந்தப் பட்டறைகள் அழிவுப்பாதையில் அழைத்துச்செல்லத் தொடங்கியுள்ளன.

## இராமேசுவரம்

தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கரையோரம் இராமபிரானால் உருவாக்கப்பட்ட தலம் இது என்று கூறுவார்கள். உலகின் நீண்ட திருச்சுற்றைக் கொண்ட கோவில் இதுவே எனும் பெருமை கொண்ட திருப்பயணத் தலம் இது. கோவிலுக்குள் அடியெடுத்து வைத்ததுமே "வாருங்கள்! வாருங்கள்!" என்று நம்மை அன்புடன் அழைப்பவர்கள் அங்குக் கடை வைத்திருப்பவர்கள் தான். நாளுக்கு நாள் இந்தக் கடைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. வெளியில் கிடைக்காத பொருட்களைக் கூட உள்ளே இருக்கும் கடைகளில் வாங்கிவிடலாம். தங்கமுலாம் பூசப்பட்ட அணிகலன்கள் விற்கும் கடைகளில் கூட்டம் அலைமோதும். அதில் ஆர்வம் இல்லாதவர்களைக் கூட வயப்படுத்தி அழைக்கும் தன்மையுடன் இந்த அங்காடிகள் அலங்கரிக்கப்பட்டிருக்கும். 'இதுதான் இப்போதைய பாணியோ? வாங்கலாமே! ஐயோ போதிய பணம் இல்லையே!" என்றெல்லாம் கோவிலுக்குச் செல்லுவோரைச் சிந்திக்கவைத்து, அவர்தம் இறையுணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் இந்த அங்காடிகள் கோவிலின் அமைப்பையும் அழகையும் கெடுத்து அடியார்களின் மனதையும் கெடுத்துவிடுகின்றன.

அறியாமை, அறிந்தவர்களிடையே மலிந்து கிடக்கும் உதாசீனப் போக்கு இவற்றால் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டிருக்கும் கலைக்கோவில் கள் ஏராளம்.

## புள்ளமங்கை

காவேரி ஆற்றின் ஒரு கிளை நதியான குடமுருட்டி ஆற்றினால் பண்படுத்தப்பட்டு வாழைத்தோட்டங்களும், தென்னந்தோப்புகளும், கழனிகளும் நிறைந்த பசுமை கொஞ்சும் இந்த மருத நிலச் சிற்றூரில் சிற்பக்கலையின் கருவூலமாக ஒரு கலைக்கோவில் போதிய பராமரிப்பின்றி சாகாமல் செத்துக்கொண்டிருக்கிறது. திருவாலந்துறை மகாதேவர் கோவில் என்று முதலாம் பராந்தகர் காலத்திலேயே புகழ் பெற்றிருந்த இந்தக் கலைக்கோவில், கலை வளர்த்த திருக்கோவில்.

இங்குள்ள சிற்பங்கள் கலைத்தாயின் குழந்தைகள். அவற்றைச் சற்று நேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்தாலே போதும், அவை சுவாசிப்பது

போன்றும், நகருவது போன்றும் ஒரு மயக்கத்தைத் தரும். அத்தனை இயற்கையாய் உருவாக்கி நமக்கு விட்டுச்சென்றிருக்கிறார்கள் சோழச் சிற்பிகள். இயற்கையிலேயே அவர்களிடம் நிறைந்திருந்த சிற்பத்திறனோடு கலையுணர்வும், ஆன்ம உந்துதலும் சேர்ந்ததனால் உருவாகிய அற்புதக் கலைப்படைப்புகள் இவை. இக்கோவிலின் கல்வெட்டுகள் அக்காலகட்டத்தின் வரலாற்றுப் புதையல்கள். அந்தநாள் மக்களின் வாழ்க்கை கோவில்களைச் சார்ந்திருந்தது என்பதும் அவர்களின் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுச் செயற்பாடுகள் அத்தனைக்கும் கோவிலே மையமாக இருந்தது என்பதும் மீண்டும் இங்கு வலியுறுத்தப்படுகின்றன.

இந்தக் கலைக்கோவில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கே உரித்தான நோயால் - மன்னிக்க முடியாத புறக்கணிப்பு - பீடிக்கப்பட்டுத் துன்புறுகிறது. இக்கோவில் சிற்பங்களைக் காற்றும், மழையும், வெயிலும், பனியும் அழித்துக்கொண்டிருக்கின்றன. மையக் கோவிலின் அடித்தளம் முழுவதும் ஒரு மூன்றடி ஆழப்பள்ளத்தில் அமைந்திருக்கிறது. மழைக்காலத்தில் நீர் நிறைந்துவிடும் இப்பள்ளம், கோவிலை அழிவுப்பாதையில் வேகமாக அழைத்துச்செல்கின்றது.



பாழாகிக் கிடக்கும் பஞ்சவன்மாதேவி ஈசுவரம்

## பஞ்சவன்மாதேவி ஈசுவரம்

முதலாம் இராசேந்திரசோழதேவரின் கலைச்சிந்தனையிலும் இறையுணர்விலும் உருவாகிய இருபத்தைந்து கோவில்களில் பஞ்சவன் மாதேவி ஈசுவரமும் ஒன்று. தாம் மிகவும் அன்பு கொண்டிருந்த சிற்றன்னை பஞ்சவன்மாதேவி இயற்கை எய்திய போது, அந்தப் பிரிவைத் தாங்கமாட்டாத இந்தப் பேரரசர் அவ்வன்னையின் நினைவாக எழுப்பிய பள்ளிப்படைக் கோவில் இது. அன்பின் சின்னமாக உருவாக்கப்பட்ட இந்தச் சிறிய தாஜ்மஹால் பாதி அழிந்து காணப்படுகிறது. எஞ்சியிருப்பவை மையக் கோவிலும் அதன் சிற்பங்களும்தான். ஒரு காலத்தில், செதுக்கப்பட்ட கற்களால் இழைக்கப்பட்டிருந்த திருச்சுற்று இப்போது ஆடுமாடுகள் மேயும் களமாகி விட்டது. செடிகளும் கொடிகளும் வளர்ந்து, சிறிய காடு போல் தோன்றும் இந்த வளாகத்தில் உள்ள சிற்பங்கள், செடிகளுக்கிடையே இருந்துகொண்டு, அங்குத் தப்பித்தவறிச் செல்வோரை நோக்கிப் புன்முறுவல் பூத்த வண்ணம் நிற்கின்றன. அந்தப் புன்முறுவல்கள் கலை ஆர்வலர்களின் கண்களில் நீரை வரவழைக்கும் தன்மை வாய்ந்தவை.



கல்வெட்டில் எழுத்தழிப்பு

கோவிலின் அடித்தளம் முழுவதும் வரலாற்று ஏடு போல் மிக நீண்ட கல்வெட்டொன்று காணப்படுகிறது. அக்கல்வெட்டிலுள்ள கோவிலின் பெயரைக் கூறும் "பள்ளிப்படை பஞ்சவன்மாதேவி ஈசுவரம்" என்ற சொற்களில், "பள்ளிப்படை" என்ற சொல்லை மாத்திரம் அழிக்க முயன்றிருக்கிறார்கள். வாய்ப்பு இருந்திருந்தால் இந்த வரலாற்று எச்சங்களை, "இதிலே என்ன இருக்கு? எல்லாம் பொய்தானே?" என்று அழித்தாலும் அழித்திருப்பார்கள்.

பழங்கால அரசர்கள் ஒரு கோவிலைக் கட்டத் திட்டமிட்டுச் செயற்பட்ட போது, அக்கோவில் இரந்துண்டுதான் வாழவேண்டும் என்ற ஒரு நிலையில் அதை விட்டுச்சென்றதில்லை. மாறாகப் போதுமான அறக்கட்டளைகள் வழங்கிக் கோவிலில் வழிபாடுகளும் பிற சேவைகளும் செவ்வனே நடைபெறவும் ஏற்பாடுகள் செய்துவிட்டே சென்றார்கள். பஞ்சவன்மாதேவி ஈசுவரம் கோவிலுக்கும் தாராளமாக நிலக்கொடைகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் தமிழ்நாட்டின் பிற கோவில்களின் தலையெழுத்தே போன்று இக்கோவிலிலும் அவை பழங்கதையாகிவிட்டன. இப்போது கோவிலின் மதில் சுவரை ஒரு கரும்புத்தோட்டம் சூழ்ந்துள்ளது. அதன் வேர்கள் அடித்தளத்தை ஊடுருவுகின்றன. கோவிலுக்குச் செல்லும் பாதை கூட பறிக்கப்பட்டுப் பயிரிடப்படுகிறது.

## குடுமியான் மலை

புதுக்கோட்டை மாவட்டத்தில், ஒரு முல்லை நிலப் பரப்பில், திடீரென முளைத்தது போல் எழுந்துள்ள குடுமியான் மலையின் சரிவில் இருக்கின்றது காலத்தை வென்ற குடைவரைக் கோயிலொன்று. இங்கு எழுந்தருளியிருக்கும் திருமூலத்தானத்துப் பெருமானடிகள் என்ன பாவம் செய்தாரோ அவரை வணங்குவதற்குச் செல்பவர்கள் மிகச் சிலரே. இங்குள்ள தமிழிசைக்கு இலக்கணம் கூறும் இசைக்கல்வெட்டுகள் உலகப் புகழ் பெற்றவை.

கோவில் வளாகம் முழுவதுமே தூசி படிந்து, இருள் சூழ்ந்து, களையிழந்து காணப்படுகிறது. வாயிலின் இருபுறமும் இருக்கும் நூற்றுக்கால் மண்டபங்கள் விழுந்துவிடும் நாளை எதிர்நோக்கியிருக்கின்றன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் கூட தமிழ் இனத்தவர் நனிநாகரிகர்களாக வாழ்ந்தார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக்கூறும் வல்லமை பெற்றவை இது போன்ற கோவில்கள். ஆயினும் இத்தனை சிறப்பு வாய்ந்த இக்கோவில்கள் இன்று வௌவால்களின் உறைவிடங்களாக மாறிக்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டு அவ்வூரில் இருப்பவர்கள் கூட வாளாவிருப்பதை யாரிடம் போய்ச்சொல்வது?

உலகம் முழுவதுமே உள்ள அரசுகள் தங்கள் பழங்கால வரலாற்றுச் சின்னங்களைப் பெருமையுடன் பேணிக்காப்பதில் அக்கறையுடன் ஈடுபடும்போது, நம் நாடு போன்ற வறுமைக்கோட்டுக்குக் கீழே அதிகப்படியான மக்கள் வாழும் நாடுகளில், அது இயலாததாகி விடுகிறது. பழமைச் சின்னங்களைப் பராமரிப்பதில் புதிய தொழில் நுட்ப அறிவை மேலைநாடுகள் வளர்த்துக்கொண்டுள்ளன. இந்த அறிவு நமது நாட்டை எட்டியிருந்தாலும் கூட, வறுமையை ஒழிப்பதில் அதிக ஆர்வம் கொண்டுள்ள அரசுகளால் பழம் பெருமையைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை தரமுடிவதில்லை. இதன் பொருட்டுச் சீரழியும் கோவில்கள் எண்ணிலடங்கா.

## தஞ்சாவூர்ப் பெரிய கோவில்

இந்த "உலக மரபுச்சொத்து" இந்திய நடுவண் அரசின் பாதுகாப்பில் இருக்கிறது. இத்தனை நூறு ஆண்டுகளாகப் பல நாடுகளின் படையெடுப்புகளைக் கண்டும் நிமிர்ந்து நிற்கும் இந்தப் பெருங்கோயில் இன்னும் எத்தனை காலம் இப்படித் தலைநிமிர்ந்து நிற்கும் என்று தெரியவில்லை. கிழக்குப்புற அரண்கள் விழும் நிலையில் இருக்கின்றன. அதன் கீழே இருக்கும் அகழி இடிபாடுகளிடையே காணப்படுகிறது. இதனால் வெளியே இருந்து நோக்கும்போது கோவிலே ஒரு பாழடைந்த தோற்றத்தைத் தருகிறது.

இடிபாடுகளைப் பின்புலமாகக் கொண்டு, பேரரசர் இராசராசரின் சிலை ஒன்று நிற்கிறது. இதை உள்ளே வைத்தால் - கோவிலை உருவாக்கியவரின் சிலையை உள்ளே வைத்தால் - கோவிலின் பழமைத் தோற்றத்தை அது கெடுத்துவிடும் என்பதால் சிலை வெளியே நிற்கிறது என்கிறார்கள். நல்ல எண்ணம்! ஆனால் திருச்சுற்றுமாளிகையின் தெற்குப்பகுதியை அடைத்து, அதில் ஒரு காட்சிச்சாலையையும், கோவிலின் பணிமனையையும், அதையடுத்துப் பழைய பொருட்கள் போட்டுவைக்கும் ஒரு பண்டக சாலையையும் அமைத்து, திருச்சுற்று மாளிகையின் சீர்மையைக் கெடுக்க எந்தக் கலைச்சிந்தனையாளர் அதிகாரம் வழங்கினாரோ தெரியவில்லை.

கோவில் பற்றிய, அல்லது அதை "எடுப்பிச்ச" பேரரசர் பற்றிய கருத்தரங்குகள் நிகழும் போது அவை கோவிலுக்குள்ளேதான் நடைபெற வேண்டும் என்று ஏதாவது விதி உண்டோ தெரியவில்லை. இவ்விழாக்களுக்காகக் கோவிலைச் சேதப்படுத்துவதையெல்லாம் பார்க்கும்போது, உலகுக்குச் சொந்தமான இந்தப் பழமைச்சின்னம் முறையான பாதுகாப்பிலிருந்து கடந்த சில ஆண்டுகளாக நழுவிக்கொண்டிருக்கிறதோ என்ற ஓர் அய்யம் தோன்றுகிறது. இதுவே இக்கோவிலின் முடிவின் தொடக்கமாகிவிடுமோ என்றும் கவலையாக இருக்கிறது.



கையிழந்த அம்மையப்பர்

## பழுவூர்க் கோவில்கள்

கேரளத்துச் சிற்றரசர்களாகிய பழுவேட்டரையர்கள் தமிழ் மண்ணில் நிறுவிய கலைக்கூடங்களில் ஒன்றாகிய பழுவூர்க் கோவில் வளாகம் இரண்டு கோவில்களை உள்ளடக்கியது. பழுவேட்டரையரின் கலைச்சிந்தையை வெளிப்படுத்தும் கட்டட அமைப்பும், சிற்பங்களும், சோழர் காலத்துக் கல்வெட்டுகளும் உள்ள இந்தக் கோவில் வளாகமும் புறக்கணிக்கப்பட்ட கோவில்களில் ஒன்றுதான். தமிழ்நாட்டு அரசின் பாதுகாப்பில் இருக்கும் இக்கோவில் போதுமான பராமரிப்பின்றி வாடுகிறது. உள்ளே காடு போல் செடி கொடிகள் வளர்ந்துவருகின்றன. இந்த நிலை தொடருமானால் இக்கோவிலும், இதில் உள்ள கலைப்பொருட்களும் இன்னும் எத்தனை நாட்களுக்கு இருக்குமென்று தெரியவில்லை.



செடிகொடிகளின் தழுவலில் விமானம்

மக்கள் தொகை அதிகரிப்பு, சுற்றுப்புறச்சூழலில் அக்கறையின்மை, இருபதாம் நூற்றாண்டின் சந்தடிகள், இவற்றால் பல கோயில்கள் அழிந்துவிட்டன. பல விரைந்து அழிந்து கொண்டிருக்கின்றன.



மரங்கள் வளர்க்கும் விமானம்

தமிழ்நாட்டின் தலைநகருக்கு அருகே இருக்கும் ஊர் இது. பூவுலகை ஆளும் பேறு வரினும் அதை விரும்பாது இக்கோவிலில் பிச்சை எடுப்பதையே பெரிதாக எண்ணுவேன் என்றார் காடவர்கோன்.

"தஞ்சாக பூவுலகும் ஆண்டு தலையளித்திட்டு
எஞ்சாமை பெற்றினும் யான்வேண்டேன் நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின்."

இவ்வளவு சிறப்புப்பெற்ற கோவில் முதலாம் இராசேந்திரரால் முற்றிலும் மாசு மறு இல்லாத கருமை நிறக்கற்களால் முழுவதும் மாற்றியமைக்கப்பட்டது. இக்கோவில் இனி எவ்வளவு காலம் சிறப்புடன் இருக்கும் என்று தெரியவில்லை. இயற்கையும், பழங்காலப் போர் நடவடிக்கைகளும் தப்பவிட்டதை, இருபதாம் நூற்றாண்டின் நவீன மயம் அழித்துக் கொண்டிருக்கிறது. மதில்கள், மண்டபங்களில் விரிசல்கள் தோன்றியுள்ளன. நடராசர் திருமுன்னின் விமானத்திலும், வேறு பகுதிகளிலும் மரங்களும் செடிகளும் வளர்கின்றன. இவை விரைவில் அந்தக் கட்டடங்களை அழித்துவிடும்.

வளாகத்தில் எங்கு பார்த்தாலும் அசுத்தமும், முறையின்றி வளர்ந்திருக்கும் செடிகளும்தான். குளம் கைவிடப்பட்டுக் கொசுக்களின் உற்பத்திப் பண்ணையாகி வெகுநாட்களாகின்றது.

இன்னும் சில ஆண்டுகள் சென்று காடவர்கோன் இங்கு வந்தால் இரந்துண்டிருக்க வேறோர் இடத்தைத்தான் தேடவேண்டியிருக்கும்.

கல்லில் எழுதவேண்டும், கல்லில்தான் கோவில் கட்டவேண்டும், அவை அழியா, இருபதாம் நூற்றாண்டின் மனிதர்கள் நினைத்தாலும் அழிக்கமுடியாது என்று முதன் முதலில் இந்தப் பாணிக்கு வழி வகுத்துக் கொடுத்த அந்த முதல் மனித தெய்வத்தின் கால் தொட்டு வணங்கவேண்டும். அவன் இல்லையெனில் கோவில்கள் ஏது? வரலாறு ஏது? நமக்கென்று சிறப்புகள் ஏது? நாம்தான் ஏது?

எத்தனையோ தொலைநோக்கோடு, கருங்கல் காவியமாகக் கட்டப்பட்ட கோவில்கள் சீரழிந்த கோவில்களாக நிற்பது தமிழ்நாட்டில் எங்கு சென்றாலும் நம் பார்வையில் படும். தமிழ் உணர்வு கொண்டோரை மாத்திரமல்லாது, கலையுணர்வு கொண்ட நெஞ்சங்களையும் அவர்கள் எந்த நாட்டவராயினும் சரியே வருத்திக் கண்களைப் பனிக்கச்செய்யும் இக்கோவில்களின் அவல நிலை சொல்லொணாத் துன்பம் தருகிறது.



கோயில் வளாகமா? வயற்காடா?

அண்மையில் சென்னை விமானநிலையத்தில் நின்றிருந்தபோது, இத்தாலி நாட்டுச் சுற்றுலாப் பயணியுடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த பெண்மணியிடம், 'இந்த நாட்டைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டபோது, அவர் சொன்னார், 'இந்த நாட்டுக்கு நிழல் இருக்கிறது; பழமை இருக்கிறது; புரியாததும் இருக்கிறது. இங்கே பார்த்து மகிழ ஏராளமானவை, மற்ற அருகாமை நாடுகளில் இல்லாதவை, இருக்கின்றன. இதுவே இந்த மண்ணின் அழகு!'

``This country has a shadow, an antiquity and a mystery. And there are lot to see and enjoy, which the neighbouring countries do not have!"

மகிழ்ந்துபோய், 'அப்படியா?' என்று முகமெல்லாம் மலரக் கேட்டபோது, அவர் அடுத்துச்சொன்னது முகத்தில் அறைந்தது போல் இருந்தது. 'ஆனால் நான் இங்கு இனி வரவே மாட்டேன்!' 'ஏன்? ஏன் அப்படி?' என்று பதற்றத்துடன் கேட்டபோது,



விமானத்தின் உட்புறம் வௌவால்கள் பண்ணை

"இங்குள்ள மக்களின் போக்குகள் எமக்கு ஒவ்வாததைப் பாருங்கள்! உங்களுக்கு எத்தனை வண்ணமயமான கடந்த காலம் இருக்கிறது. உங்களிடம் உள்ள கலைப்பொருட்கள், நாகரிகத்தின் தொட்டில் இதுதான், கட்டடக் கலையும், சிற்பக்கலையும், உலோகக்கலையும் தோன்றியது இங்குதான் என்று பெருமை பேசக்கூடியவை. ஆனாலும் அவற்றை நீங்கள் அலட்சியத்தால் அழியவிடுகிறீர்கள். சிலவற்றை நீங்கள் வேண்டுமென்றே அழிக்கவும் செய்கிறீர்கள். இது எம்போன்ற கலை ஆர்வலர்களால் தாங்கிக்கொள்ள இயலாத ஒன்று. நான் நினைக்கவில்லை இனியும் இங்கு வருவேன் என்று," என்றார் அவர்.

"I don't like the attitude of the people here. Look! You have such a colourful past. You have here artifacts to boast of civilisation's infancy, the beginnings of architecture, sculpture, metallurgy! Yet you allow them to rot by negligence. You even destroy them wantonly. This is something we art lovers cannot bear. I don't think I will come here again."

தலை குனிந்து நின்றேன் நான்.

இயேசுநாதர் ஒரு யூதர் கோவிலுக்குச் சென்றிருந்தபோது, அங்கு ஆடுமாடுகள், புறாக்கள், கோழிகள், ஆகியன கொள்ளை விலையில் விற்கப்படுவதையும், வட்டிக் கடைகள் இயங்குவதையும் கண்டு கொதித்தெழுந்து, ஒரு சாட்டையைக் கையில் எடுத்து "என் தந்தையின் கோவிலை இப்படிக் கள்வரின் குகையாக்கிவிட்டீர்களே!" என்று அத்தனை பேரையும் அடித்து விரட்டினாராம். மீளாத்துயிலில் ஆழ்ந்திருக்கும் தமிழ்ச் சமுதாயம் தன் துயில் களைந்து எழுவது என்று? கையில் சாட்டையைப் பிடிப்பது எப்போது? அதில்தான் நமது கடந்த காலத்தின் எதிர்காலமே இருக்கிறது.

---

### கலி மறவர்


அக்கால மறவர்கள் எப்படியிருந்திருப்பர்? கற்பனையில் மூழ்கிக் காலத்தை வீணடித்தல் வேண்டா. பாலைக்கலிப் பாடலொன்று (15) மறவர் தோற்றத்தைப் படப்பிடிப்பாய்த் தருகிறது. வில்லேந்திய வீரர்கள் அவர்கள். அந்த வில் வலிய வில்; சிலை மரத்தால் செய்த வில். அதன் முறுக்கேறிய நாணோ சிங்கத்தின் கர்ஜனை போல் பேரொலி எழுப்புவது. அவ்வில் கொண்டிருக்கும் வீரர்களோ அதில் அம்பைத் தொடுத்தால் எதிர் நிற்பாரை வெல்வதன்றி வேறொன்றும் அறியார். திருகி முறுக்குண்ட மீசையும் தாடியும் உடையவர்; கடுஞ்சினம் கொண்டவர்; துடியெனும் இசைக்கருவியை முழக்கிச் செயற்படுபவர்; வழிப்பறிதான் தொழில்; கொடையோ, கொள்ளையிடும்போது வருவார்க்கும் போவார்க்கும் தரும் புண்ணே.

இம்மறவர்களைப் பற்றிப் பல பாடல்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன. தொகுத்தால் சங்கக் கவிஞரின் மானிடவியல் பார்வை புலனாகும்.

# 5. ஆனையூர்க் குடைவரை

அர. அகிலா, இரா. கலைக்கோவன்

இராசபாளையம் திருநெல்வேலிச் சாலையில் முப்பத்தெட்டுக் கிலோ மீட்டர் பயணித்துப் பெரியூர்ச்சாலையில் திரும்பி மூன்று கிலோமீட்டர் சென்றால், நீளமான குன்றுச் சரிவொன்றின் வடபகுதியில் மேற்கு நோக்கி வெட்டப்பட்டிருக்கும் ஆனையூர்க் குடைவரையைக் காணலாம். ஊரிலிருந்து தள்ளி ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்திருப்பதால் இக்குடைவரை மக்கள் வரத்தின்றிப் பாழடைந்து கிடக்கிறது.



குடைவரையின் முன்தோற்றம்

முகப்பு, முகமண்டபம், கருவறை என அமைந்துள்ள இக்குடை வரை நிலமட்டத்திலிருந்து 55செ.மீ. உயரத்தில் வெட்டப்பட்டுள்ளது. இதையடையத் தென்பகுதியிலுள்ள கற்பாறையொன்றும் முன்னாலுள்ள துண்டுப்பாறைகள்

இரண்டும் படிகளாக உதவுகின்றன. குன்றின் சரிவு இலேசாக முன்னோக்கி அமைந்திருப்பதால் முகப்பிற்கு முன்னால் தாராளமான தரைப்பரப்பு கிடைத்துள்ளது. தென்வடலாக 5.83மீ. நீளமுள்ள இத்தரையமைப்பு, வடபுறத்தே 1.25மீ. அகலத்தில் அமைந்திருந்த போதும், தென்புறம் செல்லச் செல்ல 85செ.மீ. அளவிற்குச் சுருங்கித் தென்முனையில் 40செ.மீ. ஆகக் குறைந்துவிடுகிறது. இந்த அகலக் குறைவு நேருமிடத்தில் தரையமைப்பு சந்திரக்கல் போல வளைக்கப்பட்டுள்ளது. தெற்கு மூலையில் இத்தரையில் காணப்படும் ஆட்டுக்கல் இறை வழிபாட்டிற்கான பொருட்களை அரைப்பதற்குப் பயன்படுத்தப்படுவதாக ஊரார் தெரிவித்தனர்.

## முகப்பு

கிழக்கு மேற்காக 84செ.மீ. அகலமும் தென்வடலாக 6மீ. நீளமும் கொண்டுள்ள குடைவரையின் முகப்பு இரண்டு அரைத்தூண்களும் இரண்டு முழுத்தூண்களும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அரைத்தூண்கள் முழுத்தூண்களைக் காட்டிலும் சற்று உள்ளடங்கியுள்ளன. இவற்றுள்ளும் வடஅரைத்தூணைவிடத் தென்அரைத்தூண் கூடுதலாக உள்ளடங்கியுள்ளது. இதனால் இவ்வரைத்தூண்களின் சதுரங்கள் முழுத்தூண்களின் சதுரங்களைவிட அளவில் சற்றுச் சிறுத்துக் காணப்படுகின்றன. இவ்வாறு அரைத்தூண்களும் முழுத்தூண்களும் ஒரு நேர்க்கோட்டில் அமையாத நிலையை மிக அரிதாகவே தென்தமிழகக் குடைவரைகளில் காணமுடிகிறது. சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ள முகப்புத் தூண்களின் கீழ்ச்சதுரங்கள் மேற்சதுரங்களைவிடச் சற்றுப்பெரியன. முழுத்தூண்களின் மேற்சதுர மேற்கு முகங்களில் மட்டும் தாமரைப்பதக்கங்கள்[1] உள்ளன. இவற்றின் நடுவே சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வடபுற அரைத்தூணை அடுத்துள்ள முழுத்தூணில் யானையும் அதையடுத்த முழுத்தூணில் நந்தியும் காட்டப்பட்டுள்ளன. அரைத்தூண்களில், வடக்கு அரைத்தூணின் மேற்சதுரத் தென்முகத்திலும், தென்அரைத்தூணின் மேற்சதுர வடமுகத்திலும் மட்டும் சிற்பங்களோடு கூடிய தாமரைப்பதக்கங்கள் வெட்டப்பட்டுள்ளன. வடபுற அரைத்தூணில் புலியொன்று[2] தன் காலால் யானையை அதன் மத்தகத்தில் அறையும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. தென்புற அரைத்தூணில் யானைத்திருமகளின் நின்றகோலம். இருபுறமும் உள்ள யானைகளில், வலப்புற யானை நீரூற்ற, இடப்புற யானை துதிக்கையில் பானையுடன் தன் முறைக்குக் காத்திருக்கிறது. முழுத்தூண்களின் கீழ்ச்சதுர மேல் மூலைகள் சிலவற்றில் பிற்காலத்தே விளக்கு மாடங்கள் வெட்டப்பட்டுள்ளன.

தூண்களின் மேற்சதுரங்களின் மேல் அமர்ந்துள்ள போதிகைகள் தங்கள் தரங்கக் கைகளால் உத்திரம் தாங்குகின்றன. இவற்றின் கீழ்க்கைகள் சிறிய

அளவின. இக்கைகள் விரிகோணத்தில் மேற்கைகளாகத் திரும்புமிடத்துத் தரங்கம் பெரிய அளவிலான எழுச்சியைக் கொண்டுள்ளது. அந்த எழுச்சியையொட்டிக் கையின் பக்கப்பரப்பில் ஒரு வளைவுக்கீறல் காட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற கீறல்கள் மலையடிக்குறிச்சியிலும், திருச்சிராப்பள்ளி மேல் குடைவரையிலும் காணப்படுவது இங்கு நினைக்கத்தக்கது. மேற்கையின் நடுப்பகுதியில் தரங்கங்களுக்கு இடையே குளவொன்று காட்டப்பட்டுள்ளது. இக்குளவு முற்சோழர் கோயில்களில் காணப்படும் தரங்கக் குளவுகளையும், அதியரின் நரசிம்மர் குடைவரைத் தூண்களில் காணப்படும் குளவுகளையும் ஒத்தமைந்துள்ளது. தரங்கங்களின் நடுவே போதிகைக் கைகளின் முழுமைக்குமாய்க் கொடிக்கருக்குகளாலான பட்டை காட்டப்பட்டுள்ளது. பிற குடைவரைகளில் காணப்படும் கொடிக்கருக்கு அணிகளிலிருந்து இவ்வமைப்பு சற்றே வேறுபட்டுள்ளது.

போதிகைக் கைகள் தாங்கும் உத்திரத்தையொட்டி வாஜனம் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இவ்வாஜனம் தென்வடலாக முகப்பு முழுவதற்குமாய் ஓடுகிறது. வாஜனத்தை அடுத்துள்ள கூரை வெறுமையாகக் காணப்படுகிறது. ஏறத்தாழ ஒன்றரை மீட்டர். அளவிற்கு நீளும் இக்கூரையின் தென்விளிம்பு சற்றே சிதைந்துள்ளது. கபோதம் காட்டப்படவில்லை.

அரைத்தூண்களை அடுத்துள்ள பக்கச்சுவர்கள் வடபுறத்தே அகலமாகவும், தென்புறத்தே அதில் பாதியளவுமாக உள்ளன. வடபுறச்சுவரின் அகலம் 1.44மீ. மேலிருந்து கீழே அகலக் குறைவாகி வரும் தென்புறச்சுவரின் அதிகப்படியான அகலம் 84செ.மீ. இச்சுவர்கள் இரண்டுமே ஒழுங்கான பரப்புடன் வெறுமையாக அமைந்துள்ளன. சில குடைவரைகளில் காணப்படும் பக்கச்சுவரொட்டிய வாஜனம் இச்சுவர்களில் காணப்படவில்லை. தென்சுவர் முழுமைக்குமாய் முகப்பு அரைத்தூணையடுத்து மேலிருந்து கீழாகப் பெரும் பிளவு காணப்படுகிறது. இந்தப் பிளவு வடமுழுத்தூணை அடுத்துள்ள வாஜனத்தின் அருகே கூரையில் தொடங்கித் தொடர்கிறது. இதனால் முகப்புப்பகுதியிலிருந்து இச்சுவர் பிரிக்கப்பட்டுள்ளாற் போல் தோற்றம் தருகிறது.

நன்றி: டைமண்ட் ஆப்டிகல்ஸ்,
120, ஏ.கே.எஸ். காம்ப்ளெக்ஸ் (மாடி),
அருணா திரையரங்கம் அருகில், பாளையம் பஜார்,
உறையூர், திருச்சிராப்பள்ளி – 620 003.

## முகமண்டபம்

முகப்பை அடுத்துள்ள முகமண்டபத்தின் தென்வடல் நீளம் 6.87மீ. கிழக்கு மேற்காக இதன் அகலம் 2.31மீ. ஒழுங்கற்ற பரப்புடன் காணப்படும் இதன் தரையும், முகப்புத்தரையும், முகப்புக்கு முன்னாலுள்ள தரையும் ஒரே நிலையில் அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் வடக்குச் சுவரும் தெற்குச் சுவரும் வெறுமையாக உள்ளன. கிழக்குச்சுவரின் நடுப்பகுதியில் குடையப்பட்டுள்ள கருவறை, இம்மண்டபத்திற்குள் 18.5செ.மீ. பிதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. கருவறையின் முன்சுவர் 4.52மீ. அகலத்தில் அமைந்துள்ளது. இச்சுவரின் கீழே முறையான தாங்குதள அமைப்பேதும் இல்லை. தென்புறத்தே ஜகதி போன்ற அமைப்பு ஒழுங்கின்றிக் காட்டப்பட்டுள்ளது.

முன் சுவரில் நான்கு நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. நடுவிலுள்ள இரு தூண்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் கருவறையின் வாயில் அமைந்துள்ளது. 97செ.மீ. அகலமுள்ள இந்த வாயிலுக்குச் சற்று உள்ளடங்கிய நிலையில் நிலைக்கால்களும், மேல், கீழ் நிலைகளும் உள்ள புதிய நிலை பின்னாளில் வைத்துப் பூசப்பட்டுள்ளது. இந்நிலைக்கால்களின் கீழே சிறிய அளவிலான நாகபந்தங்கள். மேல்நிலையின் கீழ்ப்பரப்பில் வளையங்களாலான பதக்கம். 62செ.மீ. அகலமுடைய கருவறை வாயிலுக்கு உட்புறமாகக் கதவமைத்துள்ளனர். வாயிலின் வெளியே படிக்கட்டொன்று வெட்டப்பட்டுள்ளது.

கருவறை வாயிலையொட்டியுள்ள அரைத்தூண்களுக்கும் சுவர்த் திருப்பங்களில் உள்ள அரைத்தூண்களுக்கும் இடைப்பட்ட பகுதிகள் கோட்டங்களாகியுள்ளன. வடபுறக்கோட்டம் 96செ.மீ. அகலமும் 1.77மீ. உயரமும் கொண்டமைய, தென்புறக்கோட்டம் 99செ.மீ. அகலமும் 1.76மீ. உயரமும் கொண்டமைந்துள்ளது. இவ்விரு கோட்டங்களிலும் பக்கத்திற்கொருவராக இரு வாயிற்காவலர் காணப்படுகின்றனர். வலப்புற வாயிற்காவலரின் கீழே காணப்படும் துளை, கருவறை உள்ளிருந்து முழுக்கு நீர் வெளிவரப் பிற்காலத்தே உருவாக்கப்பட்டதாகும். இத்துளையிலிருந்து புறப்படும் கால் முகமண்டபப் பின் சுவரையொட்டி நீண்டு, வடசுவரையடைந்து அதையொட்டி ஓடி முகப்பின் வடபுற அரைத்தூணையடுத்து வெளிச்சென்று

நன்றி: டைமண்ட் ஆப்டிகல்ஸ்,
2-A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர்,
திருச்சிராப்பள்ளி - 620 003. தொ. 760 090.

முடிகிறது. கருவறை முன்சுவரின் அரைத்தூண்கள் விரிகோணப் போதிகைகளால் உத்திரம் தாங்க, மேலே வாஜனம். இவ்வுத்திரமும் வாஜனமும் முகமண்டபத்தின் அனைத்துச் சுவர்களிலும் தொடர்கின்றன.

## கருவறை

தென்வடலாக 2.30மீ. நீளமும் கிழக்கு மேற்காக 1.90மீ. அகலமும் கொண்டுள்ள கருவறையின் உயரம் 1.93மீ. வெறுமையாக உள்ள கருவறைச் சுவர்களின் மேலே, கிழக்கில் மட்டும் கூரையை ஒட்டி வாஜனம் காட்டப்பட்டுள்ளது. வட, தென்சுவர்களின் மேற்புறத்தே எதிரெதிராகப் பள்ளம் வெட்டி அவற்றுள் கம்பொன்றை நுழைத்து, அதிலிருந்து விளக்கொன்றைத் தொங்கவிட்டுள்ளனர். இலேசாக முன்னோக்கிய சரிவுடன் அமைந்துள்ள கூரையின் பரப்பு நன்றாகச் சீரமைக்கப்பட்டுள்ளது.

கருவறையின் தரையில் 1மி.மீ. உயரத்திற்குத் தளமொன்று காட்டப்பட்டுள்ளது. இதன் நடுவில் வடபுறம் கோமுகமுடைய சதுரமான ஆவுடையாரொன்று இருத்தப்பட்டுள்ளது. இதன் பாணம் கொள்ளும் பகுதியில் பலித்தளமொன்றை வைத்துப் பூசியுள்ளனர். முன்னாளில் இங்கு பாணம் இருந்ததாகவும், பிறகு அது அகற்றப்பட்டு இப்பலித்தளம் அமைக்கப் பெற்றதாகவும் கோயில் அறங்காவலர் தகவல் தந்தார். இதைக் கோயிலார் சுப்பிரமணியரென்கின்றனர். ஆவுடையாரின் மேற்புறத்தே தென்பகுதியில் சிறிய அளவிலான பிள்ளையார் சிற்பமொன்றும், வடபகுதியில் கல்லாலான தீபக்காலொன்றும் இருத்தப்பட்டுள்ளன. கீழே கருவறைத் தரையில் மேலுமொரு பலித்தளமும் தீபக்காலும் காணப்படுகின்றன.

## சிற்பங்கள்

வலப்புற வாயிற்காவலர் கருவறையை நோக்கியுள்ளார். முழங்காலளவில் மடக்கிய இடக் காலின் பாதம், வலப் பாதத்தின் மேல் உத்கட்டிதமாய் இருக்க, வலக் கையால் உருள்பெருந்தடியைப் பிடித்துள்ளார். இடக் கை அதன் மீது நெகிழ்வாய் இருத்தப்பட்டுள்ளது.[3] குண்டலங்களற்ற நீள்செவிகளும் சடைக்கற்றைகளுமாய்க் காணப்படும் இவரது தோற்றப்

நன்றி: டைமண்ட் ஆப்டிகல்ஸ்,
120, ஏ.கே.எஸ். காம்ப்ளெக்ஸ் (மாடி),
அருணா திரையரங்கம் அருகில், பாளையம் பஜார்,
உறையூர், திருச்சிராப்பள்ளி – 620 003.

பொலிவை அறியமுடியாதபடி முகப்பகுதி சிதைந்துள்ளது. தென்காவலர் இடக் கையை இடுப்பில் வைத்து, வலக் கையில் கடகம் காட்டி[4], வாயில் நோக்கிக் காவலிருக்கிறார். இவருக்கும் முகம் சிதைந்துள்ளது. இருவருமே முப்புரிநூல், உதரபந்தம், கழுத்தில் அட்டிகையெனக் காணப்படுகின்றனர்.

## வெளி மண்டபங்கள்

குடைவரை வெட்டப்பட்டுள்ள குன்றின் முன்னால் ஒரு மண்டபமும், குன்றின் மேலொரு மண்டபமும் காணப்படுகின்றன. உப உபானம், உபானம், ஜகதி, கண்டம், மகாவாஜனமென அமைந்துள்ள தளத்தின் மீது நான்கு இந்திரகாந்தத் தூண்கள் அமைத்துக் குன்றின் மேலுள்ள மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இத்தூண்கள் தாங்கும் உத்திரத்தில் அலங்கரிப்பு உள்ளது. உத்திரத்திற்கு மேலே வலபியும் கூரையும் உள்ளன. கூரையின் உட்புறத்தே நடுப்பகுதியில் மலர்ப் பதக்கமும், அதன் ஒரு புறம் மீனும் மறுபுறம் செண்டும் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களின் போதிகைகள் பூமுனையுடன் கூடிய நாணுதல் கொண்டிருப்பதால், இம்மண்டபம் பிற்பாண்டியர் காலத்தெழுந்ததாகலாம். வலபிக்கு மேலுள்ள உட்புறப்பகுதியின் தென்புறத்தே யானைத்திருமகள் செதுக்கப்பட்டுள்ளார்.

குடைவரைக்கு முன்னாலுள்ள மண்டபம் உபானம், ஜகதி, கண்டம், மகாவாஜனம் எனும் உறுப்புகள் பெற்றமைந்த தளத்தின் மேல், நான்கு இந்திரகாந்தக் கால்கள் கொண்டு எழுந்துள்ளது. இக்கால்களின் சதுர பாதங்கள் சிறப்ப வடிப்புடன், உச்சியில் நாகபந்தங்கள் கொண்டமைந்துள்ளன. பூமொட்டுடன் கூடிய நாணுதல் கொண்ட போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வாஜனமும், வலபியும், கூரையும் உள்ளன. மண்டபத்தின் உட்புறம் கூரையின் நடுவே நட்சத்திரப் பதக்கமும், அதன் பக்கங்களில் மீன், செண்டு ஆகியனவும் காணப்படுகின்றன. உத்திரத்தின் தென்பகுதியின் கீழ்ப்பரப்பில் கழுத்தில் ருத்திராக்க மாலையுடன், கைகளைத் தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட்ட நிலையில் அடியவர் வடிவமொன்று காணப்படுகிறது. உத்திரத்தின் பிற பகுதிகளில் யாளி, மயில், பூரண கும்பம் போன்றவை வெட்டப்பட்டுள்ளன. உட்புறம் வலபிக்கு மேலுள்ள பகுதியில், யானைத்திருமகளின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.

நன்றி: டைமண்ட் ஆப்டிகல்ஸ்,
2-A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர்,
திருச்சிராப்பள்ளி – 620 003. தொ.பே: 760 090.



வெளி மண்டப முனிவர்

இம்மண்டபத்தின் நடுவே இரண்டு கல்மேடைகள் வைத்து அவற்றின் மீது சிற்பமொன்றை இருத்தியுள்ளனர். முனிவர் ஒருவர் மலை மீது தவநிலையில் இருக்குமாறு போல இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. உத்குடி அமர்வில் யோகபட்டம் அணிந்து அமர்ந்துள்ள இம்முனிவரின் அக்கமாலையோடு கூடிய வலக் கை தண்டத்தின் மீது இருத்தப்பட்டுள்ளது. இட முழங்கால் மீது படர்ந்து கீழே நெகிழ்ந்துள்ள இடக் கையில் குண்டிகை. அரையாடை தொடைவரையில் அமைந்துள்ளது. இடப்புறம் கத்தியொன்று இடுப்பில் செருகப்பட்டுள்ளது. செவிகளில் பூட்டுக் குண்டலங்கள் அணிந்துள்ள இவரது தோள்களில் ஸ்கந்தமாலை. தாடியும், மீசையும், சடை மகுடமுமாய்க் காட்சியளிக்கும் இவரது சடைப்புரிகளுள் ஒன்று நீள்சடையாய்ப் பின்னிறங்கி இடுப்புவரை நீள்கிறது. இவரைக் கோயிலார் அகத்தீசுவரர் என்றழைக்கின்றனர்.

இம்மண்டபத்தையொட்டிய நிலப்பரப்பில் நாற்புறமும் சிறிய அளவிலான பலித்தளங்கள் இருத்தப்பட்டுள்ளன. சுற்றிலும் பந்தலிட வாய்ப்பாகக் குழிவுடன் கூடிய கற்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## குடைவரையின் காலம்

கல்வெட்டுச் சான்றுகள் ஏதுமற்ற நிலையில் அமைப்புமுறையைக் கருத்தில் கொண்டு இக்குடைவரையைக் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டினதாகவும், வெளிமண்டபங்களைப் பிற்பாண்டியர் காலத்தனவாகவும் கொள்ளலாம்.

## குறிப்புகள்

1. இவற்றைத் தாமரையிதழ்கள் என்கிறார் தி. இராசமாணிக்கம். தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, 1984, பக். 8.
2. இதைச் சிங்கம் என்கிறார் தி. இராசமாணிக்கம். மு.நூல், பக். 8.
3. காவலர் கதையின் மீது சாய்ந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் தி. இராசமாணிக்கம். மு. நூல், பக். 9.
4. இதை அபய முத்திரை என்கிறார் தி. இராசமாணிக்கம். மு.நூல், பக். 9.

# 6. இராணி மங்கம்மாள் காசுகள்

ஆறுமுக சீதாராமன்

மதுரை நாயக்கஅரசி மங்கம்மாள் (கி.பி. 1689-1706) ஆட்சியில் வெளியிடப்பட்ட இரண்டு வகைச் செப்புக்காசுகள் திண்டுக்கல்லில் கிடைத்துள்ளன. முதல் வகைக் காசின் முன்பக்கத்தில் கையில் வீணையுடன் சரசுவதி அமர்ந்திருக்கும் காட்சி அழகாக உள்ளது. காசின் பின்பக்கத்தில் 'மங்கம்மா' என்று கி.பி.பதினேழாம் நூற்றாண்டுத் தெலுங்கு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை 2.1 கிராம். இரண்டாவது வகைக் காசின் முன்பக்கத்தில் அன்னப்பறவையின் பின்னால் சரசுவதி வீணையுடன் இருக்கும் காட்சி அழகாகக் காட்டப்பட்டுள்ளது. காசின் பின்பக்கத்தில் 'மங்கம்மா'வின் பெயர் கி.பி. பதினேழாம் நூற்றாண்டுத் தெலுங்கு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை 1.8 கிராம்.









முன்பக்கம் பின்பக்கம்

தென்னிந்தியாவில் சரசுவதி உருவம் பொறித்த காசுகள் இதுவரை கிடைக்கவில்லை. இப்பொழுதுதான் முதன்முதலாகத் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன. மங்கம்மாளுக்குத் தாய்மொழிப் பற்று மிகுதியாக இருந்ததால், தாம் வெளியிட்ட காசுகளில், தம் பெயரைத் தெலுங்கு மொழியிலேயே பொறித்து வெளியிட்டுள்ளார்.

மதுரைப் பெருநாட்டின் முதல் பெண்ணரசியாக ஆட்சிபுரிந்தவர் மங்கம்மாள். இப்பெருமாட்டி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, வேளாண் வளர்ச்சிக்கு உதவியதுடன், மத வேறுபாடின்றிக் கோயில்களுக்கும் கொடைகளை அள்ளித்தந்துள்ளார். அரசியல் அறிவும், உலகியல் அறிவும், ஆட்சித்திறனும் உடையவராய், மொகலாயப் பேரரசர் ஔரங்கசீபுவைப் பகைத்துக்கொள்ளாமல், மதுரை நாடும் சிதைந்து போகாதவாறு பதினெட்டு ஆண்டுகள் அதைக் கட்டிக்காத்து, நாயக்கராட்சி மேலும் நாற்பத்தேழு ஆண்டுகள் வரை உயிரோடு இருக்குமாறு செய்த பெருமை ராணி மங்கம்மாளுக்கு உண்டு.

---

## தேரே தெய்வம்

'செய்யுந் தொழிலே தெய்வம்' என்பது கலித்தொகைக் காலத்திலேயே உணரப்பட்ட உண்மை. தலைவனின் ஒழுக்கம் குறித்து அய்யப்பட்டு வாடும் தலைவியிடம், 'அவன் பெண்டிர் நின்னையொழியல் பிறர் இல்லை. அதனை நன்கு உணர்ந்துகொள்' என்று தனக்குத் தெய்வமாகிய தேரைத் தொட்டுச் சூளுரைக்கிறான் பாகன் ஒருவன். அவன் உரைத்தது பொய்ச்சூளா, மெய்ச்சூளா என்பதை நாமறியோம். ஆனால் தேரோட்டிக்குத் தேரே தெய்வமாயிருந்ததையும், அதன்மீது செய்யப்படும் 'சத்தியம்' ஏற்றுக்கொள்ளப்பட்டதையும் நோக்க அந்நாளில் தொழில் தெய்வக் கோட்பாடு வழக்கிலிருந்தமையை நன்குணரலாம் *(கலி.71)*.

# 7. திருநெல்வேலி குலசேகர பாண்டியர் காசு

**ஆறுமுக சீதாராமன்**

பிற்காலப் பாண்டிய மன்னரான குலசேகரர் காலத்தில் (கி.பி.1162-1177) வெளியிடப்பட்ட செப்புக்காசு ஒன்று திருநெல்வேலியில் கிடைத்துள்ளது. நான்கு கிராம் எடையுள்ள இக்காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனிதனின் உருவமும், பின்பக்கத்தில் அமர்ந்த நிலையிலான மனிதனின் உருவமும், அதன் வலப்பக்கத்தில் 'ஸ்ரீகுலசேகர' என்று கிரந்த எழுத்திலான பெயர்ப் பொறிப்பும் காணப்படுகின்றன.



முன்பக்கம்



பின்பக்கம்

இக்காசு முதலாம் இராசராசசோழர் காசைப் போன்றே அச்சடிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குலசேகரபாண்டியர் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்தபோது இந்தக் காசை வெளியிட்டிருக்கலாம். தமிழகத்தில் கிடைத்துள்ள பிற்காலப் பாண்டியர் காசுகள் அனைத்தும் தமிழ் எழுத்துக்களுடன் உள்ளன. ஆனால் இப்பாண்டியர் காசு கிரந்த எழுத்துக்களில் மன்னர் பெயரைக்கொண்ட நிலையில் கிடைத்திருப்பது தமிழ்நாட்டு நாணயவியல் வரலாற்றில் ஓர் அரிய கண்டுபிடிப்பென்றே சொல்லவேண்டும்.

# 8. படை வீட்டில் இரண்டு கற்சிலைகள்

ம. காந்தி

சோழப் பேரரசில், தொண்டை மண்டலம் செயங்கொண்ட சோழ மண்டலமாக மாறியது. இம்மண்டலத்தில் பல்குன்றக் கோட்டத்தில் படைவீடு,



திருமால்

தலைசிறந்த ஒரு படை தங்கும் வீடாக இருந்ததால் படைவீடு என்றழைக்கப்பட்டது. இந்த ஊர், எதிரிகள் எளிதில் தாக்கமுடியாதவாறு மலையரண் அமைந்த ஊராகும். நான்கு பக்கங்களிலும் சவ்வாதுமலைத் தொடரின் குன்றுகள் சூழ்ந்திருக்கின்றன. எனினும் படைவீட்டை அணுக இரண்டு வழிகள் உள. ஒன்று சந்தவாசல்; மற்றொன்று வாழியூர் ஆகும். சந்தவாசல், முன்பு "சந்தைக்கு மீண்டான் வாசல்" என்று அழைக்கப்பட்டது.

படைவீட்டிற்குத் தெற்கில் கமண்டல நதி ஓடுகிறது. அந்தக் காட்டாற்றின் தென்கரையில் ஒரு பெரிய பாறையின் மீது இலட்சுமி நரசிம்மர் கற்சிலை இருந்தது. ஸ்ரீவேணுகோபால சுவாமி கைங்கர்ய நிறுவனம், இலட்சுமி நரசிம்மருக்குக் கோயில் எழுப்பச் சுற்றுச் சுவர் கட்டக் கடைக்கால் தோண்டியபோது திருமால் கற்சிலையொன்று கிடைத்தது.



வீரக்கல்

இதில் திருமால் சுகாசனத்தில் பத்ரபீடத்தில் அமர்ந்திருக்கிறார். தலையை உயரமான கிரீடமகுடம் அணிசெய்கிறது. முகம் சேதம் அடைந்துள்ளது. பின் கைகள் சக்கரத்தையும் சங்கையும் பெற்றிருக்கின்றன. வல முன் கை அபய முத்திரையில் இருக்க, இட முன் கை சூசி முத்திரையைக் கொண்டிருக்கிறது. கழுத்தினை இரண்டு அணிகள் அலங்கரிக்கின்றன. வலக் கால் பாதம் தாமரைத் தளத்தில் இருத்தப்பட்டுள்ளது. இடுப்பில் கட்டியிருக்கும் ஆடை, மடிப்புகளுடன் தளத்தின் மீது புரள்கிறது. சம்புவரையர் அல்லது விசயநகர அரசுக் காலத்தின் முற்பகுதியில் இந்தச் சிற்பம் வடிக்கப்பட்டிருக்க

வேண்டும். இச்சிற்பம் இலட்சுமி நரசிம்மர் திருக்கோயிலில் இடம்பெற்றுள்ளது. திருமாலின் உயரம் 76செ.மீ.

இக்கோயிலின் அருகிலுள்ள புன்செய் நிலத்தில் வீரக்கல் ஒன்று சாய்ந்து கிடக்கிறது. இது வீரன் ஒருவனுக்கும் அவன் மனைவிக்கும் நடப்பட்ட கல்லாகும். கற்பலகையின் மேற்பகுதியில் மட்டும் புடைப்பாகச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இதில் வீரன் தன்னுடைய வலக் கையில் ஈட்டியை உயர்த்தி முன்னோக்கி எறியும் நிலையில் குதிரை மீது உள்ளான். குதிரை, முன்னிரண்டு கால்களைத் தூக்கியுள்ளது. குதிரைக்கு முன்னதாக ஒரு பணியாள் குடையைத் தூக்கிச்செல்கிறான். குதிரைக்குப் பின் பக்கத்தில் வீரனுடைய மனைவி தன்னுடைய இடக் கையில் ஏதோ ஒரு பொருளைப் பிடித்தவாறு நிற்கிறார்.

மூவர் கொண்டையமைப்பும் விசயநகர முறையில் இருக்கிறது. மேலும் பணியாள் வீரனுக்கு முன்பக்கத்தில் குடையைப் பிடித்துச் செல்வதால் வீரன் மரியாதைக்குரிய ஒரு தலைவனாக இருக்கலாம். நடுகல்லின் மொத்த உயரம் 5½ அடி ஆகும்.

---

## பரண் விளக்கு

முற்றிய கதிரை விலங்குகளிடமிருந்தும் பறவைகளிடமிருந்தும் காக்கத் தினைப்புனைத்தே பரண் அமைத்துக் காவலிருந்தனர் அந்நாளில். காலை முதல் மாலை வரை கதிர் காக்கத் துணையிருந்தான் கதிரவன். அந்தப் பகல் காவலில் இளநங்கையரே பெரும்பங்கு கொண்டனர். இரவுக் காவல் ஆடவர்க்குரியது. முழுநிலவுக் காலத்தே வெளிச்சமிருக்கும். நிலவு தேய்ந்து வளரும் காலத்தில் என்ன செய்வது? தினைப்புனப் பரணில் அகல் விளக்கேற்றி வெளிச்சம் கொண்டனர் அந்நாள் குறிஞ்சியர். அந்த அகிலின் புகை வானூரும் மதியின் ஒளியையே மழுங்க வைத்ததாம் (கலி. 39).

# 9. புதுக்கோட்டை மன்னரும் கட்டபொம்மனும்

பூ.ர. குப்புசாமி

புதுக்கோட்டையில் நடந்த ஒரு வரலாற்றுக் கருத்தரங்கில் கட்டபொம்மனைப் புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர் ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தது பற்றிய செய்தி, இதழ்களில் வந்து மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதால், அது குறித்து ஆராய வேண்டியுள்ளது.

புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னரின் ஆட்கள் செப்டம்பர் 1799இல் சிவகங்கை வட்டம் காலியாப்பூர் காடுகளில் ஒளிந்திருந்த கட்டபொம்மன், ஊமைத்துரை, கட்டபொம்மனின் இரு மைத்துனர்கள் மற்றும் மூவர் ஆக ஏழு பேரைச் சுற்றிவளைத்துப் பிடித்துச் சில நாட்கள் திருமயம் கோட்டையில் வைத்திருந்து, கும்பினிப் படையாட்கள் வந்துசேர்ந்தவுடன், கும்பினி அதிகாரிகள் உத்தரவுப்படி, மதுரையில் இருந்த கும்பினி கேப்டன் ஸ்மித்திடம் கொண்டுசென்று அந்த ஏழு பேரையும் ஒப்படைத்துவிடுகிறார்கள்.

அவ்விதம் வெள்ளைக் கும்பினிக்குத் தாம் செய்த சேவையையும் அதற்கு முன்னர்த் தம் முன்னோர்கள் கும்பினிக்குத் தொடர்ந்து ஆற்றிய விசுவாசமான சேவைகளையும் குறிப்பிட்டுப் பலவித உதவிகளையும், சலுகைகளையும் கும்பினித் தலைமையிடம் தொண்டைமான் கேட்க, அவர்களும் மகிழ்ந்து, தொண்டைமானுக்குப் பலவித உதவிகளையும் பட்டங்களையும் சலுகைகளையும் வழங்குகிறார்கள். இதுபற்றி கேப்டன் வில்லியம் பிளேக்பர்ன் 1803 மே மாதம் எழுதிய குறிப்பில், தொண்டைமான் பாஞ்சாலங்குறிச்சியில் மீதமிருக்கும் தளபதிகளால் தமக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சித் தமக்கு வேண்டிய உதவிகளையும், சிறப்புகளையும் வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டதை விளக்கமாக எழுதுகிறார். இந்த விபரங்கள் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்காக 1916-இல் திரு. ராதாகிருஷ்ணன் வெளியிட்ட புதுக்கோட்டை ராச்சியத்தின் பொது வரலாறு என்ற நூலின் 304,309ஆம் பக்கங்களிலும், மற்றும் புதுக்கோட்டை ராச்சிய மேனுவலின் 79 முதல் 82 வரை உள்ள பக்கங்களிலும் விவரமாகக் காணப் படுகின்றன. அவற்றில் மருது சகோதரர்களுக்கு விரோதமாகவும், கம்பெனிக்கு ஆதரவாகவும் அப்போதைய தொண்டைமான் செயற்பட்ட விவரங்களும் கூறப்பட்டுள்ளன. இதே விவரங்கள் புதுக்கோட்டை சமஸ்தானத்தார் சார்பில் கே.ஆர். வெங்கட்ராமன் தொகுத்து 1940-இல் வெளியிட்ட புதுக்கோட்டை ராச்சிய மேனுவல் இரண்டாம் தொகுதி, பகுதி ஒன்றில் பக்கங்கள் 810 முதல் பல பக்கங்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

எனவே அதிகாரபூர்வமான முறையில் புதுக்கோட்டை ராச்சிய அரசே வெளியிட்ட செய்திகளை மாற்ற அல்லது திரிக்க முயல்வது வரலாற்றை ஆய்பவர்களும், எழுதுபவர்களும் செய்யக்கூடாத பிழைகளாகும்.

புதுக்கோட்டை மன்னர்கள் முற்றிலும் தமிழ் மன்னர்களே ஆவர். அவர்களின் அரசு இலச்சினைகளிலும், அம்மன் காசு முதலியவைகளிலும் தெலுங்கு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது குறித்துச் சிலர் கூறுவதுண்டு. அவை மதுரை நாயக்கர் மன்னர் காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் தெலுங்கிற்கேற்பட்டிருந்த உயர்வையும், ஆதிக்கத்தையும் காட்டுபவை ஆகும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலவி வந்த தமிழக ஆட்சிப் புவியியல் முறைகளை மாற்றிப் பாளையப்பட்டுகள் அமைக்கப்பட்டு, அங்குப் பெரும்பாலும் தெலுங்குப் பாளையக்காரர்களை நியமித்து சில நூறு ஆண்டுகள் தமிழர் மீது ராணுவ ஆட்சியாக நடந்த தெலுங்கர் ஆட்சியின் ஒரு சின்னமாகக் கட்டபொம்மன் இருந்தாலும், பல முறை குடிமக்களைக் கொள்ளையடித்தவர் அவர் என்ற செய்தி மறுக்க முடியாததே என்றாலும், ஆங்கிலேயரை அன்னியர் என்ற முறையில் நாட்டுப்பற்றோடு தொடக்க முதலே எதிர்த்தவர் அவர் என்று சொல்லமுடியாமல் போனாலும், வெள்ளையருக்கு அவரைப் பிடித்துக் கொடுத்தது துரோகமான செயலேயாகும்.

தீரன் சின்னமலை போல் கட்டபொம்மன் ஒரு சுத்தமான வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரனாக இருந்தவரல்ல. சின்னமலை, கட்டபொம்மனுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ் மண்ணில் இருந்த கன்னடப் படைகளை முதலில் துரத்திவிட்டு, தன் கொரில்லா முறை அதிரடிப் போர்களால் மேற்குத் தமிழகத்தில் ஒரு சுதந்திர நாட்டை நிறுவி, வெள்ளையருக்குச் சிம்மசொப்பனமாக விளங்கி, அன்னிய ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துப் போராடிய வீரராவார். அவர் சாதி, மத வேறுபாடு அறியாதவர். தம் சாதியைச் சேர்ந்த தவறு செய்த ஐந்து நபர்களுக்கு மரண தண்டனை விதித்தவர். இறுதியில் காட்டிக் கொடுக்கப்பட்டு மாட்டிக்கொண்ட நிலையில், சங்ககிரி மலையில் வைத்து வெள்ளையர், 'நீ ஆளும் பகுதிகளை நீயே ஆண்டுகொள், எங்களுக்குத் திறை செலுத்தினால் போதும்' என்று கூறியபோது, திறை செலுத்த மறுத்து உயிர் துறந்த அப்பழுக்கற்ற வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரன் தீரன் சின்னமலை போன்ற கறைபடியாத வரலாற்றுக்கு, கட்டபொம்மன் சொந்தக்காரராக இல்லாமலிருந்திருக்கலாம். அவர் ஆதி பெயர் 'கெட்டிபொம்மு' என்பர். கொள்ளைக்கார கெட்டிபொம்மு என்று வழங்கியதாகவும் சிலர் கூறுவர். கட்டபொம்மநாயக்கன் என்றே வரலாற்று நூல்களில் தெளிவாக உள்ளது. வீரபாண்டிய கட்டபொம்மன் என்பது பின்னாளில் சிலர் வேண்டுமென்றே இட்டு அழைத்த பெயராகும். கட்டபொம்மனின் கொள்ளைச் சம்பவங்கள் அமெரிக்க பென்சில்வேனியா பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் பட்டத்திற்காக திருமதி. சுமதி இராமசாமி எழுதிய ஆய்வுக் கட்டுரையில் கூட குறிப்பிடப்படுகின்றன. எனினும் இத்தகைய காரணங்களால் புதுக்கோட்டையின் அன்றைய அரசர் புரிந்த செயலை நாம் நியாயப்படுத்த முடியாது.

# 10. திருமலைப்புரம் குடைவரை

அர. அகிலா, இரா. கலைக்கோவன்

திருநெல்வேலி மாவட்டத்தில், கல்லிடைக்குறிச்சி சேந்தமரம் சாலையில், கல்லிடைக்குறிச்சியிலிருந்து ஏறத்தாழ ஐந்து கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருமலைப்புரம். இன்றைக்குத் திருமலாபுரம் என்றழைக்கப்படும் இச்சிற்றூரின் தென்புறத்தே உள்ள மலைக்குன்றுகளின் தொடரில் இரண்டு குடைவரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் குன்றின் வடமுகத்தில் உள்ள முதற் குடைவரை முழுமையடைந்த நிலையில் சிற்பங்களுடன் காட்சிதர, தென்முகத்திலுள்ள இரண்டாம் குடைவரை நிறைவடையாத நிலையில் விடப்பட்டுள்ளது.

## முதற் குடைவரை

குன்றின் சரிவான பகுதியைத் தேர்ந்து, அதன் கீழ்ப்பகுதியில், நிலமட்டத்திலிருந்து 2.11மீ. உயரத்தில் முதற் குடைவரை வெட்டப்பட்டுள்ளது. குடைவரையை அடைய இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையினர் அமைத்திருக்கும் படிகளே உதவுகின்றன. குன்றின் பிற பகுதிகளிலிருந்து குடைவரை அமைந்துள்ள பாறையின் நிறம் வேறுபட்டுள்ளது. சரிவின் காரணமாக குடைவரை முகப்பிற்கு முன்னால் நல்ல தரையமைப்பும் பக்கங்களில் அகலமான சுவர்களும் கிடைத்துள்ளன. 5.92மீ. நீளமும் 94செ.மீ. அகலமும் கொண்டு முகப்பிற்கு முன்னால் அமைந்துள்ள தரை நன்கு சமன் செய்யப்பட்டுள்ளது.

## முகப்பு

முன் தரையிலிருந்து 10செ.மீ. உயரத்தில், 90செ.மீ. அகலம் 5.49மீ. நீளம் கொண்டு அமைந்துள்ள முகப்பை, இரண்டு அரைத்தூண்களும் இரண்டு முழுத்தூண்களும் அணிசெய்கின்றன. இத்தூண்கள் முகப்புத் தரையின் விளிம்பிலிருந்து 13.5செ.மீ. உள்தள்ளி எழுகின்றன. சதுரம், கட்டு, சதுரம் என்ற வழக்கமான அமைப்பில், பருத்த அளவினவாய் எழும் இத்தூண்களின் சதுர முகங்களில் பதக்கங்கள் காட்டப்பட்டுள்ளன.

முழுத்தூண்களில் மேற்சதுர வடமுகங்கள் தவிர ஏனைய அனைத்துப் பக்கங்களிலும் தாமரைப் பதக்கங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தாமரைப் பதக்கங்கள் பல்லவர் குடைவரைகளில் (மகேந்திரவாடி, தளவானூர்) காணப்படும் தாமரைப் பதக்கங்களை ஒத்தமைந்துள்ளன. இவற்றுள் கீழ்ச்



குடைவரையின் முன்தோற்றம்

சதுரங்களின் தென்முகப் பதக்கங்கள் முழுமையடையவில்லை. மேற்சதுர வடமுகங்களில் உள்ள பதக்கங்களில் மேற்குத் தூண் பதக்கம் இரண்டு

வளையங்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. வளையங்களுக்கிடையே மணிக்கோவையும் உட்புறத்தில் கொடிக்கருக்கும் அமைய, பதக்கத்தின் நடுப்பகுதியில் அழகிய மகரம் செதுக்கப்பட்டுள்ளது. இம்மகரம், திருச்சிராப்பள்ளி மேல் குடைவரையிலுள்ள தூண் சதுரங்களில் காணப்படும் மகரங்களோடு ஒப்புநோக்கத்தக்கது. கிழக்கு முழுத்தூணின் வடமுகப் பதக்கத்திலும் இதுபோல் மகரம் காணப்படுகிறது. இதைச் சுற்றி வளையங்களும் இடைப்பட்ட மணிக்கோவையும் உருவாக்கம் பெறாவிட்டாலும் அதற்கான அமைப்பு காணப்படுகிறது.

அரைத்தூண்களின் சதுரங்களில் பக்கப் பகுதிகளில் பதக்கங்கள் காட்டப்படவில்லை. கிழக்கு அரைத்தூண் சதுரங்களின் மேற்கு முகங்களிலும், மேற்கு அரைத்தூண் சதுரங்களின் கிழக்கு முகங்களிலும் மட்டுமே தாமரைப் பதக்கங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் மேற்கு அரைத்தூணின் கீழ்ப் பதக்கங்களில் வளையங்கள் மட்டுமே உள்ளன. மணிக்கோவை இல்லை. பல்லவர் பகுதிகளில் சில குடைவரைகளில், அரைத்தூண்களின் பக்கப் பகுதிகளில் அரைப்பதக்கங்கள் காட்டப்பட்டிருப்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

தூண்களின் மேற்சதுரங்களின் மீதமர்ந்துள்ள போதிகைகளின் கைகள் பக்கங்களில் கிளைத்து, விரிகோணத்தில் மேல் திரும்பி உத்திரம் தாங்குவனவாய்க் காட்டப்பட்டுள்ளன. இக்கைகளின் கீழ்ப் பகுதிகளைவிட மேற்பகுதிகள் நீளமாக அமைந்துள்ளன. தரங்க எழுச்சிகளாலான இப்போதிகைக் கைகளில், தரங்கங்களின் நடுவே பட்டையொன்று முழு நீளத்திற்குமாய்க் காட்டப்பட்டுள்ளது. தரங்க எழுச்சிகளுள், கீழ்க்கை மேற்கையாகத் திரும்பும் இடத்திலுள்ள எழுச்சி மட்டும் அளவில் பெரியதாகக் காட்டப்பட்டுள்ளது. மேற்கு முழுத் தூணில் மட்டும் இப்பேரெழுச்சியை ஒட்டி, வடமுகத்தில், பக்கத்திற்கொன்றாக இரு சுருள்கள் காட்டப்பட்டுள்ளன. இவை போன்ற சுருள்கள் மலையடிக்குறிச்சிக் குடைவரை, திருச்சிராப்பள்ளி மேல் குடைவரை முதலிய பாண்டியர், பல்லவர் குடைவரைகள் சிலவற்றிலும் காணப்படுகின்றன. மேற்கு அரைத்தூண் போதிகைக் கையின் மேற்பகுதி தென்புறத்தே பாதிக்கு மேலாகச் சிதைந்துள்ளது.

போதிகைக் கைகள் தாங்கும் உத்திரத்தை அடுத்து முகப்பின் முழு நீளத்திற்கும் வாஜனம் ஓடுகிறது. இவ்வாஜனம் பக்கச் சுவர்களையும் அரைத்தூண்களையும் ஒட்டி முகப்புத் தரை வரை இறக்கப்பட்டுள்ளது. வாஜனத்திற்கு மேலே அமைந்துள்ள வலபி வழக்கமான வளைமுகமின்றி வாஜனம் போலவே சதுரப்பட்டியாய் அமைந்துள்ளது. மேற்கு மூலையில் இது வாஜனத்திலிருந்து பிரிக்கப்படாத நிலையில் ஒரே பட்டியாக விடப்பட்டுள்ளது. பாறையின் முகப்பு வடிவமைக்கப்படாத கபோதமாக

ஒழுங்கற்ற பரப்புடன் காணப்படுகிறது. இதற்குச் சற்று மேலே உள்ள பாறைப்பகுதி குடைவரையின் முழு நீளத்திற்குமாய் நெடுக அகழப்பட்டுள்ளது. இதுபோன்ற மற்றொரு அகழ்வு, முதல் அகழ்வுக்குச் சற்று மேலுள்ள பாறைப்பகுதியில் காணப்படுகிறது. இவை குடைவரை முன் பந்தலிட வாய்ப்பாக அகழப்பட்டவையாகலாம். பக்கச் சுவர்களின் மேற் பகுதிகளிலும் முகப்பிற்கு முன்னுள்ள தரையின் கிழக்கு, மேற்கு விளிம்புகளிலும், நடுவிலும் காணப்படும் பள்ளங்கள் இக்கருத்திற்கு வலிமை சேர்க்கின்றன.

அரைத்தூண்களையொட்டி வெளிப்பக்கமாய் விரியும் பக்கச் சுவர்கள், கிழக்கில் 64செ.மீ. அகலமும் மேற்கில் 1.70மீ. அகலமும் கொண்டுள்ளன. பெருமளவு சமன் செய்யப்பட்ட பரப்புடன் காணப்படும் இச்சுவர்களின் கீழ் விளிம்பையொட்டியே முகப்புக்கு முன்னுள்ள தரையமைப்பு அமைந்துள்ளது. நான்கு தூண்களால் மூன்று வாயில்களைப் பெற்றுள்ள இக்குடைவரையின் முகப்புத் தரையும் நன்கு சமன் செய்யப்பட்டுள்ளது. இத்தரையும், முகப்பையடுத்து அமைந்துள்ள முகமண்டபத்தின் தரையும் ஒரேநிலையில் உள்ளன.

## முகமண்டபம்

5.91மீ. நீளமும் 3.13மீ. அகலமும் உள்ள முகமண்டபத்தின் கிழக்குச் சுவரில் ஒரு கோட்டமும், தெற்குச் சுவரில் மூன்று கோட்டங்களும் உள்ளன. மேற்குச் சுவரின் நடுப்பகுதியில் கருவறை குடையப்பட்டுள்ளது. அதன் இருபுறத்தேயும் உள்ள கோட்டங்களில் வாயிற்காவலர்கள் உள்ளனர். முகமண்டபத்தின் நடுப்பகுதியில் குடைவரையோடு உருவான நந்தி, முழுவதும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. முகமண்டபக் கூரையில் முற்பாண்டியரின் ஓவியச் சிதறல்கள் காணப்படுகின்றன. கூரையையொட்டி நாற்புறமும் வாஜனம் ஓடுகிறது.

## கிழக்குச் சுவர்

கிழக்குச் சுவரில் முகமண்டபத் தரையிலிருந்து 39செ.மீ. உயரத்தில் கம்பொன்று காட்டப்பட்டுள்ளது. இதன்மீது பட்டிகை போன்ற உறுப்பும் அதற்கு மேலொரு கம்பும் செதுக்கப்பட்டுள்ளன. தரையிலிருந்து இக்கம்பு வரையுள்ள பகுதியைத் துணைத்தளம் போன்றதோர் அமைப்பாகக் கருதலாம். மேற்கம்புக்கு மேல் வெறுமையாக உள்ள கிழக்குச் சுவரின் நடுப்பகுதியில் 1.96மீ. உயரமும் 1மீ. அகலமும் கொண்ட கோட்டமொன்று அகழப்பட்டுள்ளது. மேற்கம்பையே தளப்பரப்பாகக் கொண்டுள்ள இக்கோட்டத்தில் நான்முகன் இடம்பெற்றுள்ளார். இக்கோட்டத்திற்கு அணைவுத் தூண்கள் இல்லாத

போதும், கோட்டத்தின் மேற்பகுதி போதிகைக் கைகளைப்போல் வடிவமைக்கப் பட்டுள்ளது.

## தெற்குச் சுவர்

முகமண்டபத்தின் தெற்குச் சுவரில் காணப்படும் கீழ்க்கம்பு தரையிலிருந்து 38.5செ.மீ. உயரத்தில் வெட்டப்பட்டுள்ளது. கிழக்குச் சுவரில் உள்ளாற் போலவே இதன் மீது பட்டிகை போன்ற உறுப்பும் அதற்கு மேல் ஒரு கம்பும் காட்டப்பட்டுள்ளன. சுவரின் இப்பகுதியைத் துணைத்தளம் போன்றதோர் அமைப்பாகக் கொள்ளலாம். மேற்கம்பிலிருந்து எழுவது போலச் செதுக்கப்பட்டிருக்கும் நான்கு அரைத்தூண்களுள் இரண்டு, சுவரின் தொடக்க மற்றும் முடிவுப் பகுதிகளில் அமைய, ஏனைய இரண்டும் சுவரின் நடுப்பகுதியில், முகப்பு முழுத்தூண்களுக்குப் பின் நிற்பவை போல உருவாக்கப்பட்டுள்ளன. நடுவிலுள்ள அரைத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலிருக்க, ஓரத்தூண்கள் நான்முகமாக உள்ளன. இவ் ஓரத்தூண்களின் இடைப்பகுதியில் கட்டுப் போன்ற பகுதியை உருவாக்கும் முயற்சி தொடங்கப்பட்டதற்கான அடையாளம் தெரிகிறது. நடு அரைத் தூண்களின் கீழ்ச்சதுரங்கள் பாதியளவே உள்ளன. முழுமையான நிலையிலுள்ள மேற்சதுரங்களின் வடமுகப்புகுதிகளில் அழகிய தாமரைப் பதக்கங்கள் காட்டப்பட்டுள்ளன.[1] கீழுள்ள அரைச்சதுரங்களின் முகங்களில் அரைப்பதக்கங்கள்.

மேற்சதுரங்களின் மேலமர்ந்துள்ள போதிகைகளின் கைகள் பக்கங்களில் கிளைத்து, விரிகோணத்தில் மேல் திரும்பி உத்திரம் தொட, உத்திரத்திற்கு மேல் கூரையை ஒட்டிய வாஜனம். இப்போதிகைக் கைகளுள், சிலவற்றில் கீழ்க்கைகள் நீளமாகவும், சிலவற்றில் மேற்கைகள் நீளமாகவும் உள்ளன. இத்தூண்களின் இருப்பால் தெற்குச் சுவர் மூன்று கோட்டங்களாக்கப் பட்டுள்ளது. கிழக்கிலிருந்து மேற்காக இக்கோட்டங்களில் சிவபெருமானின் ஆடல்தோற்றமும் விஷ்ணுவின் நின்றகோலமும் பிள்ளையாரின் அமர்ந்த வடிவமும் இடம்பெற்றுள்ளன.

தெற்குச் சுவர் முழுவதும் முற்பாண்டியர் காலத்தே ஓவியங்கள் தீட்டப்பெற்றிருக்கவேண்டும். இப்போது சிவபெருமானுக்கு இடப்புறத்தேயுள்ள அரைத்தூணின் போதிகைகள், அவற்றிற்கு மேலுள்ள உத்திரப்பகுதி, கூரையின் கிழக்கு மற்றும் நடுப்பகுதிகள் ஆகியவற்றில்தான் அடையாளப் படுத்தக்கூடிய ஓவியத் துணுக்குகள் காணப்படுகின்றன. குறிப்பாக இடப்புற அரைத்தூணின் வலப் போதிகை, அதையொட்டியுள்ள உத்திரம் ஆகியவற்றின் மீது காணப்படும் ஓவியச் சிதறல்களைக் கூறலாம்.

## மேற்குச் சுவர்

முகமண்டபத்தின் மேற்குச் சுவர் பிரதிபந்தத் தாங்குதளத்தின்[2] மீது எழுமாறு அமைக்கப்பட்டுள்ளது. நான்கு நான்முக அரைத்தூண்களால் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இச்சுவரின் நடுப்பகுதி கருவறை வாயிலாக அமைய, அதன் இருபுறமும் உள்ள பகுதிகள் கோட்டங்களாக அகழப் பட்டுள்ளன. கருவறையின் முன்னால் வாயிலையொட்டி அமைந்திருந்த படிக்கட்டுகள் முற்றிலுமாய்ச் சிதைத்து அழிக்கப்பட்ட நிலையில் இப்போது அவையிருந்த சுவடு மட்டுமே காணப்படுகிறது. கருவறையின் இருபுறத்தும் உள்ள கோட்டங்களின் கீழே 58செ.மீ. உயரத்திற்கு ஜகதி, உருள்குமுதம், பிரதிவரி என அமைந்துள்ள பிரதிபந்தத் தாங்குதளம் காணப்படுகிறது. கோட்டங்களில் பக்கத்திற்கொருவராக வாயிற்காவலர் இருவர் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் தாள் பொருத்தி நிற்கும் தளங்களாகத் தாங்குதளத் துணைக்கம்பின் மேற்பரப்பு அமைந்துள்ளது. தென்கோட்டம் 85செ.மீ. அகலமும் 1.88மீ. உயரமும் கொண்டிருக்க, வடகோட்டம் 76செ.மீ. அகலமும் 1.96மீ. உயரமும் கொண்டமைந்துள்ளது.



கருவறை

## கருவறை

96செ.மீ. அகலமும் 1.66மீ. உயரமும் கொண்டமைந்துள்ள கருவறை வாயிலின் இருபுறமும் அமைந்துள்ள நான்முக அரைத்தூண்கள் நிலைக்கால்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. வாயிற்காவலர் கோட்டங்களுக்கு இவை ஒருபக்கத் தூண்களாக அமைய, சுவர்த் திருப்பங்களில், வலப்புறமும் இடப்புறமுமாய் அமைந்துள்ள நான்முக அரைத்தூண்கள் மறுபக்கத் தூண்களாய் அமைந்துள்ளன. இந்நான்கு தூண்களின் மேலமர்ந்துள்ள போதிகைகளின் கைகள் உத்திரம் தாங்குகின்றன. விரிகோணத்தில் திரும்பும் இக்கைகளின் கீழ்ப்பகுதிகள் மேற்பகுதிகளைவிட நீளமாகக் காட்டப்பட்டுள்ளன.

கிழக்கு நோக்கிய கருவறை வாயிலுக்கு மேலும் கீழும் நிலைகள் காட்டப்பட்டுள்ளன. 1.80மீ. உயரமுள்ள கருவறை, தென்வடலாக 2.44மீ. நீளமும் கிழக்கு மேற்காக 2.25மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. கருவறையின் நடுவே குடைவரைப் பணியின் ஓரங்கமாக மலைப் பாறையிலேயே உருவாக்கப்பட்ட லிங்கம் காட்சியளிக்கிறது. உபானம், ஜகதி, உருள்குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு என அமைந்த சதுர ஆவுடையார் மீது நெடிய பருத்த லிங்கபாணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. லிங்கத்தின் அருகே கருவறையின் தரையில் வடபுறத்தில், முழுக்காட்டு நீர் பாய்வதற்காகப் பள்ளமொன்று வெட்டப்பட்டுள்ளது. கருவறையின் தரையை நன்கு சமன் செய்திருக்கும் சிற்பாசிரியர்கள், சுவர்களையும் கூரையையும் அப்படியே விட்டுள்ளனர்.

## சிற்பங்கள்

1. வாயிற்காவலர்கள்

கருவறை வாயிலின் இருபுறமும் உள்ள கோட்டங்களில் பக்கத்திற்கு ஒருவராய் நிற்கும் வாயிற்காவலர்கள் இருவருமே கருவறைக்காய்த் திரும்பிய கால்களைக் கொண்டிருந்த போதும் அவர்தம் இடுப்புக்கு மேற்பட்ட பகுதிகள் கிழக்குப் பார்வையாகவே[3] உள்ளன. ஆடை, அணிகலன்கள் இருவருக்கும் ஏறத்தாழ ஒன்று போலவே உள்ளன. மேற்கைகளில் நாககங்கணம், மணிக்கட்டுகளில் வளைகள், செவிகளில் பனையோலைக் குண்டலங்கள், கழுத்தில் பட்டையான கழுத்தணி அணிந்துள்ள இவர்தம் இடைப்பகுதியில் சிற்றாடையும், அதை இடுப்பிலிருத்த அரைப்பட்டிகையும் காட்டப்பட்டுள்ளன. இந்தச் சிற்றாடை மரமேறுவோர் இடையாடை போல் மடித்துக் கட்டப்பட்ட நிலையில், முழங்காலுக்கு மேல் நன்கு வரையறுக்கப்பட்ட கீழ் விளிம்புடன் காட்சியளிக்கிறது. இந்தச் சிற்றாடையின் குறுக்கே இடப்புறமிருந்து வலப்புறமாய்ப் பலமடிப்புகளாய் மடித்த துண்டொன்றைக் கட்டி அதன் முடிச்சுகள் பக்கவாட்டில் தொங்குமாறு போல அணிந்துள்ளனர்.



வலப்புற வாயிற்காவலர்

செவல்பட்டியில் உள்ள குடைவரைக் காவலர்கள் இத்துண்டிற்குப் பதிலாக மணிச்சரம் அணிந்திருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அடர்ந்த மீசையும்,

தோள்களில் தவழும் கனத்த சடைக்கற்றைகளுமாய் நிற்கும் இவர்தம் மார்பில் முப்புரிநூலும், மார்புக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் உதரபந்தமும் காட்டப்பட்டுள்ளன.

தென்காவலர் கரண்ட மகுடராய் வலக் கையை ஊரு அஸ்தமாய்க் கொண்டு, இடக் கையை எதையோ பிடிப்பது போன்ற மெய்ப்பாட்டில் கடகமாய்க் கொண்டுள்ளார். இவர் பாதங்கள் இரண்டும் ஒன்றன் பின் ஒன்றாய், ஒன்றையொன்று தொட்டநிலையில் கருவறை நோக்கித் திருப்பப் பட்டுள்ளன. சடைமகுடராய்க் காட்சிதரும் வடபுறத்தார் உருள்பெருந்தடி யொன்றை வலத் தோளின் கீழே நிறுத்தி, வலக் கையை அதன் மீது தாங்கலாய் நெகிழவிட்டுள்ளார். இடக் கை தடியைப் பற்றியுள்ளது. இவரின் இரு பாதங்களும் கருவறை வாயிலுக்காய்த் திரும்பியிருக்க வலப் பாதம் உத்கட்டிதத்தில் உள்ளது.

2. நான்முகன்

1மீ. அகலமும் 1.96மீ. உயரமும் கொண்டுள்ள கிழக்குச் சுவர்க் கோட்டத்தில் நின்றகோலத்தில் காட்சி தரும் நான்முகனின் வல முன் கை கடகத்திலிருக்க, இட முன் கை சுரைக்குடுக்கையைப் பற்றியுள்ளது.[4] பின் கைகளில் இடக் கையில் உள்ள பொருள் ஓலைச்சுவடியாக இருக்கலாம். வலப்புறம் உள்ள பொருள் மலர் மொட்டாகலாம்.[5] சடைமகுடராய்ப் பூட்டுக் குண்டலங்களுடன், இடுப்பில் கச்சம் வைத்துக் கட்டிய கனத்த பட்டாடையணிந்து நிற்கும் நான்முகனின் மார்பை அலங்கரிக்கும் முப்புரிநூல், இடத் தோளிலிருந்து வலப்புறம் நோக்கி இறங்கி, வல மேற்கை மீதேறிப் பின்னோக்கிச் செல்கிறது. தமிழ்நாட்டில் இவ்வமைப்பு காலத்தால் முற்பட்ட பல்லவர், பாண்டியர் காலச் சிற்பங்களில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டுகளில் பட்டையான வளைகளும் கழுத்தில் அட்டிகையும் அணிந்திருக்கும் இவரது இடுப்பாடை முடிச்சுகள், பக்கவாட்டில் கனத்த தொங்கல்களாகக் காட்டப் பட்டுள்ளன. இவ்வாடையை இடுப்பிலிருத்த அரைப்பட்டிகை யொன்று ஆடையின் மேல் நன்கு இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது. வயிற்றுக்கும் மார்புக்கும் இடைப்பட்ட பகுதியில் உதரபந்தம்.

3. ஆடும் அண்ணல்

தென்சுவரின் முதற் கோட்டத்தில் சிவபெருமானின் ஆடல் தோற்றம் செதுக்கப்பட்டுள்ளது. 1.86மீ. உயரமும் 1.41மீ. அகலமும் கொண்டுள்ள இக்கோட்டத்தில் நடுநாயகமாகச் சிவபெருமான் ஆடல் நிகழ்த்த, அவரது இருபுறமும் பூதங்கள் இரண்டு, பக்கத்திற்கொன்றாகக் காட்டப்பட்டுள்ளன.

இங்கும் மேற்கம்பின் மேற்பரப்பே ஆடுதளமாக்கப்பட்டுள்ளது. இரு பாதங்களையும் பார்சுவத்தில் சற்று முன் பின்னாக நிறுத்தி, வலப் பாதத்தை உத்கட்டிதமாக்கிச் சதுர கரணத்தில் ஆடும் சிவபெருமானின் இவ்வாடல் அமைப்பு சிறப்புக்குரியதாகும். சடைமகுடராய்ச் செவிகளில் கனமான பனையோலைக் குண்டலங்கள் கொண்டு காட்சிதரும் இப்பெருமானின் முப்புரிநூலும் உதரபந்தமும் எளிமையாக உள்ளன. நெற்றிப் பட்டமும், பக்க முகப்புகளும் அலங்கரிக்கும் சடைமகுடத்தின் வலப்புறத்தே பெரிய அளவிலான மண்டையோடும், இடப்புறத்தே பிறையும் காட்டப்பட்டுள்ளன. இடையில் நன்கு மடித்துக் கட்டப்பட்ட சிற்றாடையும், அதன்மீது அரைப் பட்டிகையும் இருக்க, இரு தொடைகளையும் வளைத்துச் சுற்றியவாறு பாம்பொன்றும் உள்ளது. மேற்கைகளில் பாம்புக் கங்கணங்களும், மணிக்கட்டுகளில் பட்டை வளைகளும் கழுத்தில் அட்டிகையும் அணிந்துள்ள சிவபெருமானின் வல முன் கை முப்புரிநூலருகே அதைப் பிடித்திருப்பது போல் கடகமாய்[6] இருக்க வலப் பின் கையில் மலர்.[7] இடக் கைகளுள் முன் கை அர்த்தரேசிதமாய் வீசப்பட்டுள்ளது. இடப் பின் கையில் நாட்டிய வேதம். செவல்பட்டிக் குடைவரையிலுள்ள சிவபெருமானின் ஆடல்தோற்றமும் வல மேற்கையில் நாட்டிய வேதம் கொண்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதுபோல் நாட்டிய வேதத்துடன் காணப்படும் சிவ ஆடல் சிற்பங்கள் பாண்டியர் பகுதியிலேயே காணப்படுகின்றன என்பது சிறப்புக்குரிய செய்தியாகும்.

ஒரு காலத்தே இத்தோற்றம் வண்ணப்பூச்சு கொண்டிருந்ததைச் சுட்டும் எச்சங்களாய்ச் சிவபெருமானின் திருமேனி முழுவதும் சிவப்பு மற்றும் கருப்பு வண்ணக் கோடுகள் காணப்படுகின்றன. முகப் பகுதியிலிருக்கும் செங்கோடுகள் இறைவன் திருமுக அழகை நன்கு வெளிப்படுத்துமாறு அமைந்துள்ளன.

சிவபெருமானின் இருபுறத்தும் உள்ள கணங்களுள் வலப்புறக் கணத்தின் பெரும்பகுதி உடல் சிதைக்கப்பட்டுள்ளது. அதன் கால்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. நின்றகோலத்தில் காணப்படும் இடப்பூதம் கரண்ட மகுடம் அணிந்து செவிகளில் பனையோலைச் சுருள்களுடன் காட்சியளிக்கிறது. இடக் கையில் ஏந்தி இடத் தோளில் சாத்தியிருக்கும் நரம்பிசைக் கருவியை, வலக் கைக் கோலால் இயக்கும் இக்கணம் இறைவனைத் தலை உயர்த்திப் பார்த்தபடியே பூரித்துநிற்கிறது. இதன் கையிலுள்ள இசைக்கருவி பல்லவர், முற்சோழர் கால இறையாடல் சிற்பங்களில் காணப்படுகிறது. நரம்புக் கருவியான இது இந்நாளைய வயலின் போல ஆனால் மிக எளிய அமைப்புடன் அமைந்துள்ளது. இதை அறிஞர்கள் சிரட்டைக் கின்னரி என்கின்றனர்.[8]

**4. திருமால்**

1.90மீ. உயரமும் 1.40மீ. அகலமும் உள்ள இரண்டாம் கோட்டத்தில் திருமாலின் நின்றகோலம் காட்டப்பட்டுள்ளது. கோட்டத்தில் நடுநாயகமாக நிற்கும் பெருமாளின் இருபுறத்தும், பக்கத்திற்கொன்றாக குள்ளச் சிறு கணங்கள் இரண்டு காட்டப்பட்டுள்ளன. இக்கணங்கள், மேற்கம்பின் மேற்பரப்பையே தளமாகக் கொண்டு நிற்க, திருமால் பட்டிகையின் மீது பாதங்கள் பதித்து நிற்கிறார். இதற்கு வாய்ப்பாக மேற்கம்பு கணங்களோடு நின்றுவிடுகிறது. இங்குள்ள சிற்பங்களுள் திருமாலுக்கு மட்டுமே இச்சிறப்புத் தளம் கிடைத்துள்ளது. கச்சம் வைத்துக் கட்டிய கனத்த இடையாடையுடன் சமநிலையில் நிற்கும் பெருமாளின் பின் கைகளில் சங்கும் சக்கரமும்[9] இருக்க, இட முன் கை ஊருஅஸ்தமாய் இடத் தொடையில் அமர்ந்துள்ளது. வலக் கை குழிந்த மெய்ப்பாட்டில் வலத் தொடையருகே காட்டப்பட்டுள்ளது.[10] இடையாடையின் அரைப்பட்டிகை, உதரபந்தம் ஆகியன நன்கு செதுக்கப்பட்டுள்ளன. தொடைகளைச் சுற்றியோடும் சுருள்துண்டு கனமாகக் காட்டப்பட்டுள்ளது. முப்புரிநூல் வல முழங்கை மீதேறிப் பின் செல்கிறது. மகர குண்டலங்களும், கங்கணங்களும், பட்டை வளைகளும், கழுத்தணியும் கொண்டு காட்சிதரும் இவரின் கிரீட மகுடம் சிறக்கச் செதுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னால் தலைச்சக்கரம் காட்டப்பட்டுள்ளது. மகுடத்தின் முகப்பிலும் பக்கங்களிலும் சிறுசிறு திறப்புகள் காட்டப்பட்டிருப்பது புதுமையாக உள்ளது.

கணங்கள் இரண்டும் மலருடன் திருமாலை நோக்கி வணங்கிய நிலையில் நின்றபோதும் முகத்தைப் பார்வையாளர்களுக்காய்த் திருப்பியுள்ளன. இரண்டுமே கரண்ட மகுடம் அணிந்து, பனையோலைக் குண்டலங்களுடன், இடுப்பில் இறுகக் கட்டிய சிற்றாடையுடன் காட்சி தருகின்றன. தலையின் பக்கங்களில் இரண்டுக்குமே சடைக்கற்றைகள். வலக்கணத்தின் அஞ்சலிக் கைகள் சிதைக்கப்பட்டுள்ளன.

**5. பிள்ளையார்**

1.68மீ. உயரமும் 1.34மீ. அகலமும் கொண்டுள்ள மூன்றாம் கோட்டத்தில் மகாராஜலீலாசனராய்ப் பிள்ளையார் அமர்ந்துள்ளார். மேற்கம்பின் பரப்பிலிருந்து 22செ.மீ. உயரத்தில் தளமொன்று அமைத்து, அதன் மீது பிள்ளையாரை அமர்த்தியுள்ளார்கள். இவரது வலப்புறம் உள்ள அரைத்தூணையொட்டி, எடுக்கப்படாத கற்பகுதியொன்று, சிறு நான்முக அரைத்தூண் போல் காட்சிதருகிறது. வலக் காலைக் குத்துக்காலாய் வைத்து, இடக் காலைத் தளத்தின் மீது மடித்து நீட்டி அமர்ந்திருக்கும் பிள்ளையாரின் இட முன் கை வயிற்றருகே உதரபந்தம் தொட்டபடி இருக்க, வல முன் கை, வல முழங்கால் மேல் மோதகத்துடன் இருத்தப்பட்டுள்ளது. பின் கைகளில்

வலப்புறம் பாசமும்[11] இடப்புறம் கொம்பும்[12] உள்ளன. இடம்புரியாக உள்ள துதிக்கையிலும் மோதகம். இடப்புறம் தந்தமின்றி வலப்புறம் மட்டுமே தந்தம் கொண்டு காட்சிதரும் இவரது தலையைக் கரண்ட மகுடம் அணிசெய்கிறது.



சதுர தாண்டவர்

கங்கணமும், பட்டை வளைகளும் கையணிகளாய் அமையக் கழுத்தில் அணியேதும் காட்டப்படவில்லை. இவரது இடையாடை, அமர்வுக்கு எளிதாய் முழங்காலுக்குக் கீழ் நன்கு இழுத்துச் சுருட்டப்பட்ட நிலையில் உள்ளது.

## ஓவியங்கள்

இக்குடைவரையின் அனைத்துச் சுவர்கள் மற்றும் கூரைப்பகுதி முழுவதும் ஒருகாலத்தில் ஓவியங்கள் இருந்திருக்கவேண்டும். சரியான பராமரிப்பின்மையால் இவற்றுள் பெரும்பகுதி காலப்போக்கில் சிதைந்து அழிந்துவிட்டது. எஞ்சி நிற்கும் ஓவியச் சிதறல்களை மட்டுமே இப்போது பார்க்கமுடிகிறது. குறிப்பாகச் சிவபெருமான் ஆடல் தோற்றத்தின் இடப்புறமுள்ள அரைத்தூண் போதிகை மற்றும் அதன் வலக்கைப் பகுதிகளைக் குறிக்கலாம். கொடிக்கருக்குகளே பல இடங்களில் காணக்கிடக்கின்றன. கருவறை வாயிலுக்கு மேலும், கூரையின் கிழக்குப் பகுதியிலும் நந்திக்கு மேலுள்ள கூரைப் பகுதியிலும் இக்கொடிக்கருக்குகளைப் பார்க்கமுடிகிறது. ஓவியங்கள் பல்வேறு காட்சிகளைச் சித்தரிப்பனவாய் அமைக்கப்பட்டதால், ஒவ்வொரு காட்சியையும் வேறுபடுத்திக் காட்ட கொடிக்கருக்குகள் மற்றும் மலர் அலங்கரிப்புகளால் ஆன செவ்வகக் கட்டங்களை இடையிடையே வரைந்திருக்கிறார்கள். இக்கட்டங்கள் கூரையின் கிழக்குப்பகுதியிலும் முகமண்டப நந்திக்கு மேலான கூரைப்பகுதியிலும் இன்றும் தெளிவாகத் தெரிகின்றன.

தென்சுவர்ப்பகுதியில் உள்ள இரண்டாம் அரைத்தூணின் வலப் போதிகைப் பகுதியில் ஓர் ஓவியக்காட்சி ஓரளவிற்கு முழுமையுற எஞ்சியுள்ளது. இதில் இரண்டு ஆண் வடிவங்கள் காணப்படுகின்றன. முதல் வடிவம் வேட்டுவ உடையில் தாடியும் மீசையுமாய்க் கைகளைச் சண்டையிடும் மெய்ப்பாட்டில் முன்னிறுத்தி நிற்கிறது. முதியவராய்க் காட்சிதரும் இவ்வடிவத்தின் எதிரே மற்றொரு வடிவம் இளமையான தோற்றத்துடன் கணுக்கால் வரையான ஆடையணிந்து, வேட்டுவ வடிவத்துடன் சண்டையிடுமாறு நிற்கிறது. இக்காட்சியைக் கிராதார்ச்சுன கோலமாகக் கொள்ளமுடியும். முதியவரை வேட்டுவக் கோலத்தில் வந்த சிவபெருமானாகவும் இளையவரை அருச்சுனராகவும் காணலாம். சிவபெருமானின் சடைமகுடமும் நெற்றியைச் சுற்றி அணிந்துள்ள பட்டமும் குறிப்பிடத்தக்கன. இவர் இடையில் தோலாடை அணிந்துள்ளார். இளையவர் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். முதியவரின் நீள்செவிகள் வெறுமையாக உள்ளன.

முகமண்டப நந்திக்கு மேலுள்ள கூரைப்பகுதியின் கட்டமிடப்பட்ட செவ்வகப் பகுதியொன்றில் ஆடற்காட்சியொன்று வரையப்பட்டுள்ளது. ஆடவர்



திருமால்

நால்வர் காட்சிதரும் இவ்வாடல் நிகழ்வு பெருமளவு சிதைந்திருந்தாலும் வடிவங்களை ஓரளவிற்கு இனங்காணமுடிகிறது. தெற்குக் கோடியிலுள்ள

ஆண் வடிவம் கழுத்தணியுடன் காணப்படுகிறது. மேலே உயர்ந்து கடக முத்திரையில் காணப்படும் இதன் இடக் கையின் மேற்பகுதியில் கங்கணமும் கீழ்ப்பகுதியில் வளைகளும் உள்ளன. இதையடுத்துள்ள சற்று உயரமான ஆண் வடிவம் பத்ர குண்டலங்களுடன், வலக் கையை நெகிழ்கையாக்கி, இடக் கையை வலப்புறமாய் வீசியுள்ளது. இடக் கை முழுமையாகத் தெரியாதிருந்தாலும், வீச்சு கொண்டு இதை வேழக் கையாக ஊகிக்கலாம். இக்கைகளில் அழகிய வளைகள் காணப்படுகின்றன. கழுத்தில் ருத்திராக்க மாலை; மார்பில் முப்புரிநூல். அடுத்துள்ள ஆண் வடிவம் ருத்திராக்க மாலையணிந்து மத்தளம் வாசிக்கிறது. மத்தளம் இதன் தோளில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது. வலக் கை மத்தளம் அடிக்கும் மெய்ப்பாட்டில் உள்ளது. இதன் செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள். இவையிரண்டிற்கும் இடையில் ஒரு வடிவத்தின் தலைப்பகுதி மட்டும் தெரிகிறது.

நான்முகன் கோட்டத்திற்கு மேலுள்ள கூரைப்பகுதி ஓவியச் சிதறல்களில், வடகிழக்கு மூலையில் விலங்கொன்றின் மேல் அமர்ந்த நிலையில் ஓர் ஆண் வடிவம் வரையப்பட்டுள்ளது. இந்த ஆண் வடிவத்தின் தலைப்பகுதி அழிந்துவிட்டது. கோடு போட்ட சிற்றாடையை இடையில் அணிந்திருக்கும் இவ்வடிவத்தின் கால்கள் திண்மையாகக் காட்டப்பட்டுள்ளன. இதன் வலக் கை விலங்கின் கழுத்துப்பகுதியைப் பிடித்துள்ளது. இடக் கை கடிஅஸ்தமாக உள்ளது. விலங்கின் கால்கள் விரைந்து செல்வது போலக் காட்டப்பட்டுள்ளன. வால் நீளமாகப் பின்னங்கால்களுக்கிடையில் காட்டப்பட்டுள்ளது. விலங்கின் முகம் சிதைந்திருந்த போதும் வாலின் அமைப்புக் கொண்டு இதைக் குதிரையாக ஊகிக்கலாம்.

இதற்குச் சற்று மேலேயுள்ள ஓவியப்பகுதியில் பாய்ந்து செல்லும் விலங்கொன்றின் மீது இருவர் அமர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. முன்புறம் அமர்ந்துள்ளவரின் இடக் காலும், பின்புறம் அமர்ந்துள்ளவரின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதியும் நன்கு காணுமாறு உள்ளன. இவரது இடக் கையில் கங்கணம் உள்ளது. விலங்கின் வயிற்றுப்பகுதியும், பாய்ச்சலில் உள்ள பின்னங்கால்களும் தெளிவாகத் தெரிகின்றன. இதன் வால்பகுதிக்குச் சற்று முன்னதாக இரண்டாமவர் அமர்ந்துள்ளார். முதலாமவர் கழுத்துப் பகுதிக்குச் சற்றுப் பின்தள்ளி அமர்ந்துள்ளார். விலங்கின் முகமோ, இவ்விருவரது தலைப்பகுதிகளோ காணுமாறு இல்லை.

இவை தவிர குடைவரையின் பிற பகுதிகளிலுள்ள ஓவியச் சிதறல்களை இன்னவையென அடையாளம் காணக்கூடவில்லை. சிதைந்த வண்ணப்பூச்சுகள் மட்டுமே ஆங்காங்கே திட்டுத்திட்டாகக் காணப்படுகின்றன.

## கல்வெட்டு

முகப்புப் பகுதியிலுள்ள கிழக்கு முழுத்தூணின் மேற்கு முகக் கட்டுப்பகுதியில் பாண்டிய மன்னரான ஸ்ரீவல்லபதேவரின் கல்வெட்டொன்று காணப்படுகிறது. பாகனூர்க் கூற்றத்துச் சோழாந்தகச் சதுர்வேதி மங்கலத்திலிருந்த அரண்மனையினுள், அழகிய பாண்டியன் கூடத்தில், பாண்டியராசன் பள்ளிக் கட்டிலில் மன்னர் வீற்றிருந்தபோது திருவாய் மொழிந்தருளிய ஆணையொன்று இங்குக் கல்வெட்டாகியுள்ளது. துகவூர்க் கூற்றத்து வீரநாராயண மங்கலத்துச் சபையாரையும், வாரணவாசிபுரத்து நாட்டாரையும் தொடர்புபடுத்தி வழங்கப்பட்டுள்ள இவ்வாணை, மன்னரளித்த நிலக்கொடையொன்றைச் சுட்டுகிறது. ஆங்காங்கே எழுத்துக்கள் சிதைந்துள்ளதாலும் இறுதி வரிகள் படிக்க முடியாத அளவு பொரிந்துபோய்விட்டதாலும் நிலக்கொடையின் காரணத்தையும் நிலமளிக்கப்பட்ட ஊரின் முழுப்பெயரையும் அறியக்கூடவில்லை.

## இரண்டாம் குடைவரை

மலையின் தென்முகத்தில் ஒரு குடைவரை காணப்படுகிறது. முற்றுப் பெறாத நிலையில் உள்ள இதன் முகப்பில் இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் நான்முகத் தூண்களாய் வெட்டப்பட்டுள்ளன. போதிகைகள், உத்திரம் ஆகியன வரையறுக்கப்படவில்லை. வாஜனம் மட்டுமே கபோதப்பகுதியை ஒட்டிக் காட்டப்பட்டுள்ளது. பாறையின் மேற்பகுதியே கபோதமாய் அமைந்துள்ளது. குடைவரையின் மேற்குப்பகுதியில் முகப்பு அரைத்தூணையடுத்துப் பெருஞ் சுவர்ப்பகுதியொன்று செதுக்கப்பட்டு அதில் சிற்பமொன்றும் முயற்சிக்கப்பட்டுள்ளது.

முகப்பையடுத்துள்ள முகமண்டபப் பணி நிறைவடையாமற் போனதால் ஆங்காங்கே பாறைகள் அப்படியே விடப்பட்டுள்ள நிலையைக் காணமுடிகிறது. மையப்பகுதியில் பாறை உடைக்கப்பட்டுள்ள போதும் பெரும் பகுதி அகற்றப்படாமையின் கருவறைக்கான முயற்சிகள் தொடங்கப்படாமலேயே பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. பாறைச்சுவரின் ஒரு பகுதியில் காணப்படும் பிளவே இப்பணி நிறுத்தப்பட்டமைக்கான காரணம் போலும்.

## ஏற்புக்கோடல்

இக்கட்டுரைக்கான களஆய்வின்போது உடனிருந்து உதவிய சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியின் (தன்னாட்சி) வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் சீ. கீதா,

மு. நளினி, துறைத்தலைவர் பேராசிரியர் கோ. வேணிதேவி, மதுரை ஆய்வாளர் திருமதி. வாணிசெங்குட்டுவன் ஆகியோர்க்கும், குடைவரைக் காப்பாளர் திரு. டி. அகஸ்டின், விருந்தோம்பிய அவரது குடும்பத்தார் ஆகியோர்க்கும் இக்கட்டுரை ஆசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

## குறிப்புகள்

1. இவற்றைத் தாமரையிதழ்கள் என்கிறார் தி. இராசமாணிக்கம். நெல்லைக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, 1980, பக். 18.
2. இதைப் பாதபந்த அதிட்டானமாகவும் கொள்ளலாம். ஆனால், ஜகதி, உருள்குமுதம், கம்புகளோடு கூடிய கண்டம், பட்டிகை என்றமைந்துள்ள இத்தாங்குதளத்தின் கண்டப்பகுதியில் தூண்களுக்குரிய பாதங்களுக்கிடையில் பிரதிமுகத்திற்குரிய செதுக்கப்படாத வடிப்புகளும் சிறுசிறு செவ்வகங்களாய்க் காட்டப்பட்டிருப்பதால் இக்கட்டுரையாசிரியர்கள் இதைப் பிரதிபந்தத் தாங்குதளமாகவே கொள்கின்றனர்.
3. தி. இராசமாணிக்கம் தென்புறக் காவலர் மேற்கு நோக்கிப் பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மு.கு. நூல், பக். 17.
4. இவ்விரு கைகளும் இடையில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார் தி. இராசமாணிக்கம். மு.கு. நூல், பக். 18.
5. இது அக்கமாலையாக இருக்கலாம் என்பார் சி. சிவராமமூர்த்தி. Kalugumalai and Early Pandyan Rock-cut Shrines, N.M. Tripathi pvt. Ltd., Bombay, 1961. p. 30.
6. இதை மிருகசீர்ஷம் என்பார் சி. சிவராமமூர்த்தி, மு.கு. நூல், பக். 29.
7. இதை டமருகம் என்கிறார் சி. சிவராமமூர்த்தி, மு.கு. நூல், பக். 29.
8. வீ.ப.கா. சுந்தரம், தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி-2, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, 1994, பக். 129.
9. சக்கரம் சிதைந்துள்ளபோதும் அடையாளம் காணமுடிகிறது.
10. இக் கை இடையிலிருப்பதாகக் குறிப்பிடுகிறார் தி. இராசமாணிக்கம். மு.கு. நூல், பக். 19.
11. இதை ஏடாகக் காண்கிறார் தி. இராசமாணிக்கம். மு.கு. நூல், பக். 19.
12. இதை அங்குசமாகக் காண்கிறார் சி. சிவராமமூர்த்தி. மு.கு. நூல், பக். 28.

# 11. ஞான உக்ர தட்சிணாமூர்த்தி வடிவம்

த. சந்திரகுமார்

குரு வடிவம் தாங்கி சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகியோருக்கு வேதாகம புராணங்களையும் உபநிடத உண்மைகளையும் உபதேசித்தவராகவும் சாந்தம் மிகக் கொண்டவராகவும் தட்சிணாமூர்த்தி கருதப்படுவர். இவர் யோக வடிவம் தாங்கி ஞானத்தை வழங்குபவர். தென்முகக் கடவுள் என்று அழைக்கப்படுவர். தட்சணம் என்றால் குணம் என்ற பொருளிலும் இவரைக் கொள்வர். இவரை ஞான, வியாக்யாந, யோக, கான தட்சிணாமூர்த்தி என்று நான்கு பெரும் வடிவங்களாகக் கொள்வர். மேலும் துணையுடன் கூடிய தாம்பத்ய தட்சிணாமூர்த்தி எனவும், அர்த்தநாரீசுவர வீணாதர தட்சிணாமூர்த்தி எனவும், நந்தியின் மீதமர்ந்த ரிஷபாரூட தட்சிணாமூர்த்தி எனவும், சம்ஹார அல்லது உக்ர அல்லது ஞானருத்ரா தட்சிணாமூர்த்தி போன்ற வடிவங்களாகவும் கொள்வர்.[1] இவற்றுள் அர்த்தநாரீசுவர வீணாதர தட்சிணாமூர்த்தி கர்நாடக மாநிலத்திலுள்ள பாதாமி குடைவரைக் கோயிலிலும், திருவாஞ்சியம் கோயில் 'இறைவன் விமானத்திலும் (சுதைச் சிற்பம்) (நாராயணசுவாமி, 1991 : 147), தாம்பத்ய தட்சிணாமூர்த்தி சித்தூர் மாவட்டத்திலுள்ள (ஆ.மா) சுருட்டப் பள்ளியிலும் (13-ஆம் நூற்றாண்டு), திருப்பனந்தாள் அருணஜடேசுவரர் கோயில் மேற்குக் கோபுரத்திலும் (நாராயணசுவாமி, 1991 : 146-7), தஞ்சாவூர் பாலதண்டாயுதபாணி கோயிலிலுமுள்ளன (நாராயணசுவாமி, 1991 : 70, சந்திரகுமார் 1994 : 107-11). ரிஷபாரூட தட்சிணாமூர்த்தி குவாலியர் அருங்காட்சியகத்தில் (மத்திய பிரதேசம்) உள்ளது. ஆனால் சம்மார தட்சிணாமூர்த்தி வடிவம் எங்கும் காணப்படவில்லை என்பதனைக் கருத்திற் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.


சம்மார தட்சிணாமூர்த்தியின் பின்புலமாக புராணக் கதைகள் விளங்குகின்றன. பார்வதியின் தந்தையாகிய தட்சன் தான் நடத்திய யாகத்தில் மருமகனை அழைக்காமல் சிறுமைப்படுத்தியதால், வீரபத்திரரை ஏவி யாகத்தை அழிக்கச்செய்கிறார் சிவபெருமான். இதனைத் தொடர்ந்து சிவ-தாட்சாயணி பிணக்கு ஏற்படுகிறது. சிவன் கடும் தவத்தை மேற்கொள்கிறார். தாட்சாயணி இமயவனின் பெண்ணாகப் பிறந்து தவநிலையிலிருக்கும் சிவனுக்குப் பணிவிடை செய்கிறார். இதனிடையில் தாரகாசுரன் தேவர்களுக்குக் கடும் இன்னலை விளைவிக்கிறான். அவனை அழிக்கச் சிவனுக்குப் பிறக்கும் மகனால்தான் இயலுமென்பதால், அவரது தவத்தைக் கலைக்கக் காமனை

ஏவுகின்றனர். காமன் மலரம்பு தொடுக்கிறான். தவம் கலைந்ததனால் வெகுண்டெழுந்த சிவன் மன்மதனை எரித்துச் சாம்பலாக்குகிறார். சிவன் பார்வதியை மணந்து சுப்ரமணியக் கடவுள் தோன்றித் தாரகனை அழிக்கிறார் என்று சிவபுரான ருத்ர சம்கிதை கூறுகிறது.

காமாந்தகமூர்த்தியான சிவனை யோக தட்சிணாமூர்த்திக்குரிய சிற்ப அமைதியுடன் சித்தரிக்கவேண்டும் என்று உத்தரகாமிகாகமம், சுப்ரபேதாகமம், பர்வசரணாகமம் போன்ற ஆகமங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன (ராவ் 1971 : 3 : 148). அவரின் எதிரில் மன்மதன் விழுந்திருப்பது போன்று காட்டப் படவேண்டும் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

சீர்வாநேந்திர சரசுவதியின் பிரபஞ்சசார சாரசங்கிரகம் (பதினேழாம் நூற்றாண்டுப் பதிப்பு, சாஸ்திரி 1963 : 714) என்ற நூல் சம்ஹார தட்சிணாமூர்த்தி பற்றிக் குறிப்பிடுகிறது. சினம்.மிகக் கொண்டவரான சிவன் முதலில் வீரபத்திரரைத் தோற்றுவித்துத் தக்கனை அழித்ததும், சிவ-சக்தி பிணக்கும், சிவன் தவநிலையும், பின்னர் மன்மதனை அழித்து சம்ஹாரம் செய்ததும் கொண்டு சம்ஹார தட்சிணாமூர்த்தி உருவாக்கம்பெற்றது. அதனால் தட்சிணாமூர்த்தி திரிசத நாமாவளி (வரி. 127), மன்மதாந்தகராய என்று சிவனைப் போற்றுகிறது. தன்னைச் சரணடைந்தவர்களுக்கு அதர்மத்தினால் ஏற்படும் இன்னலைப் போக்கவல்லது தட்சிணாமூர்த்தி சகஸ்ரநாம தோத்திரம் (வரி. 62) என்று கூறுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் அமைந்த அரியதோர் சிற்பமொன்று தேவிகாபுரத்திலுள்ள சிவன் கோயில் தூணில் காணப்படுகிறது. கல்லால மரத்தின் கீழ்ப் பக்கவாட்டில் அமர்ந்தநிலையில் யோகபட்டையுடன் வீராசனத்தில் பத்ரபீடத்தில் வீற்றிருக்கிறார் சிவபெருமான். ஆனால் யோகத்திற்குரிய அமைதிநிலை இல்லை. மாறாகக் கண்கள் கனல் பறக்கும் சினத்துடன் உள்ளன. நெற்றிக் கண்ணுடனும், தெற்றுப்பற்களுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளார். இந்நெற்றிக்கண் காமனை எரித்ததை உணர்த்துவதாகும். இவருக்கு இரு கரங்கள் மட்டுமே உள்ளன. இடக்கரம் இருக்கையில் ஊன்றித் திரிசூலத்தைக் கொண்டிருப்பது போல இருக்கிறது.[2] வலக்கரம் கர்த்தரிமுத்திரையில் இருக்கிறது.[3] முழுக்கைச் சட்டையணிந்து இருக்கிறார். சட்டையை இணைக்கவுள்ள முடிச்சும் சித்திரிக்கப்பட்டுள்ளது.[4] காதுகளில் பத்ர குண்டலங்கள். அவரின் எதிரில் தலைக்கு மேல் கைகூப்பி வணங்கி (ஊர்த்வ அஞ்சலியுடன்) நிற்கும் ஒருவர் சித்தரிக்கப்பட்டுள்ளார். தலையிலும் கழுத்திலும் ருத்திராக்க மாலையுடன் இவரும் முழுக்கைச் சட்டையுடன், இடுப்பில் சிறு துணியணிந்து காணப்படுகிறார். இவரை ஒரு சிவனடியாராகக் கொள்ளலாம்.



மற்ற இடங்களில் நாம் பார்க்கக்கூடிய தட்சிணாமூர்த்தி வடிவங்களுக்கும் இச்சிற்பத்திற்கும் பல வேறுபாடுகள் உள்ளன. முனிவர்கள் சூழ்ந்திருத்தலும்,

காலில் முயலகனை மிதித்தபடி இருத்தலும், வியாக்கியான முத்திரையும் இங்குக் காணப்படவில்லை.

சினம் கொண்ட தட்சிணாமூர்த்தியாகச் சித்தரிக்கப்பட்டுள்ள இவரைச் சம்மார அல்லது உக்ர அல்லது ஞான ருத்ர தட்சிணாமூர்த்தி என்று அழைக்கலாம்.

## குறிப்புகள்

1. தட்சிணாமூர்த்தி (இரண்டு பகுதிகள் - பதிப்பு: நாராயணசுவாமி) என்றொரு நூலைத் திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை (1991) வெளியிட்டுள்ளது. இதில் அறுபத்தைந்து தட்சிணாமூர்த்தி வடிவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை நான்கு பெரும் பிரிவுகளின் பரிணாமங்களேயாகும். இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் பிரிவுகள் இவற்றினின்று வேறுபட்டமையால் இங்கே இடம்பெற்றுள்ளன.
2. திருவொற்றியூர் தட்சிணாமூர்த்தி வடிவத்தின் பின் வலக் கரத்தில் சூலம் இருந்ததற்கான குறிகள் உள்ளன. சூலத்தின் மேல் பகுதி சிதைந்து அடிப்பாகம் மட்டுமே தற்போது உள்ளது. (நாராயணசுவாமி 1991 : 16)
3. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வீணாதர தட்சிணாமூர்த்தியின் முன் இரு கரங்களும் கடக முத்திரையுடன் இருப்பதைக் காணலாம். முன்புறமுள்ள வல, இடக் கரங்கள் கடக முத்திரையுடன் இருக்கவேண்டுமென்று காமிகாகமம் கூறுகிறது (நாராயணசுவாமி 1991 : 17-18).
4. சட்டையணிந்திருத்தலும், பெண் உருவங்கள் சேலையுடன் சித்திரிக்கப்படுதலும் தேர்ச்சிற்பங்களில் அதிகமாக இடம்பெறலாயிற்று.

## துணைநூல்கள்


1. சீர்வாநேந்திர சரசுவதி, பிரபஞ்சசார சாரசங்கிரகம், பதிப்பு கே.எஸ். சுப்ரமண்ய சாஸ்திரி, சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1963.
2. Chandrakumar, T., 'Daksinamurti: A Rare Fusion with Feminity,' pp. 107-11, Kala, Journal of Indian Art History Congress, Allahabad, 1994.
3. சிவபுராணம், பகுதி 1, (மொழியாக்கம்) வல்லுநர்க்குழு, மோதிலால் பனார்சிதாசு, தில்லி, 1986.
4. நாராயணசுவாமி, எஸ்., (பதிப்பு) தட்சிணாமூர்த்தி பகுதி-2, திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1991.
5. Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, vol. II, Part-I, Varanasi, 1991.

# 12. முதலாம் இராசராசர் காலக் கட்டடக்கலை ஓர் ஆய்வு

ஸ்தபதி வே. இராமன்

மாமன்னர் முதலாம் இராசராசர் சோழப் பேரரசர்களில் பெரும்புகழ் கொண்டவர். மிகுதியான கோயில்களைக் கட்டுவித்துத் தமிழகத்தைத் தெய்வீக மணம் பரப்பும் திருநாடாக மாற்றிய பெருவேந்தர். இப்பெருமகனார் எடுப்பித்த திருக்கோயில்கள் சிலவற்றின் கட்டட அமைப்புமுறை இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

## ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கோயில்கள்

1) பரகராமீசுவரர் கோயில் - திருமங்கலம், கி.பி. 990 (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

2) அமிர்தகடேசுவரர் கோயில் - திருக்கடையூர், கி.பி. 998 (நாகபட்டினம் மாவட்டம்)

3) கைலாயமுடையார் கோயில் - சோழமாதேவி, கி.பி. 1003 (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

4) இராஜராஜீசுவரர் கோயில் - தஞ்சாவூர், கி.பி. 1004 (தஞ்சாவூர் மாவட்டம்)

5) திருவாலீசுவரர் கோயில் - திருவாலீசுவரம், கி.பி. 996 (திருநெல்வேலி மாவட்டம்)

6) இராமசுவாமி கோயில் - சேரன்மாதேவி, கி.பி. 1009 (திருநெல்வேலி மாவட்டம்)

7) அம்மைநாதர் கோயில் - சேரன்மாதேவி, கி.பி. 1013 (திருநெல்வேலி மாவட்டம்)

## ஆய்வின் நோக்கம்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இக்கோயில்கள் கலைச் சிறப்பாலும், வரலாற்றுச் சிறப்பாலும் புகழ்பெற்றவை. இக்கோயில்களின் ஆதார அங்கங்களான துணைத்தளம், தாங்குதளம், சுவர் மற்றும் கூரைப்பகுதிகள் கட்டட அமைப்பிலும், அவற்றில் இடம்பெறும் அலங்கார அணி அமைப்பிலும்

சோழ, பாண்டிய நாடுகளில் எவ்வாறு அமைந்துள்ளன என்பது ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

## திருமங்கலம் பரசுராமீசுவரர் கோயில்

இக்கோயில் இராசராசருடைய ஐந்தாம் ஆட்சியாண்டில் எடுப்பிக்கப்பட்டதாகும்.

### துணைத்தளம்

உபானம், கம்பு, கண்டம், கம்பு, வாஜனம் என்ற ஐந்து உறுப்புகளைப் பெற்றமைந்துள்ளது. இதனை ஐந்தங்க துணைத்தளம் (பஞ்சாங்க உபபீடம்) என்பர்.

### தாங்குதளம்

பாதபந்த வகையைச் சார்ந்த இக்கோயிலின் தாங்குதளக் கட்டமைப்பு ஜகதி, எண்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை எனும் உறுப்புகளைப் பெற்றமைந்துள்ளது. கண்டத்தின் கீழும், மேலும், பட்டிகையின் மேலும் கம்பு இடம்பெற்றுள்ளது. இத்தாங்குதளம் எளிமையாய் வனப்புடன் கட்டமைக்கப்பெற்றுள்ளது.

### சுவர்

கருவறையின் புறச்சுவர் ஐந்து துண்டு பத்திப்பிரிப்புகளைக் கொண்டுள்ளது.[1] மையப்பகுதியில் தேவகோட்டமும், கோட்டத்தில் சிற்பமும், கோட்டத்தின் தலைப்பில் சிற்பச் செறிவுடன் கூடிய மகரதோரணமும் இடம்பெற்றுள்ளன. அகாரைப்பகுதியில் வேதிகையின் மேல் இரு முழுக்கால்களுடன் கூடிய பஞ்சர அமைப்பு சுவர்ப் பகுதியிலிருந்து சற்று முன்வந்து உத்திரத்தின் மேல்நிலை வரை எழுமாறு காட்டப்பட்டுள்ளது. இதனை 'நிஷ்கராந்த பஞ்சரம்' என்பர். சுவர்ப்பகுதியில் கண்டம், கம்பு, பத்மம், கம்பு என்ற சிற்றுறுப்புகளைப் பெற்ற வேதிகைத் தொகுதி இடம் பெற்றுள்ளது. இதன் மேல் எழும் எண்பட்ட வடிவிலான கால், சதுரம், எண்பட்டம், தாமம், மாலைக்கட்டு, பத்மகட்டு, கலசம், குடம், பலகை, போதிகை எனும் அலங்கார உறுப்புகளைப் பெற்றுள்ளது. மாலைக்கட்டு அமைப்பில் சிற்றுருவச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

### கூரை

உத்திரம், கம்பு, வலபி, கபோதம், யாளிவரி ஆகியன கூரைப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. வலபியில் பூதகணங்கள் பல்வேறு நிலைகளில் கலைத்திறன் சிறக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. கபோதத்தில் கோடிப்பாளை,

மையப்பாளை மற்றும் கூடுகளும் வனப்புடன் அமைந்துள்ளன. யாளிவரியானது திருப்பங்களில் மகரதலையையும், இடையில் யாளிகளையும் பெற்றமைந்துள்ளது.

## கருத்து

1. துணைத்தளக் கண்டத்தின் பாதப்பகுதியில் சிற்றுருவச் சிற்பங்களும், கொடிக்கருக்குகளும் இடம்பெற்றுள்ளன.

2. தாங்குதளக் கட்டமைப்பில் பட்டிகையும், குமுதம் எண்பட்டை வடிவமைப்பிலும் இடம்பெற்றுள்ளன.

3. தாங்குதளக் கண்டபாதப்பகுதியில் சிற்றுருவச் சிற்பங்கள் கலைச்சிறப்புடன் இடம்பெற்றுள்ளன.

4. தாங்குதளக் கண்டத்தின் மேலும், கீழும் கம்பு எனும் சிற்றுறுப்பு இடம்பெற்றுள்ளது.

5. சுவர்ப்பகுதியில் வேதிகை ஓர் அலங்கார அணியாகச் சுவரைச் சுற்றி வருவதாய் இடம்பெறுகின்றது.

6. காலின் அடிப்பகுதியான சதுர அமைப்பிலும், வேதிகைக் கண்டபாதப்பகுதியிலும் சிற்றுருவச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

7. மாலைக்கட்டுப் பகுதியில் சிற்றுருவச் சிற்பங்கள், சிம்மம் மற்றும் பறவைகளின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

8. போதிகை அமைப்பு தரங்கப் போதிகையாக வனப்புடன் அமைந்துள்ளது.

9. சுவர்ப்பகுதியான அகாரையில் நிஷ்கராந்த பஞ்சரம் ஓர் அலங்கார உறுப்பாக இடம்பெற்றுள்ளது.

10. கூரைப்பகுதியில் வலபியில் பூதகணங்கள் பல்வேறு நிலைகளில் கலைச்சிறப்புடன் இடம்பெற்றுள்ளன.

11. கபோதத்தில் சிம்மத்தலையுடன் கூடிய கூடுகளும், திருப்பங்களில் கோடிப்பாளை எனும் கருக்கணிகளும் இடம்பெறுகின்றன.

## திருக்கடையூர் அமிர்தகடேசுவரர் கோயில்

இத்திருக்கோயில் இராசராசருடைய பதின்மூன்றாம் ஆட்சியாண்டிற்கு முன்பாக எடுப்பிக்கப்பட்டதாகும்.

இக்கோயில் கட்டமைப்பில் காணும் தாங்குதளம், சுவர் மற்றும் கூரைப்பகுதி திருமங்கலம் பரசுராமீசுவரர் கோயில் கட்டமைப்பை ஒத்துள்ளன. இருப்பினும் இக்கோயிலில் துணைத்தளமும், காலின் அடிப்பகுதியில் சிற்றுருவச் சிற்பங்களும் இடம்பெறவில்லை.

## சோழமாதேவி கைலாயமுடையார் கோயில்

இக்கோயில் இராசராசருடைய எட்டாம் ஆட்சியாண்டில் சிற்பநூல் மரபுப்படி எடுப்பிக்கப்பட்டதாகும்.

இக்கோயில் கட்டமைப்பில் காணும் தாங்குதளம், சுவர் மற்றும் கூரைப்பகுதி அமைப்புகள் திருமங்கலம் மற்றும் திருக்கடையூர்க் கோயில் அமைப்புமுறையிலேயே அமைந்துள்ளன. இருப்பினும் துண்டு பத்திப்பிரிப்பு முறை இங்குக் கையாளப்படவில்லை. மையப்பகுதி சற்று முன்வந்ததாய் அமைந்துள்ளது. காலின் அடிப்பகுதியில் சிற்றுருவச் சிற்பங்கள் உள்ளன. துணைத்தளம் எனும் அங்கமும் இடம்பெறவில்லை. கூரை அமைப்பு திருமங்கலம் பரசுராமீசுவரர் கோயில் அமைப்பினையொட்டியே அமைந்துள்ளது.

## தஞ்சாவூர் இராஜராஜீசுவரமுடையார் கோயில்

தஞ்சாவூரில் தம்முடைய 19-25ஆம் ஆட்சியாண்டில் இராசராசரால் எடுப்பிக்கப்பட்ட மாபெரும் கற்றளியே இராஜராஜீசுவரம்.

### துணைத்தளம்

திருமங்கலம் கோயிலில் இடம்பெற்றுள்ள துணைத்தளம் இங்கு மாறுபட்ட வகையில் இடம்பெற்றுள்ளது. இவ்வங்கத்தின் இறுதியில் கபோதம் இடம்பெற்றுக் கூடுகளையும், திருப்பங்களில் கருக்கணிகளையும் பெற்றமைந்துள்ளது. இத்துணைத்தளமானது பல மடிப்புகளைப் பெற்று முன் வந்ததாய் உள்ளது. இது போன்ற மடிப்புள்ள வடிவமைப்பினைப் பிற கோயில்களில் காணவியலாது. துணைத்தளக் கண்டபாதம் சிற்பமின்றி எளிமையாகவே அமைந்துள்ளது.

### தாங்குதளம்

உபானம், ஜகதி, உருள்குமுதம், யாளிவரி எனும் உறுப்புகளைக் கொண்ட இத்தாங்குதளம் பிரதிபந்த வகையைச் சார்ந்ததாகும்.

ஜகதிக்குக் கீழே இடம்பெறும் உபானவரியில் மகாபத்மம், கம்பு என்ற சிற்றுறுப்புகளும், ஜகதிக்கு மேலும், உருள்குமுதத்திற்கு மேலும், கீழும்

பத்மம் எனும் சிற்றுறுப்பும் இறுதியாக யாளிவரியும் இடம்பெற்றுள்ளன. இவ்வகையமைப்பை 'ஸ்ரீகரம்' என்பர். எண்பட்ட குமுதம் உருள் நிலையிலும், பட்டிகை யாளிவரியாகவும் மாற்றியமைக்கப்பட்ட கட்டமைப்பை இங்குக் காணமுடிகின்றது. யாளிவரியில் யாளிகள் தம் முன்னங்கால்களைத் தூக்கியவாறு தம்முதுகில் வீரர்களைச் சுமந்த நிலையில் வரிசையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வகை அமைப்பும் முன்கண்ட கோயில்களில் இடம்பெறவில்லை.

**சுவர்**

கருவறையின் புறச்சுவர் ஒன்பது துண்டுப் பத்திப்பிரிப்புகளைக் கொண்டதாகும். இப்புறச்சுவர் வேதிகையின் மேல் சதுரவடிவிலான கால்கள் இடம்பெற்றுள்ளன. பத்தியமைப்புகளின் கோட்டங்களில் சிற்பங்களும் அகாரைப்பகுதிகளில் கும்ப பஞ்சரங்களும் இடம்பெற்றுள்ளன.

திருமங்கலம் மற்றும் திருக்கடையூர்க் கோயில்களில் கண்ட நிஷ்கராந்த பஞ்சர அமைப்பின் வளர்ச்சி மாற்றமாக இக்கோயில் கட்டமைப்பின் அகாரையில் கும்ப பஞ்சரம் இடம்பெறுகிறது.

**கூரை**

கபோதத்தின் கீழ் இடம்பெறும் வலபியில் பூதகணங்கள் சிறக்க இடம்பெற்றுள்ளன. கபோதம் சிம்மத்தலையுடன் கூடிய கூடுகளையும், மற்றும் கருக்கணிகளையும் கொண்டுள்ளது.

## திருவாலீசுவரம் வாலீசுவரர் கோயில்

இக்கற்றளி இராசராசருடைய பதினோராம் ஆட்சியாண்டில் எடுப்பிக்கப்பட்டதாகும்.

**தாங்குதளம்**

ஜகதி, எண்பட்டைக் குமுதம், யாளிவரி எனும் உறுப்புகளைக் கொண்ட கட்டமைப்பாக இத்தாங்குதளம் அமைந்துள்ளது. பிரதிபந்த வகையைச் சார்ந்த இவ்வமைப்பை 'உரகபந்தம்' என்று கூறுவர்.[3] யாளிவரியில் யாளிகள் மற்றும் யானைகளை முழு உருவத்துடன் வடிவமைத்துள்ளனர்.

**சுவர்**

கருவறை புறச்சுவர் ஐந்து துண்டு பத்திப்பிரிப்புகளைக் கொண்டுள்ளது. இவ்வமைப்பு முறையானது திருமங்கலம் பரசுராமீசுவரர் கோயில்

வடிவமைப்பைப் பின்பற்றி அமைந்துள்ளது. ஆனால் புறச்சுவரில் இடம்பெறும் கால்கள் தஞ்சாவூர் இராஜராஜீசுவரர் கோயிலில் இடம்பெற்றுள்ள சதுர வடிவிலான கால்கள் போன்றே இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகின்றது.

அகாரைப்பகுதியில் சதுர வடிவிலான சட்டத்தலையுடன் கூடிய இரு அரைக்கால்கள் கபோதத்தைப் பெற்று உத்திரம் வரை எழும்பி நிற்கின்றன. இவ்வமைப்பு திருமங்கலம் கோயில் நிஷ்கராந்த பஞ்சரம் அமைப்பினின்றும் மாறுபட்ட அமைப்பாகும். இவ்வமைப்பைக் 'கோட்டப் பஞ்சரம்' எனலாம். மையப்பகுதியில் இடம்பெறும் தேவகோட்டம் சட்டத் தலையுடன் கூடிய இரு அரைக்கால்களைப் பெற்று ஆழமற்ற நிலையில் அமைந்துள்ளது. இக்கோட்டத்தை மகரதோரணம் அலங்கரிப்பதாய் உள்ளது. பத்தியமைப்புகளில் சிற்ப உருவங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

கூரை

கபோதத்தில் இடம்பெறும் கூடுகள் சிம்மத்தலைக்குப் பதிலாகக் கருக்குகளைக் கொண்டதாகவும், கூட்டின் மையப்பகுதியில் பல இதழ்களுடன் கூடிய பூக்கள் இடம்பெற்றதாகவும் அமைந்துள்ளன. கபோதத் திருப்பங்களில் கோடிப்பாளையும், மையப்பகுதியில் மையப்பாளைக் கருக்குகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வரிக்கு மேலே இடம்பெறும் யாளிவரி தாங்குதள யாளிவரியை ஒத்துள்ளது.

## கருத்து

1. பிரதிபந்தம் எனும் இத்தாங்குதள அமைப்பின் இறுதியில் யாளிவரி இடம்பெறுவதாய் அமைந்துள்ளது. இவ்வரியில் சிம்மம் மற்றும் யாளி வடிவங்கள் முழு உருவத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2. சுவர்ப்பகுதியில் வேதிகை இடம்பெற்றுள்ளது. வேதிகைக் கண்டபாதத்தில் சிற்றுருவச் சிற்பங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

3. பத்திப்பிரிப்பு முறை பின்பற்றப்பட்டுள்ளது. அகாரையில் சிற்பங்கள் இடம்பெறவில்லை.

4. சுவர்ப்பகுதியில் சதுரவடிவிலான கால்கள் இடம்பெற்றுள்ளன.

5. மையப்பகுதி முன்வந்ததாய் அமையவில்லை. ஆழமற்ற தேவகோட்டத்தில், சிற்பம் இடம்பெறவில்லை.

6. கபோதத்தில் கூடுகள் சிம்மத்தலைக்குப் பதிலாகக் கருக்குகளோடு அமைந்துள்ளன.

## சேரன்மாதேவி இராமசாமி கோயில்

இக்கோயில் இராசராசருடைய இருபத்துநான்காம் ஆட்சியாண்டில் எடுப்பிக்கப்பட்டது.

### தாங்குதளம்

பாதபந்த வகையைச் சேர்ந்த இத்தாங்குதளம் திருமங்கலம், திருக்கடையூர், சோழமாதேவி கோயில்களின் கட்டமைப்பைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.

### சுவர்

கருவறை புறச்சுவர் பதின்மூன்று பத்திப்பிரிப்புகளைக் கொண்டுள்ளது. பத்தியமைப்புகளில் சிற்பங்கள் இடம்பெறவில்லை. வாலீசுவரர் கோயிலைப் பின்பற்றித் தேவகோட்டங்கள் ஆழமற்றனவாய்ச் சட்டத்தலையுடன் கூடிய இரு அரைக்கால்கள் பெற்று, இதனை மூடும் வகையில் கபோதம் அமைந்து, சாலை கொண்டுள்ளன.

### கூரை

உத்திரம், கம்பு, வலபி, கபோதம் மற்றும் யாளிவரி ஆகியன கூரைப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. வலபிப்பகுதியானது மேல்நோக்கிய பத்மமாக இடம்பெற்றுள்ளது. கபோதத்தில் இடம்பெறும் கூடு சிம்மத்தலைக்குப் பதிலாக கருக்குடன் கூடிய தலையமைப்பும், நடுவில் சிற்பங்களும் கொண்டமைந்துள்ளது.

## சேரன்மாதேவி அம்மைநாதர் கோயில்

இக்கோயில், இராசராசரின் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டில் எடுப்பிக் கப்பட்டதாகும்.

### துணைத்தளம்

உபானம், பத்மம், கண்டம், கபோதம் எனும் உறுப்புகளைக் கொண்டதாய்த் துணைத்தளம் அமைந்துள்ளது. இத்துணைத்தளக் கட்டமைப்பைப் 'பிரதி பத்ரம்' என்பர். கபோதத்தில் கூடுகளும், கருக்கணிகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வமைப்பு தஞ்சாவூர்க் கோயில் துணைத்தள அமைப்பை நினைவூட்டுவதாய் அமைந்துள்ளது.

### தாங்குதளம்

தாங்குதளமானது திருமங்கலம், திருக்கடையூர் மற்றும் சோழமாதேவி ஆகிய ஊர்க் கோயில்களின் கட்டமைப்பில் இடம்பெறும் அமைப்பையே பின்பற்றியமைந்துள்ளது.

சுவர்

கருவறைச் சுவர் நீட்சியோ, அடக்கமோ இன்றி சமபத்தி அமைப்புமுறையில் அமைந்துள்ளது. இது போன்ற அமைப்புமுறையை இராசராசர் காலத்துக் கோயில்களான மரக்காணம் (கி.பி. 1001), கலக்காட்டூர் (கி.பி. 999) உலகபுரம் (கி.பி. 998) ஆகிய ஊர்க் கோயில்களின் கட்டமைப்பிலும் காணமுடிகின்றது. சுவரில் சதுர வடிவிலான கால்களே இடம்பெற்றுள்ளன. தேவகோட்டப் பகுதியானது இராமசாமி கோயில் மற்றும் வாலீசுவரர் கோயில் போன்று ஆழம் இல்லாத நிலையில் சட்டத்தலையுடன் கூடிய அரைக்கால்களும், அதன்மேல் கபோதமும் பெற்று மகரதோரணம் கொண்டமைந்துள்ளது. இதுபோன்ற வடிவமைப்பு முன் கண்ட கோயில்களில் இடம்பெறவில்லை.

## ஆய்வின் முடிவுகள்

1. இராசராசர் காலத்துக் கோயில்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவும், மாறுபட்ட கட்டமைப்புடனும் சோழநாட்டில் மட்டுமல்லாது பாண்டிய நாட்டிலும் அமைந்திருப்பது அக்காலச் சிற்பிகளின் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைத் திறனை வெளிப்படுத்துவதாய் உள்ளதெனலாம்.

2. துணைத்தளம் எனும் அங்கம் எல்லாக் கோயில்களின் கட்டமைப்பிலும் இடம்பெறவில்லை. கட்டடத்தை உயர்த்திக் காட்டவே இவ்வங்கம் பயன்படுவதாய் அறியமுடிகிறது.

3. எளிமையான தாங்குதளக் கட்டமைப்பே (பாதபந்தம்) தொடர்ந்து கையாளப்பட்டுள்ளது. இதனைப் பல்லவர் காலத் தொடர்ச்சி எனக் கொள்ளலாம்.

4. தாங்குதள அமைப்பில் வர்க்கபேதம் செய்தமைப்பது இராசராசர் காலத்துக் கோயில்களில் குறைவாகவே காணப்படுகிறது.

5. சுவரில் இடம்பெறும் வேதிகை இராசராசர் காலத்துக் கோயில்களில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

6. சோழநாட்டுக் கோயில்களில் துணைத்தளம், தாங்குதளம் மற்றும் வேதிகை ஆகியவற்றின் கண்டபாதங்களில் சிற்றுருவச் சிற்பங்களைக் கலைச்சிறப்புடன் இடம்பெறச் செய்திருப்பது போல் பாண்டிநாட்டு இராசராசர் காலக் கோயில்களில் காணக்கூடவில்லை.

7. சோழநாட்டுக் கோயில்களில் முகபத்ரமான மையப்பகுதி சிற்பமும், சிற்பச்செறிவுடன் கூடிய மகரதோரணமும் கொண்டுள்ளது.

8. பாண்டிநாட்டு இராசராசர் காலத்துக் கோயில்களின் மையப் பகுதி முன்வந்ததாய் அமையாமலும், சிற்பம் இடம்பெறாமலும் அமைந்திருப்பது பாண்டியர் கலைமுறையினைப் பின்பற்றிய முறை எனலாம்.

9. பாண்டிநாட்டு இராசராசர் காலத்துக் கோயில்களில் இடம்பெறும் யாளி உருவங்கள் முழுவடிவத்துடன் இடம்பெற்றிருப்பது பாண்டியர் கலைமுறையைப் பின்பற்றியே எனலாம்.

10. சோழநாட்டுக் கோயில்களின் அகாரையில் இடம்பெறும் அலங்கார அணியான பஞ்சரம் பாண்டிநாட்டு இராசராசர் காலக் கோயில்களில் இடம்பெற்றிருப்பது மிகக் குறைவே.

11. சோழநாட்டுக் கோயில்களின் கால்கள் எண்பட்டம் மற்றும் பதினாறுபட்ட வடிவமைப்பில் உள்ளன. பாண்டிநாட்டு இராசராசர் கோயில்களில் இவ்வமைப்பு குறைவாகவே உள்ளது. இங்குத் தேவகோட்டக் கால்களை மாற்றியமைக்கும் முறையும் கையாளப்படவில்லை எனலாம்.

12. கால் அமைப்பில் இடம்பெறும் அலங்கார அணிகளான தாமம், மாலைக்கட்டு, பத்மகட்டு, குடம் மற்றும் பலகை என்பன பாண்டியர் கலைமுறையுடன் பாண்டிநாட்டு இராசராசர் காலத்துக் கோயில்களில் இடம்பெற்றுள்ளன.

13. கூரையில் இடம்பெறும் வலபியில் பலவித நிலைகளில் கலைச்சிறப்புடன் காணப்படும் பூதகணங்களைப் பாண்டிநாட்டு இராசராசர் கோயில்களில் அதிகம் காணமுடியவில்லை.

## குறிப்புகள்

1. கர்ணகூடு, அகாரை, முகபத்ரம், அகாரை, கர்ணகூடு
2. கர்ணகூடு, அகாரை, பஞ்சரம், அகாரை, முகபத்ரம், அகாரை, பஞ்சரம், அகாரை, கர்ணகூடு.
3. மயமதம், தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீடு, பக். 173.

---

நன்றி: சாஸ்தா ஃபார்மா, C42, எட்டாம் குறுக்கு,
மேற்குத் தில்லைநகர், திருச்சிராப்பள்ளி – 620 018.

# 5. பொதுப்பகுதி

## 1. பெருமைச் சுவடுகள்

### வரலாற்றறிஞர் தே.வே. மகாலிங்கம்

கோ. வேணிதேவி

தென்னிந்திய வரலாற்றுக்குச் சிறப்பும் பெருமையும் சேர்த்த மாமேதைகள் வரிசையில் தனக்கென்று ஓர் இடத்தை உருவாக்கியவர் பேராசிரியர் தே.வே. மகாலிங்கம். விசயநகரப் பேரரசின் வரலாறு என்றால் மகாலிங்கம்தான் என்று வரலாற்று ஆய்வாளர்களும் மாணவர்களும் நினைவுகூரும் அளவிற்கு நிற்கும் சாதனையாளர் அவர். தொல்லியல் பயிற்சி இல்லாமல் பண்டைய வரலாற்றை அணுகமுடியாததென்பதை ஆணித்தரமாக மனதில் கொண்டு தொல்லியலுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்தவர். வரலாற்றை அறிவியல் கண்ணோட்டத்தோடு பயிலவேண்டுமாயின், தொல்லியல், முக்கியமாகக் கல்வெட்டு, சுவடியியல், கட்டடக்கலை, சிற்பம், சமயம், இலக்கியம் போன்ற பலதுறைகளில் பயிற்சி பெறவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அத்துறைகளில் பயிற்சி பெற்றுத் தம்முடைய ஆய்வினை மேற்கொண்டவர். அவர் ஆய்வு நூல்க்ள் இன்றைய வரலாற்று ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நல்ல முன்னோடிகளாக அமைந்துள்ளன.

இப்பெருமகனார் மயிலாடுதுறையை அடுத்துள்ள தேரழுந்தூரில் 1907இல் வேங்கடராம சடாவல்லபருக்கும் சாவித்திரி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். வைதீகப் பரம்பரையில் ஊறித் திளைத்த குடும்பத்தில் பிறந்ததால் அறநெறிகளைத் தவறாது பின்பற்றினார். அன்னாருடைய துணைவியார் அலமேலு அம்மாள்.

பள்ளிப் படிப்பு முடித்த பின் மகாலிங்கம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறையில் இளங்கலைப் பட்ட மாணவராகச் சேர்ந்து, முதன்மையாகத் தேர்ச்சிபெற்று, இராசா அண்ணாமலைச் செட்டியார் பரிசினைப் பெற்றார். இதனைத் தொடர்ந்து முதுகலைப் பட்டத் தேர்விலும் முதன்மையாகத் தேர்ச்சிபெற்று, மறுபடியும் இராசா அண்ணாமலைச் செட்டியார் பரிசினைப் பெற்றார். இளமைக் காலத்தில் மகாலிங்கம் படைத்த சாதனை, வரலாற்று ஆசிரியர்களின் பார்வையை அவர் பக்கம் திருப்பி வியக்க வைத்ததுடன், சக மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்றுத்தந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பண்டைய இந்திய வரலாறு, தொல்லியல் துறையின் மாணவராக இருந்த தே.வே. மகாலிங்கம், படிப்பு முடிந்ததும், அங்கேயே ஆராய்ச்சி மாணவராகவும் உதவியாளராகவும் பணியாற்றினார். இப்பணி நீலகண்ட சாஸ்திரி போன்ற அறிஞர்களோடு தொடர்புகொள்ளும் அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. இதன் பயனாக வரலாற்றிற்காக அயராது உழைக்கவேண்டுமென்ற எண்ணம் அவருள் வளர்ந்தது. வரலாற்றில் மகாலிங்கத்திற்கிருந்த ஆர்வத்தைப் போற்றிய சாஸ்திரி, இவருடைய ஆய்வுகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உதவியதுடன் இவருடைய முனைவர் பட்ட ஆய்வேட்டின் வழிகாட்டியாகவும் இருந்தார். குட்டுப்பட்டாலும் மோதிர விரலால் குட்டுப்படவேண்டும் என்பது போல், சாஸ்திரியின் தொடர்பு கிடைத்தது மகாலிங்கம் செய்த தவப்பயனே என்று சொல்லலாம்.

1942இல் முனைவர் பட்டம் பெற்றதும், மதுரைக் கல்லூரியிலும், புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியிலும் மகாலிங்கம் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பண்டைய வரலாறு, தொல்லியல் துறையில் விரிவுரையாளராகவும், இணைப் பேராசிரியராகவும், பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் பணியாற்றி 1972இல் ஓய்வுபெற்றார். அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும் பேராசிரியர் மகாலிங்கத்தின் வரலாற்றுப்பணி தொடர்ந்தது.

பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவராக இருந்தபோதுதான் நீலகண்டசாஸ்திரி வழிகாட்டலின் கீழ், 'விஜயநகரத்தின் ஆளுகையும் சமுதாய வாழ்வும்' என்ற ஆய்வேட்டை அளித்தார். 1940இல் இந்த ஆய்வேடு நூலாக வெளியிடப்பட்டது. இதன் துணைநூலாக, 'விஜயநகரத்தின் பொருளாதார வாழ்க்கை' என்ற ஆய்வுநூல் 1952இல் வெளியிடப்பட்டது. இவ்வாய்வுக்காக மகாலிங்கம் சங்கர பார்வதி விருதினைப் பெற்றார். சில ஆண்டுகள் கழித்து இவருடைய இவ்விரு நூல்களும் பல்கலைக் கழகத்தால் அச்சிடப் படாமலிருந்த சூழ்நிலையில், அப்பொழுது ஆஸ்திரேலியாவில் கான்பராவில் தென்காசிய வரலாற்றுத்துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்த அறிஞர் ஏ.எல். பாஷ்யம், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு இந்நூல்கள் அச்சிடப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கடிதம் எழுத, இந்நூல்கள் இரு தொகுதிகளாக மீண்டும் சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டன. விசயநகரப் பேரரசின் வரலாற்றைக் குறித்து ராபர்ட் சீவல், சீ. கிருஷ்ணசாமி அய்யங்கார், என். வெங்கடரமணய்யா போன்ற அறிஞர் பெருமக்களின் படைப்புகள் முன்னோடிகளாக இருப்பினும் பேராசிரியர் மகாலிங்கத்தின் ஆராய்ச்சி நூல் மிகவும் விரிவாகவும் பல்நோக்குச் சிந்தனையுடனும் எழுதப்பட்ட சிறந்த ஆய்வுநூலாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

வடக்கே ஆட்சியிலிருந்த இசுலாமிய, துருக்கிய அரசர்களின் ஆதிக்கம் தெற்கே பரவாமல் தடுத்து, விசயநகரப் பேரரசு தலை தூக்கி நின்ற காலகட்டத்தில் கலைகள் வளர்ந்தன. தமிழ், தெலுங்கு, வடமொழி இலக்கியப் படைப்புகள் பல தோன்றின. கிருஷ்ணதேவராயரின் படைப்பாகக் கருதப்படுகின்ற ஆமுக்தமால்யதா உள்பட இம்மொழிகளின் அப்போதைய இலக்கியங்களைப் படித்தறிந்து, அப்படைப்புகள் வழங்கும் செய்திகளை முழுவதுமாய்ப் பயன்படுத்தியுள்ளார் மகாலிங்கம். அதே போன்று நான்கு மரபு மன்னர்களால் ஆளப்பட்ட இப்பேரரசின் நிலப்பரப்பில் பல்வேறு இடங்களில் கிடைத்துத் தொகுக்கப்பட்ட கல்வெட்டுகளையும் சளைக்காமல் ஆராய்ந்து எழுதியிருக்கிறார். 'விஜயநகரத்தின் ஆளுகையும் சமுதாய வாழ்வும்' என்ற நூலில் விசயநகரப் பேரரசு விரிவடைந்தபோது நடுவண் அரசின் ஆளும் அதிகாரம் தளர்த்தப்பட்ட நிலையையும், 'நாயங்கர' அமைப்பால் நாயக்கர்கள் கை ஓங்கி, அவர்கள் தங்களுடைய செல்வாக்கை உயர்த்தியதன் விளைவாகப் பின்னால் நாயக்கர்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் ஆட்சியை அமைத்த சூழ்நிலைகளையும், காரண, காரியங்களோடு விளக்கியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அம்மாபெரும் அரசின் வீழ்ச்சிக்குரிய நிலைகளும் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. பேயிஸ், அநிஸ், அப்துல் ரசாக், நிகோலாடி கோண்டி போன்ற பல அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளையும் இந்நூலில் காணமுடிகிறது.

'தென்னிந்திய வாழ்வியல்' (South Indian Polity) என்ற தலைப்பில் 1945இல் இவர் எழுதிய நூல் நல்ல வரவேற்பைப் பெற்று, இரண்டாம் பதிப்பாகவும் வெளியிடப்பட்டது. இந்நூலும் தொல்லியல் சான்றுகள், கல்வெட்டுச் சான்றுகள், வெளிநாட்டவர் குறிப்புகள், இலக்கியச் சான்றுகள் போன்றவற்றின் அடிப்படையில் எழுதப்பட்டதாகும். இவ்விரு முக்கியமான ஆய்வுநூல்களைத் தவிர பல்லவர்கள், பாணர்கள், நாகர்கள் பற்றிய வரலாற்று நூல்களும் கோயில்கள், கலை, கட்டடக்கலை, கல்வெட்டியல் முதலானவை தொடர்பான பதினாறு நூல்களும் இவரால் எழுதி வெளியிடப்பெற்றன.

தொல்லியலில் இவருக்கிருந்த தனியானதோர் ஆர்வம் இவரைப் பல அகழ்வாராய்ச்சிகளிலும், களஆய்வுகளிலும் இறங்கச்செய்தது. திருச்சிராப்பள்ளியில் முசிறி, திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சியினை மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்தார். மேலும் புத்தூர், அரசலூர், காட்டுப்புத்தூர், சீப்பலப்புத்தூர், சின்னமேட்டுக்களி, முட்டான்செட்டி, அழகரை போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சிகளை நடத்தினார். அகழாய்வில் கிடைத்த பலவகையான பொருட்கள் அக்கால மக்களின் பண்பாடு, சமுதாயம், பொருளாதாரம் போன்றவற்றை விளக்கப் பெரிதும் உதவுவனவாக விளங்கின. இவ்வகழ்வாய்வின் முடிவுகளைக் 'காவிரிக் கீழ்ப் பள்ளத்தாக்கின் அகழாய்வு அறிக்கை' என்ற தலைப்பில்

வெளியிட்டுப் பல புதிய செய்திகளை வரலாற்றறிஞர்களும் மாணவர்களும் அறியுமாறு செய்தார்.

கல்வியின் பயன் நாம் அறிந்தவற்றை மற்றவர்களுக்குக் கற்பித்தலாகும். அப்பொழுதுதான் ஒரு துறை வளரமுடியும். இதையுணர்ந்த பேராசிரியர் மகாலிங்கம் தாம் ஏற்று நடத்திய அகழாய்வுகளிலும் களப்பணிகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி ஊக்குவித்தார். வரலாற்றுக்குப் பேராசிரியர் ஆற்றிய பெருந்தொண்டு இங்ஙனம் மாணாக்கரை உருவாக்கியதுதான்.

இவர் தலைமையேற்று நடத்திய மாநாடுகளும் கருத்தரங்குகளும் எண்ணிலடங்கா. இந்திய வரலாற்று மாநாடு, திராவிட மொழிகள் மற்றும் பண்பாட்டு மாநாடு, அகில இந்தியக் கீழ்த்திசை மாநாடு, அகில இந்திய நாணயவியல் மாநாடு, இந்தியக் கல்வெட்டியல் மாநாடு, இந்தியத் தொல்லியல் சங்க மாநாடு போன்ற பல மாநாடுகளில் தலைமையுரை வழங்கியுள்ளமை இவரது அயராத உழைப்பையும் ஆர்வத்தையும் காட்டுவனவாக உள்ளன. தம் உரைகளில் வரலாற்று மாணவர்களின் சமுதாயப் பொறுப்பு, ஆய்வாளர்களின் பங்கு, தகுதி, ஆற்ற வேண்டிய பணி, கல்வெட்டியலில் அடையவேண்டிய முன்னேற்றம், அதன் வளர்ச்சி போன்ற செய்திகளைப் பற்றி அதிகம் வலியுறுத்திப் பேசியுள்ளார்.

பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையும் விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார். அவை நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சங்கர பார்வதி அறக்கட்டளைப் பொழிவும், சுப்ரமணிய ஐயர் அறக்கட்டளைப் பொழிவும் சர். வில்லியம் மேயர் அறக்கட்டளைப் பொழிவும் இவண் குறிப்பிடத்தக்கவை. அண்ணாமலைப் பல்கலைக் கழக முதுகலை பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு மூன்று சிறப்புரைகளை நிகழ்த்தினார். 'தென்னிந்தியத் தொல்லியல்', 'கல்வெட்டியலும் நாணயவியலும்', 'கட்டடக் கலையும் சிற்பக்கலையும்' என்ற தலைப்புகளில் அங்கு இவர் வழங்கிய பொழிவுகள் தொகுக்கப்பெற்று, 'தென்னிந்தியத் தொல்லியல் கல்வெட்டியல், கட்டடக் கலை மற்றும் சிற்பம்' என்ற நூலாக வெளியிடப்பட்டது. கர்நாடகப் பல்கலைக் கழகத்தின் பண்டைய இந்திய வரலாறு, பண்பாட்டுத்துறையில் வழங்கிய மூன்று சிறப்புரைகள் தொகுக்கப்பெற்று, 'தென்னிந்தியக் கோயில் அமைப்பு' என்ற நூலாகக் கர்நாடகப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது.

பேராசிரியரின் முப்பத்தாறு ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு 'Readings in South Indian History' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் சர். வில்லியம் மேயர் அறக்கட்டளை சார்பாக நிகழ்ந்த ஆறுபொழிவுகள், 'முற்காலத் தென்னிந்திய வரலாற்றில் காஞ்சிபுரம்' என்ற நூலாக வெளியிடப்பட்டது. சுப்ரமணிய ஐயர் அறக்கட்டளைக்காக இவர் நிகழ்த்திய இரு பொழிவுகள், 'தென்னிந்திய

வரலாற்றிலும் பண்பாட்டிலும் நாகர்கள்' என்னும் நூலாகக் கொணரப்பட்டது. பண்டைய வரலாற்றை அறியத்தக்க சான்றாக விளங்கும் எழுத்தியலையும் பேராசிரியர் விட்டுவைக்கவில்லை. 'முற்காலத் தென்னிந்திய எழுத்தியல்' என்னும் அன்னாரின் படைப்பு இருமுறை பதிப்பிக்கப்பட்டது.

சிறந்த ஆராய்ச்சியாளராகவும் நூலாசிரியராகவும் கட்டுரையாளராகவும் பொழிவாளராகவும் மட்டுமின்றிப் பதிப்பாளராகவும் பேராசிரியர் விளங்கினார். மெகன்சி சுவடிகளையும், பல்லவர் காலக் கல்வெட்டுகளையும், தமிழக, கேரள மாநிலக் கல்வெட்டுகளையும் சேகரித்துப் பதிப்பித்தார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சர்வேயர் ஜெனரலாக இருந்த கலோனல் மெகன்சி 1810-15 ஆண்டுகளில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மராத்தி மொழிச் சுவடுகளைச் சேகரித்துத் தொகுத்தார். இவை பிற்காலத்தில் ஆங்கிலேயராலேயே மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு, உரிய குறிப்புரைகள் எழுதும் பணி சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறையிடம் ஒப்படைக் கப்பட்டது. இதன் பதிப்பாசிரியர் பொறுப்பை கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, இராமச்சந்திர தீட்சிதர் போன்ற அறிஞர்கள் ஏற்றுக்கொண்டனர். இவர்களுக்குப் பின் இப்பொறுப்பு மகாலிங்கத்திடம் ஒப்படைக்கப்பெற்றபொழுது, இரு தொகுதிகளாகக் குறிப்புரையுடன், மெகன்சி சுவடிகள் கொணரப்பட்டன. இப்பதிப்பிற்குப் பன்மொழி அறிஞர்களின் உதவிகளைப் பேராசிரியர் பெற்றுள்ளார்.

இந்திய வரலாற்றாய்வுக் கழகம் (Indian Council of Historical Research) பல்லவர்களின் கல்வெட்டுகளைத் தொகுக்கும் பணியினை இவரிடம் ஒப்படைத்தது. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு முடிய பல்லவர்களின் கல்வெட்டுகளைச் சேகரித்துக் காலவரையறைப்படி தொகுத்துக் குறிப்புரை எழுதி வெளியிட்டார். தென்னகக் கல்வெட்டுகளை ஊர்வாரியாகத் தொகுக்கும் பதிப்பாசிரியராகவும் இவர் பணியாற்றினார். இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகம் தமிழக, கேரள மாநிலங்களின் கல்வெட்டுகளை மாவட்டம், வட்டம் வாரியாகப் பிரித்துத் தொகுக்கும் பணியினை இவரிடம் வழங்கியது. கி.பி. 1300 வரையுள்ள கல்வெட்டுகள் தொகுக்கப்பெற்று `A Topographical list of inscriptions in TamilNadu and Kerala' என்ற தலைப்பில் பத்தொன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

'பண்டைய தென்னிந்திய எழுத்தியல்', என்னும் இவருடைய படைப்பு, இந்திய வரலாற்றில் கல்வெட்டுகளின் தோற்றம், வளர்ச்சி முதலிய பல நிலைகளை உணர்த்தும் கையேடு போல் கல்வெட்டாய்வாளர்களுக்கு உதவுவதாக அமைந்துள்ளது. இத்துறையில் சிறந்த பணியாற்றிய அகமது, டி.ஏ. கோபிநாதராவ், தி.நா. சுப்பிரமணியன், சி. சிவராமமூர்த்தி போன்ற சான்றோர்களை வரலாற்றுலகம் அறியுமென்றாலும், பேராசிரியர்

மகாலிங்கத்தின் பண்டைய தென்னிந்திய எழுத்தியல், இத்துறையில் குறிப்பிடத்தக்கதோர் நூல் என்பதில் அய்யமில்லை. இந்நூலில் மலைகளில் செதுக்கிய எழுத்துகள், இந்தியாவின் பல்வேறு எழுத்துகளின் தோற்றம் முதலிய செய்திகளைத் தருவதோடு, தமிழகத்தின் பழைய கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள், வெட்டப்பட்டுள்ள பகுதிகள் போன்ற செய்திகளையும் பேராசிரியர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றுக்குப் பேராசிரியர் மகாலிங்கம் ஆற்றிய பெருந்தொண்டைப் பாராட்டி இந்திய அரசு 1969இல், வரலாற்றோடு தொடர்புடைய அனைத்து அறிஞர்களும், ஆய்வர்களும் பெருமையோடு நினைக்குமாறு தாமரைத்திரு விருதை வழங்கிச் சிறப்பித்தது.

1972இல் அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் பேராசிரியர் மகாலிங்கம் தம் வரலாற்றுப் பணியை நிறுத்தவில்லை. வரலாற்றில் தங்களை முழுவதும் ஈடுபடுத்தி அயராது உழைத்த அறிஞர் பெருமக்களாகிய எஸ்.கே. ஐய்யங்கார், கே.ஏ.என். சாஸ்திரி, இராமச்சந்திர தீட்சிதர் போன்ற சான்றோர்களைப் பின்பற்றி, அவர்கள் வகுத்த பாதை வழி தொடர்ந்து வரலாற்றாய்வில் ஈடுபட்டார் தே.வே. மகாலிங்கம். அப்பெருமகனார் விட்டுச்சென்ற வரலாற்றுச் சுவடுகள் காலகாலத்திற்கும் அவர் பணிச் சிறப்புப் பேசும்.

---

### மடையும் மண்சோறும்

தலைவர்களின் பிறந்த நாட்களில் தொண்டர்கள் திருக்கோயில்களுக்குப் படையெடுத்து இறைவழிபாடு செய்வதும், தேரிழுப்பதும், தீமிதிப்பதும், மண்சோறு உண்பதும் நாளிதழ்களில் நாளும் பார்க்கும் செய்திதான். இந்த அரிய (!) செயல்கள் இன்று நேற்றுப் பழக்கமா? கலித்தொகைக் காலத்திலிருந்து இருந்துவருவன தாம். தலைவர்களிடம் குடிகள் கொண்டிருந்த அன்பு அவர்தம் நலம் வேண்டி நிலத் தெய்வத்திற்கு மடை கொடுக்குமளவு அந்நாளில் வளர்ந்திருந்தது (108). அதுவே இந்நாளில் மண்சோறு வரை நீண்டிருக்கிறது.

# 2. நூல் மதிப்புரை

நூல்: தமிழகக் கோயில் கல்வெட்டு காசு

ஆசிரியர்: ஆர். வசந்தகல்யாணி

வெளியீடு: ஆர்த்தி பதிப்பகம், 12, ஜகந்நாதன் தோட்டத் தெரு, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

பக்கங்கள் : 120. விலை : 35.00

'இப்படித்தான் ஆய்வு செய்தல் வேண்டும்', என்ற உணர்வின் அடிப்படையில், அவ்வப்போது ஆய்விதழ்களுக்கும் நாளிதழ்களுக்குமாய் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கித் 'தமிழகக் கோயில் கல்வெட்டு காசு' என்ற தலைப்பில், வரலாற்றுக்குத் தம்முடைய 'சிறிய காணிக்கையாக' வழங்கியிருக்கிறார் நூலாசிரியர். பதினைந்து கட்டுரைகளைக் கொண்டுள்ள இந்நூலில் பத்துக் கட்டுரைகள் கோயில், சிற்பம் சார்ந்தும், இரண்டு கட்டுரைகள் காசுகள் பற்றியும் அமைய ஏனைய மூன்றும் முறையே கல்வெட்டு, கீறல் உருவங்கள், சங்கு தொடர்பானவையாய் உள்ளன.

இவற்றுள் 'தமிழகப் பண்பாட்டில் சங்கு', நல்ல கட்டுரை. பல உள்தலைப்புகளின் கீழ்ச் சங்கு பற்றிய தரவுகளை நன்கு தொகுத்தளித்துள்ள நூலாசிரியரைப் பாராட்டுவது நம் கடமை. பெருமுக்கல் கீறல் உருவங்களை ஆய்வு நோக்கில் பார்க்கும் கட்டுரை, அவற்றை 'வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்தவை' என்று வரையறுக்கிறது.

'கல்வெட்டில் அரசன் ஆணை' அருமையான நோக்குடைய கட்டுரை. அதை நன்றாகப் பகுத்துக் காலநிரலொட்டி எழுதியிருந்தால் மேலும் சிறப்படைந்திருக்கும். தமிழ்நாட்டு மன்னர்களின் அரசுப்பணி ஈடுபாட்டைக் காட்டும் இக்கட்டுரையின் பெருங்குறை எந்த ஒரு தரவுக்கும் அடிக்குறிப்பு இல்லாமலிருப்பது.

இக்கட்டுரையில் தரப்பட்டிருக்கும் உத்தமசோழரின் கல்வெட்டொன்றில், 'நம் வீட்டினுள்ளால் ஆச்சி கோயிலின் முன்பில் கூடத்து நாம் உண்டிருக்க' என்ற தொடர் வருகிறது (பக்.76). 'அரசன் தன் அரண்மனையில் தேவியின் இருப்பிடத்தில் உணவு உட்கொண்டிருக்கும் போது' என்று நூலாசிரியர் இதற்குப் பொருள் எழுதுகிறார். 'ஆச்சி' என்ற சொல் அன்னையைக் குறிப்பதாகும். இதற்குக் கல்வெட்டுகளில் பல சான்றுகள் உள்ளன.[1] மன்னார் கோயில் கல்வெட்டொன்றில், 'சேரமன்னன் ராஜராஜதேவர் இத்தேவர் கோயிலில் வாசல் கோபுரத்து மேல் நிலை எழுந்தருளியிருந்து ஓர்

ஆணையிடுகிறான்' (பக். 78), என்று நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். ராஜராஜதேவர் என்று மரியாதை விகுதியுடன் எழுவாய் தொடங்க, ஆணையிடுகிறான் என்று மரியாதைக் குறைவாகப் பயனிலை முடிவது ஒருபுறமிருக்கட்டும், கோயிலில் வாசல் தவிர வேறெங்காவது கோபுரம் வருமா? மேலும், அரசர் எங்கிருந்து ஆணையிட்டார் என்பதை இச்சொற்றொடர் தெளிவுபடுத்தவில்லை. கோபுர உச்சியிலிருந்தா? அல்லது கோபுர வாயிலின் நிலை மீது நின்றபடியா? அரசர் என்ன ஆணையிட்டார் என்பதையும் நூலாசிரியர் கூறவில்லை.

'மக்கள் நலனில் பெருங்கவனம் செலுத்திப் பள்ளியறைக் கட்டிலில் படுக்கச்செல்லும் நேரம் வரையிலும் பொதுமக்களையும், மந்திரிகளையும் கண்டு ஆலோசனை கூறியும் ஆணைகள் இட்டும் இருக்கிறான்' (பக். 78) என்று குறிப்பிடும் நூலாசிரியர் அப்படிச் செய்தவரின் பெயரைக் குறிப்பிட்டிக்கலாம்.

அரசனைத் தனி மனிதர்கள் நேராகச் சந்தித்தமைக்கும், அரசன் மக்கள் குறைகளை நேரில் தெரிந்துகொண்டு உடனுக்குடன் ஆணைகள் மூலம் அவற்றைத் தீர்த்தமைக்கும் நூலாசிரியர் சான்றுகள் தந்திருந்தால் உண்மை நிலை தெரிந்திருக்கும்.

கோயிற் சார்ந்த கட்டுரைகளுள் 'பெருமைமிகு புக்கொளியூர் அவிநாசி', 'கனவு நனவானது கோயில் உருவானது' எனும் இரண்டு கட்டுரைகளும் பிழைகளின்றி அமைந்துள்ளன. பிற கட்டுரைகளை விரிவாகப் பார்ப்போம்.

'திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயிற் சப்தமாதர் சிற்பங்கள்' எனும் முதற் கட்டுரையில் நூலாசிரியர் ஒவ்வொரு சிற்பத்தை வண்ணிக்குமிடத்தும் தவறுகள் நேர்ந்துள்ளன. வீரபத்திரரின் கைக் கருவிகளையும் கை நிலைகளையும் விவரிக்குமிடத்துப் (பக்.10), பின் கைகளில் அக்கமாலையும் மானுமிருப்பதாகக் குறிப்பவர், அதே பத்தியின் இறுதியில் அக்கமாலையும் மானும் மழுவும் இருப்பதாக எழுதியுள்ளார். வீரபத்திரரின் கைகளில் மழு இல்லை. நூலாசிரியரின் முதற் கூற்றே சரியானது. இதே பத்தியில், மேலப்பழுவூரிலுள்ள வீரபத்திரர் மேற்கைகளில் அக்கமாலையும் திரிசூலமும் கொண்டிருப்பதாகக் குறிக்கிறார். மேலப்பழுவூர் பகைவிடை ஈசுவரத்தில் வீரபத்திர் சிற்பமே இல்லை. அங்குள்ள சப்தமாதர்களுடன் காணப்படுபவர் ஊர்த்வ தாண்டவர். கீழையூர்[2] அவனி கந்தர்வ ஈசுவர கிருகத்து சப்தமாதர் திருமுன்னில்தான் வீரபத்திரர் உள்ளார். நூலாசிரியர் இவரைத்தான் மேலப்பழுவூராராகக் குறிப்பிட்டுள்ளார் போலும்.

பிராமியை வண்ணிக்குமிடத்து (பக்.11), 'இடது மார்பிலிருந்து கீழ் வயிற்றை நோக்கி ஓடும் முப்புரிநூல் வலது தோளில் ஏறுகிறது' என்று

குறிப்பிட்டுள்ளார். முப்புரிநூல் வல மேற்கையில்தான் ஏறுகிறதே தவிர தோளில் அல்ல. 'கீழ் வயிறு', 'மேல் வயிறு' என்று எழுதுவதினும் வயிற்றின் கீழ்ப்பகுதி, மேற்பகுதி என்று எழுதுவது பொருளார்ந்து அமையும். அம்மையின் ஆடை முழங்காலுக்குக் கீழ் வரை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆடை கணுக்கால் வரை நீண்டுள்ளது. மாகேசுவரி சுகாசனத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிப்பதாகக் கூறுகிறார். சுகாசனமே அமர்வுக்கோலம்தான்.

கௌமாரியின், 'மேல் வயிற்றில் சன்னவீரம் அழகுசெய்கிறது' (பக்.13), என்று குறிப்பிட்டுள்ளார். சன்னவீரம் கழுத்தணி (சிற்பச் செந்நூல், பக். 94). அது மார்பு, முதுகு இருபுறத்தும் பரந்தமையும் அணியாகும். வைஷ்ணவி மகர குண்டலம், பத்ர குண்டலம் அணிந்திருப்பதாக நூலில் உள்ளது (பக்.13). ஆனால் வைஷ்ணவி இரு செவிகளிலும் மகர குண்டலங்களே கொண்டுள்ளார். நூலாசிரியர் இடைக்கச்சை, மடிப்புடைய கீழாடை முதலிய ஆடைகளையும் அணிகளாகவே கொண்டுள்ளார். வராகியை, 'வாராகி' என்று குறிப்பிடுவதுடன், அவர் தம் முகத்தைக் கீழ் நோக்கிச் சாய்த்திருப்பதாகவும் எழுதியுள்ளார் (பக். 14). ஆனால் வராகியின் முகம் இடப்புறச் சாய்வாகவே காணப்படுகிறது. சுகாசனத்தில் இருக்கும் சாமுண்டாவை வீராசனத்தில் இருப்பதாகவும் (பக்.15), கபாலம் ஏந்தியுள்ள அவரது இடக் கையைத் தொடை மீது உள்ளதென்றும் குறிப்பிட்டிருப்பதுடன், சாமுண்டாவின் மார்பிலுள்ள தலைகளாலான முப்புரிநூலை, 'முண்டமாலை' என்றும் எழுதியிருக்கிறார். தலையில்லாதது தானே முண்டம்? சப்தமாதர்களின் பொதுத்தன்மை பேசுமிடத்து (பக். 16), இதையே மண்டை ஓடுகள் கோத்த கபாலமாலையாகவும் காட்டுகிறார். 'முப்புரிநூல்' தகுதியில் அமைந்திருக்கும் இதை மாலையென்பது பொருந்துமா?

பொதுத்தன்மைகள் பேசுமிடத்து, சப்தமாதர்களின் கீழ் இடக் கைகள் தொடை மீது கடி முத்திரையிலிருப்பதாகக் கூறுகிறார் (பக். 17). கடி முத்திரையில் கை இடுப்பில்தான் இருக்கும். தொடையில் அல்ல. இவ்வம்மைகளுள் பிராமியும் கௌமாரியும் தங்கள் கீழ் இடக் கை விரல்களை மடக்கிய நிலையில் (? கடக முத்திரை) தொடைமீது இருத்தியிருப்பதை நூலாசிரியர் கவனிக்கவில்லை போலும். 'ஏறக்குறைய இதே காலத்தில் பாண்டிய நாட்டிலுள்ள சப்தமாதர் சிற்பங்கள் சிலவும் இதனைப் பின்பற்றியே வாகனங்களுடன் காட்டப்பட்டுள்ளன' என்று கட்டுரையின் முடிவில் கூறும் நூலாசிரியர், இதற்குச் சான்றாகப் பாண்டிநாட்டுத் திருக்கோளக்குடி, திருக்கோகர்ணம் குடைவரை சப்தமாதர் சிற்பங்களைக் காட்டுகிறார். இவ்விரு தொகுதிகளிலுமே வாகனங்கள் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[3] தம் கூற்றிற்கு அடிக்குறிப்பாகத் திரு. தி. இராசமாணிக்கத்தின் தமிழகக் குடைவரைக் கோயில்கள் நூலின் 17-18ஆம் பக்கங்களையும், முனைவர்

இரா. நாகசாமியின் Tantric Cult of South India நூலின் 172ஆம் பக்கத்தையும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவ்விரு நூல்களிலும் சப்தமாதர் சிற்பங்கள் இருப்பது குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அவை வாகனங்களுடன் இருப்பதாக யாண்டும் குறிப்பில்லை. நூலாசிரியர் கூறுவது போலத் திருக்கோளக்குடிக் குடைவரையும் திருக்கோகர்ணம் குடைவரையும் ஏறத்தாழ அபராஜிதன் காலத்தன அல்ல. அவை அபராஜிதனுக்குப் பல ஆண்டுகள் முற்பட்டவை.

பெருமுக்கல் திருவான்மிகை ஈசுவரமுடையார் கோயிலைப் பற்றிய கட்டுரையில் ஊரின் இருப்பிடமே தவறாகத் தரப்பட்டிருப்பதுடன், கோயிலிலுள்ள சிற்பங்கள் பற்றிய விவரித்தலிலும் தவறுகள் காணப் படுகின்றன. ஆலமர் செல்வரின் தேவகோட்டத் தூண்களின் பாதங்களில் இரு ஆடவர் சிற்பங்கள் உள்ளன. இவ்ஆடவர்கள் கால்களை மண்டியிட்டு இரு கைகளையும் கூப்பி நெஞ்சுக்கு நேரே வைத்திருப்பதாக நூலாசிரியர் குறித்துள்ளார் (பக்.32). ஆனால் இருவரும் அர்த்தபத்மாசனத்தில் வலக்கையில் அக்கமாலை பிடித்து இடக்கையை வயிற்றருகே கொண்டபடி காணப்படுகின்றனர்.

ஆலவாய் அங்கயற்கண்ணி ஆலய அட்ட சக்திகள் பற்றிய கட்டுரையிலும் சிற்பங்களை விவரித்தலில் தவறுகள் நேர்ந்துள்ளன. மனோன்மணியின் கீழ் வலக் கை சின் முத்திரையில் அக்கமாலை பிடித்திருப்பதாகக் குறிப்பிடும் நூலாசிரியர் (பக். 45), ஒரு வரி தாண்டியதும், அதே கை மலர்ச்செண்டு பிடித்திருப்பதாகவும், அன்னையின் இடது முழங்கை மீது அமர்ந்திருக்கும் அழகிய கிளி அம்மலர்ச்செண்டிலுள்ள மலரிதழ்களை அலகால் கவ்வுவதாகவும் கூறுகிறார். 48ஆம் பக்கத்தில் மலர்ச்செண்டு, கீழ் இடக்கையில் இருப்பதாகவும் அது அல்லிமலர்ச் செண்டென்றும் குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் முழங்கைக் கிளி கைக் கிளியாகியுள்ளது.

'மனோன்மணி, ரௌத்ரி ஆகிய சக்திகள் தவிர, ஏனைய சக்திகளின் முடிகளைக் கிரீடமகுடம் அலங்கரிப்பதாக'ப் பக்கம் 45இல் எழுதுபவர், பக்கம் 46இல் யக்ஞரூபிணியின் தலையை 'ஒரு வகை மகுடம்' அலங்கரிப்பதாகக் குறிப்பிட்டு, பக்.52இல் அது 'ஒருவித கரண்ட மகுடம்' என்று ஆய்ந்துரைக்கிறார். பக்கத்திற்குப் பக்கம் முடிவுகள் மாறுவது மலைப்பளிக்கிறது. 'மனோன்மணி, ரௌத்ரி ஆகிய சக்திகளின் முன் கைகள் கொடிய ஆயுதங்களைப் பற்றியுள்ளன' என்கிறார் (பக்.52). அக்கமாலையும், மலர்ச்செண்டும், கபாலமும் கொடிய ஆயுதங்களா?

ஒவ்வொரு சிற்பத்தையும் விரிவாக விவரித்திருப்பதைத் தவிர்த்து, அவற்றின் பொதுக்கூறுகளைத் தனியாகவும் சிறப்பம்சங்களைத் தனியாகவும் தொகுத்தமைத்திருந்தால் கட்டுரையை முடிக்கும்போது ஏற்படும் அலுப்பைத் தவிர்த்திருக்கலாம்.

'பவழக்குன்று அர்த்தநாரீசுவரர் கோயில்' கட்டுரையில் தொடக்கத்தில், 'சிவனது இடப்பக்கம் உமையின் பாகமாக அமைவதைப் பண்டைய தமிழ் இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் விரித்துக் கூறுவதாக' எழுதியுள்ள நூலாசிரியர் (பக். 54) பக்தி இலக்கியங்களிலிருந்து எட்டுச் சான்றுகள் தந்துள்ளார். ஆனால் அவர் குறிப்பிடும் பண்டைய தமிழ் இலக்கியங்களி லிருந்து ஒரு சான்றுகூட தரவில்லை. அது போகட்டும், இந்தப் பண்டைய தமிழ் இலக்கியங்கள்தான் யாவை?

இதே கட்டுரையில், கோயில் அமைப்பு என்ற தலைப்பின் கீழ்ப் பல குழப்பங்களைச் சந்திக்க நேர்கிறது. 'கருவறை அதிட்டானமும் புறச்சுவரும் செங்கல்லும் சுதையும் கொண்டு வேலைப்பாடு மிக்கதாகக் காணப்படுகிறது. இது உபானம், ஜகதி, பத்மம், குமுதம், கண்டம், வேதி ஆகிய பல உறுப்புகளைக் கொண்டு விளங்குகிறது' என்கிறார் நூலாசிரியர் (பக். 57). முதல் வரி சரி; இரண்டாம் வரி 'இது' என்று தொடங்குகிறதே அந்த 'இது' எது? அதிட்டானமா? சுவரா? அதிட்டானமென்றால் 'வேதி' சேராது. சுவரென்றால் 'வேதி' தவிர ஏனையன சேரா. ஜகதிக்கடுத்துக் குமுதம்தான் அமையும். அதென்ன இடையில் பத்மம்? பத்மவரியா? கண்டத்திற்கடுத்து வேதி என்கிறார். அதுவும் பொருந்துவதாகத் தெரியவில்லை. கண்டத்துடன் அதிட்டானம் முடிவதில்லை.

இதே பத்தியின் இறுதியில், ஜகதிப்படையிலுள்ள கண்டப்படைகள் சிற்பங்களேதுமின்றி இருப்பதாக நூலாசிரியர் கூறுகிறார் (பக். 57). ஜகதிப்படையில் கண்டப்படை வராது. நூலாசிரியரே ஜகதிக்கடுத்து, குமுதம், அதற்கடுத்துக் கண்டமென நிரலாகக் குறித்துள்ளார். ஆனால் நான்கு வரிகள் தாண்டியதும், 'ஜகதிப்படையிலுள்ள கண்டப்படைகள்' என்கிறார். காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் விமானம் போல் ஜகதி அகழப்பட்டிருந்தால் கூட அதைத் தனித்தன்மை வாய்ந்த ஜகதியாகக் குறிக்கலாமே தவிர ஜகதிப்படையிலுள்ள கண்டப்படையாகக் கொள்ளமுடியாது. இந்நிலையில் 'கண்டப்படைகள்' என்ற பன்மை மேலும் குழப்புகிறது.

தேவகோட்டச் சிற்பங்கள் என்ற தலைப்பின் கீழ், 'மேற்குக் கோட்டத்தில் மட்டும் லிங்கோத்பவரின் பழைய சிற்ப வடிவம் காணப்படுகிறது' எனும் நூலாசிரியர் (பக். 57), ஒரு வரி தாண்டியதும், 'மேற்குக் கோட்டத்திற்குரிய சிற்ப வடிவம் தற்போது காணப்படவில்லை என்கிறார். காணப்படுகிறது-காணப்படவில்லை - எது சரி?

கருவறைப் புறச்சுவரை விவரிக்குமிடத்தில், 'தேவகோட்டங்களின் பக்கச் சுவர்களில் பக்கத்திற்கு ஆறு தூண்கள் வீதம் தெற்கு, வடக்கு, மேற்குத் திசைகளில் பதினெட்டு அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன' என்று

குறிப்பிட்டுள்ளார் (பக். 59). தேவகோட்டங்களின் பக்கச் சுவர் என்ற சொல்லாட்சி குழப்பம் தருவது. தேவகோட்டங்கள் ஒவ்வொன்றும் இரு பக்கச் சுவர்களும் ஒரு பின் சுவரும் உடையன. ஆனால் கட்டுரையாசிரியர் அவற்றைக் குறிப்பிடவில்லை. விமான ஆதி தளத்தின் புறச்சுவரைத்தான் இது போல் குறிப்பிடுகிறார். ஏனெனில் தேவகோட்டங்களின் பக்கச் சுவர்களில் தூண்கள் அமையா. இந்த ஆதி தளப் புறச்சுவரைத் 'தேவகோட்டங்களின் பக்கச் சுவர்கள்' என்று குறிப்பதால், தேவகோட்டம் அமைந்துள்ள பகுதிக்கு இருபுறத்துமுள்ள சுவர் எனக் கொள்ளலாம். அப்படிக் கொண்டால் தூண் கணக்கு இடிக்கிறது. 'பக்கச் சுவர்களில் பக்கத்திற்கு ஆறு தூண்கள்' என்று நூலாசிரியர் கூறுமாறு கணக்குப் போட்டால் ஒரு திசைச் சுவரில் பன்னிரண்டு தூண்கள் என்றாகும். முத்திசைகளிலும் முப்பத்தாறு தூண்களாகும். ஆனால் நூலாசிரியர் பதினெட்டு அரைத்தூண்கள் என்கிறார். அவர் கணக்குப்படி பார்த்தால், தேவகோட்டங்களின் வலப்புறம் மூன்று அரைத்தூண்களும் இடப்புறம் மூன்று அரைத்தூண்களும் அமைந்திருப்பதாகக் கொள்ளவேண்டும். வாக்கிய அமைப்பின் தெளிவின்மை தூண் கணக்குப்போடும் அளவிற்குத் தள்ளிவிட்டது.

இதே பகுதியில் தூண் உறுப்புகளை வரிசைப்படுத்தும்போது, 'இத்தூண்கள் ஒவ்வொன்றும் கால், இடை, கலசம், தாடி, குடம், பத்மம், பலகை, போதிகை, உத்திரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றன' (பக்.60) என்கிறார். தூண்கள் தாங்கும் உத்திரத்தைத் தூணின் ஒரு பகுதியாகவே நூலாசிரியர் கொண்டிருப்பது, கோயிற் கட்டடக்கூறுகளில் அவருக்குள்ள பயிற்சியின்மையைக் காட்டுகிறது. இக்கருத்தைப் பின்வரும் அவரது வரிகள் அழுத்தமாக உறுதிப்படுத்துகின்றன. 'உத்திரம் கபோதத்தின் உட்புறம் சென்று இணைகிறது'. 'இக்கோயிலில் பிரஸ்தரம் என்னும் தோள் பகுதி பூதவரி, கபோதகம், யாளவரி ஆகிய மூன்று அங்கங்களைக் கொண்டு விளங்குகிறது' (பக். 61). பூதவரி, யாளவரி என்பவை கட்டட உறுப்புகளல்ல அவை சிற்பத்தொடர்கள். வலபி எனும் கட்டட உறுப்பில் அமைவதே பூதவரி. தளக் கூரைக்கு மேல் அமையும் பூமிதேசமே யாளி (யாள அல்ல) வரித் தொடராய்க் காட்டப்படுகிறது. இவ்விரு உறுப்புகளுமே பூதத்தொடர், யாளித்தொடரின்றியும் அமையலாம். பல்லவர் காலத்திலிருந்தே இவற்றுக்குச் சான்றுகள் உள்ளன.

அர்த்தநாரீசுவரர் கோயில் விமானத்தை இரு தள விமானமென்னும் நூலாசிரியர், 'ஒவ்வொரு தளத்தையும் கர்ணகூடுகளும் சாலைகளும் மாறி மாறி அமைந்து' அலங்கரிப்பதாகக் குறிப்பிடுகிறார் (பக்.60). இருதள விமானமென்றால் ஆதி தளக் கூரை மீது மட்டுமே கர்ணகூடம், சாலை போன்ற ஆர உறுப்புக்கள் அமையும். ஆனால் ஒவ்வொரு தளத்திலும் இது

போல் அமைந்திருப்பதாக நூலாசிரியர் குறிப்பதால் தள எண்ணிக்கை பற்றி அய்யம் வருகிறது (மிக அரிதாக மேல் தளத்திலும் ஆர உறுப்புகள் இடம்பெறுவதுண்டு.) நூலாசிரியர் இணைத்துள்ள விமானத்தின் படமும் தெளிவாக இல்லை. எனினும் அதன் கீழ், 'அர்த்தநாரீசுவரர் கோயில் கருவறை - விமானம்' என்று எழுதப்பட்டிருப்பதால், நூலாசிரியர் கருவறைக்கு மேலுள்ள பகுதியையே விமானமாகக் கொண்டு, இரு தள விமானமென்று எழுதியிருப்பதாகக் கொள்ளலாம். பல ஆய்வாளர்களுக்கு விமானம் எது என்பதில் இது போல் குழப்பமுள்ளது.

சாலை நாசிகைச் சிற்பங்களையும் அகாரைச் சிற்பங்களையும் வண்ணிக்குமிடத்து, 'இவ்விமானங்களின் இடையிடையே விமானந் தாங்கிகளின் கதைவடிவங்களைக் காண்கிறோம்' என்கிறார் நூலாசிரியர். இதுவும் குழப்பமூட்டும் வாக்கிய அமைவாகும். இது போல் குழப்பந் தரும் வாக்கிய அமைவுகள் நூலின் பல இடங்களில் காணப்படுகின்றன. சில சான்றுகள்:

1) சாலைகளின் நடுவே (?) திசைக்குரிய தெய்வ உருவங்களைக் காண்கிறோம் (பக். 61).

2) இங்குள்ள சக்திகளின் சிற்பங்கள் யாவும் நான்கு கரங்களுடன் பக்கத்தில் (?) நேராக நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளன (பக். 45).

3) தென்புறத்திலுள்ள துவாரபாலகரும் கால்களை மாற்றி வைத்துக் (?) கதை ஏந்திய கரங்களோடு (?) வாயிலைக் காத்துநிற்கிறது (பக்.62).

4) விநாயகரின் சன்னதி விமானம் (?) வேலைப்பாடு மிக்க சுதைவடிவங்களைப் பெற்று வண்ணம் தீட்டப்பட்டுக் காணப்படுகிறது.

விமானத்தின் ஒரு தளத்திற்கு மட்டுமே கர்ணகூடம், சாலை நாசிகைச் சுதையுருவங்களை வண்ணித்துள்ளார். அதிலும் கூடக் கிழக்குப்புறம் விடுபட்டுள்ளது. கிரீவ கோட்டங்களிலும் கிழக்கு விடுபட்டுள்ளது.

வாயிற்காவலர்களை விவரிக்குமிடத்துத் 'தென்புறத்திலுள்ள துவாரபாலகர் அங்குசத்தையும் நாகத்தையும் மேற்கைகளில் ஏந்திக் கீழ்க் கைகளில் தர்ஜன்ய முத்திரை காட்டுகிறார்கள்' என்று ஒருமையில் தொடங்கிப் பன்மையில் முடித்துள்ளார். அவர் குறிக்கும் முத்திரை தர்ஜன்ய அல்ல. தர்ஜனி. வாயிற்காவலரின் இரண்டு கீழ்க் கைகளும் தர்ஜனி காட்டும் 'அரிய நிலை' நாம் கண்டதில்லை. இது இக்கோயில் சிற்பத்தின் சிறப்பம்சம் போலும்!

'கரந்தை சிதாநந்தேசுவரர் கோயில்' கட்டுரையில், கோயில் விமானத்தை விவரிக்குமிடத்தில் குழப்பம் காணப்படுகிறது. 'இக்கோயில், உபானம் முதல் அதிட்டானம் வரை கருங்கல்லாலும் அதன் மேலுள்ள சுவரும், விமானத் தளங்களும் செங்கல்லும் சுதையும் கொண்டு கட்டப்பட்டுள்ளன' (பக். 68) என்று தொடக்கத்தில் எழுதும் நூலாசிரியர், அடுத்த பத்தியில், 'இக்கோயில் விமானம் ஏகதள விமானம் ஆகும்' (பக்.69) என்கிறார். கோயில் என்ற தொடக்கமும் சரியல்ல. கோயில், கோபுரம் உள்ளிட்ட சுற்று மதிலுக்குள் அடங்கும் அத்தனை இடங்களையும் குறிக்கும் பொதுச்சொல்லாகும். இங்குப் பல விமானங்கள் அமையலாம். எந்த விமானமென்று கொள்வது?

'நல்லூர் நங்கை' என்னும் கட்டுரை ஆசிரியருக்குக் கோயிற் கட்டடக்கலை தொடர்பான பயிற்சியின்மையை உறுதிப்படுத்துகிறது. கட்டடம் எனும் தலைப்பின் கீழ் முதல் வரியாக, 'கி.பி. 10ஆம் நூற்றாண்டுச் சோழர் கலைப்பாணியில் மாடக்கோயிலாகக் காட்சியளிக்கிறது' (பக்.112) என்கிறார். இந்த வாக்கியத்தில் எழுவாயே இல்லை. அதனால் எது கி.பி. 10ஆம் நூற்றாண்டுச் சோழர் கலைப்பாணியில் மாடக்கோயிலாகக் காட்சியளிக்கிறது என்ற குழப்பம் நேர்கிறது. தலைப்பாகத் தந்திருக்கும் 'கட்டடம்' என்பதே எழுவாயென்றால், எந்தக் கட்டடம், எங்குள்ள கட்டடம் என்றெல்லாம் கேள்விகள் பிறக்கின்றன. நூலாசிரியரே கோபுரம் 17ஆம் நூற்றாண்டின தென்பதால் கோபுரம் தவிர்த்த கோயிலின் ஏனைய பகுதிகள் 10ஆம் நூற்றாண்டின என ஆசிரியர் கருதுவதாகக் கொள்ளலாம். அப்படிக் கொண்டால் ஆசிரியரின் கருத்து சரியல்ல என்றாகும். இம்மாடக்கோயிலின் பல்வேறு பகுதிகள் பல்வேறு காலகட்டங்களில் கட்டப்பட்டுள்ளன.

'கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம் என்று அமைந்துள்ளது', என இரண்டாம் வரி காணப்படுகிறது. இங்கும் எழுவாய் இல்லை. அதனால் 'எது' இவற்றோடு அமைந்துள்ளது என்பதை அறியக்கூடவில்லை. மூன்றாம் வரியும் நான்காம் வரியும் கொண்டுதான் நல்லூர் மையக்கோயிலின் கீழுள்ள தளத்தையே நூலாசிரியர் குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது. இந்தத்தளம், மேலுள்ள மாடக்கோயிலின் அமைப்புக்கேற்பவும், அம்மன் கோயிலின் அமைப்புக்கேற்பவும் நான்கு பிரிவுகள் பெற்றுள்ளது. இது வெற்றுத்தளம். இதில் கருவறை கிடையாது. தளத்தின் நான்கு பிரிவுகளுமே தேவகோட்டங்கள் பெற்றுள்ளன. நூலாசிரியர் குறிப்பிடுவது போல் முதலிரண்டு பிரிவுகள் (கருவறை, அர்த்த மண்டபம்?) மட்டுமல்ல.

'விமானம் ஏகதளம்' என்று நூலாசிரியர் கூறுகிறார் (பக். 112). ஆனால் நல்லூர் மாடக்கோயில், வெற்றுத் தளத்தின் மீதமர்ந்துள்ள இருதள விமானமாக உருவாக்கப்பட்டுள்ளது. மாடக்கோயில் கட்டுமான முறையை

அறியாத நிலையில் இக்கட்டுரையின் கட்டடப்பத்தி எழுதப்பட்டுள்ளது. அதனால் பல அரிய கட்டடக்கூறுகள் விடுபட்டுள்ளன.

'சென்னையில் ஓர் அமராவதி' அரிய கண்டுபிடிப்பே. ஆசிரியரை அதற்காக எத்தனை பாராட்டினாலும் தகும். இச்சிற்பம் உள்ள எல்லையம்மன் கோயில் திருவல்லிக்கேணியில் எப்பகுதியில் அமைந்துள்ளது என்று ஆசிரியர் சுட்டியிருக்கலாம். திருவல்லிக்கேணியில் மூன்றுக்கும் மேற்பட்ட எல்லையம்மன் கோயில்கள் உள்ளன. இச்சிற்பம் உள்ள கோயிலைக் கண்டுபிடிக்க அரும்பாடுபட வேண்டியிருந்தது. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, ஐஸ் அவுஸ் காவல்நிலையத்தைச் சந்திக்குமிடத்திற்கு முன் உள்ள இடப்புறச் சந்தில் இக்கோயில் அமைந்துள்ளது. கோயில் நிர்வாக அலுவலரின் அறைச் சுவரில் வைத்துப் பூசப்பெற்றுள்ள இச்சிற்பம் ஆசிரியர் குறிப்பது போல் அறுவரைக் கொண்டுள்ளது. அறுவரும் 'வட்டக் குழைகள்' அணிந்திருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால் பனையோலைக் குண்டலங்களே காணப்படுகின்றன. முன்னால் நிற்பவர்கள் 'இடது காலை ஊன்றி வலது காலை முன் வைத்துப் பின்னியது போல் ஒன்றின் முன் ஒன்றாக வைத்த நிலையில் காட்டப்பட்டுள்ளதாகக்' குறிப்பிடுகிறார் ஆசிரியர். ஆனால் முன்னால் நிற்கும் மூவரில் நடுவிலிருப்பவரே அது போன்ற காலமைவில் உள்ளார்.

'சம்புவராயர்களின் கோயிற் பணிகளை நான்கு நிலைகளில் பார்க்கலாம்' என்று திட்டம் செய்திருக்கும் பாங்கு பாராட்டற்குரியது. எனினும், அந்த வகைப்பாட்டின் கீழ்ப் பணிகள் விவரிக்கப்படாமை ஒரு குறையே. சம்புவராயர் காலத்தைச் சோழர்களின் கீழ், பாண்டியர்களின் கீழ், தனியாட்சியின் கீழ், விசயநகரப் பேரரசின் கீழ் என்று நான்காகப் பகுக்கும் ஆசிரியர், அந்த வகையிலேயே கோயிற் பணிகளையும் விவரிக்கிறார். இதிலும் தனியாட்சிப் பணிகள் இடம்பெறவில்லை. மேற்கண்ட இரு வகைப்பாடுகளுள் ஏதேனும் ஒன்றினை முழுவதுமாய்ப் பின்பற்றியிருந்தால் கட்டுரை சிறப்பாக அமைந்திருக்கும். இக்கட்டுரையிலுள்ள பல தரவுகளுக்கு அடிக்குறிப்புகள் இல்லாமையும் ஒரு குறையே. அடிக்குறிப்புகள் இல்லாத தரவுகளை ஆய்வாளர்கள் சரி பார்த்தல் இயலாது.

ஓடிப் போன சிங்களப் படைத்தளபதிகளுள் ஒருவராக ஜகத்ரதத் தண்டநாயகனின் பெயரைக் கல்வெட்டை மேற்கோள் காட்டி நூலாசிரியர் தந்துள்ளார். ஆனால் கல்வெட்டில் அப்பெயர் ஜயத்ரத தண்டநாயகன் என்றுள்ளது.[4]

காசுகள் தொடர்பான கட்டுரைகளில் குறிப்பிடும்படியாக ஏதுமில்லை. வீரபாண்டியன் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் காசுகளுக்குரிய வீரபாண்டியனாக முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனைச் (கி.பி. 1253-

1283) சுட்டுகிறார் ஆசிரியர். இதே காசுகளை, டாக்டர் இரா. நாகசாமி, எழுத்துக்களின் வளர்ச்சி அடிப்படையில் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கூறுவதாய்க் குறிப்பிடும் ஆசிரியர், 'கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கும் எழுத்து வளர்ச்சியில் மிகப் பெரிய மாற்றம் இருப்பதில்லை' என்று அக்கருத்தை மறுத்து, இவற்றைப் பதின்மூன்றாம் நூற்றாண்டு வீரபாண்டியனுடையவையாக்குகிறார். 'எழுத்து வளர்ச்சியில் ஒரு நூற்றாண்டளவில் கூட மாற்றம் இருப்பதில்லை' என்று திடமாகக் கூறும் இவ்வாசிரியர், தம்முடைய நல்லூர் நங்கை என்னும் கட்டுரையில், 'அழகு, அமைப்பு, ஆடையணிகளின் தோற்றம்' ஆகியவற்றை ஒப்பு நோக்கி, ஒரு செப்புத்திருமேனியின் காலத்தை மற்றொரு செப்புத்திருமேனியின் காலத்திலிருந்து ஐந்தாண்டுகள் முன்னதென அறிவிக்கிறார் (பக்.115)! அதுவும் ஆண்டைக்கூடத் துல்லியமாகக் கி.பி. 965 என்று குறிப்பிடுகிறார்! ஒரே அரசியால் ஐந்தாண்டு இடைவெளியில் செய்தளிக்கப்பெற்ற இரு செப்புத்திருமேனிகளின் 'அழகு, அமைப்பு, ஆடையணிகளின் தேற்றத்தில்' இவ்ஆசிரியர் கண்ட மாற்றங்களைக் காலநோக்கில் விரிவாக விளக்கியிருந்தால், தமிழ்நாட்டுச் செப்புத்திருமேனிகள் அனைத்தையும் இதே துல்லியக் கணக்கில் காலவறுதி செய்திருக்கலாம்!

இத்திருமேனி செம்பியன்மாதேவி காலத்திய திருமேனிதான் என்று வரையறுப்பதற்கான இலக்கணங்களாக, 'தேவி அணிந்துள்ள கரண்ட மகுடமும், நெற்றியைச் சுற்றியுள்ள பட்டமும், இளமை ததும்பும் முகமும், குழையற்ற காதும், கச்சையணியாத மார்பும், ஆடையணிகளும்,' ஆசிரியரால் குறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் சோழர் காலப் படிமங்கள் பெரும்பாலானவற்றில் காணப்படுபவை. இத்திருமேனியில் காணப்படும் எத்தகு கலை நுணுக்கங்கள் அல்லது வேறுபாடுகள் இதைச் செம்பியன் மாதேவியினுடையதாய் வரையறுக்க உதவுகின்றன என்று ஆசிரியர் விரிவாக விளக்கியிருந்தால் திருமேனி ஆய்வாளர்களுக்குப் பயன் விளைந்திருக்கும். துல்லியமான காலக் கணக்கீடு செய்யும்போது காரண, காரியங்கள் விரிவாகவும் தெளிவாகவும் தரப்பட்டால்தான் கணக்கீட்டின் உண்மைத் தன்மையைப் படிப்பார் உணர்ந்து மகிழ்தல் கூடும்.

நூலில் சில இடங்களில் வாக்கிய அமைப்பில் தெளிவில்லாத நிலை காணப்படுகிறது (சான்று : பக்.39, இரண்டாம் பத்தி). ஆங்காங்கே எழுவாய்ப் பயனிலைகளில் காணப்படும் ஒருமை, பன்மை மாற்றங்களும், திணை மாற்றங்களும் படிப்பார் கண்களை உறுத்துகின்றன. (சான்று: சுப்பிரமணியர் சக்திப் படையும் வஜ்ரப் படையும் கொண்டு அபய, வரதம் அளிக்கும் நிலையில் வள்ளி தெய்வானை சமேதராக நின்ற கோலத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது - பக்.69.)

'இந்நூலாசிரியர் கல்வெட்டாய்வாளராகப் பணியாற்றினாலும் கோயில்கள், சிற்பங்கள், காசுகள் ஆகியவை பற்றி ஆய்வு செய்வதிலும் வல்லவர் என்பதை இக்கட்டுரைகள் மூலம் நிருபித்துள்ளார்' என்று அணிந்துரையில் திரு. நடனகாசிநாதன் கூறும் கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் ஆசிரியரின் அடுத்த நூலாவது அமையவேண்டுமென வாழ்த்துவோம்.

***- இரா. கலைக்கோவன்***

**குறிப்புகள்**

1. *'வில்லவன் மகாதேவியார் தங்களாச்சி நக்கன் ஓலோகசிந்தமணியார்'* - SII 5 : 981.

   *'ஸ்ரீராஜராஜதேவர் நம்பிராட்டியார் தம்பிரானடிகள் வானவன் மாதேவியார்த் திரிபுவந மாதேவியார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர் தங்களாச்சி'* - SII 5 : 982.

2. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், *முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்*, தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு - அரசாங்கம், 1966, பக். 95. அர. அகிலா, *பழுவூர்க் கோயில்கள் (முற்சோழர் காலம்)*, ஆய்வேடு, பக்.43.

3. திருக்கோளக்குடி சாமுண்டா எருமைத் தலை மீது பாதத்தை வைத்துள்ளார்.

4. நீலகண்ட சாஸ்திரியார் கல்வெட்டொட்டி ஜயத்ரத தண்டநாயகன் என்று குறிப்பிடுகிறார். The Cholas, University of Madras, 1955, P. 368.

## பள்ளியும் யாழும்

பள்ளி கொண்ட பெருமாள் காட்டப்பட்டிருக்கும் சில கருவறைகளின் பின் மற்றும் பக்கச்சுவர்ப் பகுதிகளில் அடியவர், கந்தருவர், நாரதர், தும்புரு, தேவர்கள், அரக்கர்கள் காட்டப் பெறுவதுண்டு. இவர்களுள் தும்புருவும் நாரதரும் கையில் யாழ், வீணை கொண்டு இசையெழுப்ப, சில தேவமகளிர் ஆடுமாறு அமைந்த சிற்பக் காட்சிகளும் மலையடிப்பட்டி ஒளிபதிவிஷ்ணுகிருகம் போன்ற குடைவரைகளில் காணப்படுகின்றன. பெருமாள், பாட்டும் யாழும் கேட்டுப் பள்ளி கொள்கிறாரா அல்லது அவரைப் பள்ளியெழுப்பப் பாடுகின்றனரா என்றறியாத நிலைக்குக் கலித்தொகைப் பாடலொன்று முற்றுப்புள்ளி வைக்கிறது. 'பாடலோடு அரும்பொருள் மரபின் மால் யாழ் கேளாக் கிடந்தான் போல் பெருங்கடல் துயில் கொள்ளும்' என்கிறது முல்லைக்கலி *(123)*.

# 3. யாவரும் கேளிர்

**1. ப. இராமதாசு :** *4.3.1948.* திரு. இல. பத்மநாபன் திருமதி இலக்குமி மகனார். தமிழ், கல்வியியல் முதுகலை. முதுகலைத் தமிழாசிரியர், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர், அருள்தரு மாரியம்மன் மேனிலைப்பள்ளி, சமயபுரம் 621 112. **இல்லம் :** 42, ஆசிரியர் குடியிருப்பு, சமயபுரம் 621 112. **பங்கேற்பு** : 19.12.76இல் நிகழ்ந்த வரலாற்றுக்கருத்தரங்கில் கட்டுரையாளராக; தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம், இந்திய மொழிகளின் மைய நிறுவனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அகில இந்திய வானொலி நிலையம் இணைந்து 1981-82இல் நடத்திய தமிழாசிரியர்களுக்கான தமிழ்ப் பயிற்சி; 1991இல் காந்தி தரிசன கேந்திரம் தஞ்சாவூரில் நடத்திய தேசிய ஒருமைப்பாட்டு முகாம்; உலகத் திருக்குறள் மைய இயக்குநராகத் திருச்சிராப்பள்ளிப் புரத்தாக்குடித் திருக்குறள் விழாவில் ஆய்வுக்கட்டுரை; 1982இல் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூரில் நடத்திய, தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழித் திறன் வளர்க்கும் திட்டச் சிறப்பாளர் பணிமனை; சென்னைச் சமூகப்பணி பள்ளி நடத்திய நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர்களுக்கான பொதுப்பயிற்சி; உலகத் திருக்குறள் மையம், வி.ஜி.பி. குழுமம் இணைந்து தங்கக் கடற்கரையில் நடத்திய கவிதைப் போட்டி; சென்னை காந்தி அமைதி மையம் நடத்திய பயிற்சிப் பட்டறை; எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பயிற்சி முகாம். **பொறுப்பு** : பொருளர், இலால்குடி வட்டத் தமிழாசிரியர் கழகம்; தமிழகத் தனியார்ப் பள்ளி ஆசிரியர் பேரவையின் திருச்சிராப்பள்ளி மாவட்ட இணைச் செயலர். **ஆர்வம்** : சமுதாயத்தொண்டு, திருவள்ளுவர், காந்தி சிந்தனைகளைப் பரப்புதல், வரலாற்றாய்வு, திருக்குறளை மையமாகக்கொண்ட கதைகள், கவிதைகள் படைத்தல்.

**2. சா. வளவன் :** *15.7.1949.* திரு. செ. சாம்பசிவம் திருமதி ஜெயலட்சுமி மகனார். தமிழில் முதுகலை, இலக்கிய நிறைஞர், முனைவர். உயர்கல்வி, மலையாளம், மானிடவியல் ஆகியவற்றில் பட்டயம். இலக்கிய நிறைஞர் பட்ட ஆய்வுத் தலைப்பு - பிள்ளைத் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்; முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு - பெண் எழுத்தாளர்களின் தமிழ்ப் புதினங்கள். தேர்வுநிலை விரிவுரையாளர் - இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 600 030. **இல்லம்** : ஏஜி. 129/12-ஏ, ஏழாம் முதன்மைச் சாலை, அண்ணாநகர், சென்னை 600 040. தொ. 6216145. **பங்கேற்பு** : ஐம்பதிற்கும் மேற்பட்ட உலக, இந்திய, தமிழ் நாட்டுக் கருத்தரங்குகளில் கட்டுரையாளராகப் பங்கேற்பு. **சிறப்புப் பயிற்சி :** நாட்டுப்புற இலக்கியம், இக்கால இலக்கியம், சிற்றிலக்கியம், இலக்கணமும்

மொழியியலும். **வெளியீடுகள் :** நாட்டுப்புறவியல் கட்டுரைகள், பொது மொழியியல், பெண் படைப்பாளர் படைப்புகள், பிள்ளைத் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும், சுமை (கதை), அம்மாவும் ஆறுமுகமும் (கதை), விடியல் (சிறுகதைத் தொகுப்பு), அருந்திறலாளர் அ.மு.ப., தெ.பொ.மீயின் மொழியியற் கட்டுரைகள் - மொழிபெயர்ப்பு, கள்ளோ காவியமோ - திறனாய்வுக் கட்டுரைகள், வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் (பதிப்பு).

**3. தி.கி.வெ. ஈ.ஸ்டர்சன் :** *9.4.1944*. திரு. வி.எஸ். திரவியம் திருமதி. மெர்சி பாக்கியம் மகனார். விலங்கியலில் முதுநிலை. முதுநிலை அறிவியலறிஞர் - வேளாண் ஆய்வுப் பணி, நடுவண் கடல்மீன்கள் ஆய்வு நிறுவனத்தின் தூத்துக்குடி ஆய்வு மையம், தெற்குக் கடற்கரைச் சாலை விரிவாக்கம், தூத்துக்குடி 628 001. தொ. 0461-320274, 322374. **இல்லம் :** 134, சி.ஜி.ஈ குடியிருப்பு, தூத்துக்குடி 628 003. தொ. 0461-327716. **ஆர்வம் :** ஆய்வு நோக்கில் உணவியல், உணவியல் சார்ந்த நோய்க்கூறியல், கல்வெட்டியல், பழங்காலக் கட்டடக்கலை, சிற்பக்கலை, நாணயவியல். **சாதனைகள் :** தூத்துக்குடியருகே அரிய யானைப்படிவமொன்றைக் கண்டறிந்தது. தற்போது அப்படிவம் ஹைதராபாத்திலுள்ள இந்திய அருங்காட்சியகத்தின் நிலவியல் சங்கத்தில் உள்ளது. நாகபுரியிலுள்ள தேசியச் சூழலியல் பொறியியல் ஆய்வு நிறுவனத்திற்காகச் சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தின் சூழலியல் தாக்க மதிப்பீடு மேற்கொண்டமை. **வெளியீடுகள் :** இந்திய அளவிலான ஆய்விதழ்களில் முப்பதாறு ஆய்வுக் கட்டுரைகள்.

**4. கள. நம்பிள்ளை :** 26.7.1924. திரு. எதிராஜம் பிள்ளை திருமதி. செல்வராமானுஜம் மகனார். உரிமையாளர், ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ், 34-A/2 அக்ரகாரம், மேலச்சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி 620 002. தொ. 706823, 704312. **சாதனை :** நேபாளம், அரித்துவார், காசி போன்ற பல புனிதத்தலங்களுக்கு 1954இல் இருந்து ஆண்டுதோறும் தொடர்ச்சியாகப் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைத் தனி ரயில்பெட்டி ஏற்பாடு செய்து அழைத்துச் சென்று வருவது, இந்தப் புனிதப் பணியைப் பாராட்டிப் பயணிகள் பலர் பல பரிசுகளும் கேடயங்களும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். **ஆர்வம் :** அனைத்து வசதிகளுடன் மிகக் குறைந்த செலவில் பல்வேறு புனிதத் தலங்களுக்கு ஆர்வமுள்ள அனைவரையும் அழைத்துச்செல்வது; இசை, வரலாறு.

**5. மு. செல்லன் :** *7.6.1951*. திரு. முனுசாமி திருமதி செல்லம்மாள் மகனார். முதுகலை, முதுநிறைஞர், முனைவர் - தமிழில்; முதுநிறைஞர் ஆய்வு - நாட்டுப்புற இலக்கிய ஆராய்ச்சி வளர்ச்சி (பாடல்கள் மட்டும்); முனைவர் ஆய்வு - தஞ்சாவூர் மாவட்ட நாட்டுப்புற நாடகங்கள் (பிரகலாதா

சரித்திரம்). முதுநிலை விரிவுரையாளர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் 613 002. **இல்லம்** : 37, பவுடர் மில்ஸ் சாலை, சத்தியவாணிமுத்து நகர், சென்னை 600 012. **பங்கேற்பு :** தமிழ்ப் பல்கலைக் கழகம் நடத்திய நாடகப் பயிற்சிப் பட்டறை - 1986, இந்திய இலக்கியப் பொதுக்கூறுகள் பயிற்சி - 1991, பயனாக்க மொழியியல் புத்தொளிப் பயிற்சி - 1998; சென்னை சமூகநலப் பள்ளி நடத்திய பயிற்சிப் பட்டறை - 1993. தமிழ்ப் பல்கலைக் கழகத் துளிர் நாடக அமைப்புடன் இணைந்து வெறியாட்டம், பாதுகாவலன் நாடகங்களில் பங்கேற்பு. மதுரை நிஜ நாடக இயக்கக் கலைவிழா. **படைப்புகள் :** தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியல் களஞ்சியத் தொகுதிகளுக்குப் பல ஆய்வுக் கட்டுரைகள். மருதம் ஆய்விதழிலும், கரந்தைக் கலைக்கல்லூரி ஆண்டு மலரிலும் ஆய்வுக்கட்டுரைகள். இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - நான்காம் கருத்தரங்கில் கலைமகள் இதழ் பற்றிய ஆய்வுக் கட்டுரை. **ஆர்வம் :** நாடகம், நாட்டு நலப்பணி, கல்வெட்டியல், இலக்கியம் - குறிப்பாக நாட்டுப்புற இலக்கியம்.

**6. இரா. உமாமகேசுவரன் :** 2.1.1927. திரு. உ. இராமசாமி, திருமதி. மங்களம் மகனார். இண்டர்மீடியட். **இல்லம்** : 9, மேற்குத் தெரு, மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி 620 002. தொ. 704840. **பொறுப்புகள் :** திருவரங்கம் அரிமா சங்கத்தில் பல பொறுப்புகள் வகித்தவர். **ஆர்வம் :** இசை, இலக்கியம்.

**7. பாரி மா. இராஜகணபதி :** 17.10.1944. திரு. பாரி. மாசிலாமணி, திருமதி. பாரி. சிவபூஷணம்மாள் மகனார். சைவசித்தாந்தப் புலவர். **இல்லம் :** 19, பாரதி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033. **படைப்பு:** சேக்கிழார் பெருமையும் திருத்தொண்டர் புராணச் சிறப்புகளும் - நூல். **ஆர்வம் :** தலப்பயணம் செய்தல், கல்வெட்டாய்வு, வரலாற்றாய்வு, பயணம், ஆன்மீகம் தொடர்பான நூல்கள் படித்தல்.

**8. க. இராசவேலு :** 20.11.1936. திரு. சு. கந்தசாமி, திருமதி. சின்னம்மாள் மகனார். முதுகலை பொருளாதாரம், அரசியல். இளநிலை சட்டம். வழக்கறிஞர், 18, காந்திசாலை. திருவரங்கம், திருச்சிராப்பள்ளி 620 006. தொ: 432476. **படைப்புகள் :** ஒரே நீதி (நாடகம்), செண்பகம், செண்பகத்தேன், செண்பகப்பாட்டு, செண்பக அமுது, துயிலெழுவாய் என் செண்பக மயிலே, செண்பக வெண்பா மாலை, செண்பகத் தாலாட்டு, செண்பக ஊஞ்சல், திருமழபாடி திருஇரட்டை மணிமாலை, திருமேனி வெண்பா அந்தாதி (கவிதை நூல்கள்). **ஆர்வம் :** நாடகம், இலக்கியம், சொற்பொழிவு. **பொறுப்புகள் :** தலைவர், தொல்காப்பியர் கலைக்குழு; செயலர், சன்மார்க்க சங்கம்; தலைவர், அரங்கர் சிறப்புச் சிற்றங்காடி; துணைத் தலைவர்,

திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம்; தலைவர், அறங்காவலர் குழு, அருள்திரு அரங்கநாதர் திருக்கோயில்; தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டத் திருக்குறள் பேரவை. நிறுவனர், செண்பகத் தமிழரங்கு, திருவரங்கம்.

**9. க. கோடி :** *17.2.1941.* திரு. கணபதிப்பிள்ளை, திருமதி. விருத்தாம்பாள் ஆச்சி மகனார். இளநிலை மருத்துவம், அறுவை; தோல் மருத்துவத்தில் பட்டயம். மருத்துவமனை, **இல்லம் :** *C. 128,* ஐந்தாவது குறுக்குத் தெரு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி *620 018.* தொ. *765467.* **சாதனை :** பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து ஊரக மக்களுக்குத் தோல் நலம் தொடர்பான மருத்துவ உதவிகள். **ஆர்வம் :** தமிழிலக்கியம், சைவ சமய இலக்கியம்.

**10. த. சந்திரகுமார் :** *26.6.1952.* திரு. வீ. தங்கவேலு, திருமதி. க. ஆதிலட்சுமி மகனார். வரலாற்றில் முதுகலை, முதுநிறைஞர், முனைவர். 'முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் வரலாறு மற்றும் கலைப்பணி - முதுநிறைஞர் ஆய்வேடு. 'விருத்தகிரீசுவரர் கோயில் - விருத்தாசலம்' - முனைவர் ஆய்வேடு. பேராசிரியர், சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் *613 005.* **இல்லம் :** *5,* ஏழாவது குறுக்குத் தெரு, சுந்தரம் நகர், மருத்துவக் கல்லூரிச் சாலை, தஞ்சாவூர். தொ. *40397.* **வெளியீடுகள் :** சிந்தைக்கினிய சிற்பக்கலை, அனைத்துலக அளவில் எட்டு ஆய்வுக் கட்டுரைகள், அனைத்திந்திய அளவில் முப்பது ஆய்வுக் கட்டுரைகள். **பங்கேற்பு :** ஹாங்காங் பல்கலைக் கழகத்தில் நடந்த ஆசிய வரலாற்றாசிரியர்கள் மாநாடு. நாற்பதிற்கும் மேற்பட்ட அனைத்திந்தியக் கருத்தரங்குகள். **ஆய்வேடுகள் :** விசயநகர - நாயக்கர் காலச் சிற்பக் கூறுகள், விசயநகரக் கால ஓவியங்கள். **ஆய்வுகள் :** நாயக்கர் கால ஓவியங்கள், தென்னிந்திய நாயக்கர் காலச் சுதைச் சிற்பங்கள். **ஆர்வம் :** பல்லவர், சோழர் மற்றும் விசயநகரப் பேரரசர், நாயக்கர் காலக் கலைப்பாணி தொடர்பான ஆய்வுகள். **சாதனைகள் :** விருத்தாசலம் கோயிலில் விசயநகர ஓவியங்கள் கண்டுபிடிப்பு, பைரவர் - சட்டைநாதசுவாமி பற்றிய தத்துவ விளக்கம், அறம் காக்கும் நீதிதேவன் சிற்பம் பற்றிய ஆய்வு, கிறித்துவத் தேவாலயங்கள் சிலவற்றில் உள்ள இந்துக் கோயில் கட்டட மரபுகள் பற்றிய ஆய்வு, குரங்கு முகம் கொண்ட நந்தியெம்பெருமான் சிற்பம் கண்டுபிடிப்பு, விருத்தாசலம் விக்கிரம சோழீசுவரம் கோயில் பற்றிய ஆய்வு, விசயநகரப் படையில் பெண்களின் பங்கு பற்றிய ஆய்வு, தேள் மீதமர்ந்த காலன் சிற்பம் கண்டுபிடிப்பு.

# 4. அன்புள்ள உங்களுக்கு

வரலாறு ஆறாம் இதழ் பெற்றேன். அட்டைப்படம் குடைவரையையே கண்முன் நிறுத்திற்று. புதிய கல்வெட்டுகளின் வழி, புதிய சொற்களையும், அக்கால நடைமுறைகளையும் அறிந்துகொள்கிறோம். அவை வெளிவாராவிடின் நமக்கு இழப்பன்றோ?

முக்காணிக் கல்வெட்டு புதிய செய்திகளைத் தருகிறது. வீரக்கொடியார், அந்தரம் அற்றமை, கல்லேறுபட்டு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேலும், இன்றைய தமிழ்நாட்டிலும், பண்டைய தமிழகத்திலும் இடத்தளவான ஊர்ப்பெயர் பெறும் வழக்கு தெரிகிறது. முக்காணி, எட்டரை, எட்டுமாத்திடல், ஏழரைஇலக்கம் முதலிய ஊர்ப்பெயர்களைக் குறிப்பிடலாம்.

திருவிசலூர் இரண்டாம் கல்வெட்டில் நாள்தோறும் வட்டி பெற்றமை புதிய செய்தி. இன்றைய வழக்கிற்கு முன்னோடி. ஐந்தாம் கல்வெட்டில் சாக்கைக்கூத்திற்கு ஒப்பனைக்கும் ஆட்டத்திற்கான இசைக்கும் தரப்பட்டவையும், குடமுழா, கல்வெட்டில் இடம்பெறுதலும் அரிய செய்திகள். பூசும் 'மாவு' அரிய வழக்கு.

தென்னிந்தியக் காசுகள் நல்ல கட்டுரை. பிற்காலச் சேரர் காசில் உள்ள 'ச' தமிழ் எழுத்தாக இருக்கலாம். ஆங்கிலேயர் காலத்துத் தமிழ்க்காசுகள் பத்தியில் அக்காசுகளின் நடுவில் உள்ள தெலுங்கு, கன்னட எழுத்துகளுக்கு விளக்கம் கட்டுரையாசிரியர் குறிக்காது விட்டதேன்?

'கொற்றவைத்தளி', முழுமையான, அருமையான கட்டுரை. இக்கட்டுரை போல் வேறு எங்கும் எதிலும் இவ்வளவு விளக்கமாகப் பார்க்க இயலாது என நினைக்கிறேன். பிறவற்றிற்கும் இவ்வாறு வரின் பின்னர் முழு நூலாக்கலாம். ஒப்பீடு அருமையோ அருமை, நல்ல முயற்சி; தெளிந்த முயற்சி.

தளிச்சேரிக் கல்வெட்டு வரலாற்றில் வந்து வரலாறு பதித்துவிட்டது. இவ்வாறே, அச்சுப் பெறாத கல்வெட்டுகளை வரலாறு தொடர்ந்து வெளியிடலாம்.

பண்டைத் தமிழகத்தில் இடம் பெற்ற கோயில் (அரண்மனை) கட்டடக்கலை தொடர்பான கலைச்சொற்கள் பல இலக்கியங்களில் பதியப்பட்டுள்ளன. அவற்றைத் தொகுக்கலாம். தொடர்ந்து வெளியிடலாம்.

திருவிசலூர் முதற் கல்வெட்டில் காணப்படும் 'உத்தமாண்டி' எனும் பெயர், சோமரசன்பேட்டை வட்டாரத்தில் வழக்கிலுள்ள 'உத்தண்டி' எனும்

பெயரை நினைவூட்டுகிறது. பல கல்வெட்டுகளில் 'அச்சு' இடம்பெறுகிறது. மதிப்பு தெரியவில்லை.

கொல்லிமலையில் இருந்த அச்சமூட்டும் கருங்கண் தெய்வம் அம்மலையின் மேற்குப்பகுதியில் ஓவியப்பாவையொன்றை எழுதியிருந்தது என உள்ளது. குறுந்தொகை 89ஆம் பாடலில் மட்டும் 'கருங்கட் தெய்வம் எழுதிய பாவை' என வருகிறது. பிற சங்கப் பாடல்களில் வினைமாண் பாவை, பூதம் புணர்த்த புதிதியல் பாவை, திருநல உருவின் மாயா வியற்கைப் பாவை (நற்றிணை) என வருகின்றன. அப்பாவை 'ஓவியப்பாவைதானா?' என்பது ஆய்வுக்குரியது.

வியன்னா நகரத்து அருங்காட்சியகத்திலுள்ள கிரேக்க மொழியிலமைந்த தமிழ் வணிகர் ஒப்பந்தத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்து பின்னிணைப்பாகக் கொடுத்திருக்கலாம்.

சிங்களர் இலங்கையில் தமிழ், தமிழர் அழிப்பு வேலைகளைக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே செய்துவிட்டனர் என்பதையே 'பிராமி எழுத்துமுறை சிங்கள எழுத்துமுறையாக மாற்றியமைக்கப்பட்டது' என்னும் பகுதி உணர்த்துகிறது.

- ***பி. தமிழகன்,***
*2, பிச்சையம்மாள் நகர்,*
*திருச்சிராப்பள்ளி - 620 021.*

வரலாறு இதழினைத் தொடர்ந்து படிக்கும் ஆய்வாளர்களில் நானும் ஒருத்தி. இதழ் ஐந்தில் எனது நூல் திருவதிகை வீரட்டானத்திற்கு மதிப்புரையினை வெளியிட்டுள்ளமைக்கு என் நன்றி.

என் நீண்ட காலக் கல்வெட்டுப் பயிற்சியும் அனுபவமும் நூலில் வெளிப்படுவதாகக் குறிப்பிட்டு இருப்பதோடு, என் ஆசிரியப் பெருந்தகையின் கொடையினை நான் நன்கு உள்வாங்கிக்கொண்டு வெளிப்படுத்தி இருக்கிறேன் என்று என்னைப் பெருமைப்படுத்தியதற்கும் என் நன்றி.

நூலில் கோயிலைப் பற்றிய மூன்று பகுதிகள் (வரலாற்றுப் பெட்டகங்கள், சிற்பங்கள், கட்டடக் கலை) தங்கள் மதிப்புரையின் (10 பக்கம்) பெரும்பகுதியை நிறைத்துக்கொண்டுவிட்டன. அனைத்துக்கும் வரிக்குவரி விளக்கம் அளிப்பது என் நோக்கம் அன்று எனினும் சில கூற விழைகிறேன்.

I. சிற்பங்கள் பற்றிய மதிப்புரைப் பகுதி தொடங்கும் போதே, *1.* குறிப்பெடுப்பதில் நேர்ந்த கவனக்குறைவாகலாம், 2. விமானத்தின் புறச்சுவர்கள் மற்றும் அங்காலையங்களில் இடம்பெற்றிருக்கும்

சுதையுருவங்களை விவரித்திருக்கும் இடத்தில் பிழைகள் என்றே குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த அடிப்படையிலேயே அக்குறைகளைச் சுமார் மூன்று பக்கங்கள் மிக விரிவாக எழுதியுள்ளீர்கள். இதில் நீங்கள் யூகித்த காரணங்கள் அன்றி மற்றொன்றையும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். நான் விவரித்துள்ள சிற்பங்கள் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பாதி பொரிந்து, செங்கல்லும் சுண்ணாம்பும் வெளியில் தெரிய எலும்பும் கூடுமாய் காட்சியளித்தவை. பின்னர் சுமார் 1975இல் சிமெண்டால் ஓரளவு சரிசெய்யப்பட்டது. பின்னர் 1993-94இல் மீண்டும் சரிசெய்யப்பட்டு எண்ணெய் வண்ணம் பூசப்பெற்றுள்ளது. இடைக்காலத்தில் பெற்ற மாற்றங்களே பெரும்பாலும் தாங்கள் குறிப்பிடும் 'விவரித்தலில்' வந்த மாற்றங்களாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

('இடைக்கால மாற்றங்கள்' 1975இல் ஒருமுறையும், 1993-94இல் மற்றொரு முறையும் நிகழ்ந்துள்ளதாகக் கூறும் நூலாசிரியர், தம் நூலின் 49ஆம் பக்கத்தில், விமானச் சுதையுருவங்களை வண்ணித்து முடிக்குமிடத்து, 'இவையனைத்தும் 19.8.1994 வரை சுதையாலேயே செய்யப்பெற்றிருந்தன. திருப்பணியின் ஒருபகுதியாக இவை எண்ணெய் வண்ணம் (Oil-paint) செய்யப்பெற்றுவிட்டன. இந்நூலில் இடம்பெறும் சுதையுருவப் படங்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பெற்றவை,' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படங்கள் 'விமானச் சுதையுருவங்கள்' என்ற பொதுத் தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளன. 'இன்ன மூர்த்தி' என்ற குறிப்பில்லாமல் இராவண-அனுக்கிரகமூர்த்தி சுதைவடிவத்தின் படம் மேலாகவும், காலாந்தகமூர்த்தி, கஜசம்ஹாரமூர்த்தி என்ற குறிப்புகளுடன் அவ்வச் சுதையுருவங்களின் படங்கள் கீழாகவும் நூலில் இடம்பெற்றுள்ளன. அவை அப்படியே 'ஸ்கேன்' செய்யப்பட்டு இங்குத் தரப்பட்டுள்ளன. இருபது ஆண்டுகளுக்கு முன் இச்சுதையுருவங்கள், 'இப்படித்தான் இருந்தன' என்று நூலாசிரியரே தம் நூலில் கூறியுள்ளார். ஆனால் கடிதத்தில் இச்சுதையுருவங்கள் 'எலும்பும் கூடுமாகப் பாதி பொரிந்து செங்கல் சுண்ணாம்பு தெரிய' இருந்ததாகவும், அதனாலேயே விவரித்தலில் மாற்றங்கள் வந்ததாகவும் குறிப்பிடுகிறார். இந்த 'எலும்பும் கூடும்' தகவல் நூலில் எவ்விடத்தும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. வரலாறு படிப்போர் உண்மையுணர்வார்கள் என்று நம்புகிறேன் - மதிப்புரையாளர் (மர்.))

II. அடுத்து மகேந்திரன் கல்வெட்டு இருப்பது 'மண்டகப்பட்டில்' தான். ஊரைத் தவறாக எழுதியமைக்கு வருந்துகிறேன். ஆனால் இக்கல்வெட்டு குறிக்கும் செய்தியிலோ, அதைப் பற்றிய விளக்கத்திலோ நான் தவறு

செய்துவிடவில்லை. ஊர்ப் பெயர் மாற்றத்தைக் கண்டு. மகேந்திரர் பதறுவாரோ இல்லையோ, தாங்கள் பெரிதும் பதறிவிட்டீர்கள்.

அடுத்தது, ஆடவல்லானைப் பற்றிய விவரித்தலில், கீழ் இடக்கரம் வீசிய நடனமுத்திரை என்றும், கோபுரச் சிற்பங்களைப் 'பரதநாட்டியக் கரணங்கள்' என்றும் நான் குறித்தது பற்றிய மதிப்புரை. நீங்கள் எழுதியிருப்பதில் இருந்தே, இச்சொற்றொடர்கள் தேர்ந்த நாட்டியக்கலை வல்லுநரால் எழுதப்பட்டதல்ல என்பது தெளிவாகிறது. அவ்வாறிருக்க, 'என்ன நடனம் என்று ஆசிரியர் அடையாளம் காணவில்லை' என்றும், ஊரக நடனத்திற்கும், பரதரின் நாட்டிய கரணத்திற்கும் ஒத்திசைவினை ஆசிரியர் அறியவில்லை என்றும் அங்கலாய்ப்பது எந்த அளவு பொருத்தம் எனத் தெரியவில்லை.

(பல ஆண்டுகளாகத் தொல்லியல் துறையில் பணியாற்றும் முதுநிலை அலுவலர் கோயிற் கலைகள் பற்றிய அடிப்படைச் செய்திகளையேனும் அறிந்திருப்பார் என்ற எதிர்பார்ப்பு அங்கலாய்ப்பாகுமா? - மர்.)

III. சமுதாயப் பிரிவில் (பக். 26,27,29) சில கருத்துக்களைக் கூறியுள்ளீர்கள். அதனை மீண்டும் படித்தபோது நான் எழுதியது சரியே, நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. (புரிந்ததின் விளைவே அவ்வரிகள் - மர்.)

மொத்தத்தில் 'கருத்துப் பிழைகள்' சில இருப்பதை ஒத்துக்கொள்கிறேன். பரகேசரியின் மூன்றாம் ஆண்டிலேயே 'மதிரை கொண்ட' என்ற சிரடைவுண்டு என்பது போல்வன. பல, 'கவனக்குறைவால் நிகழ்ந்த விவரித்தல் தவறுகளே' என்று சுட்டியிருந்திருக்கலாம். இக்கவனக்குறைவுகளே 'கருத்துப் பிழைகள்' ஆகுமா? நூலில் கருத்துப் பிழைகள் மிகுதியாக இருப்பின் நூலாசிரியரின் பயிற்சியும் அனுபவமும் பாராட்டப்படக் கூடியது இல்லை.

(நூலின் உட்பிரிவுகள் பதினொன்று. இவற்றில் மூன்று பிரிவுகளில்தான் மிகுதியான பிழைகள். கடிதத்தில் நூலாசிரியரும் மதிப்புரையின் பெரும்பகுதியை இப்பகுதிகளே நிரப்பியிருப்பதாக எழுதியுள்ளார். எஞ்சிய எட்டுப் பிரிவுகளில் உள்ள நல்ல தரவுகளின் அடிப்படையில்தான் நூலாசிரியரின் பயிற்சியும் அநுபவமும் பாராட்டப்பட்டுள்ளன. கவனக் குறைவுகளே கருத்துப் பிழைகளுக்குக் காரணம். தவறாக விவரித்தலின் விளைவாக வடிவங்கள் மாறியிருப்பது, அவை பற்றிய கருத்தூன்றலில் நிகழ்ந்த பிழைகள்தானே? - மர்.)

IV. மதிப்புரை நூலுக்குத்தானே அன்றி, அணிந்துரைக்கும் சேர்த்தல்ல. அணிந்துரையிலும் தவறுகளைக் கண்டு, அது நூலில் இல்லாதிருப்பினும்

விமானச் சுதையுருவங்கள்





காலாந்தக மூர்த்தி



கஜசம்ஹார மூர்த்தி

கூட விரிவாகக் கூறுவது நமக்கு அணிந்துரை நல்குபவரை மதிப்பதாகாது என்பது என் தாழ்மையான கருத்து.

(ஒரு நூலுக்கு அணிந்துரை தருவது மிகுந்த பொறுப்புக்குரிய செயலாகும். அணிந்துரை, நூலின் உள்ளீடு குறித்தும் நூலாசிரியர் குறித்தும் அமைவதால் அதுவும் மதிப்புரைக்கு உட்பட்டதே. நூலுக்கு அணியாக விளங்க வேண்டிய அவ்வுரையின் தரவுகளிலேயே பிழைகள் இருப்பின்

அதை மதிப்புரையாளர் சுட்டிக்காட்டாதிருக்கக் கூடுமா? பிழைகளைச் சுட்டிக்காட்டுவது 'மதிப்பதாகாது' எனில் மதிப்புரைகளே தேவையில்லை - மர்.)

V. 'திருவதிகை வீரட்டானம்' நூல் மதிப்புரை பற்றி மட்டுமல்லாது வேறு சில கருத்துக்களையும் கூற விழைகிறேன். பொதுவாக, ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும்போது முன்னவர்கள் செய்த ஆய்வினைப் படித்து மனதில் ஏற்றும், அதை மறுத்தும் எழுதுவது நல்ல ஆய்வுக் கண்ணோட்டம் என்பதில் வேறுபட்ட கருத்து, எந்த ஒரு நல்ல ஆய்வாளரிடத்தும் இருக்கஇயலாது. ஆனால் ஆய்வு முன்னவர்களை மறுப்பதிலும், அவர்கள் கூறாது விடுத்தவைகளைக் குறிப்பிட்டுக் கூறும்போதும், அவர்கள் தவறாக எழுதிவிட்டவற்றை மாற்றும்போதும் நாம் சில நல்ல நெறிகளைப் பின்பற்றுவதே ஆய்வுக்கு அழகாகும். பழைய 'செந்தமிழ்', 'இந்தியன் ஆண்டிக்குவரி', 'எபிகிராபிகா இண்டிகா' போன்ற ஆய்வு இதழ்களைப் படித்தால், தொடர்ந்து ஆய்வுரைகளும், கனல் தெறிக்கும் மறுப்புரைகளும் வந்திருக்கும். அவைகளில் எவருமே 'அவர் கூறியது பிழை', 'தவறு', 'சரியல்ல' என்று நேரெதிராகச் சொற்களைப் பயன்படுத்துவதைக் காணஇயலாது. மறுக்கும் முறையே நமக்கு இன்பமூட்டுவதாய் அமையும். அத்தகைய முறையிலேயே 'வரலாற்றிலும்' ஆய்வுரைகளும் மறுப்புரைகளும் இடம்பெற்றால் மேலும் பெருமதிப்பினை இதழ் பெறும் என்று கருதுகிறேன்.

ஆய்வுரை எழுதுவதைவிட மறுப்புரைகள் எழுதும்போதுதான் மிகுந்த கவனம் தேவை. முந்தைய ஆய்வாளரின் திறமையையும், உணர்வையும் நெறியினையும் நாம் மதித்து, அவர்தம் எழுத்தின் சிறப்பினைப் புரிந்துகொண்டால்தான் நமது மறுப்புரை இயல்புடையதாகும். அவ்வகையிலும் சில இடங்களில் 'வரலாறு' பிழை செய்கிறதோ என்று அஞ்சுகிறேன். சான்றாக, இராஜராஜி என்ற தளிச்சேரிப் பெண் பற்றிய குறிப்பு. பல்வேறு அரசர்களைத் தம் பெயராக்கிக் கொண்ட தளிச்சேரிப் பெண்களை இராஜராஜிக்குச் சொன்ன விளக்கத்திற்குட்படுத்த முடியுமா? அதே போல அபிமானதொங்கனையும் கூறினால் சரியாகுமா? என்று வினாக்களை மேலும் சிறிது சிந்தித்தால், நிச்சயம், 'அன்பும் மதிப்பும் கொண்டிருந்ததன் வெளிப்பாடே இப்பெயர் மாற்றம்' என்பது தெள்ளிதின் விளங்கும். நாடாளும் மன்னனிடமும், அரசமாதேவியாரிடமும் அன்பும், பற்றும், பாசமும், மதிப்பும் கொண்டிருந்த எண்ணற்றவர்கள் நாட்டில் இருப்பது இயல்பு. அந்த வகையில்தான் தம் பெயரையும் மாற்றிக்கொண்டிருத்தல் வேண்டும். சோழர் காலச் சமுதாயமான பேரரசுக் காலத்தில் மன்னனே அனைத்தும். அந்த அன்பையும், மதிப்பையும் குறுகிய வட்டத்தில் எடுத்துக்கொண்டு, நாம் ஆய்வு செய்து கேலிக்குரித் தாக்குதல் எவ்வகையிலும் பொருந்தாது.

(இராஜராஜன் மீது ஆறாத காதல் கொண்டிருந்த ஒருத்தி இராஜராஜி என்றே பெயர் கொண்டிருந்தாள்' என்ற கருத்தின் பொருத்தமின்மையைச் சுட்டிக்காட்டவே வரலாறு ஐந்தாம் இதழில் பக்கம் 86இல் அடிக்குறிப்பு எண் 51A இடம்பெற்றுள்ளது. அன்பிற்கும் மதிப்பிற்கும் ஆறாத காதலுக்கும் வேறுபாடு உண்டு. சார்பற்ற நிலையில் இந்த அடிக்குறிப்பை மீண்டும் படித்தால் வரலாறு பிழைசெய்யவில்லை, தவறான கருத்தை உரிய முறையில் சுட்டிக்காட்டியுள்ளது என்பது தெளிவாகும்.

வெயில், மழை பாராது, காட்டிலும் மேட்டிலும் மலை முகடுகளிலும் முட்புதர்களின் இடையிலும் அலைந்து திரிந்து களப்பணி வழித் தரவுகளைச் சேகரிக்கும் எந்த ஓர் ஆய்வாளரின் திருவடிகளுக்கும் வரலாறு இதழின் வணக்கமுண்டு. அநுபவமும் ஆற்றலுமுடைய சான்றோர்களிடம் அளவற்ற மரியாதையும் மதிப்பும் உண்டு. யார் உள்ளத்தையும் உணர்வுகளையும் எக்காரணம் கொண்டும் நோகடிப்பதோ, புண்படுத்துவதோ வரலாறு இதழின் நோக்கமல்ல. ஆனால் அதே சமயம் கருத்துக்களில் குறையிருந்தால், அவற்றை அய்யத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கக்கூடிய இடங்களில் அக்கருத்துக்களைச் சொன்னவர்கள் யாராயிருப்பினும் வரலாறு தயங்காது சுட்டிக்காட்டும். உண்மைகள் சுடுமென்றாலும் கூறாதிருத்தல் எங்ஙனம் கூடும்? - ஆர்.)

VI. கடந்த 'வரலாறு' இதழ்களில் 'பாண்டியர் குடைவரைக் கோயில்' போன்ற சில மிகத் தேவையான தொடர்க்கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. ஆனால் அது இந்த இதழில் இடம்பெறவில்லை. இதுபோன்ற தொடர்க் கட்டுரைகளை, வேறு காரணங்களுக்காக இடம்பெறச்செய்யாது விடுதல் கூடாது.

(தவிர்க்க இயலாத சூழ்நிலைகளால்தான் இதுபோன்ற 'விடுதல்கள்' நிகழ்ந்துவிடுகின்றன. இயன்றவரையிலும் 'தொடர்கள்' விடுபடாமலிருக்க முயல்வோம் - ஆர்.)

முனைவர் நா. மார்க்சியகாந்தி
உதவி கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி, சென்னை – 600 113.

சிறப்பாக அமைந்திருக்கும் வரலாறு ஆறாம் இதழில் கோயின்மை என்னும் சொல்வடிவம் (பக். 131) பற்றித் தடைவிடைகளால் படத்தோடு விளக்கியுள்ளீர்கள். சில கல்வெட்டுகளை(அச்சில் வந்தவை)ப் படித்த போது கண்ட ஒரு சொல்லை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருகால் அச்சொல்

'கோயின்மை' என்பதன் பொருளை ஊகிக்க உதவுமா என்பதனைச் சிந்திக்க வேண்டுகிறேன். அச்சொல்லும் கோயிற்பணியாளரைக் குறிக்குமோ என எண்ணுகின்றேன். அச்சொல்லமைந்த தொடர்கள் வருமாறு:

36 [கா]ளியும் இவள் தங்கை மருதியும் ஆக இவ்வகைப்படியே கோயிமையும் ஊருங் காணியாளரு முன்பாக உதக . . . .

37 பூறுவ தன்ம தேவதானப் – –

39 திருநெல்வேலிப் பெருமாள் வென்று மாலையிட்ட பெருமாள் எழுத்து இப்படி ஊருங் காணியாளருங் கோயிமை முன்பாக

40 இந்த உதக பூறுவ தன்ம தெய்வதானப் பிரமாணம்

(கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் தொகுதி *5* க. எண். *1969: 86*)

53 தன்மத்துக்கு விக்கனம் வந்தாலும் வீரவநல்லூர் ஊரும் கோயிமையும் நயினார் வெள்ளி மலை வேலாயுத பெ

54 ருமாள் சிபண்டாரத்தில்

(மேலது: *89*)

இக்கல்வெட்டுக்களும் (கி.பி. பதினேழாம் நூற்றாண்டு), இராசராசன் கல்வெட்டும் (கி.பி. பதினோராம் நூற்றாண்டு) இடத்தாலும், காலத்தாலும் மிகவும் வேறுபட்டன. எனினும் சொல் வழக்கு, சில வேறுபாடுகளுடன் (திரிபு - மருஉ) வழங்கலாமே! இரண்டும் (கோயின்மை - கோயிமை) ஒரு பொருளுணர்த்தும் ஒரு சொல்லின் திரிபுற்ற வடிவங்கள் (Corrupted Form) ஆகுமா?

- *அ.மா. பரிமணம்*

---

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

## 5. அங்கும் இங்கும் - 1997

### 1. பொருளாதாரப் பேராசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சி

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்துறைப் பேராசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சி 25.1.97இல் இருந்து 21.2.97 வரை நடைபெற்றது. இப்பயிற்சியின் போது, 'நலவாழ்வும் பொருளாதாரமும்' என்ற தலைப்பில் 30.1.97 அன்று நிகழ்ந்த இரா. கலைக்கோவனின் ஆய்வுரை, பொருளியல் பேராசிரியர் கம்ப்ளியின் 'ஊரக நலம்' குறித்த நூலாய்வாகவும் அமைந்தது.

### 2. திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகம்

இக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா 23.2.97 அன்று ஓட்டல் ஃபெமினாவில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறைத் தலைவர் புலவர் செ. இராசு கண்காட்சியைத் திறந்துவைத்துச் சிறப்புரையாற்றினார். இரா. கலைக்கோவன் வாழ்த்துரை நல்கினார். 'சங்க கால மன்னர் வரிசை' எனும் ஆய்வு நூல் வெளியிடப்பட்டது.

இரண்டு அமர்வுகளாக அமைந்த விழாக் கருத்தரங்கின் முதல் அமர்விற்குப் புலவர் செ. இராசுவும், இரண்டாம் அமர்விற்கு முனைவர் பே.க. வேலாயுதமும் தலைமையேற்றனர். திருவாளர்கள் எம். கந்தசாமி, மு.ம. கோபாலன், ஆறுமுக சீதாராமன், ப. சீனிவாசன், எம். துரைராசன், டி. செந்தில்நாயகம் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தனர். சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கோ. வேணிதேவி நிறைவுப் பேருரையாற்றினார்.

### 3. அறிவியல் தமிழ்ப் பயிலரங்கம்

புதுச்சேரிப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையின் சார்பில் அறிவியல் தமிழ்ப் பயிலரங்கம் மார்ச் 7, 8, 9 ஆகிய நாட்களில் நிகழ்ந்தது. எழுத்தாக்க, மொழியாக்க, பயிற்றாக்க இடர்ப்பாடுகளும் தீர்வுகளும் குறித்த

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

இக்கருத்தரங்கில் பல்துறை அறிவியல் அறிஞர்களும் தமிழறிஞர்களும் நான்கு குழுக்களாக அமர்ந்து அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கான வழிமுறைகளை ஆராய்ந்து, கலந்துரையாடி, இறுதி நாளன்று விரிவான அறிக்கையொன்றினை அரசின் தமிழ் வளர்ச்சித்துறைக்குப் பரிந்துரைத்தனர். சர்.சி.வி. ராமன் குழுவிற்கு முனைவர் ப.க. பொன்னுசாமியும், கணிதமேதை இராமநுசம் குழுவிற்கு இரா. கலைக்கோவனும், இயற்பியல் மேதை சந்திரசேகரர் குழுவிற்கு முனைவர் சம்பத்தும் பறவையியல் மேதை சலீம் அலி குழுவிற்கு முனைவர் அருணா இராசகோபாலும் தலைமையேற்றனர்.

## 4. தாய்மொழி வழியில் மருத்துவ, பொறியியல் கல்வி சிக்கல்களும் தீர்வுகளும் - கருத்தரங்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் சென்னையில் மார்ச் 10,11 ஆகிய இருநாட்கள் நிகழ்ந்த இக்கருத்தரங்கில் மருத்துவ, பொறியியல் அறிஞர்கள் கலந்துரையாடி, தாய்மொழியில் மருத்துவம், பொறியியல் பயிற்றுவிக்கும் வழிமுறைகளை ஆராய்ந்தனர்.

## 5. ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் கருத்தரங்கு

மார்ச் மாதம் முப்பதாம் நாள் புதுச்சேரி ஆனந்தரங்கர் திருமாளிகையில் புதுச்சேரிப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையின் சார்பில் ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் கருத்தரங்கு நடைபெற்றது. பல்கலையின் துணைவேந்தர் முனைவர் ஆ. ஞானம் தலைமையேற்றார். முனைவர்கள் ஆரோக்கியநாதன், சா. வளவன், இராச. திருமாவளவன், திரு. செபாத்தியான், இரா. கலைக்கோவன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

## 6. அறக்கட்டளைப் பொழிவுகள்

பாரதியார் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சார்பில் 11.4.97 வெள்ளிக்கிழமையன்று பல்கலைக் கழக நாச்சிமுத்துக் கவுண்டர் கலையரங்கில் இரண்டு அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. பல்கலையின் துணைவேந்தர் சு. சுப்பிரமணியன் பொழிவுகளைத் தொடங்கிவைத்தார். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

தெ. ஞானசுந்தரம், 'வைணவ உரைவளம்' என்ற தலைப்பில் முனைவர் கா. மீனாட்சிசுந்தரனார் அறக்கட்டளைப் பொழிவை நிகழ்த்த, இரா. கலைக்கோவன் 'குடைவரைச் சிற்பங்கள்' என்ற தலைப்பில் கோவைகிழார் சி.என். இராமச்சந்திரன் செட்டியார் அறக்கட்டளைப் பொழிவை நிகழ்த்தினார்.

## 7. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் இருபத்தெட்டாம் கருத்தரங்கு

திருச்சிராப்பள்ளி பிஷப் ஈபர் கல்லூரியில் மே 24, 25 ஆகிய இரு நாட்களும் இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் இருபத்தெட்டாம் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வரலாற்றாய்வு மையத்தின் சார்பில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பெற்றன.

i) மு. நளினி - புதிய கல்வெட்டுகளும் புதிய தரவுகளும்

ii) அர. அகிலா - வல்லம் குடைவரைகளில் புதிய கல்வெட்டுகள்.

iii) கோ. வேணிதேவி - மணிமேகலையில் கட்டடக்கலைத் தரவுகள் ஓர் அறிமுகம்

iv) இரா. கலைக்கோவன் - மாற்றத்திற்குள்ளாகும் ஒரு முடிவு.

கருத்தரங்கின் இரண்டாம் நாள் காலை, 'அப்பரும் அவிநயமும்' என்ற தலைப்பில் இரா. கலைக்கோவனும், 'தமிழ் - தமிழர் - தமிழ்நாடு உணர்தலும் வாழ்தலும்' என்ற தலைப்பில் திரு. தமிழ்நாடனும் அறக்கட்டளைப் பொழிவுகளை நிகழ்த்தினர். மாலை நடந்த நிறைவு விழாவில் திருச்சிராப்பள்ளி நகரப் பல்துறை அறிஞர்கள் பாராட்டப்பெற்றனர். அவர்களுள் வரலாறு இதழின் பொறுப்பாசிரியரும் ஒருவர்.

## 8. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சி

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழியற் புலச் சார்பில் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சி சூன் திங்களில்

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

பல்கலைக் கழகத் தமிழியற் புலத்தில் நடைபெற்றது. 'தமிழும் பிற துறைகளும்' என்ற பொதுக் கருத்திலமைந்த இக்கருத்தரங்கில் பல்துறை அறிஞர்கள் பங்கேற்று ஆய்வுரையாற்றினர். இரா. கலைக்கோவன் பல்லவர் கலைமுறை பற்றிய ஆய்வுரை நிகழ்த்தினார்.

## 9. அறிவியல் தமிழ் விவாத அரங்கம்

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் திருச்சிராப்பள்ளிக் கிளையின் சார்பில் பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை மன்றத்தில் அறிவியல் தமிழ் விவாத அரங்கம் நடைபெற்றது. முனைவர் வா.செ. குழந்தைசாமி முக்கிய உரையாற்ற, இரா. கலைக்கோவன், முனைவர் கே.வி. கிருஷ்ண மூர்த்தி, முனைவர் எஸ். நாகரத்தினம், திரு க. முருகானந்தம் ஆகியோர் கருத்துரையாளர்களாகப் பங்கேற்றனர்.

## 10. தமிழகத் தொல்லியல் கழகம்

இக்கழகத்தின் எட்டாம் ஆய்வுக் கருத்தரங்கம் சூலைத் திங்கள் 19,20 ஆம் நாட்களில் ஈரோடு இந்திய மருத்துவர் சங்க அரங்கில் நடைபெற்றது. காலையில் நடைபெற்ற தொடக்கவிழாவில் கல்வெட்டறிஞர் திரு. கே.ஜி. கிருஷ்ணன் அவர்களின் ஆய்வுப் பணிகளைப் பாராட்டிச் செப்பேடு வழங்கப்பெற்றது. முதல், இரண்டாம் அமர்வுகள் கொங்குநாட்டுக் கருத்தரங்காக முனைவர்கள் கா. அரங்கசாமி, மா. கணேசன் இயக்கத்திலும், மூன்றாம், நான்காம் அமர்வுகள் தமிழகக் கருத்தரங்காக, முனைவர்கள் கொடுமுடி. சண்முகம், எஸ்.எம். கமால் இயக்கத்திலும், ஐந்தாம் அமர்வு முனைவர் ஆர். ரங்கராஜ் இயக்கத்திலும் நிகழ்ந்தேறின.

## 11. இந்திய சுதந்திரப் பொன்விழா மற்றும் அருங்காட்சியக வார விழா

ஆகஸ்டு மூன்றாம் நாளிலிருந்து ஒன்பதாம் நாள்வரை இந்திய சுதந்திரப் பொன்விழாவும் அருங்காட்சியக வாரவிழாவும் திருச்சிராப்பள்ளி அருங்காட்சியக வளாகத்தில் நடைபெற்றன. இவ்விழாவில் ஓவியக் கண்காட்சியும், அஞ்சல்தலைக் கண்காட்சியும் நிகழ்த்தப்பட்டன. புலவர்

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

தமிழகன், திரு. கி. ஸ்ரீதரன், பேராசிரியர் கோ. வேணிதேவி, திரு. மு.ம. கோபாலன், முனைவர் வி.ஏ. சந்திரசேகரன், திரு. பெ. பாலசுப்பிர மணியன், முனைவர் எம். அருமைராஜ், ஸ்தபதி திரு வே. இராமன், இரா. கலைக்கோவன் ஆகியோர் விழாநாட்களில் பல்வேறு ஆய்வுத் தலைப்புகளில் சிறப்புரையாற்றினர்.

## 12. விருது பெற்றோரின் விளக்கத் தொடர்ப் பொழிவு

கோயிற்பட்டியில் இயங்கிவரும் திருவள்ளுவர் மன்றம் தன் வெள்ளிவிழா ஆண்டில் தமிழ்நாடளவிலான பல்வேறு துறைச் சாதனையாளர்களைத் தெரிந்தெடுத்துப் பாராட்டி விருதளித்துச் சிறப்பித்தது. விருது பெற்றோரின் விளக்கத் தொடர்ப் பொழிவாகத் திங்கள் தோறும் பொழிவுகளும் அமைத்தது. 31.8.97 அன்று கோயிற்பட்டி ஆ.வை. தொடக்கப் பள்ளியில் நிகழ்ந்த ஆறாம் நிகழ்ச்சியில் கோயில் வரலாற்றாய்விற்காக விருது பெற்ற இரா. கலைக்கோவன் தம் ஆய்வுப்பணி பற்றிய காட்சியுரை நிகழ்த்தினர்.

## 13. பேராசிரியர் தி. சக்திவேலு முத்துவிழா

காரைக்குடி திவான்பகதூர் முருகப்பா அரங்கத்தில் 14.9.97 அன்று பேராசிரியர் தி. சக்திவேலு முத்துவிழா நடைபெற்றது. அவ்விழாவில் பேராசிரியர் ந. அருணாசலம், ஜி. பாலகிருஷ்ணன், சே. கோச்சடை ஆகியோர் மனித நேய மாண்பிற்காகப் பாராட்டப்பெற்றனர். கல்வெட்டியல் பணிகளுக்காக இரா. கலைக்கோவனும், அறிவியல் தமிழ்ப் பணிகளுக்காகச் சௌ. சம்பத், மெ. மெய்யப்பன் ஆகியோரும் பாராட்டப்பெற்றனர்.

## 14. உலக மரபு வார விழா

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையும் திருச்சிராப்பள்ளி அரசு அருங்காட்சியகமும் இணைந்து இவ்விழாவை நவம்பர் 24,25,26 ஆகிய நாட்களில் நிகழ்த்தின. சோழமாதேவி சிவன்கோயில், உறையூர் கமலவல்லி நாச்சியார் கோயில் ஆகியவற்றில் பள்ளி மாணவர் உதவியுடன் உழவாரப்பணி நடைபெற்றது. இவ்விழாவில் உறையூரின் வரலாற்றுச் சிறப்பு குறித்துத் திரு. மு.ம. கோபாலனும், மரபுச்செல்வங்களும் அருங்காட்சியகங்களும்

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

பற்றித் திரு. ப. இராசமோகனும், 'திருக்கோயில்களைப் போற்றுவோம்' என்ற தலைப்பில் ஸ்தபதி திரு.வே. இராமனும், தமிழக வரலாற்றின் சிறப்புக் குறித்துத் திரு. கி. ஸ்ரீதரனும் உரையாற்றினர்.

## 15. ஆறாம் உலகச் சைவ மாநாடு

தமிழ்ப் பல்கலைக் கழக வாகை வளாகத்தில் பல்கலைக் கழகத் தத்துவ மையம், திருப்பனந்தாள் காசி மடத்தோடும் இலண்டன் உலகச் சைவப் பேரவையோடும் இணைந்து நடத்திய ஆறாம் உலகச் சைவ மாநாடு, டிசம்பர் 19ஆம் நாளிலிருந்து தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. உலகச் சைவப் பேரவைத் தலைவர் அருட்பெருந்திரு சிவநந்தி அடிகளார் தலைமையேற்றுச் சிறப்புரையாற்றிய இம்மாநாட்டில் சைவம் சார்ந்த பத்துத் தலைப்புகளில் ஆய்வமர்வுகள் அமைந்தன. 'முதல் திருமுறையில் ஆடற் குறிப்புகள்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கிய இரா. கலைக்கோவன், திருமுறைகள் சார்ந்த பிற்பகல் அமர்வுக்குத் தலைமையேற்றார். உலக சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் சைவம் என்ற உரைப் பொருளில் இம்மாநாடு நிகழ்ந்தது.

## 16. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெள்ளிவிழாக் கருத்தரங்கம்

டிசம்பர் 28,29,30 ஆகிய மூன்று நாட்கள் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் நிகழ்ந்த இவ்வெள்ளிவிழாக் கருத்தரங்கத்தில், வரலாறு - தொல்பொருள்துறை சார்ந்தமைந்த மூன்றாம் அமர்விற்கு இரா. கலைக்கோவன் தலைமையேற்றார். தளிச்சேரிக் கல்வெட்டு பற்றிய இவரின் ஆய்வுக் கட்டுரை, தமிழ்ப் பல்கலைக் கழக அரிய கையெழுத்துச் சுவடிப்புலத்துறைத் தலைவர் பேராசிரியர். பா. சுப்ரமணியம் தலைமையேற்ற இரண்டாம் அமர்வில் வாசிக்கப்பெற்றது. இதே அமர்வில் வரலாறு இதழின் உதவி ஆசிரியர் முனைவர் அர. அகிலா 'மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள்' குறித்த ஆய்வுக் கட்டுரையை வழங்கினார். மற்றொரு உதவி ஆசிரியரான மு. நளினி 'புதிய கல்வெட்டுகளில் பண்பாட்டுக் கூறுகள்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை அளித்தார்.

---

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

## மன்னர் பிணி நீங்கத் தண்ணீர்த் தந்தவர்

ஏழாம் எட்வர்டு 6-5-1910இல் இறந்த பிறகு இங்கிலாந்தின் மன்னராக ஐந்தாம் ஜார்ஜ் முடிசூட்டிக்கொண்டார். அவரது முடிசூட்டு விழா 22-6-1911இல் நடந்தது. அதே ஆண்டு டிசம்பர்த் திங்களில் இந்தியாவுக்கு வருகை தந்த அவர், டில்லியில் இந்திய சமஸ்தான மன்னர்கள் அனைவரும் கூடியிருக்க, டில்லி தர்பாரில், இந்தியச் சக்கரவர்த்தியாக மீண்டும் முடிசூட்டிக்கொண்டார். இவ்வாறு இரண்டு முறை முடிசூட்டிக்கொண்ட பெருமை அவரையே சாரும். அவருக்கும் அவரது பட்டத்தரசியான மேரி ராணிக்கும் வெள்ளிச் சிம்மானம் செய்ய, வெள்ளி கையிருப்பில் இல்லை என்பதால், அன்று புழக்கத்திலிருந்த 96,000 வெள்ளி ரூபாய்களைக் கல்கத்தா நாணயச்சாலையில் உருக்கி இரு சிம்மாசனங்கள் செய்யப்பட்டன. 1910 முதல் 1936 வரை அரசோச்சிய ஐந்தாம் ஜார்ஜ் மார்ச் 1929இல் நோய்வாய்ப்பட்டார். ஆங்கில ஏகாதிபத்திய நாடுகள் அனைத்திலும் மன்னர் விரைவில் நலம்பெறவேண்டுமென வழிபாடுகள் செய்யப்பட்டன. அடிமைத்தளையில் இருந்த இந்திய மண்ணின் மைந்தர் ஒருவர் மன்னரின் நோய் தீரவேண்டுமென்பதற்காகத் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த உறையூரில் தண்ணீர்க் குழாயொன்றை மக்களுக்காக அமைத்துத்தந்தார். அவ்வமைப்பில் ஒரு கல்வெட்டும் வெட்டிவைத்தார். அக்கல்வெட்டு இன்றும் இருப்பதோடு அக்குழாயிலும் மக்கள் பயனடையுமாறு இன்றளவும் தண்ணீர் வருகிறது.

*கல்வெட்டு*

THIS TAP IS LAID IN COMMEMORATION OF THE RECOVERY OF HIS MAJESTY THE KING GEORGE V FROM HIS SERIOUS ILLNESS - MARCH - 1929.

OPENED BY Mr. T.E.C.K. CHIDAMBARAM PILLAY, VILLAGE MUNSIF, AEGIRI MANGALAM VILLAGE, TRICHY TALUK.

- **மு.ம. கோபாலன்**

## 6. உண்டாலம்ம இவ்வுலகம்

அமரர் தவத்திரு அடிகளார்

திருச்சிராப்பள்ளியின் மருத்துவ நண்பர்கள் சிலர் இணைந்து உருவாக்கிய முத்தமிழ்க் கலைமன்றத்தில்தான் வணக்கத்திற்குரிய பெருமகனார் தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வாழ்வியல் உரையை முதன்முதலாகக் கேட்டேன். விதைத்தும் முளைக்காத விதைகள் என்ற தலைப்பில், திருந்தாத தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிய அன்றைய அவரின் உரை என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது. அந்தக் கூட்டத்தில் நன்றியுரை ஆற்றும் பொறுப்பு எனக்கிருந்தது. நன்றியுரை போன்ற சடங்குகளை அடிகளார் விரும்புவதில்லை என்று அறிவுறுத்தப் பட்டிருந்தமையாலும், அன்று அவர் விரைந்து வேறிடஞ் செல்ல வேண்டியிருந்தமையாலும் என் நன்றியுரை மிகச் சுருங்கி முடிந்தது. அவரிடம் பேசவோ, வாழ்த்துப் பெறவோ கூட நேரமில்லை.

சில ஆண்டுகளுக்குப் பின் வானொலி நண்பர் இளசை சுந்தரத்தின் 'சாதகப் பறவைகள்' வெளியீட்டு விழாவிற்காக அடிகளார் வந்திருந்தார். நகராட்சி தங்கும் விடுதியில் இருந்த அவரை விழாவிற்கு அழைக்கப்போன திரு. சுந்தரத்துடன் நானும் உடனிருப்பானேன். தயாராக இருந்ததால் அடிகளார் உடன் புறப்பட, பேச நேரமில்லாத நிலையில் என் கையிலிருந்த 'கலை வளர்த்த திருக்கோயில்கள்' நூலை அப்பெருமானின் திருக்கைகளில் தந்து ஆசி பெற்றேன். நெற்றியில் திருநீறிட்டு வாழ்த்தினார்கள். உழைத்து உரமேறிய கை என்பதை நெற்றி உள்ளத்திற்கு உணர்த்தியது.

முனைவர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றம் திருச்சிராப்பள்ளி வாழ் மக்களுக்காகத் தமிழில் மருத்துவச் சொற்பொழிவுகளை நடத்திக் கொண்டிருந்த காலம் அது. ஒவ்வொரு திங்களும் பொழிவிற்கான அழைப்பிதழ் அடிகளாருக்கும் அனுப்பப்பட்டது. கல்வெட்டுத் தேடலும் கோயிற் கட்டுரைகளும் வளர்ந்துகொண்டிருந்தன. ஒருநாள் குன்றக்குடித் திருமடத்திலிருந்து தொலைபேசி வந்தது. குன்றக்குடி மேனிலைப் பள்ளியில் உரையாற்ற அழைப்பு. திருப்புத்தூர் சென்று அங்கிருந்து பேருந்து

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

கிடைக்காமல் வாடகை வண்டி பிடித்து மடத்திற்குச் சென்றால் வாயிலில் அடிகளார். அதிர்ந்து செயலற்றுப்போனேன். வண்டி வாடகை கொடுக்கச் சென்றவனை அது தம் பொறுப்பெனத் தடுத்து, விரைந்து தயாராகச் சொல்லி உத்தரவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டுவிட்டார். ஐந்து நிமிடங்களில் தயாராகிப் பள்ளியில் இருந்தேன்.

மாணவச் செல்வங்களிடையே அவர் பழகிய பாங்கு, அவர்தம் உடல்நலத்தில் அவர் காட்டிய அக்கறை, என் உரைக்குப் பிறகு கேள்விகள் தொடுக்க மாணவர்களை அவர் தூண்டிய முறை, வளாகத்திலிருந்த மரங்களுக்குப் பள்ளி மாணவர்களைப் பொறுப்பாக்கியிருந்த அவருடைய சூழல் நோக்கு, இவையனைத்தும் அப்பெருமகனாரை என் நெஞ்சில் ஆழப் பதித்தன. மடத்திற்குத் திரும்பும் போது இருவரும் ஒன்றாய்ப் பயணித்தோம். என் வாழ்க்கையின் மறக்கவே முடியாத பொழுதுகளுள் அதுவும் ஒன்று.

திருஎறும்பியூர் அருள்நெறித் திருக்கூட்டத்தார் தங்கள் விழாவொன்றில் உரையாற்ற என்னை அழைத்திருந்தார்கள். தவத்திரு அடிகளார் அக்கூட்டத்தில் பங்கேற்கவிருந்தார். திரு.வி.கே.என். கண்ணப்பன், சிவத்திரு ப. மூக்கப்பிள்ளை போன்ற பெருமக்களை அங்குதான் சந்தித்தேன். காலத்தின் அருமை குறித்த அடிகளாரின் கருத்துரை, அதுவும் அங்குக் கூடியிருந்த சிறு பிள்ளைகளுக்கு அதை அவர் உணர்த்திய பாங்கு, என்னுள் அவர் மீது உண்டாகியிருந்த மதிப்பைப் பன்மடங்கு உயர்த்தியது. என் உரை முடிந்ததும், நானும் திரு. கண்ணப்பனும் ஆற்றும் பணிகள் பற்றி எடுத்துரைத்து, எங்களிருவரையும் பாராட்டிச் சிறப்பித்த அடிகளாரின் பெருந்தகைமை என் விழிகளில் நீர் சேர வைத்தது. எவ்வளவு நுட்பமாக என் பணிகளைப் பற்றி அவர் அறிந்துவைத்திருந்தார் என்பதும், நல்லது செய்வாரை நாவாரப் பாராட்டி வாழ்த்தி ஊக்குவிக்கும் அவரது பெரும்பண்பும் என்னுள் அவரை வழிகாட்டியாக்கின.

குலச்சிறை நாயனார் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு மணமேற்குடியிலிருந்து ஒரு நாள் அழைப்பு வந்தது. உங்கள் பணிகளைப் பாராட்டி அடிகளார் குலச்சிறை நாயனார் விருது வழங்குகிறார் என்ற குறிப்பும் அதிலிருந்தது. அறந்தாங்கியிலிருந்து மகிழ்வுந்துப் பயணம். காரைக்குடித் தமிழறிஞர் தெ. முருகசாமி உடன் வந்தார். மணமேற்குடியில் மேடையில்

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

அடிகளாரின் திருக்கரங்களால் இரண்டாவது முறை பொன்னாடை போர்த்தப்பெறும் வாய்ப்புப் பெற்றேன். தம் ஆளுகையில் இருக்கும் திருப்புத்தூர்த் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நிகழவிருப்பதாகவும் அதற்கு முன் அக்கோயிலை முழுமையான அளவில் ஆய்வு செய்திடுமாறும் அடிகளார் பெருமான் எறும்பியூர் விழாவிலேயே அழைப்பு விடுத்திருந்தார். அவரது ஆணையேற்று எங்கள் வரலாற்றாய்வு மையம் முழுமையான வீச்சில் திருப்புத்தூர்த் திருக்கோயிலில் களம் இறங்கியது.

எங்கள் ஆய்வுக் காலத்தே அவ்வப்போது கோயிலுக்கு நேரில் வந்து பணி செய்தோரை ஊக்குவித்த அடிகளார் பெருந்தகை, முருகன் திருமுன் கல்வெட்டில் கோயில் கோபுரம் பற்றிய தகவல் இருப்பதறிந்ததும் கண் கலங்கினார். அப்போது திருப்புத்தூர்க் கோயில் வாயிலில் கோபுரமில்லை; அழிந்திருந்தது. அந்தக் கோபுரத்தை இன்றிருக்கும் நிலைக்கு எழச்செய்ய அவர் மேற்கொண்ட மென்மையான ஆனால் அழுத்தமான முயற்சிகளை நாங்களறிவோம்.

ஆவுடையார் கோயில் பற்றித் தொலைக்காட்சியில் ஓர் உரைச் சித்திரம் ஒளிபரப்பாக இருந்தது. அதில் கல்வெட்டுகள் குறித்துப் பேச அடிகளார் என்னை அழைத்திருந்தார். குன்றக்குடி சென்றிருந்தேன். தாம் பேசி ஒளிப்பதிவானதும், அதே இருக்கையில் என்னை அமரச் செய்து பேசவைத்தார். நான் எவ்வளவோ தயங்கியும், மறுத்தும் விடவில்லை.

மையப் பட்டயக் கல்வி மாணவர்கள் ஒருமுறை அடிகளாரைச் சந்தித்து அளவளாவினார்கள். இரண்டு மணி நேரம் பல துறைகள் பற்றிக் கேள்விகள் கேட்டு, அவர்களைப் பேச உற்சாகப்படுத்தித் தாமும் உரையாடிப் பரிசுகளும் தந்து உணவுமளித்துப் பாராட்டி மகிழ்ந்தார். இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளையின் பொங்கல் விழாவிற்கு இரண்டு முறை பேச அழைத்திருந்தேன். சைவ சித்தாந்தத்தைப் பற்றிப் பேச எங்கள் மையத்திற்கே அழைத்திருந்தேன். அன்று எங்கள் இல்லத்தில் அப்பெருந்தகை உணவருந்தும் வாய்ப்பமைந்தது. பரிமாறிய என் துணைவியிடம், குழந்தை போல் உணவின் சிறப்புப் பற்றிப் பாராட்டுரைத்ததும், உடன் இருந்து உணவருந்தியவர்களுடன் அன்புடன் உரையாடி மகிழ்ந்ததும் அருமையான நினைவுகள்.

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

குன்றக்குடித் திருமடத்தின் ஆளுகையிலிருக்கும் மற்றொரு கோயில் திருக்கோளக்குடி. குடமுழுக்கிற்கு முன் அக்கோயிலை ஆய்வு செய்யுமாறு அடிகளாரிடமிருந்து அழைப்பு வந்தது. பலமுறை சென்றோம். அங்கும் பல புதிய கல்வெட்டுகள் கிடைத்தன. இன்னமும் கிடைத்த வண்ணமுள்ளன. கல்வெட்டுகளைப் படியெடுக்கவும் பாதுகாக்கவும் அப்பெருந்தகை தந்த ஒத்துழைப்பை நான் வேறெங்கும் பெற்றதில்லை. அப்போது அவருக்கு நலக்குறைவு இருந்தது. எனினும் தாமே உச்சிவரை எழுந்தருளியிருந்து பணிகளை மேற்பார்வையிட்டார். தவத்திரு பொன்னம்பல அடிகளார் அப்போது இளைய சந்நிதானம். தவத்திரு அடிகளார் போலவே அவரும் எங்கள் பணிகளில் பெரும் உற்சாகம் காட்டிப் பாராட்டினார்.

மையத்தின் கல்வெட்டாய்வாளர் நளினியின் உழைப்பைப் பெரிதும் வியந்து போற்றிய அடிகளார் பெருந்தகை, திருமடத்தின் ஆதரவில் மணமேற்குடியில் நடந்த குலச்சிறை நாயனார் விழாவில், 'கல்வெட்டாய்வுச் செல்வி' என்ற விருதளித்துச் சிறப்புச்செய்தார்.

திருவானைக்காவில் நடந்த சர்.சி.வி. ராமன் விழாவில் அப்பெருந்தகை கலந்துகொண்டபோது பார்வையாளர்களுள் ஒருவனாக நானும் இருந்தேன். வணங்கியபடியே மேடைக்கு வந்து அமர்ந்தவர் கூட்டத்தாரைப் பார்த்தார். கூட்டத்தில் என்னைப் பார்த்துக் கை கூப்பினார். நான், அவர் எனக்குத்தான் வணக்கம் தெரிவிக்கிறார் என்றுணரவில்லை. முன்னால் அமர்ந்திருக்கும் யாரோ முக்கியமான விருந்தினருக்கு அடிகளார் வணக்கம் தெரிவிப்பதாகவே நினைத்து வாளாவிருந்தேன். என் நினைப்பறிந்தாரோ என்னவோ, என்னை நோக்கிக் கையை நீட்டிச் சுட்டி மீண்டும் வணக்கம் தெரிவித்தார். நான் அப்படியே உறைந்து போனேன். என்னையுமறியாமல் எழுந்து அவரை வணங்கியமர்ந்தேன். பல நிமிடங்கள் நான் என் நிலையில் இல்லை. எத்தகைய பெரும் பண்பு! யாருக்கு வரும் இந்த மாண்பு! உருகிப்போய் உட்கார்ந்திருந்தவனைக் கூட்டம் முடிந்ததும் தேடிப்பிடித்து அழைத்து மின்வேதியியல் இயக்குநருக்கு அறிமுகம் செய்துவைத்த அந்தப் பெருந்தகையின் அன்பு மழையில் பலமுறை நனைந்த பேறுண்டு.

குன்றக்குடிக் குடைவரைகளை ஆய்வுசெய்த காலத்துப் பலமுறை திருமடம் செல்லாமலே வந்துவிடுவதுண்டு, அடிகளார் பெருந்தகைக்கு

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

நலக்குறைவு இருந்ததால் அவர்களைத் தொல்லைசெய்யவேண்டா என்பதே அதற்குக் காரணம். ஒருமுறை அவரே பார்க்க விரும்பியதாக அறிந்து சென்றேன். 'ஏன் வரும்போதெல்லாம் பார்க்காமல் போகிறாய்' என்று கேட்டார். தொல்லை தரக்கூடாது என்றுதான் பார்க்காமல் செல்வதாகக் கூறியபோது, 'நீ தொல்லை தரவேண்டும் உன்னைப் போலிருப்பவர்கள் தரும் தொல்லைதான் எனக்கு இன்பம்' என்று அவர் சொன்னார். என் கண்களில் நீர் மல்கியது. அவர் கண்களும் பனித்திருந்தன. அன்று நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். தம் உள்ளக்கிடக்கைகளை, உணர்வுகளை, அவத்தைகளைப் பகிர்ந்து கொண்டார். நலக்குறைவால் எங்கும் செல்லமுடியாதபடி தடுக்கப்படுவதாகக் கூறிக் குழந்தையென வருந்தினார். திரு. மரு. பரமகுரு அப்போது உடனிருந்தார். அவர் கண்களில் கண்ணீர். அடிகளாரின் மூச்சாக இருந்த திரு. பரமகுரு திருமடத்தின் அரியதொரு சொத்தாவார். நான் அவரிடம், 'அடிகளார் அவர் மனம் போல் பணிசெய்யட்டும். அதுவே அவருக்கு நலந்தரும் இன்பமாக அமையும்' என்று கூற, 'பார்த்தாயா இனி என்னைத் தடுக்காதே' என்பது போல் அப்பெருந்தகை கவிஞர் பரமகுருவைப் பார்த்தது எனக்குள் விம்மலைத்தான் ஏற்படுத்தியது.

அவரது அறையில் அவருடனிருந்து அவரால் உபசரிக்கப்பட்டு உணவருந்தும் பேறும் எனக்குக் கிடைத்திருக்கிறது. அவருடைய நூல்களை அவரது வாழ்த்துடன் பெற்றிருக்கிறேன். நாட்டு நடப்பு, இலக்கியம், வரலாறு, எதிர்காலம் எனப் பலவும் பற்றி அப்பெருந்தகையுடன் கலந்துரையாடிப் பயன் பெற்றுள்ளேன். பன்முறை அவருடைய உரைகளைக் கேட்டிருந்த போதும் என்னால் மறக்க முடியாதவை அவருடைய முதலுரையும் முடிவுரையுந்தான். சிராப்பள்ளி மலைக்கோயில் மண்டபத்தில் நிகழ்ந்த விழாவொன்றில் அவர் நிகழ்த்திய உரைதான் நான் இறுதியாகக் கேட்டது. துயரம் தோய்ந்த அந்த உரை அவரது உள்ளக்கிடக்கையையும், அது முழுவதுமாக நிறைவேறாத சூழலையும் உணர்த்தியது. உண்மையின் வெளிச்சமாகத் திகழ்ந்த அவ்வுரை அங்கிருந்த அனைவர் கண்களையும் பனிக்கவைத்தது.

ஒருநாள் விடியற்காலை சிவத்திரு ப. மூக்கப்பிள்ளை தொலைபேசி வழி அந்தத் துயரச் செய்தியைத் தந்தார். தாங்கமுடியாத அந்தப் பேரிடி நெஞ்சில் சுமையாகியது. குன்றக்குடி விரைந்தோம். வழியெல்லாம்

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

கண்ணீர்தான். அன்பே உருவான அந்த மாமனிதரைப் பேச்சு மூச்சற்றுப் பார்த்தபோது மரணத்தின் மீதும் இறைவனின் மீதும் பெருஞ்சினம் ஏற்பட்டது. அவர் காட்டிய பேரன்பு, பரிவு, அறிவாற்றல் நிறைந்த அவர் ஞானவிழிகளில் எப்போதும் ஒளிர்ந்த அந்தக் கனிவு என எல்லாமும் சேர்ந்து நெஞ்சையுருக்கின. எவ்வளவு நேரம் அவர் திருமுகத்தையே பார்த்தபடி அழுதுகொண்டிருந்தோம் என்பது நினைவில் இல்லை. திடீரென ஓர் உணர்வு, 'அழுவதற்கா வந்தாய். போ, ஏதாவது உருப்படியாகச் செய்' என்று அவர் ஆணையிடுவது போல் தோன்றியது. இறுதிச் சடங்குகளுக்கு இருக்கத் துணிவில்லாது அவர் ஆணையேற்றுத் திருக்கோளக்குடி சென்றோம். அன்று முழுவதும் அங்குப் பணியாற்றினோம். அவர் நடந்துவந்தது, புதியன கண்டுபிடித்தபோது நின்று பாராட்டியது, ஐய்யங்களுக்கு விளக்கம் கேட்டது என எங்கு பார்த்தாலும் அவர்தான்! கண்ணீருடன் பிறந்த அந்தநாள் கண்ணீருடன்தான் முடிந்தது.

எங்கள் மையத்தின் வரலாற்றில் அடிகளார் பெருமானுக்குத் தனியிடம் உண்டு. மனித மாண்புகளை மதித்தவர் அவர். அவற்றை வளர்க்கவும் உயர்த்தவும் அரும்பாடுபட்டவர். தமிழின் மீதும் உழைப்பின் மீதும் இணையற்ற பத்திமை பூண்டிருந்தார். இளைஞர்களை ஊக்குவிப்பதில் அவருக்கு நிகராய் இதுநாள் வரையிலும் இன்னொருவர் கண்டதில்லை. பேச்சிலும், மூச்சிலும் எளியவர்களை வாழவைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்த அவருக்கு மட்டும் அரசின் பேராதரவு கிடைத்திருந்தால் இந்த யுகத்தின் மாபெருந் திருநாடாய்த் தமிழ்நாடு உயர்ந்திருக்கும். அறிவியலையும் தமிழையும் இணைத்துப் பார்த்த அவரது பார்வைதான் இன்று தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து நடத்திய ஏழாம் அறிவியல் மாநில மாநாடாக வளர்ந்திருக்கிறது.

'குன்றக்குடித் திட்டம்' என்று இந்தியநாடு முழுவதும் பேசுமளவிற்கு அந்தச் சின்னஞ்சிறு ஊரைத் தம் பொருளாதாரச் சிந்தனைகளாலும் அணைத்துப்போகும் பண்பாலும் உயர்த்திய அடிகளார், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எப்பக்கமிருந்து உதவி கிடைத்தாலும், அது எத்தனை சிறிய உதவியாக இருந்தாலும் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கியதே இல்லை. சமய நல்லிணக்கம், குறள் வழி வாழ்க்கை, எப்போதும் பயன் கருதா ஆனால் பயன் தரும் உழைப்பு என்பன அவர் கொள்கைகள். டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திடம் அவர் கொண்டிருந்த

நன்றி: சாஸ்தா ஃபார்மா,
C42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

ஈடுபாடு, அதன் வளர்ச்சியிலும் ஆய்வுகளிலும் அவர் காட்டிய அக்கறை, மைய உறுப்பினர்களிடம் அவருக்கிருந்த அன்பு இவையனைத்தும் நாங்கள் பெற்ற பேறுகள். அவரிடம் பழகியது மிகக் குறைந்த காலந்தான் என்றாலும் அன்பாலும் பண்பாலும் உயரிய நோக்காலும் உழைப்பாலும் எங்கள் நெஞ்சில் நீக்கமற நிறைந்த பெருந்தகை அவர். அவர் மறைவுக்கு வீர வணக்கம் செலுத்தி வரலாறு இதழில் அப்போது நான் எழுதியிருந்த வரிகளையே மீண்டும் நினைவுகூர்கிறேன்.

"இருக்கும் தலைமுறைகளுக்கு
இனி இல்லை என்றான
இருபதாம் நூற்றாண்டின்
இந்த இணையற்ற வரலாறு
இனிவரும் தலைமுறைகள்
படிக்கவும் பாடறிந்து ஒழுகவும்."

*- இரா. கலைக்கோவன்.*

*With Best Compliments From:*

Phone : 701726
703740

**NAVEEN AIR TRAAVELS (P) LTD.,**

First Floor,
Y.V.D. Complex,
Chathram Bus Stand,
Thiruchirappalli - 620 002.

**Liaison Office:**

Ratna Building,
581, Anna Salai,
Chennai - 600 006.
Phone : 4340091, 4349945

# 7. கட்டுரையாளர்கள்

1. அர. அகிலா
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

2. எஸ். இராமச்சந்திரன்
10A, ரகு பில்டிங், ஏரல் - 628 801.

3. ஸ்தபதி வே. இராமன்
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு,
மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி - 620 020.

4. இரா. கலைக்கோவன்
இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

5. ம. காந்தி
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம், வேலூர் - 632 004

6. ச. கிருஷ்ணமூர்த்தி
176, ஓ.எஸ். தீன் பில்டிங்,
மேலரத வீதி, சிதம்பரம் - 608 001.

7. பூ.ர. குப்புசாமி
19, மேற்கு மடவளாகம், கரூர் - 639 001.

8. மு.ம. கோபாலன்
24, பஞ்சவர்ணசாமி கோயில் தெரு,
உறையூர், திருச்சிராப்பள்ளி - 620 003.

9. த. சந்திரகுமார்
5A, ஏழாம் குறுக்குத் தெரு,
சுந்தரம் நகர்,
தஞ்சாவூர் - 613 004.

10. ஆறுமுக சீதாராமன்
11, உமா நகர், தஞ்சாவூர் - 613 007.

11. பி. தமிழகன்
2, பிச்சையம்மாள் நகர்,
காசாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.

12. அளக்குடி கோ. தில்லைராஜன்
தஞ்சாவூர்.

13. இர. நந்தினி
18/2273, கொச்சுப்பள்ளிச் சாலை,
தொப்பருபாடி,
கொச்சி - 5.

14. மு. நளினி
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

15. ஐராவதம் மகாதேவன்
18A, நான்காம் கடல் நோக்குச் சாலை,
வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.

16. தேவமணி ரஃபேல்
AE-1, பத்தாம் முதன்மைச் சாலை,
அண்ணா நகர், சென்னை - 600 040.

17. கோ. வேணிதேவி
தலைவர் - வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 002.

உ

Post Box. No: 346 Phone : 706823
704312

# SRI NAMAGIRI TRAVEL SERVICE

(Regd.)

**34-A/2, AGRAHARAM, WEST CHINTHAMANI,
THIRUCHIRAPPALLI - 620 002.**

## ஸ்ரீ நாமகிரி டிராவெல் சர்வீஸ்

**மேலச்சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி – 2.**

**(உரிமையாளர் : K.E. நம்பிள்ளை).**

**வாழ்க வளமுடன்**

*வடஇந்தியாவில் பத்ரிநாத், கேதார்நாத், நேபாள் ராஜ்யம், காசி, கயா, அலகாபாத், அயோத்யாபுரி, அரித்வார், ரிஷிகேஷ், டில்லி, ஆக்ரா, மதுரா, ஜெய்ப்பூர், மவுண்ட் அபு, சோம்நாத், துவாரகை, அகமதாபாத், மும்பாய், பண்டரீபுரம், பூரிஜகந்நாதம், புவனேஷ்வர், கல்கத்தா மற்றும் பல புண்ய க்ஷேத்திரங்களுக்கு ரயில் மூலம் சகல வசதியுடனும், போஜன வசதியுள்பட கடந்த 45 ஆண்டுகளாக நடத்திவரும் சர்வீஸ், திருச்சி நாமகிரி டிராவெல் சர்வீஸ். உங்களுக்கு யாத்திரைக்குப் போய் வர சந்தர்ப்பம் ஏற்படும்போது எங்களைத் தொடர்பு கொள்ளப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

ஆர்கனைசர்
**K.E.N. சேகர்**

சுபம்

*With Best Wishes From:*

**VASAN MEDICAL HALL**

(Whole sale and Retail Chemist)

10, N.S.B. Road, Thiruchirapalli - 620 002.
15A, Main Road, Thillainagar,
Thiruchirapalli - 620 018.
1E, E.V.R. Road, Puthur, Thiruchirappalli - 620 017.

Phone : 468826, 764681 Fax : 0431 - 703295

*Thank you for your Kind Patronage*

BEST SWEETS & SAVOURIES
IN THE CITY

**SRI RAM BHAVAN**

(VEGETARIAN RESTAURANT)

Chinthamani Bus Stand,
Thiruchirappalli - 620 002.

*With Best Compliments From:*

Phone : 701716

A SPLENDOUR SHOPPING SERVICE
SINCE A DECADE

# SIVAM

Air-Conditioned Show-Room

25, Nandhikoyil Street, (Near Teppakulam)
Thiruchiràppalli - 2.

**DIGJAM**

**RAYMOND**

**SINCE 1925**

**Van Heusen**

*Louis Philippe*

Double Bull

**Garden VARELI**

WE DO NOT COMPARE BUT WE GIVE ONLY
THE BEST

*With Best Compliments From:*

Phone : PP. 701642
700554

For All Guaranteed Trust worth and
Modern 22ct. Gold, Silver and
Diamond Ornaments

**SHRI BHUVANA
JEWELLERY
MART**

K. Shankara Narayanan
7/14, Bishop Heber College Complex,
Chinnakkadai Street,
Thiruchirappalli - 620 002.

நல்வாழ்த்துக்கள்

அலுவலகம் : 496175
✆ தொழிலகம் : 622301

தரம்

எண்ணிக்கை

அளவு

இவைகளைக் கருத்தில் கொண்டு
செங்கல் உற்பத்தி செய்து விநியோகிப்பது

**ஸ்ரீ லெக்ஷ்மி**
**செங்கல் தொழிற்சாலை**

D331, ஐந்தாவது குறுக்குச் சாலை,
அண்ணா நகர், மேற்கு விரிவாக்கம்,
தென்னூர்,
திருச்சிராப்பள்ளி – 620 017.

*With Best Compliments From:*

# DNH PHARMACY

56, Bishop Road,

Puthur,

Thiruchirappalli - 620 017.

*With Best Compliments From:*

**MASS MEDICAL AGENCY**

C-42, 8th Cross, West Thillainagar,
Thiruchirappalli - 620 018.

Phone : 765854, 765148

*With Best Compliments From:*

**S.S. COMMUNICATION CENTRE**

பிராஜக்ட், புக் ஒர்க்ஸ், திருமண அழைப்பிதழ், நோட்டீஸ் மற்றும் கம்ப்யூட்டர் சம்பந்தமான அனைத்து ஆப்செட் மற்றும் ஸ்கிரீன் பிரிண்டிங் வேலைகளும் சிறந்த முறையில் குறித்த நேரத்தில் செய்துதரப்படும். குவாலிட்டி XEROX காப்பி எடுத்துத்தரப்படும்.

மேலும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

5, Kaliamman Kovil Street, Thiruchirappalli - 620 002.

Phone : 702848 Fax : 700026

*With the Best Compliments From:*

**ராதா ஜுவல்லரி ஹவுஸ்**

165–A, பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி – 8.

போன் : 703399

K. RAMAKRISHNAN, B.E. (Mech), G.G.(USA), JAG(USA)
S/o. G.R. KALKI VARADHARAJULU

**கல்கி ஜுவல்லரி**

மலைவாசல், திருச்சிராப்பள்ளி - 2.

போன் : 706633, 706644

**காவேரி செங்கல் தொழிற்சாலை**

**தரமான சேம்பர் செங்கல் தயாரிப்பாளர்கள்**

மக்கள் சேவையில் 30 ஆண்டுகள்! விலையோ
சகாயமானது! தரமோ அபாரமானது! ராசி நிறைந்தது!

**தொழிற்சாலை**

அன்பில் (P.O.),
லால்குடி Tk.,
திருச்சிராப்பள்ளி Dt.,
போன் : 541262

**அலுவலகம்**

43, மலைவாசல்,
சின்னக் கடைவீதி,
(கல்கி ஜுவல்லரி மாடியில்)
திருச்சிராப்பள்ளி - 620 002.
போன் : 706644 PP.

*With Best Compliments From:*

**EAST COAST HOSPITALS**

90, Thiruvalluvar Salai,
PONDICHERRY - 605 013.

*With the Best Compliments From:*

## ராதா ஜுவல்லரி ஹவுஸ்

165-A, பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி - 8.
போன் : 703399

K. RAMAKRISHNAN, B.E. (Mech), G.G.(USA), JAG(USA)
S/o. G.R. KALKI VARADHARAJULU

## கல்கி ஜுவல்லரி

மலைவாசல், திருச்சிராப்பள்ளி - 2.
போன் : 706633, 706644

## காவேரி செங்கல் தொழிற்சாலை

**தரமான சேம்பர் செங்கல் தயாரிப்பாளர்கள்**

மக்கள் சேவையில் 30 ஆண்டுகள்! விலையோ
சகாயமானது! தரமோ அபாரமானது! ராசி நிறைந்தது!

**தொழிற்சாலை**

அன்பில் (P.O.),
லால்குடி Tk.,
திருச்சிராப்பள்ளி Dt.,
போன் : 541262

**அலுவலகம்**

43, மலைவாசல்,
சின்னக் கடைவீதி,
(கல்கி ஜுவல்லரி மாடியில்)
திருச்சிராப்பள்ளி - 620 002.
போன் : 706644 PP.

*With Best Compliments From:*

# EAST COAST HOSPITALS

90, Thiruvalluvar Salai,

PONDICHERRY - 605 013.

*With Best Compliments From:*

# NAIDU HALL

**The Family Shop & The Women Exclusives**

95, 96 Pondy Bazaar,
Thyagaraya Nagar,
CHENNAI - 600 017.
Phone : 8282662, 8281882, 8258636
Fax : 8258616

Branches : Mylapore, Purasaiwakkam, Annanagar.

Shortly Opening at Adayar

*With Best Compliments From:*

**We Assist Passport, Visa, N.O.C.**
**and Air Tickets**

## VIGNESH TRAVELS

7A, First Floor,
Chithra Complex,
Near Chinthamani Bus Stand,
Thiruchirappalli - 620 002.

*With Best Compliments From:*

**SARANYA XRAYS**

**AND**

**CLINICAL LABORATORIES**

**Deepan Nursing Home**

56, Bishop Road,

Puthur,

Thiruchirappalli - 620 017

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி : 460001



# அபிராமி ஹோட்டல்

*மத்திய பேருந்து நிலையம்*

**திருச்சிராப்பள்ளி - 620 001.**

தனிச் சுற்றுக்கு மட்டும்


*With best compliments from :*

Phone : 460592
Grams : 'PAL'

**THE POPULAR AUTOMOBILES (P) LTD.,**

5, Bharathiar Salai,
THIRUCHIRAPPALLI - 620 001.

**Dealers For :**

Ambassador Cars
Ambassador 1800 ISZ Cars
Contessa Classic Cars
Hindustan Trekkers
Isuzu 2000 c. c. Diesel Engines.


ஜோதி ஆஃப்செட் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி - 620 002.